
மனைல் வீடு



எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

மனைல் வீடு

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

வாசகர்களுக்கு

நமது நர்மதா பதிப்பகத்தில் இது போன்ற நாவல்களும் மற்றும் அனைத்துத் துறைகளிலும் நல்ல நூல்கள் தரத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. இலவச விலைப்பட்டியலைப் பெற சுய விலாசமிட்ட, ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டிய கவர் அனுப்புங்கள். உடன் இலவச விலைப் பட்டியலை அனுப்பு கிறோம்.

N 426

Price Rs. 42/-

☐ Manal Veedu - A Romantic Novel in Tamil by Entamuri Veerendranath / Susheela Kanagadurga ☐ First Edition : May 1996 ☐ Published by T. S. Raamalingam, Narmadha Pathipagam, Madras - 600 017 ☐ Printed at M/s Kanna Palani Achagam, Madras - 600 005 ☐

நர்மதாவின் புதிய எண்டமூரி நாவல்கள்

☐ பிளாக் மாஸ்டர்	41 00
☐ பகல் நட்சத்திரம்	55 00
☐ பெயர் பலம்	50 00
☐ வர்ண ஜாலம் பாகம் 1	46 00
☐ வர்ண ஜாலம் பாகம் 2	40 00
☐ காகித பொம்மை	55 00
☐ சாரதாவின் டைரி	64 00
☐ நாட்டிய தாரா	65 00
☐ சாவி கொடுத்த பொம்மைகள்	45 00
☐ ஒரு ராதாவும் இரண்டு கிருஷ்ணர்களும்	40 00
☐ கூண்டுக்குள் குருவி பாகம் 1	64 00
☐ கூண்டுக்குள் குருவி பாகம் 2	64 00
☐ காதலிக்கிறாள் சரிதா	38 00

நர்மதா பதிப்பகம் சென்னை - 17

☐☐☐

நர்மதாவின் புதிய நல்ல நாவல்கள்

☐	வண்ண முகங்கள் (இலக்கிய சிந்தனை பரிசு பெற்றது)	விட்டல்ராவ்	32 00
☐	தெய்வம் காத்திருக்கிறது (தமிழக அரசு முதல் பரிசு பெற்றது)	பி.எஸ்.ஆர். ராவ்	37 00
☐	சீதைகளைக் காதலியுங்கள்	ஜோதிர்லதா கிரிஜா	60 00
☐	உளி தொடாத சிலை	திலகவதி	43 00
☐	கடைத் தெருவின் ஞானி	,,	52 00
☐	அக்னி திராவகம்	கிருஷ்ணகுமார்	30 00
☐	இருவருக்குப் போதும்	அசோகமித்திரன்	37 00
☐	வானத்தை யார் வெல்லக் கூடும்	என். சி. மோகன்தாஸ்	31 00
☐	நிழல் யுத்தம்	டி. செல்வராஜ்	42 00
☐	எட்டுத் திக்கிலிருந்து ஏழு கதைகள்	திலகவதி	55 00

நர்மதா பதிப்பகம் சென்னை - 17

□□□

மணல் வீடு

பிற்பகல் மணி மூன்று. அன்றைக்கு லீவு நாளாய் இருந்ததால் வீதியில் ஆளரவமில்லாமல் இருந்தது. கடைகள் மூடியிருந்ததால் ஊரே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாற் போல நிசப்தமாய் இருந்தது. நீண்ட மூக்கில் பளபளத்துக் கொண்டிருக்கும் சிவப்புக்கல் மூக்குத்தியைப் போல அந்த தெருக்கோடியில் தபால் பெட்டி வெயிலில் மினுமினுத்துக் கொண்டிருந்தது.

விட்டு விட்டு வீசிக் கொண்டிருந்த காற்றிற்கு சாலையில் விழுந்து கிடந்த காய்ந்த இலைச் சருகுகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன.

சாலையின் அந்தப் பக்கத்திலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தாள் ஒரு பெண். அவள் நேராய் தபால் பெட்டிக்கருகில் வந்து நின்றாள். கைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை வெளியே எடுத்தாள். அதைப் பெட்டிக்குள் போடுவதற்கு முன்னால் விலாசம் சரியாய் எழுதப்பட்டிருக்கிறதா என்று திரும்பவும் ஒரு முறை பார்த்துவிட்டு, அந்த விலாசத்தின் மீது 'சிவரஞ்சன்' என்ற பெயர் இருந்த இடத்தில் உதடுகளால் மென்மையாய் ஒற்றினாள். பிறகு அக்கடிதத்தை வெகு ஜாக்கிரதையாய் தபால் பெட்டிக்குள் போட்டாள். மறுபடியும் பெட்டிக்குள் கையை விட்டுக் கடிதம் சரியாய் உள்ளே போய்ச் சேர்ந்ததா இல்லையா

என்று பார்த்துக் கொண்டாள். அவள் கண்களில் லேசாய் ஈரம் பளபளத்தது.

தபால் பெட்டிக்கு மேல் வாத நாராயண மரத்தின் கிளை தாழ்ந்திருந்தது. கிளையில் சிவப்பு நிறத்தில் பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்திருந்தன. அவள் ஒரு வினாடி அப்பூக்களையே உற்றுப் பார்த்தாள். அவள் இதயத்தைப் பிளந்துகொண்டு பெருமூச்சு வெளிப்பட்டது. அப்பூக்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அக்கண்களில் அழகான கனவு ஒன்று பாய்மரம் விரித்த படகைப்போல பயணம் செய்து கொண்டிருந்தது. திரும்பவும் பருவம் வந்து இம்மரம் இப்படிப் பூத்துக் குலுங்கத் தொடங்கியதைப் பார்த்த அவளுக்குச் சந்தோஷமாய் இருந்தது. பன்னிரெண்டு மாதங்கள்! எவ்வளவு சீக்கிரத்தில் ஓடி விட்டன! அவள் கண்களில் சலனமில்லாத நன்றி பெருக்கெடுத்தோடிற்று.

அப்பெண்ணின் வயது சுமார் முப்பது இருக்கலாம். பச்சை நிறத்தில் பிங்க் பார்டருடைய புடவையை உடுத்தியிருந்தாள். நீண்ட கைகளையுடைய ஜாக்கெட் அணிந்திருந்தாள். கைகளில் கண்ணாடி வளையல்களைத் தவிர வேறெந்த நகைகளும் இல்லை. அவள் உடுத்திக்கொண்டிருந்த உடை சாதாரணமாய் இருந்தபோதிலும், அம்முகத்தில் தென்பட்ட ஒளி பார்ப்போர் கண்ணைக் கவர்ந்திழுக்கக் கூடியதாய் இருந்தது. அது அவளிடமிருந்த படிப்பாலா, பண்பாலா அல்லது பணிவாலா என்பது அவளோடு நன்றாய் பரிச்சயம் ஆகியிருந்தாலேயொழிய தெரியாது.

அவள் தபால் பெட்டியில் கடிதத்தைப் போட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். யோசனையில் ஆழ்ந்தபடி நடந்துகொண்டிருந்த அவளுக்கெதிரே ஒரு வயதான பெண்மணியும் இன்னொரு பெண்ணும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் வயதான பெண்மணி இவளைப் பார்த்துவிட்டு மூக்குக் கண்ணாடியை சரிபண்ணிக்

கொண்டே— "ஜெயந்தியா? இந்த பக்கமாய் எங்கே வந்தாய்?" என்று விசாரித்தாள்.

ஜெயந்தி திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தாள். அப் பெண்மணியைக் கண்டதுமே முறுவலுடன் வணங்கிவிட்டு, "கடிதத்தை போஸ்ட் பண்ணிவிட்டு வந்து கொண்டிருந்தேன்" என்றாள்.

"கடிதமா? உன் புருஷனுக்குதானே?"

"ஆமாம்."

"எப்பொழுதும் வாயால் சொல்றாயே தவிர ஒரு தடவை கூட காட்டியதே இல்லையே?" அவள் குரல் பழிப்பாய் கேட்டது.

அதைக் கேட்டதும் ஜெயந்தியின் பார்வை தரையை நோக்கித் தாழ்ந்தது.

"இந்த தடவை வந்ததுமே கண்டிப்பாய் காட்டுகிறேன்."

"எனக்கு உன் கணவனைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப ஆர்வமாய் இருக்கிறது. ஏன் தெரியுமா? இவ்வளவு அழகானப் பெண்ணான உனக்கு கணவனாகியிருக்கும் அந்த அதிர்ஷ்டக்காரன் யாருன்னு பார்ப்பதற்காகத்தான்."

அந்தப் பெண்மணிக்கருகில் இருந்த மற்றொருத்தி இதைக் கேட்டுவிட்டு எங்கோ பார்க்கத் தொடங்கினாள். அந்தக் கிழவி அவளை நோக்கித் திரும்பி— "என்ன கமலா, என்ன சொல்கிறாய்?" என்றாள்.

கமலா என்ற அவள் தலையாட்டினாள்.

"தீரஜ் எப்படி இருக்கிறான்?" அவள் திரும்பவும் கேட்டாள்.

"நன்றாய்தான் இருக்கிறான்" என்றாள் ஜெயந்தி.

அவள் மறுபடியும் கமலாவைப் பார்த்து— ''கமலா! ஜெயந்தி தன் மகனை எவ்வளவு நன்றாய் வளர்த்திருக்கிறாள் தெரியுமா? தீரஜ்ஜிடமுள்ள நல்லொழுக்கம், பயிற்சி, படிப்பில் புத்திசாலித்தனம் இவைகளையெல்லாம் ரொம்பக் குறைந்த பசங்களிடந்தான் பார்க்க முடியும். செல்லம் கொடுத்தால் குழந்தைகள் கெட்டுப்போய்விடுவார்கள் என்பார்கள். நீ மட்டும் தீரஜ்ஜைப் பார்த்திருந்தால் அது முற்றிலும் பொய் என்று தெரிந்துவிடும். ஜெயந்தி மகனை எவ்வளவு செல்லமாய் வளர்ப்பாளோ அவ்வளவுக்கவ்வளவு கட்டுப்பாடும் கூட.''

கமலா என்பவள் எரிச்சலடைந்நாள்.

''வரேன்'' என்றாள் ஜெயந்தி.

''ஐயோ, சொல்ல மறந்து விட்டேனே, பூனாவிலிருந்து என் பேத்தி கடிதம் எழுதியிருக்கிறாள். போன தடவை உன்னிடமிருந்து வாங்கி அனுப்பியிருந்த புடவைகள் ரொம்ப நன்றாயிருக்கிறதாம், இன்னும் நான்கு வேண்டும் என்று எழுதியிருக்கிறாள். நானே உன்னிடம் வரலாம் என்றெண்ணிக் கொண்டிருந்தேன்.''

''சரி.''

''எவ்வளவு நாட்களில் தரமுடியும்?''

''ஒரு வாரத்தில் அனுப்புகிறேன்.''

''சரி. நான் டிரைவரிடம் நாளைக்கு அட்வான்ஸ் கொடுத்தனுப்புகிறேன்.''

''பரவாயில்லை. நான் புடவைகளை டெலிவரி பண்ணி விட்டுப் பணத்தை வாங்கிக் கொள்கிறேன். வரட்டுமா?'' ஜெயந்தி சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

அப்பெண்மணிகள் இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். ''கமலா! ஜெயந்தியைப் பார்த்தால் எனக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கிறது. கணவன் கிட்டே

இல்லாவிட்டாலும், மகனை வைத்துக் கொண்டு எவ்வளவு கௌரவமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.''

''கௌரவமா? குண்டு தைரியம் என்று சொல்லு!'' என்றாள் கமலா.

''இதென்ன கமலா?''

''அந்த ஜெயந்திக்கு என்னைத் தெரியாது. ஆனால் எனக்கு அந்த ஜெயந்தியை நன்றாகவே தெரியும். இவளுக்குக் கணவனே கிடையாது. கணவன் இருக்கிறான் என்று எல்லோரிடமும் சொல்றதும், இப்படிக் கடிதங்கள் எழுதுவதும் வெறும் நடிப்பு! உலகத்தாரின் கண்களை மூடுவதற்காக ஆடுகிற நாடகம்! எனக்குத் தெரியாதா? சௌந்தரம், என் நாத்தியின் மைத்துனருக்கு இவளை நன்றாய் தெரியும். பலே சாமர்த்தியசாலிதான். அவனை கல்யாணம் பண்ணிக்கணும்னு வலை போட்டாள்! பாவம்! நடக்கவில்லை.''

''ஆ! நிஜமாகவா?'' சௌந்தரம் ஆச்சரியமடைந்தவளாய் பார்த்தாள்.

''ஐயோ! உனக்கென்ன தெரியும் இவளோட சரித்திரமெல்லாம்? நீ ஒரு அசடு. கொஞ்சம் நன்றாய் பேசிவிட்டால் அவங்களைப் போன்ற நல்லவங்க கிடையாது என்பாய்.''

''அப்படியா? என்னவோ? ஜெயந்தி ரொம்ப நல்ல பெண் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். என்னவோ, இந்த காலத்தில் எல்லோருமே வேஷதாரிகள்தான். யாரையுமே நம்ப முடியவில்லை'' என்றாள் நிராசையோடு.

ஜெயந்தி அந்த வீதியைத் தாண்டிக் கொண்டிருக்கையில் நான்கு இளைஞர்கள் எதிர்ப்பட்டார்கள். அவர்கள் கிரிக்கெட் பேட்டுகளை வைத்துக் கொண்டு மைதானத்தில் விளையாடுவதற்காகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தியைப் பார்த்ததுமே அவர்கள் ''அதோ, ஜெயந்தி மேடம்! டேய், கேட்டு விடலாம், வாங்கடா'' என்று ஒருவன் சொன்னதுமே எஞ்சியவர்கள் தொடர்ந் தார்கள்.

நால்வரும் ஜெயந்தியிடம் வந்தார்கள்.

''வணக்கம் மேடம்.''

''மேடம்! நாங்கள் உங்களிடம் வரலாம் என் றெண்ணிக் கொண்டிருந்தோம்.''

''என்ன வேலை? சொல்லுங்கள்—''

ஜெயந்தி நின்று அவர்கள் எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள்.

''எங்கள் அஸோசியேஷனின் ஆண்டு விழா நெருங்கிக் கொண்டிருக்கிறது. எங்கள் ஆண்டு மலருக்கு விளம்பரம் கொடுப்பதற்காக உதவி பண்ணணும். நீங்கள் உங்கள் புடவைகளை சப்ளை பண்ணுகிறவங்க நிறைய பேர் இருப் பாங்க இல்லையா? அவங்களிடம் எங்களைப் பரிச்சியம் பண்ணிவையுங்கள் மேடம்.''

''சரி'' என்றாள் ஜெயந்தி சிரித்துக் கொண்டே. ஆள் காட்டி விரலை ஆட்டிக் கொண்டே சொன்னாள்— ''ரவி! மொதல்லயே சொல்லிவிட்டேன், விளம்பரங்களை வர வழைத்துக் கொள்கிற பொறுப்பு மட்டும் உங்களுடையது!''

''சரி, மேடம்! நீங்கள் பரிச்சியம் பண்ணி வைத்தாலே போதும். எங்களை அவங்க மதிப்பாங்க. எப்பொழுது வரச் சொல்றீங்க மேடம்?''

''நாளைக்கு மாலையில் நான்கு மணிக்கு''

''வரோம் மேடம். தீரஜ் எப்படி இருக்கிறான்?''

''நன்றாய் இருக்கிறான்.''

''இன்னும் கொஞ்சம் பெரியவனானால் கிரிக்கெட் கற்றுத் தருவோம். எங்கள் அஸோசியேஷனில் சுறுசுறுப் பான மெம்பராக்கிவிடுவோம்.''

''அப்படியா?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

அவர்கள் வணக்கம் தெரிவித்துவிட்டுப் போய் விட்டார் கள். ஜெயந்தி ஒரு நிமிஷம் அவர்களையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். தீரஜ் அவர்களைப் போல ஆக வேண்டுமென்றால் இன்னும் பன்னிரெண்டு வருஷங்களா வது ஆகும். ஜெயந்தியின் மனதில் மகனைப் பற்றிய யோசனை வந்ததுமே சொல்ல முடியாத சந்தோஷமும் பெருமையும் ஏற்பட்டன.

கொஞ்ச தூரம் போனதுமே, வேர்க்கடலை விற்கும் ஆள் எதிரே வந்தான். அவன் ஜெயந்தியைப் பார்த்த துமே, ''அம்மா'' என்று கூப்பிட்டான். மளமளவென்று வண்டியில் இருந்த வேர்க்கடலைகளைப் பொட்டலமாய் கட்டி எடுத்துக் கொண்டு வந்து தந்துவிட்டு ''அம்மா! குழந்தைக்குக் கொடுங்கம்மா! நேற்றைக்கு பொன்னய்யா கறிகாய் வாங்கிக் கொண்டு போகிற வழியில் கேட்டா னுங்க. அதற்குள் என்னிடம் தீர்ந்து விட்டதும்மா, கொடுக்க முடியலை. இன்னிக்கு வான்னு சொன்னேன், வரலை. ஸ்கூலுக்கருகில் பார்த்தேன், யாருமே இல்லை'' என்றான்

''இன்றைக்கு ஸ்கூல் இல்லை லிங்கய்யா'' என்றாள் ஜெயந்தி.

''அதான் போலிருக்கு. இப்பத்தான் உங்க வீட்டுக்குக் கூட போனேன், வீட்டில் குழந்தை இல்லை.''

''பொன்னய்யன் பார்க்குக்குக் கூட்டிட்டுப் போயிருக் கிறான்.''

''அப்படியா? குழந்தைக்குக் கொடுங்கம்மா! கும்பிடுங்க...'' என்று கைகளைக் கூப்பி வணங்கினான்.

அவ்வாறு வணக்கம் தெரிவித்ததில் ஏதோ நன்றி தென் பட்டது. ஜெயந்தி வேர்க்கடலை பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டாள். வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அவள் முகத்தில் மாறாத புன்முறுவல், திருப்தி! அவை அவள் முகத்திற்கே களையைத் தந்து கொண்டிருந்தன.

2

ஜெயந்தி வீட்டிற்குத் திரும்பி வந்த பொழுது வாலிசல் ஆட்டோ நின்று கொண்டிருந்தது. ''யார் வந்திருப் பார்கள்?'' என்றெண்ணிக் கொண்டே கேட்டைத் திறந்துக் கொண்டு உள்ளே வந்த பொழுது, எதிரே வராந்தாவில் பாரப் பண்ணப்பட்ட கேசங்களுடனும், தங்க ஃபிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுடனும், குதிகால் உயர ஷூவை அணிந்து கொண்டிருந்த ஒரு பெண் ஏழெட்டு வயதுடைய பெண் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு, சுவற்றில் இருந்த ஃபோட்டோவைக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே ஜெயந்தியின் கண்கள் சந்தோஷத்தால் மலர்ந்தன. மளமளவென்று நடந்து வராந்தாவிற்கு வந்தாள். காலடிச் சப்தம் கேட்ட துமே மூக்குக் கண்ணாடிப் பெண் இந்த பக்கமாய் திரும்பிப் பார்த்தாள்.

ஜெயந்தி அவளிடம் வந்து ''மாதவி! எப்பொழுது வந்தாய்?'' என்று கேட்டாள்.

''இன்றைக்குக் காலையில்தான் வந்தேன்''

''வருவதாய் எனக்குக் கடிதம் எழுதவில்லையே?''

''புறப்படுகிற வரை எனக்கே தெரிந்தால்தானே? எதிர் பாராமல் திடீர் விசிட்.''

''எவ்வளவு நேரமாச்சு இங்கே வந்து?''

''இப்பத்தான்'' என்ற மாதவி ஜெயந்தியை ஏறயிறங்க பார்த்துவிட்டு— ''ஆமாம், நீ இன்னும் இந்த போஸ்ட் ஆபீசைச் சுற்றிலும் பிரதட்சணம் வருவதை விடவில்லை போலிருக்கே!'' என்றாள் உலுக்கி எடுப்பது போல.

ஜெயந்தி பதில் சொல்ல முடியாதவளாய் தலை குனிந் தாள்.

''போன ஜன்மத்தில் பிடிவாத விக்கிரமாதித்தனாய் நீதான் இருந்திருப்பாய். பைத்தியங்கள் பைத்தியக்கார ஆசுபத்திரியில் மட்டுமே இல்லை, வெளியே கூட இருப் பாங்க என்று உன்னைப் பார்த்த பிறகு தோன்றுகிறது.''

ஜெயந்தி சிரித்தாள். ''தொடங்கி விட்டாயா உன் பிரசங்கத்தை? அட, ஆஷா எல்வளவு பெரியவளாகி விட்டாள்!'' மாதவியின் இடுப்பிலிருந்து அவள் மகளை எடுத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

''உன் மகன் மட்டும் பெரியவனாகவில்லையா? அவங்க ரெண்டு பேருக்கும் ரெண்டு மாதந்தானே வித்தியாசம்!''

''ஆமாம். தீரஜ் கூட பெரியவனாகி விட்டான்தான்'' என்றாள் ஜெயந்தி ஏதோ யோசனையுடன். ஆஷாவைப் பார்த்த பிறகுதான் தீரஜ்கூட பெரியவனாகிவிட்டான் என்ற ஞாபகமே வந்தது.

''தீரஜ் எங்கே?'' மாதவி கேட்டாள்.

''இல்லை. லீவு நாள் இல்லையா? பொன்னையன் பார்க்குக்குக் கூட்டிட்டுப் போயிருக்கிறான்'' என்றாள் ஜெயந்தி.

"இந்த பொன்னையன் வேறு இருக்கிறானா? அப்பப்பா! அவன் ஊமைத்தனத்தையும், காது கேளாத தனத்தையும், சண்டைக்காரத்தனத்தையும் சமாளித்துக் கொண்டு போக உன் ஒருத்தியால் தான் முடியும்! உனக்கு 'பொறுமை தேவதை' என்று பட்டம் கொடுக்கலாம்,"

"தொல்லைகளிலிருந்து எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு வெளியே வரணும் என்றால் அது ஒன்றுதான் ஆதாரம். இரு, உனக்கு காபி கொண்டு வரேன்" என்றாள் ஜெயந்தி.

"உங்கள் ரங்கம்மாவிடம் சொல்லிவிட்டு நீ வந்துவிடு. நான் அதிக நேரம் இருக்க மாட்டேன். போய்விடணும்" மாதவி கத்தினாள்.

ஜெயந்தியும் மாதவியும் வந்து வராந்தாவின் இறக்கத்தில் இருந்த ஷெட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். அங்கே மேஜை நாற்காலிகள் இருந்தன. மேஜை மீது பிளேட்டுகள் இருந்தன. அவ்விடத்திலிருந்து பார்த்த பொழுது தொலைவில் கற்களுக்கிடையே சாயத்தில் விதம் விதமான டிஸைன்களைத் தோய்த்து காயவைத்திருந்த புடவைகள் காற்றிற்குப் பறந்துகொண்டிருந்தன. மர டிசைன்கள் சிதறிக் கிடந்தன.

மாதவி அவ்விடத்தையெல்லாம் நன்றாய் சுற்று முற்றும் பார்த்துவிட்டு "பொன்னான உன் வாழ்க்கையை இப்படி வீணாக்கிக் கொள்கிறாயே?" என்றாள்.

"எனக்கு அப்படித் தோன்றவில்லை" என்றாள் ஜெயந்தி. அவ்விடத்தையெல்லாம் சுற்று முற்றும் பார்த்த பொழுது அவள் கண்களில் பெருமையும் சந்தோஷமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

"மாதவி! இந்த வேலையில் கஷ்டம் எவ்வளவு உண்டு. நான் வேலைக்காரியைப்போல தினமும் உழைத்துக் கொண்டிருப்பதாய் தோன்றும் உங்களுக்கெல்லாம். இதனால் எனக்குக் கிடைக்கிற சுதந்திரத்தைப் பற்றி

உங்களுக்கெல்லாம் தெரியாது. இது என் உலகம்! இந்த உலகத்திற்கு மகாராணி நான்தான்! எனக்குப் பிடித்தால் நான் வேலை செய்வேன், இல்லாவிட்டால் இல்லை. நேரமெல்லாம் என்னுடையதே! ஒருத்தருக்குத் தலைகுனிய வேண்டிய அவசியம் இல்லை. ஒருத்தருக்கு பயப்படத் தேவையில்லை." என்றாள் ஜெயந்தி காபியைக் கோப்பையில் ஊற்றி சிநேகிதிக்குத் தந்துகொண்டே.

"என்னவோ ஜெயந்தி! உன் போக்கே எனக்குப் புரியவில்லை. மாடாய் உழைத்துவிட்டு, அதுதான் சந்தோஷம் என்றெண்ணிக் கொள்வாய். தினமும் இவ்வளவு கஷ்டப்படுகிறாயே, உன்னிடம் அவசரம் என்று வந்தால் ஒரு பத்து ரூபாயாவது இருக்குமா? யாரையாவது பிச்சை எடுத்துதானே தீரணும்? பெண்ணாய் பிறந்த நாம்ப சுகப்படணும்! இந்த கஷ்டமெல்லாம் ஆணுடையது! ஜெயந்தி! என்னைக் கேட்டால் பெண்கள் பணத்துக்காக கஷ்டமே படக்கூடாது. பணம் சம்பாதிக்கிற ஆம்பிள்ளையைப் பண்ணிக் கொள்ளணும்! நீ நான் சொன்னாற்போல அந்த ஸ்ரீஹரியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால்—"

"மது! ப்ளீஸ்" ஜெயந்தி பேச்சைத் தடுத்தாள். அக்கண்களில் கோபம் புஸ்ஸென்று தெரிந்தது.

"சரி, சரி, ஓ.கே. நீ மனதை எங்கேயாவது மாற்றிக் கொண்டிருப்பாயோ என்று சொன்னேன்" என்றாள் மாதவி மென்று விழுங்கியபடி.

"வேறு எந்த விஷயத்தைப் பற்றியாவது பேசு. அனந்தராம் எப்படி இருக்கிறார்?"

"அவருக்கென்ன? பிரம்மாண்டமாய் இருக்கிறார். நிமிஷத்திற்கொருதடவை ரெண்டாங் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிடுவேன் என்று என்னை பயமுறுத்திக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்."

"உன்னை அழவைப்பதற்காக அப்படிச் சொல்லியிருப்பார். அவருக்கு உன்னைக் கண்டால் ரொம்ப பிடிக்கும்."

"பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை நான் ஒன்றும் கவலைப்பட மாட்டேன். அவர் மனைவியாய் எனக்குத் தரவேண்டிய சுகத்தைத் தந்தால் போதும். அவர் வாழ்க்கைக்கு நான் ஒன்றும் குறுக்காய் வரமாட்டேன்."

"மாதவி! இப்படிப் பேசுவதற்கு உனக்கு வெட்கமாய் இல்லை. கல்யாணமான பெண் ஒருத்தி பேசக் கூடிய பேச்சுதானா இது?"

"கல்யாணம். சட்! இந்த காலத்தில் கல்யாணத்தைப் பற்றி சீரியஸாய் எடுத்துக்கொள்கிற எந்தப் பெண்ணுமே உருப்படமாட்டாள். அதைக் கல்யாணம் என்று நினைத்துக் கொள்வதைவிட ஆண் பெண்ணிற்கிடையே ஒரு உடன் படிக்கை என்று எண்ணிக் கொண்டால் நிம்மதியாய் இருக்கும்."

மாதவி காபியைக் குடித்து முடித்துவிட்டு தம்ளரை மேஜை மீது வைத்துவிட்டு எழுந்திருந்தாள்.

"ஜெயந்தி! நீ கொஞ்சம் அந்தப் பழைய ஞாபகங்களை உதறிவிட்டால் நல்லது. நீ உன் வாழ்க்கையை வீணாய் கெடுத்துக் கொள்கிறாய் என்று நானும் மொத்திக் கொண்டே இருக்கிறேன் உன்னிடம். நீ என் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை."

ஜெயந்தி இரு கைகளையும் கூப்பி வணங்கினாள்.

"மாதவி! உனக்குக் கும்பிடு. நான் சுகமாய் இல்லாதது போல உனக்குத் தென்படலாம். சுகத்திற்கு நீ சொல்கிற அர்த்தம் வேறு. நான் ரொம்ப நிம்மதியாய் இருக்கிறேன். போதுமா?"

"நிஜமாய்தான் சொல்கிறாயா?" என்றாள் மாதவி அங்குமிங்கும் திரும்பிப் பார்த்து விட்டு.

"நிஜந்தான்.

"நீ முட்டாள், கோழை" என்றாள் மாதவி கோபத்துடன்.

"அப்புறம்? இன்னும் என்னென்ன பெயர் வைக்கப் போகிறாய் சொல்லு?" கன்னத்தில் கையை வைத்துக் கொண்டே கேட்டாள் ஜெயந்தி.

மாதவி ஒரு வினாடி நின்று ஜெயந்தியின் கண்களில் கூர்ந்து பார்த்து விட்டு— "நீ ரொம்ப சென்டிமென்ட்டல் ஃபூல்! உன் அழகும் புத்திசாலித்தனமும் வாழ்க்கையில் உன்னை எவ்வளவு உயரத்திற்குக் கொண்டு போகும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத முட்டாள் நீ—" மாதவி திரும்பி தொலைவில் நாய்க் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்த மகளைப் பார்த்து— "ஆஷா! வா, போகலாம்!" என்று கூப்பிட்டாள்.

"அதற்குள்ளாகவே போகிறாயா?"

"இவ்வளவு நேரமாய் இருந்தேன். காபி குடித்தேன். சந்தோஷப்படு. அங்கே எனக்காக எவ்வளவு பேர் காத்துக் கொண்டிருப்பாங்க தெரியுமா? இன்றைக்கு உன்னிடம் வராமலிருந்திருந்தால் உன்னை அப்புறமாய் பார்க்கவே முடிந்திருக்காது என்னால். அதனால்தான் கார் வேறு வேலையாய் போயிருப்பதாய் டாடி சொன்ன போதும் காருக்காகக் காத்திருக்காமல் ஆட்டோவில் வந்து விட்டேன்."

"தாங்க்யூ" என்றாள் ஜெயந்தி.

"அது ஒன்றுதானே உன்னால் என் மூஞ்சியில் விட்டெறியக் கூடியது? ஜெயந்தி, நான் உன்னிடம் வரவே கூடாது, உன்னைப் பார்க்கவே கூடாதுன்னு இருந்தேன். ஆனால் இந்த ஊருக்கு வந்ததுமே உன்னைப் பார்க்கிற வரைக்கும் என் உயிர் நிற்காது போலிருந்தது. தவி தவித்துப் போய் விட்டேன். நீ கடிதங்கள் போட மாட்டாய் என்றும், எவ்வளவு தடவை கேட்டுக் கொண்டாலும் டில்லிக்கு வரமாட்டாய் என்றும் உன் மேலிருந்த கோபம் எனக்கு மறந்து போய் விடும்"—போக முற்பட்ட

மாதவி நின்று ஜெயந்தியை நோக்கித் திரும்பி வந்தாள். அவள் கழுத்தைச் சுற்றிலும் கைகளைச் கோர்த்துக்— கொண்டு— ''ஜெய்! ஐ லவ் யூ! இந்த உலகத்தில் நீ ஒருத்தி தான் என்னுடைய உண்மையான சிநேகிதி என்று தோன்று கிறது. வரேன். பை'' என்றான்.

''ஒரு நிமிஷம் இரு'' என்றாள் ஜெயந்தி.

'ஏன்?''

''இதோ வரேன்—'' என்று சொல்லிவிட்டுச் சரே லென்று உள்ளே ஓடினாள். அடுத்த நிமிஷத்தில் ஒரு பாக்கெட்டுடன் திரும்பி வந்து—''மது! நேற்றைக்குதான் தான் தயாராயின. உனக்குப் பிடித்த கிளிப் பச்சை நிறத் தில் கருப்பு பார்டர் பிரிண்ட்! புடவையை எடுத்துக் கொண்டு போ''— என்றாள்.

மாதவி ஒரு விநாடி தடுமாறினாள். ''நான் பணம் தரேன்'' என்றாள்.

''வெட்கமில்லை?'' என்றாள் ஜெயந்தி.

''சரி! உனக்குப் பணம் தந்து வெட்கப்படுவதைவிட இதை வாங்கிக் கொண்டு வெட்கப்படுவதே மேல். கொண்டா இப்படி'' என்றாள்.

மாதவி புறப்பட்டாள்.

ஜெயந்தி ஆஷாவைத் தூக்கிக் கொண்டு ஆட்டோ வரைக்கும் வந்தாள்.

''தீரஜ்ஜைப் பார்க்கவே முடியவில்லை'' என்றாள் மாதவி.

''வரும் நேரந்தான். நீதான் புறப்பட்டு விட்டாய்''— என்றாள் ஜெயந்தி— ஆஷாவை முத்தமிட்டுவிட்டு மாதவி யிடம் தந்தாள்.

''வரேன்'' என்றாள் மாதவி.

''முடிந்தால் இன்னொரு முறை வா.''

''இதை நீ எனக்குச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை. நானே வருவேன். ஏனென்றால் உன்னிடம் சொல்ல வேண்டிய ரகசியங்கள் நிறைய இருக்கின்றன எனக்கு'' என்றாள் மாதவி.

ஆட்டோ புறப்பட்டது.

ஜெயந்தி கையை ஆட்டினாள். ஆட்டோ போய் விட்டது.

ஜெயந்தி வீட்டிற்குள் வந்தாள்.

ரங்கம்மா சாயம் போடடுக் காய வைத்திருந்த புடவைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

ஜெயந்தி வந்ததுமே— ''ஹரிநாராயணன் ஐயாவின் மனைவி புடவைகளுக்காக ஆளை அனுப்பினாங்கம்மா'' என்றாள்.

''அப்படியா? அவங்க சொன்ன வானவில் கலர் அந்த பார்டருக்கு நன்றாய் 'மேட்ச்' ஆகவில்லை. நான் அவங் களுக்குச் சொல்லிக் கொள்றேன்''— என்று டிராயரைத் திறந்து, வாடிக்கையாளர்களின் புத்தகத்தைப் பார்த்து விட்டு, குறித்து வைத்துக் கொள்ளத் தொடங்கினாள். அதற்குள் காலடிச் சப்தம் கேட்டது.

''இதோ, பொன்னையன் வந்து விட்டான்'' என்றாள் ரங்கம்மா.

பொன்னையன் மெதுவாய் பூனையைப் போல உள்ளே வந்தான். அவன் கருப்பாய், குள்ளமாய் மிகப் பருமனாய் இருப்பான். பற்கள் பளீரென்று வெண்மையாய் இருக்கும். அவனுக்குப் பேச வராது. காதும் கேட்காது. அவனோடு பேச யாருக்கும் வராது. ஜெயந்தி அவனோடு பேசுவதற்கு ஜாடை காட்டிப் பேசும் பாஷை ஒன்றை தயாரித்துக் கொண்டிருந்தாள். அதன் மூலம் அவனுக்கு ஜெயந்தி பேசுவது மிகச் சுலபமாய் புரிந்து விடும். அவனுக்குக் கொஞ்சம் சண்டைக்கார குணமும் உண்டு. சிறு பிள்ளை

மனத் தத்துவம். ஜெயந்திக்கு அவன் மனம் நன்றாய் புரிந் திருந்தது. அவனுடைய உடல் ஊனத்தைப் பார்த்து அவனுக்குத் தன் மீதே கோபம் வரும். அந்தச் சமயத்தி லெல்லாம் சாப்பிட மாட்டான். சிள்ளென்று எரிந்து விழுந்து கொண்டிருப்பான்... அப்படி இல்லாத சமயத் தில் மாடாய் வேலை பண்ணுவான். சோர்வே இருக்காது. கோபம் வராது. ஜெயந்தி அவனை என்றுமே கோபித்துக் கொள்ளமாட்டாள். தீரஜ்ஜிற்குச் சமமாய் ஒரு சிறு பையனைப் பார்த்துக் கொள்வது போலவே அவனை நடத்தி வந்தாள். சில சமயம் ரங்கம்மாவுடன் சண்டை போட்டு விட்டு, கோபித்துக் கொண்டு வேலையை விட்டு விட்டுப் போய் விடுவான். மறுநாளோ அல்லது அதற்கடுத்த நாள் சாயந்திரமோ ஏதும் அறியாதவனைப் போல திரும்பி வந்து, தீரஜ்ஜோடு விளையாடிக் கொண்டு உட்கார்ந் திருப்பான். ஜெயந்தி தனக்குள் சிரித்துக் கொள்வாள்.

பொன்னையன் வந்து விட்டதாய் ரங்கம்மா சொன்ன துமே ஜெயந்தி திரும்பிப் பார்த்தாள். பொன்னையன் ஏனோ திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தான். அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொண்டிருந்தது.

ஜெயந்தி எழுந்து வந்தாள்.

"தீரஜ் எங்கே?"

"குழந்தை வீட்டுக்கு வரலையா?" பொன்னையன் சைகைக் காட்டி கேட்டான்.

"வீட்டுக்கா? எப்படி வருவான்? நீ எங்கே போனாய்" என்றாள் ஜெயந்தி.

பொன்னையன் முகம் வெலவெலத்துப் போயிற்று.

"சொல்லு, எங்கே விட்டுவிட்டு வந்தாய் அவனை? இருட்டி விட்டது வேறு" உருமினாற்போல் கேட்டாள்.

பொன்னையன் சமிஞ்ஞை மூலமாய்— "பார்க்கி லிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, ரோடில்

ரெண்டு பேரும் நின்று குரங்கு சர்க்கஸ் பார்த்துட் டிருந்தோம். அதற்குள் கல்யாண ஊர்வலம் வந்தது. அந்த ஜனங்களோடு தீரஜ் தப்பிப் போய் விட்டான். எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. வீட்டிற்குதான் வந்து விட்டானோன்னு..."

அதைக் கேட்டதுமே ஜெயந்தி திக்பிரமை அடைந்து போனாள்.

"அவனை அப்படிப் பார்த்துக் கொள்ளாமல் எப்படி விட்டாய்? மொதல்லேயே அவனைக் கூட்டிட்டுப் போக வேண்டாம்னு சொன்னேனா இல்லையா?"— ஜெயந்தி கையிலிருந்த காகிதங்களை மளமளவென்று டிராயருக்குள் தள்ளினாள்.

"பொன்னையா, கதவைச் சாத்து" என்று உத்தர விட்டாள்.

வீட்டைப் பூட்டிக் கொண்டிருந்தபொழுது ஜெயந்தி யின் கைகள் நடுங்கின. நெற்றியில் வியர்த்தது.

தீரஜ்ஜை மறுபடியும் பார்க்க முடியுமா?

அன்றைக்கு சிவராஜன் போன நாள் நினைவிற்கு வந்தது.

"ஒரு நிமிஷத்தில் இதோ வரேன்" என்று சொல்லி விட்டுப் போனவன் எப்படி மாயமாகிவிட்டான்!

கடவுளே! அவள் பட்ட கஷ்டங்கள் இன்னுமா போத வில்லை? அவள் தலையெழுத்து இன்னும் எப்படி எழுதி வைத்திருக்கிறதோ?

வீட்டைப் பூட்டிவிட்டு, ரங்கம்மா, ஜெயந்தி, பொன் னையன் மூவரும் மளமளவென்று பார்க்கிற்குப் போனார் கள். அங்கிருந்து குரங்கு சர்க்கஸ் ஆடிய இடத்திலிருந்து இரு பக்கங்களிலும் குறுகலாய் இருந்த வீடுகளில் தேடிப் பார்த்

தார்கள். எவ்வளவு தேடியும் தீரஜ் ஜாடையைக் காணோம். ஜெயந்தி தெருக்கோடியில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ரிப்போர்ட் தந்தாள். அவர்கள் முயற்சி பண்ணுவதாய் உத்திரவாதம் அளித்தார்கள். போட்டோ வேண்டும் என்றார்கள். ஜெயந்தி ரங்கம்மாவையும் பொன்னய்யனையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தாள். அதற்குள் தீரஜ்ஜைக் காணாமல் நான்கு மணி நேரம் ஆகிவிட்டது! ஜெயந்தியின் செவிகளில் பேரிரைச்சல் தொடங்கி விட்டது. அவளிடமிருக்கும் தன்னம்பிக்கை மாயமாய் பறந்துவிட்டது. அவள் கால்கள் நடுங்கத் தொடங்கின. அவள் உதட்டில் என்றும் நெளிந்து கொண்டிருக்கும் முறுவல் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. அவள் பூட்டைத் திறந்துகொண்டு வீட்டிற்குள் வந்தாள்.

விளக்கைப் போட்டுவிட்டு, பீரோவைத் திறந்து அதிலிருந்த தீரஜ்ஜின் போட்டோவை எடுத்து பொன்னையனிடம் தந்து போலிஸ் ஸ்டேஷனில் கொடுத்துவிட்டு வரச் சொன்னாள்.

ஜெயந்தி வீட்டிற்குள் குட்டி போட்ட பூனையாய் தவித்துக் கொண்டிருந்தாள். தீரஜ் என்னவானான்? எதிர்த்த வீட்டில் வேலை பண்ணி வந்த நரசம்மாவின் பையன் தீரஜ்ஜின் வயதுடையவன்தான். தொலைந்து போய் ஒரு வருடம் ஆகிவிட்டது. இன்னும் அவன் இருக்குமிடம் தெரியவேயில்லை. நரசம்மாள் இப்பொழுதும் அவனை நினைத்துக் கொண்டு அழுதுகொண்டேதான் இருக்கிறாள். தீரஜ் கூட அப்படித் தன்னை விட்டுப் போய் விட்டால் அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா? அவளால் உயிரோடிருக்கத்தான் முடியுமா?

ஜெயந்தியின் மனம் அல்லோகலமாகிவிட்டது. மகனை விட்டு ஒரு நிமிஷம் கூட அவளால் இருக்க முடியாது. அவன் பள்ளியிலிருந்து திரும்பி வரக் கொஞ்சம் தாமதமானாலும்

சரி, கூண்டிற்குள் புலியைப் போல சுற்றிச் சுற்றி வந்து கொண்டே எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். திரும்பவும் அவனைப் பார்க்கும் வரை எந்த வேலையும் ஓடாது. தெய்வமே! தீரஜ் கிடைப்பானா? ஜெயந்தியின் மனம் உள்ளுரக் குமுறிக் கொண்டேயிருந்தது. இன்னும் ஒரு மணி இப்படியே கழிந்தால் அவளுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

அங்குமிங்கும் அமைதியில்லாமல் சுற்றி வந்து கொண்டிருந்த ஜெயந்தி கேட் சப்தம் கேட்கவே வராந்தாவிற்கு ஓடி வந்தாள் 'தீரஜ்' என்று.

கதவைத் தாண்டியவள் அதற்குள் அப்படியே நின்று விட்டாள்.

கேட்டைத் திறந்துகொண்டு பொன்னையன் வந்து கொண்டிருந்தான்.

ஜெயந்தி திரும்பி வந்து நாற்காலியில் சரிந்தாள்.

பொன்னையன் உள்ளே வந்தான்.

எஜமானி பட்டுக் கொண்டிருந்த வேதனை அவனுக்கு நன்றாகவே புரிந்தது. தன்னால் அவளுக்கு எவ்வளவு துன்பம் என்றெண்ணி செய்வதறியாது வருந்தினான் அவன்.

திரும்பவும் கேட் சப்தம் கேட்டது.

ஜெயந்தி ஓடி வந்தாள்.

கேட்டைத் திறந்துகொண்டு ரங்கம்மாவுடன் பக்கத்து வீட்டு வரலட்சுமி வந்து கொண்டிருந்தாள்,

''ஜெயந்தி! தீரஜ்ஜைக் காணவில்லையாமே?'' ஜெயந்தி ஆமாம் என்று தலையாட்டினாள். அவள் கண்களில் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. உதடுகள் அதிர்ந்து கொண்டிருந்தன. ''இந்த பொன்னையய்ன் ஒரு

உதவாக்கரை! காதும் கேட்காது, பேசவும் வராது. அவனோடு அனுப்ப வேண்டாம் என்று உன்னிடம் எவ்வளவோ தடவைகள் சொல்லியிருப்பேன்.''

அதற்குள் கடியாரம் மணியடித்தது.

ஜெயந்தி நிமிர்ந்து பார்த்தாள்,

இரவு மணி ஒன்பது!

தீரஜ் இந்த இருட்டில் எங்கே இருப்பானோ? ஜெயந்திக்கு எங்கிருந்தோ 'அம்மா' என்று அவன் அழைப்பது போலவே இருந்தது.

''கவலைப்படாதே. போலீஸ் ரிபோர்ட் தந்திருக் கிறாய் இல்லையா, கிடைத்து விடுவான்'' என்றாள் வரலட்சுமி.

ஜெயந்திக்கு அவள் பேசுவது காதில் கேட்டபோதிலும் கவனம் எங்கோ இருந்தது. அவள் கண் முன்னாடி ஏதேதோ காட்சிகள் தென்பட்டுக் கொண்டிருந்தன. அவளுக்கும் தீரஜ்ஜிற்கும் பந்தம் முடிந்து போய்விட்டதா? அதனால்தான் அவன் இவ்வாறு திடீரென்று பிரிந்து போய்விட்டானா?

ஒன்றல்ல ஆயிரம் யோசனைகள் மின்னலாய் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

தீரஜ் காணாமல் போய்விட்ட விஷயம் தெரிந்து அதற்குள் அக்கம்பக்கத்தார் இரண்டு மூன்று பேர் வந்தார் கள். ஜெயந்தி சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தாள். தீரஜ் இல்லாமல் இன்றிரவை அவளால் கழிக்க முடியுமா? அவளிடம் இருந்த தைரியமும் நம்பிக்கையும் நசிந்துபோகத் தொடங்கின. மேலுக்கு தைரியமாய் இருப்பதுபோல தென்பட்டாளேயொழிய உள்ளூர தளர்ந்து போய்க் கொண்டிருந்தாள்.

வந்தவர்கள் நேரமாகிவிட்டதால் போகத் தொடங்கி னார்கள். தமக்குத் தெரிந்த தைரியத்தைச் சொல்லி

விட்டுப்போனார்கள், ஜெயந்தியின் மூளையில் அதொன்றும் ஏறவில்லை.

அவள் சூனியத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந் திருந்தாள்.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

திரும்பவும் யாரோ விசாரிப்பதற்காகவும், தேற்றி விட்டுப் போவதற்காகவும் வந்திருப்பார்கள். ஜெயந்திக்கு அவர்களோடு பேசப் பொறுமையில்லை. யாரும் தன்னைத் தொந்தரவு கொடுக்காமலிருந்தால் நன்றாய் இருக்கும் என்று தோன்றிற்று.

அதற்குள் ரங்கம்மா வராந்தாவிலிருந்து ''அம்மா! இதோ தீரஜ்'' என்று பெரிதாய் கத்தினாள். அதைக் கேட்டதும் ஜெயந்தி சரேலென்று எழுந்திருந்தாள். ஒரே பாய்ச்சலாய் வாசலுக்கு ஓடி வந்தாள். அதற்குள் காரி லிருந்து இறங்கிய ஒரு உயரமான மனிதன் தீரஜ்ஜை கைகளில் தூக்கிக்கொண்டு உள்ளே வந்து கொண்டிருந் தான். அவன் போட்டுக் கொண்டிருந்த வெண்மையான உடையெல்லாம் ரத்தக் கறைகள்! தீரஜ்ஜின் உடம்பெல் லாம் காயங்கள்!

''தீரஜ்'' ஜெயந்தி வீலென்று அலறிக்கொண்டே ஓடி வந்தாள் எதிரே. முன்பின் அறிமுகமில்லாத அந்த நபரின் கையிலிருக்கையிலேயே மகனைப் பிடித்துக் கொண்டே ''ஐயோ, என்னவாச்சு? ஏன் இப்படி இருக்கிறான்''– அலறி விட்டாள். ரத்தத்தைப் பார்த்த அவளுக்கு மகன் தென் பட்டு விட்டான் என்ற சந்தோஷத்தோடு பீதியும் கலக்க மும் சேர்ந்துக் கொண்டன. அந்த முன்பின் அறிமுக மில்லாதவனுக்கு முன்னிலையிலேயே மகனை இருகை களாலும் கட்டியணைத்துக் கொண்டு அவன் கன்னங் களிலும் நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டாள். அந்த முயற்சியில் ஜெயந்தியின் தலை அந்த ஆளின் மார்பிலும்

வயிற்றிலும் உராய்ந்ததைக் கூட கவனிக்கும் நிலையில் இல்லை அவள்.

"பேசுடா! அம்மான்னு கூப்பிடுடா! தீரஜ்! பேச மாட்டாயா கண்ணா!" என்று வெறிப் பிடித்தவளைப் போல மகனைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருந்தாள்.

அந்தப் புது ஆள் ஜெயந்தியைப் முழங்கையால் அப்பால் தள்ளி விட்டான்.

"பேசு என்றால் எப்படிப் பேசுவான்? அவனுக்கு நினைவு இருந்தால் தானே? குழந்தைகளைப் பெற்று விட்டால் போதுமா? அவங்களை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளவும் தெரியணும்" அவன் குரல் மந்திரஸ் தாயியில் சாட்டையால் முகத்தில் ஓங்கி அடித்தாற் போல இருந்தது.

அப்பொழுதுதான் ஜெயந்திக்கு முன்பின் அறிமுக மில்லாத ஒருத்தன் வீட்டிற்குள் வந்திருப்பதே நினைவிற்கு வந்தது. அவன் தள்ளியதைப் பார்த்து வாயடைத்துப் போய் அப்படியே நின்றாள்.

அவன் உள்ளே வந்து தீரஜ்ஜை அங்கிருந்த கட்டிலில் படுக்க வைத்தான். தீரஜ்ஜின் தலையிலும் காலிலும் வலது மணிக்கட்டிற்கருகிலும் பேண்டேஜ் போடப் பட்டிருந்தது. ரத்தம் நிறைய வந்திருக்கும் போலிருந்தது. சட்டையெல்லாம் கறைகள்!

அவன் தீரஜ்ஜைப் படுக்க வைத்துவிட்டு ஒரு வினாடி அவனையே பார்த்தான். பிறகு யாரையும் பார்த்துச் சொல்லாமல்— "சாலையைக் கடப்பதற்காக ஓடிய பொழுது ஸ்கூட்டரில் மோதிக் கொண்டு உருண்டு விழுந்து விட்டான். ஸ்கூட்டர் ஆள் ஓடிவிட்டான். பின்னாலிருந்து வந்த நான் பார்த்துவிட்டுக் காரை நிறுத்தினேன். ரத்தம் அப்படி ஒழுகியதைப் பார்த்து விட்டு இனி பையன் பிழைக் மாட்டான் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போய் கட்டுக்கட்டச் செய் தேன். போலீஸ் ரிபோர்ட் தரலாம் என்றெண்ணிக் கொண் டிருந்த பொழுது அந்த டாக்டரிடம் வந்த பேஷன்ட் ஒருவர் இவன் இந்த வீட்டுப் பையன் என்று சொல்லி விலாசத்தைச் சொன்னார்."— அவன் ஜேபியைத் தடவி, அதிலிருந்த பிரிஸ்க்ரிப்ஷனையும் மருந்துகளையும் எடுத்து தீரஜ்ஜிற்குப் பக்கத்தில் வைத்து விட்டு— "இந்த மருந்துகளைத் தரணும். நாளைக்கு டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய் காட்டணும்"— என்று சொல்லிவிட்டு விருட்டென்று திரும்பிப் போய்விட்டான்.

திக்பிரம்மை அடைந்தபடி பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி, சொரணை வந்தவளாய் சட்டென்று ஓரடி முன்னுக்கு வந்து அவனுக்கு நன்றி சொல்வதற்காக வாயைத் திறந்தாள். அதற்குள் அவன் மளமளவென்று அடியெடுத்து வைத்தபடி வராந்தா படிகளில் இறங்கி விட்டான்.

ஜெயந்தி வராந்தா படிகளில் இறங்குவதற்குள் அவன் காரிடம் போய்விட்டான். ஜெயந்தி பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டதும், கார் ஸ்டார்ட் ஆகி விர்ரென்று புறப்பட்டுப் போனதும் நிமிஷத்தில் நடந்து முடிந்து விட்டது.

பொன்னையனின் அழுகுரலைக் கேட்டுச் சட்டென்று இவ்வுலகத்திற்குத் திரும்பி வந்தாள். பொன்னையன் அழுது கொண்டே ஓடிப்போய் அங்கே மூலையில் இருந்த குடையை எடுத்து வந்து ஜெயந்தியின் கையில் வைத்து, அவளுக்கு முன்னால் குனிந்து 'அடியுங்கள்' என்பதுபோல் நின்றான்.

ஜெயந்தி குடையை அப்பால் விட்டெறிந்துவிட்டு மகனிடம் வந்து உட்கார்ந்து கொண்டாள். மகனின் தலையைக் கோதிய அவளுக்கு இதயத்திலிருந்து துக்கம் பொங்கிக் கொண்டு வெளிவரத் தொடங்கிற்று. எந்த

தெய்வத்தின் கருணையாலோ அந்த முன்பின் அறிமுக மில்லாத ஆள் சமயத்தில் வந்து காப்பாற்றியிருக்கிறான். உடனே டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போயிருக்கா விட்டால் என்ன ஆகியிருக்கும்! அவன் யாரோ? இன்றைக்கு அவளுக்கு இவ்வளவு உபகாரம் பண்ணியிருக் கிறான். ஒரு நிமிஷம் கூட நிற்கவில்லை. அவள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்குக்கூட அவகாசம் தரவில்லை.

வெகு நேரங்கழித்து தீரஜ் கண்களைத் திறந்தான்.

"தீரஜ்" ஜெயந்தி கூப்பிட்டாள்.

"தீரஜ்" ரங்கம்மா கூட கூப்பிட்டாள்.

பொன்னையன் வாயால் சப்தம் போட்டான் தான் கூப்பிடுவது போல. தீரஜ் மெல்ல கண்களைத் திறந்தான். அக்கண்கள் தூக்க மயக்கத்துடன் பாரமாய் இருந்தன.

"மம்மி" என்றான் மெல்லிய குரலில்— "எனக்கென்ன ஆகிவிட்டது?"

"ஒன்றுமில்லைப்பா, தூங்கு" அவள் கேசங்களைக் கோதிக் கொண்டே குனிந்து அவனை முத்தமிட்டாள்.

"மம்மி, எனக்குத் தூக்கம் வரது. டாடிக்கு குட்நைட் சொல்லணும்."

"நாளைக்குச் சொல்லிக் கொள்ளலாம். தூங்கு" என்றாள்.

"ஊஹூம். டாடிக்குக் கோபம் வந்துவிடும். டாடியை எடுத்துக் கொண்டு வா மம்மி."

ஜெயந்தி எழுந்து சென்று கட்டிலுக்குப் பக்கத் திலேயே மேஜை மீது இருந்த போட்டோவைக் கொண்டு வந்தாள். அதில் பைலட் உடையுடன் ஒரு இளைஞன் இருந்தான். அவன் உதட்டில் முறுவல் மிக அழகாய் நெளிந்து கொண்டிருந்தது. அக்கண்களில் ஒளி!

தீரஜ் அந்த போட்டோவிலிருந்த நபரை மிக விருப்பத் தோடு பார்த்தான்.

"குட்நைட் டாடி" என்றான். தாயிடம் அந்த போட்டோவைத் தனக்குப் பக்கத்திலேயே வைக்கச் சொல்லி கேட்டுக் கொண்டான். கொஞ்ச நேரங்கழித்து உறக்கத்தில் ஆழ்ந்து போனான்.

ஜெயந்தி பெரிய விளக்கை அணைத்து விட்டுச் சின்ன விளக்கைப் போட்டு விட்டு வந்து மகனுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். அவள் மனமெல்லாம் பெரிய ஆபத்து நீங்கிவிட்டாற் போன்ற நிம்மதி! தனக்கு இந்த நிம்மதியை நல்கிய அந்த முன்பின் அறிமுகமில்லாத ஆளின் மீது நன்றியுணர்ச்சி! மகன் தனக்குப் பக்கத்தில் இருக் கிறான் என்ற மகிழ்ச்சியில் அடிக்கடி அவன் மீது கையை வைத்துத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் அவளுக்கும் உறக்கம் வந்துவிட்டது. அந்த நிசப்தமான அறையில், அந்த விடிவிளக்கின் வெளிச் சத்தில் அந்த போட்டோவில் இருந்த இளைஞன் தன் குடும்பத்து நபர்களை ஆசைதீர, நிருப்தியுடன் பார்த்துக் கொண்டாற்போல தோன்றிற்று.

3

"அம்மா! சாரீ! நீங்கள் ஒன்றும் எண்ணிக்காதீங்க! அந்தக் கடைக்காரன் முதலில் ஐம்பது புடவைகளுக்கு ஆர்டர் தந்துவிட்டு, கொண்டு போய் கொடுத்த சமயத் தில் மார்க்கெட்டில் புதிதாய் ஏதோ மில் புடவை வந்திருக் கின்றன, அவை நன்றாய் விற்பனையாகின்றன, அதனால் இவைகள் வேண்டாம் என்றுச் சொல்லிவிட்டு இரண்டு

புடவைகளை மட்டுமே வாங்கிக் கொண்டு, மீதியை வாபஸ் பண்ணி விட்டானுங்க''— என்றான் ரமணன்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் இப்புடவைகளை வழக்க மாய் வாங்கும் கடைக்காரன் நன்றாய் விற்பனையாவதாய் சொல்லி ஐம்பது புடவைகளுக்கு ஆர்டர் தந்தான்.

ஜெயந்தி பணத்தைக் கடன் வாங்கி துணிகளை வாங்கி வந்து மிகப் பாடுபட்டு பொறுமையோடு அப்புடவைகளைத் தயாரித்துத் தந்தாள். அவன் அடுத்த மாதம் பணம் தருவ தாய் சொன்னான். அவள் போய்க் கேட்டபொழுது மறுபடியும் அடுத்த மாதம் என்றான். மறுபடியும் ஒரு மாதங் கழித்துப் போனபொழுது, ''உங்கள் புடவை களை விற்கவில்லை. அவ்வளவு தூரம் வேண்டுமென்றால் எடுத்துக்கொண்டு போய்விடு'' என்று எரிந்து விழுந் தான். ரமணன் வந்து இதைச் சொன்னபொழுது ஜெயந்தி ஒரு இரண்டு மாதங்கள் வரை அந்தக் கடைக்குப் போய் பணம் கேட்க வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். அதற் கப்புறமாய் போனபொழுதுதான் இப்புடவைகளை யாருமே வாங்கவில்லை என்று சொல்லி வாபஸ் தந்து விட்டான்.

பணம் வரும் என்று ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டே, கடன்காரர்களை நாளைக்கு, நாளன்றைக்கு என்று நயமாய் சொல்லிச் சொல்லி அனுப்பி வைத்துக் கொண்டிருந்த ஜெயந்திக்கு, இந்தப் புடவைகள் விற்பனை யாகாமல் திரும்பி வந்ததைப் பார்த்தது இடுப்பு ஒடிந் தாற்போல ஆகிவிட்டது. இவைகளுக்கு செலவு செய்த பணத்தை இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. வீட்டில் தினந்தினம் ஏதாவது ஒரு புதுச் செலவு! வரும்படி இல்லை. ரங்கம்மாவின் மகளுக்கு உடம்பு சரியாய் இல்லை என்று கடிதம் வந்தது. ''அம்மா எப்படியாவது ஒரு நானூறு ரூபாய் கொடுங்கம்மா. உங்கள் நிலைமையைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனாலும் உங்களைக் கேட்காமல்

வேறு யாரைக் கேட்பேன். எவ்வளவோ நாட்களாய் உங்க விடமே அண்டிப் பிழைத்துக் கொண்டிருக்கிறேன். இப் பொழுது இன்னொருவரிடம் போனாலும் எனக்கு யாரும் கொடுக்கமாட்டாங்க'' என்றாள். ரங்கம்மாள் சொன்னதும் உண்மைதான்! இவ்வளவு நாட்களாய் துணையும் நிழலு மாய் அவளிடம் இருந்து கொண்டிருக்கிறாள்... அவளுக்கு ஒரு தேவை என்று வந்தபொழுது அரவணைக்க வேண்டிய பொறுப்பு தன்னைத்தான் சேர்ந்தது! ஜெயந்திக்கு இந்த பணம் சம்பாதிக்கும் வழி பெரிய பிரச்னையாய் இருந்தது. இந்தப் புடவைகள் சாயம் டிஸைன் போடுவது இதெல்லாம் சில சமயங்களில் மிகவும் ஆர்வத்தை ஊட்டுவதாய் இருக் கும். சில சமயங்களில் நிராசையும் ஏமாற்றமும்தான் ஏற்படும். யாரிடம் போவது கடனுக்காக? ஜெயந்திக்கு வர வர இந்தப் பொருளாதாரத் தொல்லை பெரிய சுமை யாய் இருந்தது. மனம் சோர்ந்து போய் விடும். இனி என்னால் ஒன்றுமே பண்ண முடியாது என்று தோன்றத் தொடங்கிவிடும். ஆனால் திரும்பவும் அதற்குள்ளேயே தன்னைத்தான் சுதாரித்துக் கொண்டு விடுவாள். கஷ்டங்கள் எப்பொழுதுமே இருந்து கொண்டிருக்குமா? கொஞ்ச நாட்கள் போனால் இனி சுகந்தான்! என்று தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொள்வாள்.

நீரஜ்ஜிற்கு காயங்கள் கொஞ்சம் குணமாயின. ஜெயந்தி மறுநாள் நீரஜ்ஜை டாக்டரிடம் அழைத்துச் சென் றாள். நர்ஸ் நேற்று யாரோ வந்து நீரஜ்ஜிற்கு கட்டுக் கட்டிக்கொண்டு போனதைச் சொன்னாள். இஞ்செக்ஷன் வேண்டும் என்று சொன்னதுமே உடனுக்குடன் போய் வாங்கிக்கொண்டு வந்தார் என்றாள்.

''அவர் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் ஜெயந்தி.

''தெரியாது! அவர் எங்கள் க்ளினிக்கிற்கு வந்தது இது தான் முதல் தடவை'' என்றாள்.

93459

ஜெயந்திக்கு அவனை ஒரு தடவை பார்த்தால் நன்றா யிருக்கும் என்றிருந்தது. நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றெண்ணினாள்.

ஜெயந்தி அன்றைக்கு மார்வாடியிடம் போய் பணம் கடன் வாங்கிக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள்! பஸ்ஸ்டாண்டிற்கருகில் வந்து நின்ற ஜெயந்தியின் கண்களில் எதிரேயிருந்த கடையிலிருந்து ஏதோ வாங்கிக்கொண்டு வெளியே வந்துகொண்டிருந்த அவன் தென்பட்டான். ஜெயந்தி அவனை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாள்.

அவன் காருக்கருகில் வந்துகொண்டிருந்தான். ஜெயந்தி விருட்டென்று சாலையைக் கடக்கப் போனாள். அதற்குள் பஸ் குறுக்காய் வந்துவிட்டது. ஜெயந்தி நின்றாள். பஸ்ஸும் அதைத் தொடர்ந்து லாரியும் போனபிறகு சாலையைக் கடக்கப் போன ஜெயந்தி நின்று விட்டாள்: எதிரே கார் இல்லை. அவன் போய்விட்டான். ஜெயந்தி யின் மனம் ஏமாற்றமடைந்தது.

நான்கு வாரங்கள் கழிந்து விட்டன. ஜெயந்தி ஏறக் குறைய அவனைப் பற்றியே மறந்து போய்விட்டாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. ஊரில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. தீரஜ் போக வேண்டும் என்று அடம் பிடித்தான். ஜெயந்தி இப்படிப்பட்டவைகளுக்கு லேசில் கிளம்பிவிட மாட்டாள். வெளியே போக வேண்டுமென் றால் தனீயாய் போகமாட்டாள். கூடவே ரெங்கம்மா, அல்லது பொன்னையன் வரவேண்டியது! நால்வரும் போக வேண்டுமென்றால் செலவு நிறைய ஆகிவிடும். அந்தப் பணத்தில் ஒரு டப்பா சாயம் வாங்கலாமே என்றெண்ணு வாள். முடிந்தவரையிலும் தீரஜ்ஜிற்குத் தானே கதை களைச் சொல்லி, லைப்ரெரியிலிருந்து காமிக் புத்தகங்களை வாங்கி வந்து பொழுதுபோகச் செய்வாள்.

வீட்டில் எல்லோருக்குமே பெரிய பொழுதுபோக்கு பொன்னையன்தான்!

ஜெயந்தி கொஞ்சம் கண் மறைவாகி விட்டால் தீரஜ் ஜிற்குத் தன் குரலில் பாட்டுப் பாடிக் காட்டுவான். விளையாடிக் காட்டுவான்.

தீரஜ்ஜின் பள்ளிக்கூடத்தில் நிறைய பேர் அந்த சர்க்கஸைப் பார்த்துவிட்டார்களாம். தீரஜ் அந்த ஞாயிற்றுக்கிழமை போக வேண்டும் என்று அடம்பிடிக்கவே வேறு வழி இல்லாமல் புறப்பட்டாள் ஜெயந்தி.

ஞாயிற்றுக் கிழமையாதலால் சர்க்கஸ் பார்க்க வந்த கூட்டம் அதிகமாயிருந்தது. டிக்கெட் வாங்குவதற்காக 'க்யூ' நின்றுகொண்டிருந்தது. பொன்னையன் டிக்கெட்டிற் காக க்யூவில் நின்றான்.

ஜெயந்தி தீரஜ்ஜின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்தாள். விளக்குகள் பளிச் பளிச்சென்று எரிந்தன. விதம் விதமான உருவங்களோடு வரிசையாய் ஓடிக் கொண்டிருந்த விளக்குகளையும், வெளியே வைக்கப்பட்டிருந்த போஸ்டர்களையும், அங்கே நின்றுகொண்டிருந்த யானைகளையும், ஜனங்கள் ஏதோ புது உலகத்திற்குள் அடியெடித்து வைத்துவிட்டாற்போல சந்தோஷமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டென்ட்டிற்கு வெளியிலேயே பலவித கடைகள் இருந்தன. கூல்டிரிங்க்ஸ், பாப்கார்ன், சாக்லெட்டுகள், ஐஸ்கிரீம்கள் விற்கும் கடைகளில் சிறுவர்கள் விழுந்தடித்துக் கொண்டு வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அங்கே அடியெடுத்து வைத்ததுமே பெரியவர்கள்கூட கொஞ்சநேரம் தம் தம் தொல்லைகளையும், கவலைகளை யும், பிரச்னைகளையும் தற்காலிகமாகவாவது மறந்து போய் சந்தோஷ மடைந்து கொண்டிருந்தார்கள்.

33930

தீரஜ் தாயின் கையைப் பிடித்துக் கொண்டே யானை களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி ஜன்னல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் நான்கு இளைஞர்கள் அங்கே வந்தார்கள்.

அவர்களுள் ஒருவனைப் பார்த்ததுமே ஜெயந்தி நிமிர்ந்து நின்றாள். சட்டென்று தீரஜ்ஜின் தோளைத் தட்டி— "தீரஜ், அதோ, அவர் தாண்டா" என்றாள்.

"யாரு மம்மி?" கேட்டான் தீரஜ்.

"அந்த லைட் ப்ளூ செக்ஸ் ஷர்ட் போட்டுக் கொண் டிருக்கிறாரே, அவர்தான்."

"யாரு மம்மி?" தீரஜ் ஆர்வத்துடன் கேட்டான்.

அவர்கள் கூல் டிரிங்க் ஷாப்பிற்கு அருகில் நின்று ஆரஞ்சு குடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தி மகனை அவசரப்படுத்தினாள்— "தீரஜ், போடா, சீக்கிரமாய் போ! அவரிடம் "தாங்க்யூ சார்" என்று சொல்லு."

"ஏன்?" தீரஜ் சண்டித்தனம் பண்ணினான்.

"உனக்கு அடிபட்டபொழுது டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போய் மருந்து வாங்கித் தந்தாரே, அவர்தான். சீக்கிரமாய் போ. போய்ச் சொல்லிவிட்டு வா" என்றாள். தீரஜ் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடினான்.

அந்த பக்கமாய் திரும்பி கூல்டிரிங்க் கடைக் காரனுக்குப் பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்துத் தந்து கொண்டிருந்த அவன், யாரோ வந்து திடீரென்று கையைப் பிடித்துக் கொள்ளவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரே ஏழெட்டு வயது சிறுவன் நின்று கொண்டிருந்தான். "தாங்க் யூ சார்" என்றான்.

அவன் புருவங்கள் நெளிந்தன. "யார் நீ?" என்றான்.

"வந்து, அப்ப எனக்கு அடிபட்டபோது நீங்கள் டாக்டரிடம் கூட்டிட்டுப் போனீங்களாம். நீங்கள் உதவிப் பண்ணியிருக்காவிட்டால் நான் செத்துப் போயிருப்பே னாம். எங்க மம்மி சொன்னாங்க"—மழலை மொழியில் அச்சிறுவன் இவ்வாறு சொன்னதைக் கேட்டதும் அவன் கண்களில் அடையாளம் தெரிந்து கொண்ட உணர்ச்சி தோன்றிற்று.

"நீயா?" என்றான் கன்னத்தை நிமிண்டிவிட்டு. "உன் பெயரென்ன?" என்று கேட்டான்.

"தீரஜ்"

"வாட் எ குட் நேம்!"

அவன் சாக்லெட் பார் ஒன்றை வாங்கி தீரஜ்ஜின் கையில் தந்து விட்டு, அவன் தோளைத்தட்டினான். அதற் குள் ஜெயந்தி அங்கே வந்தாள்.

"அதோ, எங்க மம்மி"— தீரஜ் காட்டினான்.

அவன் திரும்பி பார்த்தான்.

ஜெயந்தி அவனைப் பார்த்து கைகளைக் கூப்பி, "அன்றைக்கு நீங்கள் நிஜமாய் தீரஜ்ஜைக் காப்பாற்றினீங்க. உங்களுக்கு என் நன்றி. அன்றைக்கு நீங்கள் உடனே போய் விட்டீங்க. குறைந்தபட்சம் நான் நன்றியாய் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை" என்றாள் நொந்து கொண்டபடி.

அவன் பார்வை தாழ்ந்தது. ஜெயந்தி பேசிக் கொண் டிருந்தபொழுது அவன் நிமிர்ந்து ஜெயந்தியின் பக்கமாய் பார்க்கவில்லை. "தட்ஸால் ரைட்! குழந்தைகளை அப்படி ஒருநாளும் தனியாய் விடக்கூடாது"— சங்கோஜத்துடன் சொல்லிவிட்டு, விருட்டென்று திரும்பி சிநேகிதர்களிடம் போய்விட்டான்.

பொன்னையன் டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு வந்தான்.

ஜெயந்திக்கு மகன் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டு உட்கார்ந்துகொண்டு சர்க்கஸைப் பார்த்துக் கொண்டிருக்கையில் மிகத் திருப்தியாய் இருந்தது. அந்த முன்பின் அறிமுகமில்லாதவனுக்கு அவள் நன்றியைச் சொல்லிக் கொண்டு விட்டாள். அவளுக்கு அந்த விபத்தை பற்றிய ஞாபகம் வந்தபொழுதெல்லாம் தன்னையறியாமல் மகன் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டுக் கிட்டே அணைத்துக் கொள்வாள். தீரஜ்ஜை காப்பாற்றிய அவனை நினைத்துக்கொண்டு 'தெய்வமே அவன் நன்றாக இருக்க வேண்டும்' என்று வாழ்த்துவாள். ஜெயந்தி மாதவிக்குக்கூட இந்த விஷயத்தைக் கடிதத்தில் எழுதினாள்.

* * *

ஒரு வாரம் கழிந்தது. அன்று மாலையிலிருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. எந்தச் சமயத்திலும் மழை கும்பவர்ஷமாய் பெய்யத் தயாராயிருந்தது பொன்னையன் தீரஜ்ஜைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்துக் கொண்டு வருவதற்காகப் போனவன் கூடவே குடையை எடுத்துக் கொண்டு போகவில்லை. இருவரும் மழையில் நனைந்து கொண்டு வருவார்களோ என்னவோ என்று கவலைப்பட்டாள் ஜெயந்தி. பார்த்துக் கொண்டிருந்த பொழுதே சடசடவென்று தூறலுடன் மழை வலுக்கத் தொடங்கிவிட்டது.

வாசலில் கார் சப்தம் கேட்டது. ஜெயந்தி திரும்பிப் பார்த்தாள்.

காரில் தீரஜ்ஜைக் காப்பாற்றிய அவன் உட்கார்ந்திருந்தான். காரின் பின் சீட்டிலிருந்து தீரஜ்ஜும் பொன்னையனும் இறங்கினார்கள். தீரஜ் புத்தகப்பையைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு, மழையில் நனையாதவாறு நின்றுகொண்டே "டாடா"— சொன்னான்.

அவனும் கையை ஆட்டினான். கார் போய்விட்டது. தீரஜ் ஓடி வந்து— "மம்மி! நாங்கள் பஸ்டாண்டில் நின்றுக்

கொண்டு பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டிருந்தோம். இந்த அங்கிள் எங்களைப் பார்த்து விட்டுக் காரை நிறுத்தி அதில் ஏறிக்கொள்ளச் சொன்னார். இங்கே கொண்டு வந்து இறக்கி விட்டார்" என்றான்.

"தாங்க்ஸ் சொன்னாயா?" துவாலையைக் கொண்டு வந்து மகன் தலையைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் அவள்.

"ஊஹூம், மறந்து போய்விட்டேன்."

"நமக்கு யாராவது உதவி பண்ணினால் 'தாங்க் யூ' என்று சொல்லணும்னு நான் சொல்லியிருக்கிறேனா இல்லையா?"

"சொல்லியிருக்கிறாய்." தலையாட்டினான். "சாரீ மம்மி! அடுத்த தடவை பார்த்தால் கண்டிப்பாய் சொல்லி விடுகிறேன்" என்றான்.

ஜெயந்தி மகனுக்கு டிபன் கொண்டு வந்து கொடுத்தாள்.

அன்றிரவு படுக்க போவதற்கு முன்னால் வழக்கம் போல தந்தையின் படத்திற்கு "குட் நைட் டாடி' என்று சொன்னான் தீரஜ். ஜெயந்தி ஒரு வினாடி மகனைக் கண் கொட்டாமல் பார்த்தாள். பின்னாலிருந்து வந்து அப்படியே தூக்கிக் கொண்டு முத்தமிட்டுவிட்டுப் படுக்கையில் படுக்க வைத்தாள். தீரஜ் தாயின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டான். "மம்மி! டாடி எப்பொழுது வருவார்?" கேட்டான். அவ்வாறு கேட்டதில் மிகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஆர்வம் தென்பட்டது.

"அதான் சொன்னேனே! யுத்தம் நடந்து கொண்டிருக்கோனோ? முடிந்ததும் வந்து விடுவார்."

தீரஜ்ஜின் கண்கள் யோசனையுடன் பயந்தபடி பார்த்தன.

"மம்மி"

"உம்"

"யுத்தம் நடக்கும்போது துப்பாக்கிகளை வெடிப்பாங்க என்று சொல்லியிருக்கிறாய் இல்லையா? டாடி விமானத்தில் உயரே பறந்து கொண்டிருப்பார் என்று சொல்லியிருக்காய் இல்லையா? அப்ப அவங்க டாடியின் விமானத்தைச் சுட்டுவிட்டால்?"

"ஊஹூம்! சுடமாட்டாங்க!"

"ஏன்?"

"டாடிக்கு விமானம் ஓட்ட மிக நன்றாய் தெரியுமில்லையா? அதனால்"

"ரொம்ப நன்றாய் தெரியுமா?"

"ரொம்ப நன்றாய் தெரியும்."

தீரஜ்ஜின் கண்கள் சந்தோஷத்தால் மின்னின.

"டாடி வந்தால் என்னை விமானத்தில் கூட்டிட்டுப் போவாரா?"

"ஆங்."

"அம்மாடா! எவ்வளவு நன்றாய் இருக்கும் இல்லே!" தீரஜ தாங்கமாட்டாத சந்தோஷத்துடன் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

"ஆமாம்! டாடி வந்துவிட்டால் ரொம்ப நன்றாய் இருக்கும் தீரஜ்!" ஜெயந்தி மகனின் நெற்றியில் முத்தமிட்டுவிட்டுச் சொன்னாள். அவள் குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது.

தீரஜ் தூங்கி விட்டான். ஜெயந்தி அவன் தலை மீது கையை வைத்துக் கொண்டு படுத்திருந்தாள். மகன் அருகில்

இருக்கும் இந்த உணர்ச்சி, அவள் பகலில் பட்ட துன்பங்களையும், பொருளாதாரப் பிரச்னைகளையும் துச்சமாய் தோன்றும்படிச் செய்தது. அவளுக்கு தீரஜ் இருக்கிறான். இந்தச் சந்தோஷத்திற்கு முன்னால், அந்தத் துன்பங்கள் எந்த மூலைக்கு? அவைகளை முயற்சி பண்ணினால், பாடுபட்டால் வென்றுவிட முடியும்!

தீரஜ் தூக்கத்தில் புலம்பிக் கொண்டிருந்தான். "மம்மி! அதோ டாடி வருகிறார்! அதோ பிளேன்"—ஜெயந்தி மகனைத் திருப்பிப் படுக்கவைத்தாள். தந்தைக்காக தீரஜ் எவ்வளவு தவித்துக் கொண்டிருக்கிறான்! பெருமூச்செறிந்தாள் அவள்!

ஜெயந்திக்கு மாதவியிடமிருந்து கடிதம் வந்தது. அதில் தனக்கு வேண்டிய புடவைகளின் லிஸ்ட்டை எழுதிவிட்டு—"இவைகளை பார்சல் பண்ணி என் மைத்துனரின் வீட்டில் கொடுத்துவிடு. மைத்துனர் இருபத்தெட்டாம் தேதி டில்லிக்கு வருகிறான்."—என்று எழுதியிருந்தாள்.

ரங்கம்மாளிற்கு உடம்பு சரியாயில்லை. புடவைகளை சைக்கிளில் எடுத்துக் கொண்டுபோய் கடைகளில் தந்து விட்டு வரும் பையன் வாசு வரவில்லை. இருபத்தெட்டாம் தேதி நாளைக்கே. ஜெயந்திக்கு வேலைகள் நிறைய இருந்த போதிலும் அந்த பார்சலை எடுத்துக் கொண்டு தானே புறப்பட்டாள். புடவைகளை அனுப்பாமல் போனால் மாதவி சண்டை போடுவாள்.

ஜெயந்தி விலாசத்தைத் தேடிக் கொண்டு போனாள். ராயப்பேட்டையில் இருந்தது அபார்ட்மென்ட் மூன்றாவது மாடியில் 208-ம் நம்பர். ஜெயந்தி பார்சலை எடுத்துக் கொண்டு லிப்டில் மேலே போனாள். அந்த நம்பர் அறைக்கு முன்னால் வந்து காலிங்பெல்லை அழுத்தினாள். கதவு திறந்து கொண்டது. வேலைக்காரன் "யார் வேண்டும்?" என்று கேட்டான்.

ஜெயந்தி விலாசத்திலிருந்த பெயரைப் பார்த்து விட்டு—''சித்தார்த்தன்'' என்றாள்.

''வாங்க உள்ளே'' என்றான்.

ஜெயந்தி உள்ளே வந்தாள். டிராயிங் ரூம் பெரியதாய் இருந்தது. அங்கே சோபாக்களையும் நாற்காலிகளையும் தவிர வேறெந்த அலங்கார சாமான்களும் இல்லை. அந்தப் பெரிய அறையில் ஏதோ குறைபாடு தெரிந்தது. அந்த அறைக்கு வேண்டிய அலங்காரங்களோ அழகோ பண்ணப் பட்டிருக்கவில்லை, அதுதான் மூளியாய் இருந்தது.

''உட்காருங்கள், வந்து விடுவார்''—பையன் சொல்லி விட்டுப் போய்விட்டான். ஜெயந்தி உட்கார்ந்தாள். ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த ஆஷ்ட்ரே முழுவதும் சிரரெட் சாம்பல் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஓரிரண்டு சிகரெட் துண்டுகள் கீழே செல்லாக சிதறிக் கிடந்தன. கீழே பேப்பர்களும், புத்தகங்களும் அலட்சியமாய் போடப் பட்டிருந்தன. சோபா செட்டிற்கிடையே போடப் பட்டிருந்த விலையுயர்ந்த கம்பளம் சிகரெட் துண்டுகள் விழுந்து பொசுங்கிப் போயிருந்தாற்போல அங்கங்கே ஓட்டையாகியிருந்தன.

ஜெயந்தி அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவ் வறையில் ஏதோ மூளித்தனமும், தனீமைத்தனமும் பளிச் சென்று தென்பட்டன.

உள்ளேயிருந்து ஒருத்தன் வேலைக்காரப் பையனிடம் ''அரை மணிக்கெல்லாம் நான் போகணும். ராத்திரி திரும்பி வரமாட்டேன். நாளைக்கு ஊருக்குப் போய் விடுவேன்னு சொல்லு. என் துணிகளை ட்ரை க்ளீனிங்கி லிருந்து வந்து விட்டதா இல்லையான்னு பாரு''—என்று உத்தரவிட்டுவிட்டு வெளியே வரத் தொடங்கினான். அதற் குள் போன் மணியடித்தது.

அவனைப் பார்த்ததுமே ஜெயந்தி வியப்போடு எழுந்து நின்றாள். அவன் வேறு யாரோ இல்லை. தீரஜ்ஜைக் காப்பாற்றியவன்தான்! அவன் ஜெயந்தியைப் பார்க்கவே யில்லை. போன் மணியடிக்கவே, அந்த பக்கம் போனான்.

''சித்தார்த்தா ஹியர்! ஆமாம்! ஊஹூம்! முடியாது. அடடா, நான் சொன்னால் அவன் கேட்க மாட்டான். என்னால் முடியாது. ஓ. கே., யு கோ டு ஹெல்—'' போனில் பேசிக் கொண்டிருந்த அவன் நடுவில் திரும்பி இந்த பக்க மாய் பார்த்தான். அங்கே நின்றுகொண்டிருந்த ஜெயந்தி யைப் பார்த்ததுமே நிகைத்துப் போய்விட்டான்.

''ஓ.கே. நான் வந்து பேசிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டான்.

அவன் ஜெயந்தியைப் புருவங்கள் நெளிய கேள்விக்குறி யுடன் பார்த்தான்.

''நான்...'' ஜெயந்தி தடுமாறிக்கொண்டே கையி லிருந்த பார்சலைக் காட்டினாள்.

''இதென்ன?''

''புடவைகள். மாதவி டில்லியிலிருந்து கடிதம் எழுதி னாள். இந்த பார்சல்களை உங்களிடம் கொடுக்கச் சொல்லி எழுதியிருந்தாள்.''

அவனுக்கு விஷயம் கொஞ்சம் புரிந்தது. கொஞ்சம் பொறுத்து ஞாபகப்படுத்திக்கொண்டு கேட்டான்.

''உங்கள் பெயர் ஜெயந்திதானே?''

''ஆமாம்.''

''நீங்கள்...'' அவன் தயக்கத்துடன் நிறுத்திக் கொண் டான்.

''நான் தீரஜ்ஜின் தாய். எங்க தீரஜ்...''

''எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. உட்காருங்கள்'' — சோபாவைக் காட்டினான். ஜெயந்தி உட்கார்ந்து கொண் டாள்.

"காபி குடிக்கிறீங்களா?" மரியாதையோடு கேட்டான்.

"ஊஹூம். வேண்டாம். நான் போகிறேன்."

ஜெயந்தி எழுந்திருந்தாள்.

"தீரஜ் எப்படி இருக்கிறான்."

"நன்றாய்தான் இருக்கிறான்."

"ஹி ஈஸ் எ நைஸ் பாய். வயதுக்கு மீறிய அறிவு இருக்கிறது."

ஜெயந்திக்கு மகனைப் பற்றிய புகழுரை மிகச் சந்தோஷத்தைத் தந்தது. ஆம் என்பது போல பெருமையுடன் தலையாட்டினாள்.

"நான் இவைகளை எடுத்துக்கொண்டு போய் மாதவியிடம் தரணும், அவ்வளவுதானே?"

"அவ்வளவுதான்."

அவன் நினைவிற்கு வந்தவனைப் போல— "ஆங்! ஆமாம், போன தடவை எழுதிய லெட்டரில் உங்களிடம் போய் கலெக்ட் பண்ணி எங்கள் சிற்றப்பாவிடம் கொடுத்தனுப்பும்படி எழுதியிருந்தாள். நான் மறந்தே போய் விட்டேன்."

"வரேன்" ஜெயந்தி கைகளைக் கூப்பிவிட்டு வாசலை நோக்கி நடந்தாள். அவன் வாசல் வரை அவளோடு வந்து கைகளைத் தூக்கிக் காட்டி விடை கொடுத்தான் அவ்வாறு கைகளைத் தூக்கியது மிகப் பழக்கப்பட்ட வேலையைப் போல— தன்னையறியாமல் வந்ததைப்போல இருந்தது.

ஜெயந்தி வாசலைத் தாண்டுவதற்குள்ளாகவே ஒருவன் "ஹலோ, சித்தார்த்தா" என்று உள்ளே வேகமாய் வந்தான். அவன் ஜெயந்தியைப் பார்த்ததுமே நின்று விட்டான். ஜெயந்தி வாசலைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்த பொழுது திரும்பி அவள் கண்மறைவாகும் வரை

யிலும் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு ஆச்சரியத்தோடு "சித்தார்த்தனின் வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே போவதா?"— வேறு ஏதோ ஜோக் அடிக்கப் போனான்.

"ஷட்அப்" சித்தார்த்தன் எரிந்து விழுந்தான். ஜெயந்தி அபார்ட்மென்ட்டைத் தாண்டி வெளியே வந்து, பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் சித்தார்த்தனின் கார் விர்ரென்று அந்த பக்கமாய் போகத் தொடங்கிற்று.

"அதோ! அங்கே உன் லேடி ஃபிரெண்ட் நிற்கிறாள். நிறுத்து, நிறுத்து! காரை நிறுத்து! அவளை ஏற்றிக் கொண்டு போகலாம்" நண்பன் கத்தினான்.

"வாயை மூடு. அவள் என் கிரேஜி ஒன்றும் இல்லை, நான் காரில் ஏற்றிக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை" என்றான் சித்தார்த்தன். கார் வேகமாய் அவளை தாண்டிக்கொண்டு வந்துவிட்டது.

ஜெயந்தி அன்றிரவு உட்கார்ந்துகொண்டு மாதவிக்கு கடிதம் எழுதினாள்.

"மதூ! புடவைகள் பாக்கெட்டைக் கொண்டுபோய் கொடுப்பதற்காகப் போனேன். உங்கள் மைத்துனர் யார் தெரியுமா? எங்கள் தீரஜ்ஜைக் காப்பாற்றிய அவர்தான்! எனக்கு வாயடைத்துப் போய்விட்டது என்றால் நம்பு. எனக்கு இப்பொழுது மிகச் சந்தோஷமாய் இருக்கிறது. ஏனென்றால் அந்த ஆள் வேறு யாரோ இல்லை. எங்கள் மாதவியின் மைத்துனர்தான்! இன்னொரு முறை கண்ணில் பட்டால் மனப்பூர்வமாய் மற்றொரு முறை நன்றி சொல்லிக் கொள்வேன். அதென்னவோ மதூ! இப்பொழுதெல்லாம் என் மனது மிகக் கோழையாய் ஆகிக் கொண்டிருக்கிறது. யாராவது கொஞ்சம் உதவி பண்ணினால் எனக்கு கண்ணீர் வந்துவிடுகிறது. இந்த ஐந்தாறு ஆண்டுகளாய் நான் மிகக் கஷ்டப்பட்டிருப்பேன். என் இந்த

கஷ்டங்களுக்கு விமோசனம் எப்பொழுதோ? தீரஜ் நலமாய் இருக்கிறான். ஆஷா எப்படி இருக்கிறாள்? உன்னைப் பற்றிய விசேஷங்கள் என்ன? உன் கணவனிடமிருந்து என்ன புதுப் பரிசை சம்பாதித்துக் கொண்டாய்? மாதவி! மனிதன் என்ன விரும்புகிறானோ அது கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் திருப்தி, சந்தோஷத்தோடு வாழ்க்கை முழுமையாய் இருக்கும். மனிதன் விரும்புவது நடக்காவிட்டால் மனதில் நிராசையும் ஏமாற்றமும் ஏற்பட்டு வாழ்க்கையில் வாழ்வது போலவே இருக்காது, ஏதோ நாட்களை ஓட்டிக்கொண்டிருப்பது போலதான் இருக்கும். ஒவ்வொரு வரிடமும் ஏதாவது ஒரு குறை. மனதில் எதற்காகவோ நிராசை! நான் நலமாகவே இருக்கிறேன். பதில் போடு.

— உன் ஜெயந்தி''

மாதவியிடமிருந்து ஒரு வாரங் கழித்து பதில் வந்தது.

டியர் ஜெய்!

உன் கடிதம் கிடைத்தது. அன்றைக்கே சித்தார்த்தன் கூட வந்து புடவை பாக்கெட்டைத் தந்தான். நிறங்களும், டிஸைன்களும் நேர்த்தியாய் இருக்கின்றன. உன் புடவைகள் ஏன் விற்றுப் போவதில்லை என்றுதான் எனக்குப் புரியவில்லை. சித்தார்த்தன் உட்கார்ந்து கொண்டிருந்த பொழுதே உன் கடிதம் வந்தது. சித்தார்த்தனுக்கு நீ எழுதிய வார்த்தைகளைப் படித்துக் காட்டினேன்.

அவன் மிகவும் தர்மசங்கடத்துடன் பார்த்தான். தீரஜ்ஜைக் காப்பாற்றியதில் தான் ஒன்றும் பெரிய சாகஸத்தைப் பண்ணிவிடவில்லை என்றும், தன் நிலையில் வேறு யார் இருந்தாலும் அந்தக் காரியத்தைப் பண்ணியிருப்பார்கள் என்றும் சொன்னான். அவனுக்கு இந்த நன்றி தெரிவிக்கும் விஷயங்களே பிடிக்காது. நீ இனி தப்பித் தவறிப் போய் கூட அவன் தென்பட்டால் இந்தப் பேச்சை எடுக்காதே.

என்னைக் கேட்டால் நீ எங்கள் சித்தார்த்தனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியதுதான். அன்றைக்கு உங்கள் தீரஜ்ஜை டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய் தையல் போடச் செய்து, இஞ்செக்ஷனுக்கு மருந்து ஏதோ கிடைக்காதபொழுது, அதற்காகச் சுற்றியலைந்துவிட்டு, பிறகு உங்கள் வீட்டிற்கு வந்து தீரஜ்ஜை உன்னிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிப் போனதும் அவன் எதை இழந்து விட்டான் தெரியுமா? இருபது லட்சம் கான்ட்ராக்ட்டை! அந்த நேரத்தில் போக முடியாமல் போய்விட்டான். அந்த முதலாளிக்கு டைம் டிஸிப்ளின் மிகவும் உண்டு.

தாமதமாய் போன சித்தார்த்தனைப் பார்த்து 'கான்ட்ராக்ட்டை எடுத்துக் கொள்வதற்கே இவ்வளவு அசிரத்தையைக் காட்டிய உன்னால் இனி கட்டிடத்தைச் சொன்ன டயத்திற்கு எப்படித் தர முடியும்? எனக்கு டயம் என்றால் டயம்தான்! டயம் டிஸிப்ளின் இல்லாதவங்களின் நிழலைக்கூட என்னால் சகித்துக் கொள்ள முடியாது' என்று கண்டபடி நிட்டித் தீர்த்து விட்டாராம். சித்தார்த்தன் சொல்ல வந்ததை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. வேறு யாராவதாய் இருந்திருந்தால் நானும் கூட சித்தார்த்தனைத் திட்டியிருப்பேன். ஆனால் அவன் காப்பாற்றியது தீரஜ்ஜை அல்லவா? அதனால் என்னாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஜெயந்தி! எங்கள் சித்தார்த்தனின் வாழ்க்கை ஒரு பயங்கரமான வேதனையான கதை! அவன் இரவு வந்து விட்டால் மனிதனாய் இருக்க மாட்டான். குடி மயக்கத்தில் இருப்பான். அப்பொழுது ஒரு குரூர மிருகத்தைப் போல நடந்து கொள்வான். இரவு ஒன்பது, பத்தைத் தாண்டிவிட்டால் பிறகு அவன் சிநேகிதர்கள் கூட அவனிடம் இருக்க மாட்டார்கள். சித்தார்த்தனிடம் இரண்டு மாறுபட்ட நடவடிக்கைகள். பகலில் அவன் எவ்வளவு புத்திசாலித்தனமாய் நடந்து கொள்வானோ எவ்வளவு சங்கோஜ குணம் கொண்ட

வனோ, ராத்திரியில் அவ்வளவுக்கவ்வளவு கொடூரமானவனாக இருப்பான். நம்மைப் போன்றவர்களுக்குப் பகலும் இரவும் ஒரே மாதிரியாய் இருக்கும். ஆனால் சித்தார்த்தனுக்கு பகல் வேறு இரவு வேறு. அது ஒரு தலையெழுத்து. அது பகைவர்களுக்குக் கூட வரக் கூடாது. தீரஜ்ஜிற்கு ஆசிகள். ஆஷா நலமாய் இருக்கிறாள்.

இப்படிக்கு,
உன் மாதவி''

ஜெயந்தி அக்கடிதத்தைப் படித்துவிட்டு யோசனையில் ஆழ்ந்து போனாள். தீரஜ் மூலமாய் சித்தார்த்தனுக்கு அந்த கான்ட்ராக்ட் கிடைக்காமல் போய்விட்டதற்கு வருத்தமாய் இருந்தது. கடிதத்தில் மாதவி அவனைப் பற்றி எழுதிய விஷயங்கள் நினைவிற்கு வந்தன. சித்தார்த்தனின் பால் இரக்கம் பிறந்தது. இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான துரதிர்ஷ்டம்! ஜெயந்தி அக்கடிதத்தைப் படித்துவிட்டு கிழித்தெறிந்துவிட்டாள். அவனைப் பற்றிய பேச்சுக்கூட இனி அதோடு தீர்ந்தது என்பது போல அத்துண்டுகளை தொலைவில் விட்டெறிந்தாள்.

தீரஜ் அங்கே வந்தான். ''யாரோட கடிதத்தை மம்மீ கிழித்தாய்? டாடி எழுதினாரா?'' அத்துண்டுகளைப் பொறுக்கிக்கொண்டே கேட்டான்.

''இல்லை தீரஜ், அவைகளை எடுக்காதே, போட்டுவிடு'' என்றாள்.

''ஊஹூம், நான் போடமாட்டேன். நமக்கு கடிதம் எழுதுவது டாடிதானே?'' என்று அந்த துண்டுகளை ஒவ்வொன்றாய் பொறுக்கிக் கொள்ளத் தொடங்கினான். ஜெயந்தி செய்வதறியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

* * *

அன்றைக்கு ஜெயந்தி கடைவீதியிலிருந்து சாயங்களை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தபொழுது அவன் வீட்டில் உட்கார்ந்து தீரஜ்ஜுடன் பேசிக் கொண்டிருந்தான். ஜெயந்தியைப் பார்த்ததுமே எழுந்து வணங்கினான். ஜோபியிலிருந்து பணத்தை எடுத்து அவளிடம் தந்து ''மாதவி கொடுத்தாள்'' என்றான். இன்னொரு காகிதத்தை எடுத்து தந்து, ''அவங்க ஃபிரெண்டிற்கு இந்த டிஸைனில் புடவை வேண்டுமாம்'' என்று சொன்னான்.

''சௌக்கியமா?'' ஜெயந்தி அக்கடிதத்தை வாங்கிக் கொண்டு குசலம் விசாரித்தாள்.

அவன் தலையாட்டிவிட்டு ''வரேன்'' என்றான்.

''ஒரு நிமிஷம் உட்காருங்கள். காபி குடித்துவிட்டுப் போகலாம்'' என்றாள்.

''வேண்டாம்'' என்றான் சங்கோஜத்துடன்.

''இல்லை நீங்கள் குடித்துவிட்டுதான் போகணும். நீங்கள் இவ்வளவு உதவி செய்தீங்க. நான் ஒரு கப் காபி கூட கொடுக்கவில்லை உங்களுக்கு. உட்காருங்கள், இதோ ஒரு நிமிஷத்தில் வரேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

சித்தார்த்தன் வேறு வழியில்லாமல் உட்கார்ந்து கொண்டான். ஜெயந்தி சமையலறையில் காபியைக் கலந்து கொண்டிருந்தாள். தீரஜ் தந்தையின் போட்டோவைக் காட்டி, யுத்தத்தில் தந்தை விமானத்தில் பண்ணும் சாகஸக் காரியங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். பொன்னையன் வெளியே காயப் போட்டிருந்த சாயம் தோய்த்த புடவைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி காபியைக் கொண்டுவந்தாள்.

சித்தார்த்தன் காபியை வாங்கிக் கொண்டே, ''என் நண்பன் கூட எல்லைப்புறத்தில் இருக்கிறான், அவன்கூட மேஜர்தான். உங்கள் கணவர்...''

''அவர் வேலை பண்ணுகிற இடம் எனக்குச் சரியாய் தெரியாது. மாதவியைப் பற்றிய விஷயங்களைச் சொல் லுங்கள்'' என்றாள் பேச்சை மாற்றியபடி.

அவன் மாதவி விஷயங்களைச் சொன்னான். பத்து நிமிஷங்களுக்கு பிறகு அவன் விடைபெற்றுக் கொண்டு புறப் பட்டு விட்டான்.

இன்னொரு நாள் தீரஜ் ஸ்கூலிலிருந்து திரும்பி வந்ததுமே சாக்லெட் பாரை நீட்டினான்.

''இது ஏது?'' என்றாள் ஜெயந்தி.

''புது அங்கிள் தந்தார்.''

''புது அங்கிளா? யாரு?''

''அவர்தான்! எனக்கு அடிபட்டபோது காப்பாற்றி னாரே, அவர்! ஸ்கூலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது தென்பட்டார். என்னைத் தூக்கி வைத்துக் கொண்டு போய் சாக்லெட் வாங்கித் தந்துவிட்டு, நன்றாய் படிக்கிறாயா என்று கேட்டார்.''

''அப்படித் தந்ததுமே வாங்கிக்கொண்டு விடுவதா? வேண்டாம் என்று சொல்ல வேண்டும்'' எரிந்து விழுந்தாள் அவள்.

தீரஜ் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான். ''நீதானே சொன்னாய், அங்கிளுக்கு ரொம்ப நன்றியோடு இருக்கணும் என்று'' என்றான் தீரஜ்.

''ஆஹா! சாக்லெட்டைச் சாப்பிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொண்டாய் போலிருக்கு'' என்று சொல்லும் போதே மகனின் தொங்கிய முகத்தைப் பார்த்து

ஜெயந்திக்கு சிரிப்பு வந்துவிட்டது. கிட்டே இழுத்து முத்த மிட்டாள். பிறகு பாடம் கற்றுத் தருவதுபோல ''நன்றி என்றால் நாம்ப அவங்களுக்கு ஏதாவது தர வேண்டும். அதானே தவிர, நாம்ப பெற்றுக்கொள்ளக் கூடாது. அடுத்த தடவை அப்படித் தந்தால் 'தாங்க் யூ சார், வேண்டாம்' என்று சொல்ல வேண்டும். தெரிந்ததா?'' என்றாள்.

தீரஜ் தெரிந்தது என்பது போல தலையாட்டினான்.

* * *

ஆர்டர் வாங்கிக் கொண்டு வருவதற்காக ஜெயந்தி புடவை கடைக்குப் போனாள். கடைக்காரன் நாளைக்கு வந்தால் ஆர்டர் தருவதாய் சொன்னான். ஜெயந்தி எவ்வளவு உற்சாகத்துடன் போனாளோ அத்தனைக் கத்தனை நிராசையுடன் திரும்பி வந்தாள். சிற்சில சமயங் களில் தாங்க முடியாத இந்தப் பொருளாதாரத் தொல்லை களைப் பார்க்கும் பொழுதுதான் இந்த புடவைகளை பிரிண்டிங் பண்ணும் தொழிலைக் கடைப்பிடிக்காமல் வேறு எங்கேயாவது உத்யோகம் பண்ணினால்கூட தேவலையே என்று தோன்றும். ஆனால் சொந்தக் காலில் நிற்பதற்கு இது நல்லது என்றெண்ணி பாங்க் கடன் தருவ தற்கு முன் வந்த பொழுது கடன் வாங்கி இந்த வியாபாரத் தைத் தொடங்கியிருந்தாள். இப்பொழுது வீட்டு வேலை, வெளி வேலை அவ்வளவையும் அவளே பண்ணவேண்டி யிருக்கிறது. யாருடைய உதவியும் இல்லை. அதனால் வேலை பளுவால் சோர்வு வந்து சேர்ந்துவிடுகிறது. அத் துடன் இந்த விதமான நிராசைகள் வேறு. யோசனையில் ஆழ்ந்தபடி நடந்து கொண்டிருந்த ஜெயந்திக்கு— ''ஜெயந்தி மேடம்'' என்று யாரோ கூப்பிட்டது காதில் விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ரவி ஓடி வந்து கொண்டிருந்தான். அவனோடுகூட அவன் சிநேகிதர்களும் இருந்தார்கள்.

"உங்களுக்கு ரொம்ப தாங்ஸ் மேடம். மூன்று பேழ ஆண்டுவிழா மலருக்கு விளம்பரம் கொடுத்திருக்காங்க மேடம். ஒருவர் ரம்யா சோப் ஓர்க்ஸ் முதலாளி ஹரிதர், இன்னொருத்தர் சந்தேரீ சாரீஸ் சாந்திலால், மற்றொருவர் ஸ்கூட்டர் ஏஜென்ஸி வைத்திருக்கும் சித்தார்த்தன்!"

"ரொம்ப சந்தோஷம்!"

"சந்தேரீ சாரீஸ் சாந்திலாலுக்கு உங்கள் மீது நிறைய அபிமானம்! உங்கள் பெயரைச் சொன்னதுமே உட்கார வைத்து, கூல் டிரிங்க்ஸ் தந்து மரியாதை பண்ணினார். ரம்யா சோப் ஓர்க்ஸ் முதலாளி கூட அப்படித்தான். எப்பொழுதாவது அந்தப் பக்கமாய் வரும் பொழுது உங்களைக் கண்டிப்பாய் வந்து சந்திப்பதாய் சொல்லச் சொன்னார்...மேடம், எங்கள் மேகஸினை போன வருடம் போலவே நீங்கள்தான் செட் பண்ணித் தரணும்."

"சரி, மத்தியான வேளையில் ஓய்வாய் இருப்பேன். அப் பொழுது கொண்டு வாங்க."

"வரோம். தாங்க் யூ" அவர்கள் உற்சாகத்துடன் போய் விட்டார்கள்.

ஜெயந்தி முறுவலுடன் திரும்பவும் நடக்கத் தொடங்கி னாள்.

அவர்கள்தான் எவ்வளவு உற்சாகத்துடள் இருக் கிறார்கள்! அந்த வயதே அப்படிப்பட்டது! அவளும் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இத்தகைய விஷயங் களில் எவ்வளவு ஆர்வத்துடன் கலந்து கொள்வாள்!

அவள் வீட்டிற்குத் திரும்பி வந்த பொழுது ரங்கம்மா வாசலிலேயே எதிர்ப்பட்டாள். ரகசியமாய் மெல்லிய குரலில்— "அம்மா! வீட்டுக்காரர் வந்திருக்கிறார். நீங்கள் வெளியே போயிருக்கீங்க, இப்போதைக்குத் திரும்பி வர மாட்டீங்கன்னு சொன்னேன். உள்ளே வராதீங்க. கொஞ்ச நேரம் வெளியேயே சுற்றிவிட்டு வரக் கூடாதா?"

"ஏ! என்னப் பேச்சுப் பேசுகிறாய் ரங்கம்மா?" ஜெயந்தி ரங்கம்மாவைக் கடிந்து கொண்டுவிட்டு, அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள்.

வாசல் வராந்தாவில் தூணில் சாய்ந்து நின்றபடி சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த ஒரு நடுத்தர வயது ஆசாமியைப் பார்த்ததுமே முறுவலுடன்— "வணக்கம் மாமா! எவ்வளவு நேரமாயிற்று வந்து?" என்றாள்.

அவர் ஜெயந்தியைப் பார்த்ததுமே கையிலிருந்த சிகரெட்டை அப்பால் வீசியெறிந்துவிட்டு, சிடுசிடுவென்ற முகத்துடன்— "இதப் பாரும்மா, உன் வணக்கமும், மரியாதையும் எனக்குத் தேவையில்லை. நான் வாடகைக் காக வந்திருக்கிறேன். இந்த நிமிஷத்தில் என் பணத்தை என் கையில் தருகிறாயா அல்லது வீட்டை காலி பண்ணு கிறாயா?" என்றார்.

"நீங்கள் உட்காருங்கள், இப்படி நிற்கிறீங்களே, ரங்கம்மா, நாற்காலியைக் கொண்டு வா" என்றாள் ஜெயந்தி.

அவர் கோபத்துடன் உறுத்துப் பார்த்து விட்டு— "உன் மரியாதையெல்லாம் எனக்கு தேவையில்லை தாயே! எனக்கு அதொன்றும் வேண்டாம். எனக்கு வாடகைதான் வேண்டும்."

"தந்து விடுகிறேன் மாமா."

"இதப் பார்! என்னை அந்த உறவு பேரில் எல்லாம் அழைக்காதே. மாமா, சித்தப்பா என்றெல்லாம் மந்திரம் போட்டு மயக்கி ஆறுமாத வாடகை தராமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறாய்."

"அப்படிச் சொல்லாதீங்க."

"எப்படி சொல்கிறாயம்மா? வாடகை தரா விட்டாலும் பரவாவில்லை, இப்படியே இருந்து கொள்

ளம்மா என்றா? அங்கே எங்கள் வீட்டில் பணம் காய்க்கிறதா என்கிறேன்?''

''இல்லைங்க! பணக்கஷ்டம் எனக்கு நன்றாகவே தெரியும்.''

''தெரிந்தால் இவ்வளவு நாள் தாமதம் பண்ணுவாயா? போகட்டும், பாவம் ஏதோ பொம்பிள்ளை, கஷ்டத்தில் இருக்கிறாய் என்று இரங்கி வீட்டைக் கொடுத்தால் தலைக்கு மீறிப் போய் விட்டாய். இப்பொழுது இந்த நிமிஷத்தில் என் பணத்தை விட்டெறி, அல்லது வீட்டை யாவது காலி பண்ணி விடு.''

''எனக்கு ஒரு வாரம் டயம் கொடுங்கள். நீங்கள் கேட்டாற்போலவே செய்கிறேன்'' ''என்ன செய்வாய்? வீட்டை காலிபண்ணி விடுவாயா?''

''பணம் கொடுக்க முடியாவிட்டால் அப்படியே பண்ணி விடுகிறேன்.''

''அப்ப என் வாடகை? கடலில் கரைத்த பெருங்காயந் தானா? இதப்பாரு பொண்ணு! நீ எங்கே போனாலும் சரி, நான் வந்து வசூல் பண்ணிக் கொண்டு விடுவேன், விட்டுவிட மாட்டேன். மொதல்ல உனக்கு யாருமே வீடு கொடுக்க முடியாதபடி பிரசாரம் பண்ணிவிடுவேன், தெரிஞ்சுதா? பணம் இல்லையாம்! பணம், பெ...ரி...தாய் புருஷன் மிலிடெரியில் வேலைப் பண்றான்னுச் சொன் னாயே, பணம் அனுப்பமாட்டானா?'' கைகளைச் சுழற்றிக் கொண்டே கேட்டார்— ''மொதல்ல புருஷன் என்று ஒருத்தன் இருக்கானான்னு கேட்கிறேன்.''

''மாமா'' ஜெயந்தியின் முகம் ஆவேசத்தால் சிவந்து விட்டது.

''வார்த்தைகளை அளந்து பேசுங்கள். நீங்கள் வந்த காரியம் என்னவோ அதைப் பேசுங்கள்.''

''ஆங்! பேசுவேன். எனக்கு ஆறு மாத வாடகை வரணும். தூக்கிப்போடு. பணம் இல்லை மாமா என்பாய்! பணம் இல்லாமல்தான் இந்தப் புடவைகளையெல்லாம் பிரிண்ட் பண்ணிக் கொண்டிருக்கிறாயா? மகனை எப்படிப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறாய்? ரெண்டு வேலைக் காரர்களை வைத்துக் கொண்டு எப்படித் தாங்குகிறாய்? எல்லாம் நடிப்பு! கணவன் இருக்கிறான் என்று உலகத்தை மோசம் பண்ற நீ, உன்னிடம் பணம் இருந்தும் இல்லை என்று நாடகமாடவா மாட்டாய்?''

அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் ஒரு சூலமாய் தாக்கின. ஜெயந்தி அந்த வேதனைகளை பற்களைக் கடித்துக் கொண்டு தாங்கிக் கொண்டாள். வலிய புன்ன கையை வரவழைத்துக் கொண்டே— ''என் வாழ்க்கை! என் இஷ்டம்! இதனால் யாருக்கும் நஷ்டம் இல்லை. உங்களுக்கு வாடகை, அவ்வளவுதானே?'' என்றாள்.

''ஆங்! அவ்வளவேதான்! நான் நாளைக்குச் சாயந்திரம் வருவேன். என் பணத்தை என்னிடம் தூக்கி எறிந்துவிட்டால் சரி, இல்லாவிட்டால் வீட்டை காலி பண்ணிடணும். ஆளுங்களை கூட்டிட்டு வந்து விடுவேன், ஜாக்கிரதை! இனி என்னால் இரக்கப்பட முடியாது. நாலு மாத வாடகையை அட்வான்சாய் கொடுக்கத் தயாரா யிருக்காங்க! ஆங்!''— அவர் ஆவேசத்துடன் போய் விட்டார்.

ஜெயந்தி அவ்விடத்திலேயே ஆதரவில்லாமல் நின்று கொண்டிருந்தாள். ரங்கம்மா கவலையுடன்— ''இப்ப என்னம்மா பண்றது? அவர் நம்மை நிஜமாகவே வீட்டை காலி பண்ணச் சொல்லிட்டார். நாளைக்குச் சாயந்திரத் திற்குள் நமக்கு அவ்வளவு பணம் எங்கிருந்து வரும்?''

''எனக்கு ஒன்றுமே புரியலை ரங்கம்மா. என்ன பண்ற துன்னே தெரியலை. நான் இப்பப் பட்டுக் கொண்டிருக்கிற

கஷ்டங்களே போதாது போலிருக்கு. தெய்வம் எனக்கு இன்னும் ஏன்தான் கஷ்டம் கொடுக்கிறாரோ தெரிய வில்லை.'' என்றாள் ஜெயந்தி பெருமூச்சு விட்டுக் கொண்டே. ரங்கம்மா உள்ளே போய்விட்டாள்.

ஜெயந்தி அப்படியே நின்று கொண்டிருந்தாள். இப் பொழுது அம்முகத்தில் வலிய வரவழைத்துக் கொண்ட முறுவல் இல்லை. அக்கண்களில் தன்னம்பிக்கை போய் விட்டாற்போல ஆதரவில்லாமல் தோன்றினாள்.

அந்த புடவைக் கடைக்காரர்கள் திருப்பி அனுப்பி வைத்துவிட்டதால் பணத்திற்கு மிகவும் திண்டாட்டமாகி விட்டது. கையில் இருந்ததோடு கூட கடனையும் வாங்கி எல்லாவற்றையும் மிக நம்பிக்கையோடு அதில் போட்டிருந் தாள். அதிலிருந்து வரவேண்டிய பணம் வரவில்லை. வீட்டை ஓட்டுவதே கஷ்டமாய் இருந்தது. சில சமயம் தீரஜ்ஜை பொன்னையன் பள்ளிக் கூடத்திற்கு பஸ்ஸில் அழைத்துக் கொண்டு போனால் இரண்டு மூன்று ரூபாய்கள் செலவழியுமே என்று தானே தோளில் சுமந்து கொண்டு பள்ளியில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிடுவான். ஜெயந்தி படும்பாடுகளை பொன்னையனும் ரங்கம்மாவும் அறிவார்கள். தீரஜ்ஜுடன்கூட அவர்களுடைய பொறுப்பும் அவளைச் சேர்ந்ததாய் இருந்தது. அவர்கள் முகத்தில் பசிக் கொடுமையைக் காண நேரிடுமோ என்று பயந்தாள் ஜெயந்தி. இதே சூழ்நிலை இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் தொடர்ந்தால் அந்த நிலைமைகூட வந்துவிடும். ஜெயந்தி அதை நினைத்து மேலும் கலங்கினாள்.

வராந்தாவிலிருந்து ஷெட்டிற்குள் வந்தாள் அவள். அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரிய கிரணங்கள் ஜன்னல் வழியாய் அறைக்குள் வந்து பட்டுக் கொண்டிருந்தன.

ஷெட்டிற்குள் அடியெடுத்து வைத்த ஜெயந்தி பேயறைந்தவளைப் போல ஆனாள். அங்கிருந்த பெஞ்சி யின் மீது வாடிக்கையாளர்கள் உட்காருமிடத்தில்

சித்தார்த்தன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் தன்னையறியாமல் புரட்டிக் கொண்டிருந்தாற்போல மடி யிலிருந்த புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

ஜெயந்தியைப் பார்த்ததுமே அவன் எழுந்து நின்றான். அவன் இவ்வளவு நேரமாய் இங்கேயா இருந்தான்? அப்படி யென்றால் இவ்வளவு நேரமாய் நடந்த ரகளைகளை யெல்லாம் கேட்டிருப்பான் என்று அர்த்தம். ஜெயந்தியின் முகம் வெலவெலத்துப் போய்விட்டது. தன்மானமும் வெட்கமும் அவளை சூழ்ந்து கொண்டன. அதை கவனித்து விட்ட அவன் தவறு இழைத்து விட்டவனைப் போல பயந்துபோய் பார்த்தான். வேளை கெட்ட வேளையில் வந்து, அந்த வீட்டின் அந்தரங்க விஷயங்களைக் கேட்டதை தனக்குத் தானே தப்புப் பண்ணிவிட்டவனைப் போல உணர்ந்தான். அவனாகவே செய்தது இல்லை.

ஜெயந்தி சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண் டாள். அம்முகத்தில் முறுவல் திரையைப் போல வந்து சேர்ந்தது. வெட்கமும் தன்மானமும் அத்திரை மறைவில் ஓடி ஒளிந்து கொண்டன.

''உட்காருங்கள், எவ்வளவு நேரமாச்சு வந்து?'' என்றாள்.

''நான் வந்து கால்மணிக்கு மேலேயே ஆகிவிட்டது. யாரையுமே காணோம். நீங்கள் உள்ளே இருக்கீங்க போலிருக்குன்னு நினைத்து இங்கே வந்து உட்கார்ந்து கொண்டேன்''— சித்தார்த்தன் ஏதோ ஒன்றை சொல்ல வந்தாற்போல— ''என் காரை இந்த தெருக் கோடியில் இருக்கிற சர்வீஸ் சென்ட்ருக்கு அனுப்பியிருந்தேன். அவன் சொன்ன டயத்திற்குத் தரவில்லை. நடுவில் மின்சாரம் போய் விட்டதாம். அரைமணியில் வந்து விடுமாம். நான் சரியாய் ஆறு மணிக்கு ஒரு இடத்திற்குப் போக வேண்டும். மறுபடியும் வீட்டிற்குப் போய்விட்டு வருவதற்கு அலுப்பாய் இருந்தது. உங்கள் வீடு இங்கிருந்து கிட்டே தானே

என்றெண்ணி நடந்து வந்துவிட்டேன். தீரஜ் இருந்தால் கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

ஜெயந்தி மேஜை மேலிருந்த காகிதங்களையெல்லாம் மளமளவென்று அடுக்கி வைத்தாள். ''உட்காருங்கள். தீரஜ்ஜை பொன்னையன் எங்கேயோ கூட்டிட்டிப் போயிருக்கிறான். வந்து விடுவான். இப்பொழுது—'' என்றாள்.

சித்தார்த்தன் இரண்டடிகள் எடுத்து வைத்து மேஜைக் கருகில் வந்து ''இதோ, உங்கள் காகிதம். காற்றில் பறந்து கீழே விழுந்தபோது எடுத்தேன்'' என்று சொல்லிவிட்டு மேஜை மேல் வைத்தான். ஜெயந்தி அதை எடுத்துப் பார்த்தாள். பாங்கிலிருந்து தவணைப் பணத்தைக் கட்டச் சொல்லி வந்திருந்த தாக்கீது அது. ஜெயந்தியால் பெருமூச்சை அடக்க முடியவில்லை. காகிதத்தை டிராயருக்குள் எடுத்து வைத்துக் கொண்டிருந்தபொழுது தீரஜ்ஜும் பொன்னையனும் வந்தார்கள். தீரஜ் ஓட்டமாய் ஓடிவந்து தாயின் கால்களைக் கட்டிக் கொண்டே— ''மம்மீ! வழியில் ரவியைப் பார்த்தேன். எனக்கு கிரிக்கெட் கற்றுத் தரேன் என்றான். நான் பேட் வாங்கிக் கொள்கிறேன் மம்மீ.''

''சரி! யார் வந்திருக்காங்கன்னு பார்'' என்று சித்தார்த்தாவைச் சுட்டிக் காட்டினாள்.

சித்தார்த்தனைப் பார்த்ததுமே தீரஜ்ஜின் கண்கள் சந்தோஷத்தால் மின்னின.

''அங்கிள்'' என்று அவனிடம் போனான்.

அதற்குள் வாசலில் சைக்கிள் மணி அடித்தது.

ஜெயந்தி ''பொன்னையா! யாரோ வந்திருக்காங்க பாரு'' என்றாள்.

பொன்னையன் வெளியே போனபொழுது ஒரு பையன் நின்று கொண்டிருந்தான்.

''அம்மா! எங்க சேட் பணம் வாங்கிட்டு வரச் சொன்னாருங்க.''

''நான் வந்து சந்திக்கிறேன்னு சொல்லு.''

''இல்லீங்க. உங்களுக்கு சாயங்களைக் கொடுத்து ஒரு மாதமாயிடுத்து. நீங்கள் பணம் தருவதாய் சொல்லிவிட்டு தரவே இல்லையாம். ரெண்டு மூணு நாளில் நீங்கள் பணம் கட்டாமல் போனால் அவரே வந்து உங்க வீட்டில் கண்ணில் படுகிற சாமானைத் தூக்கிக் கொண்டுபோய் விடுவேன்னு சொல்லச் சொன்னார் ''

''அதான் சொல்லிவிட்டாயே, நீ போ'' முறுவலுடன் சொன்னாள் ஜெயந்தி.

சித்தார்த்தன் அந்த முறுவலுக்குப் பின்னால் இருந்த வருத்தத்தை நன்றாகவே கவனித்தான். ஏதும் அறியாதவனைப்போல— ''தீரஜ்! நாம்ப கார் வரைக்கும் போகலாம். வருகிறாயா?'' என்று தீரஜ்ஜைக் கூட்டிக்கொண்டு வெளியே வந்துவிட்டான்.

* * *

அரை மணிக்குப் பிறகு தீரஜ்ஜும் பொன்னையனும் திரும்பி வீட்டிற்கு வந்தார்கள். தீரஜ்ஜின் கையில் கிரிக்கெட் பேட் இருந்தது. அதைக் காற்றில் ஆட்டிக் கொண்டே உற்சாகத்துடன் வந்தான்.

''இது ஏது''' என்றாள் ஜெயந்தி.

''அங்கிள் வாங்கித் தந்தார்.''

''ஏன் வாங்கிக் கொண்டாய்?'' எரிந்து விழுந்தாள்.

தீரஜ் திருதிருவென்று விழித்தான். ''நீதானே வாங்கி தரச் சொல்லி அங்கிளிடம் பணம் தந்தாயாமே.''

அவன் முகத்தைப் பார்த்த ஜெயந்திக்கு இரக்கம் பிறந்தது. சட்டென்று அவனை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். ''நம் கஷ்டங்கள் இனி எப்பொழுதுதான் போகுமடா தீரஜ்?''— கண்களில் கண்ணீர் ததும்ப தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

அதற்குள் ரவி முதலியவர்கள் வந்தார்கள். அவர்களோடு இரண்டு மணி நேரம் உட்கார்ந்து ஆண்டு விழா மலரைப் பற்றி சர்ச்சைகள் பண்ணினாள். அவர்கள் தம் அஸோசியேஷனைப் பற்றிய விஷயங்களைச் சொல்லிவிட்டு போய் சேர்ந்தார்கள்.

இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ரங்கம்மா முணுமுணுப்பது போல— ''அந்த ரவி முதலியவர்களை ஏம்மா வரவிடுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என்னவாச்சு ரங்கம்மா?''

''வீட்டில் ஆண் திக்கு இல்லை. அந்தப் பசங்கள் வந்து போயிட்டிருந்தால், நாலு பேர் நாலு விதமாய் பேசிப் பாங்க.''

''பேசிக்கட்டும் ரங்கம்மா! நாம்ப தப்புப் பண்ணாத பொழுது நமக்கென்ன பயம்?'' என்றாள்.

''நீங்கள் இப்படிச் சொல்றீங்க'' தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள் ரங்கம்மா.

* * *

ஜெயந்தி மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். ரங்கம்மா மாவு மிஷினுக்குப் போயிருந்தாள். பொன்னையன் தீரஜ்ஜுடன் கிரிக்கெட் மைதானத்திற்குப் போயிருந்தான்.

ஜெயந்தி கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டே கடிதம் எழுதுவதில் ஆழ்ந்து போயிருந்தாள்! இப்பொழுது அம்முகத்தில் வருத்தம் இல்லை. ஏதோ ஒரு சுந்தர உலகத்திற்குள் வளைய வந்தாற்போல பரவசத்துடன் இருந்தாள் ஜெயந்தி எழுதி கொண்டிருந்தாள். ''...அப்பொழுது என் கஷ்டங்கள் தீர்ந்துவிடும் அல்லவா? நானும் எல்லோரையும்போல கௌரவமாய் பெருமையோடு வாழ முடியும். தீரஜ்ஜிற்கு அப்பொழுது இந்த வீடு எவ்வளவு நன்றாயிருக்கும்! அந்த நிமிஷத்திற்காகவே நான் காத்துக் கொண்டிருக்கிறேன். அதற்காகவே நான் தவம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். அதனால்தான் இப்பொழுது கழித்துக்கொண்டிருக்கிற இந்த வாழ்க்கையின் துன்பமும் தனிமையும் என்னை ஒட்டவில்லை. மனிதனுக்குப் பசி எடுத்தாலேயொழிய சாதத்தின் ருசி தெரியாது. அப்படித்தான் கஷ்டங்களை அனுபவித்தாலேயொழிய சுகத்தில் இருக்கும் இன்பம் தெரியாது.''

ஜெயந்தி தன் உலகத்தில் மூழ்கிப் போனவளாய் எழுதிக் கொண்டே போனாள். அதே சமயத்தில் அங்கே ஒரு ஆள் வந்ததை அவள் கவனிக்கவில்லை. வழுக்கைத் தலையோடு திடகாத்திரமாய் இருந்த அவன் ஒரு நிமிஷம் மேஜைக்கருகில் உட்கார்ந்து உன்னிப்பாய் எழுதிக் கொண்டிருந்த ஜெயந்தியையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். ஜெயந்தியின் கன்னங்கள் ஜன்னல் வழியாய் வந்து பட்ட சூரிய கிரணங்களினால் மினுமினுத்துக் கொண்டிருந்தன. அவ்வுடம்பு தங்க விக்கிரகத்தைப் போல மிக நாசூக்காய் இருந்தது. தபோவனத்தில் இருக்கும் முனிக் கன்யையைப் போன்ற நிர்மலம். அவள் இப்போதைக்கு இந்த உலகத்திற்குத் திரும்பி வரமாட்டாள் என்று உணர்ந்தான். தன் வரவைத் தெரியப்படுத்துவதுபோல கதவின் மீது விரலால் தட்டினான்.

ஜெயந்தி திரும்பிப் பார்த்தாள்.

அக்கண்களில் வெகு தொலைவிலிருந்த சுந்தர உலகத்திலிருந்து இந்த உலகத்திற்குத் திரும்பி வந்து பார்ப்பது போன்ற தூரம் இருந்தது.

''நமஸ்காரம், ஜெயந்திஜி'' வந்தவன் கைகளைக் கூப்பினான்.

ஜெயந்தி இவ்வுலகத்திற்கு முற்றிலுமாய் திரும்பி வந்தாள்.

சட்டென்று காகிதங்களை மடித்து வைத்துவிட்டு ''நீங்களா சாந்திலால்? வாங்க, உட்காருங்க'' என்றாள் மரியாதையோடு.

சாந்திலால் உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

ஜெயந்தி காகிதங்களை டிராயருக்குள் போட்டு மூடி விட்டு வந்தாள். சாந்திலால் அரைகுறை தமிழில் "இந்த வழியில் போனான். ஒரு தடவை பார்த்துட்டுப் போக லாம்னு வந்தான். புடவைங்க ஏதாவது நல்லது இருக்கா?"

"நீங்கள் எல்லாமே செந்தேரீ புடவைங்களைந்தானே விற்பீங்க. எங்கள் நூல் புடவைகளை விற்கமாட்டீங் களே?" என்றாள்.

"காட்டுங்க. இதைக்கூட ட்ரை பண்றான். அன்றைக்கு நீங்கள் அனுப்பிய பையன்கள் வந்தாங்க. அட்வர்ட்டைஸ் மென்ட் தந்தான் நான்."

"ஆமாம். சொன்னாங்க அவங்க. தாங்க்ஸ்."

"நீங்க எதுக்குச் சொல்லணும்? நாங்க சொல்றான் உங்களுக்கு."

"நீங்கள் எதுக்குங்க?"

"உங்கள் கவனத்தில் நாங்கள் இருந்து எங்களிடம் அவங்களை அனுப்பியதற்கு?"

' புடவைகளைக் காட்டுகிறேன், இருங்க."

"காட்டுங்க."

ஜெயந்தி ஷெட்டை நோக்கி நடந்தாள்.

"அங்கே எங்கே?"

"அங்கேதான் புடவைகள் இருக்கின்றன" ஜெயந்தி வராந்தாவிற்குப் போனாள்.

"நல்லது. நானும் வரேன்"— அவன் கூடவே வந்தான். சாந்திலால் வீட்டையெல்லாம் பார்த்தான். அங்கு யாரும் இருந்த சந்தடி கேட்கவில்லை.

ஜெயந்தி ஷெட்டிற்குள் வந்தாள். பீரோவைத் திறந்து காகிதங்களுக்கிடையே வைத்திருந்த புடவைகளை எடுத்து மேஜை மேல் வைத்துக் கொண்டிருந்தாள்.

"பாருங்கள், எவ்வளவு நாணயமாய் எப்படி இருக் கின்றனவென்று. இந்த நிறங்களும், அச்சுகளும் ரொம்ப நன்றாய் இருப்பதாய் எல்லோரும் சொல்றாங்க. முந்தா நாள்தான் ஒரு சிநேகிதி வெளிநாட்டார் இருவருக்குத் தந்தபோது ரொம்ப நன்றாய் இருப்பதாய் புகழ்ந்தாங் கன்னு லெட்டர் போட்டிருந்தாள்."

அவன் புடவைகளைப் பார்க்கவில்லை. ஜெயந்தியின் உடல் அசைவுகளையும், இடுப்பின் நெளிவையுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஜெயந்திஜீ தண்ணீர் வேண்டும்."

"கொண்டு வரேன்" ஜெயந்தி போகத் திரும்பினாள்.

"நீங்கள் எதற்கு? உங்கள் வேலைக்காரியை அனுப்புங்கள்."

"அவள் இல்லை. மாவு மிஷினுக்குப் போயிருக்கிறாள்."

"அந்த ஊமை?"

"பையனை அழைத்துக்கொண்டு வெளியே போயிருக் கிறான்."

"அப்படின்னால் தண்ணீர் வேண்டாம். புடவைங் களைக் காட்டுங்க" என்றான்.

ஜெயந்தி பீரோவிலிருந்து கடைசி புடவைகளை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் கதவு சப்தம் கேட்டது. ஜெயந்தி சட்டென்று திரும்பி பார்த்தாள். எதிரே சாந்திலால் கதவைத் தாழிட்டு விட்டு வந்து கொண்டிருந்தான்.

ஜெயந்திக்கு ஒரு நிமிஷம் இதயமே நின்றுவிட்டது. கால்கள் நடுங்கின. அதற்குள் சட்டென்று தன்னை

சமாளித்துக் கொண்டாள். பயம் இல்லாமல் நிமிர்ந்து பார்த்துக்கொண்டே, ''மிஸ்டர் சாந்திலால்! நீங்கள் பெரிய மனிதர். நகரத்தின் மையத்தில் உங்களுக்குப் பெரிய துணிக்கடை இருக்கிறது. உங்களுக்குப் பெயரும் புகழும் இருக்கிறது. உங்களுக்கு போலீசாரிடம் பிடிபட்டு ஜெயிலுக்குப் போக வேண்டும் என்று இல்லையே?''

''போலீசா? என்னையா? ஐ. ஜி.யின் மனைவி எங்கள் வாடிக்கையாளர். நாங்கள் என்ன சொல்கிறோமோ அதைத்தான் கேட்பாங்க. அவங்களுக்கு நாங்கள் புடவை களை பாதி விலைக்குத் தருவோம்.''

''ரொம்ப நல்லது. இந்த விஷயம் பேப்பர்களில் வெளி வந்து விட்டால் அவர் விஷயம் கூட நடுத்தெருவுக்கு வந்து விடும். ஜாக்கிரதை! தொலைவிலேயே நில்லுங்கள்.''

ஜெயந்தியின் முகத்தில் கோபத்தைக் கண்டதும் அவன் முகம் களையிழந்தது. ஜெயந்தி பயப்படவில்லை. அழவும் இல்லை. இதற்கு முன்பே அவன் இரண்டு மூன்று பெண் களையும், வீட்டில் வேலைக்காரப் பெண்ணையும் தனியாய் இருந்த சமயம் பார்த்து கற்பழித்திருக்கிறான். ஆனால் இப்படி நெஞ்சுரத்தோடு நின்றுகொண்டு எதிர்த்துப் பேசிய வர்கள் கிடையாது.

அவனால் பேச்சில் காட்டிய தைரியத்தைக் கையால் காட்ட முடியவில்லை.

''மரியாதையாய் போய் கதவைத் திறங்கள்'' என்றாள் ஜெயந்தி.

ஜெயந்திக்கு உள்ளூர இந்த ஆபத்திலிருந்து எந்தவிதத் திலும் பலியாகாமல் தன்னால் தப்பித்துக்கொண்டு வெளி யேற முடியுமா என்ற அச்சம் ஏற்பட்டது. வாதத்தில் இழுத்துக் கொண்டிருந்தால் அதற்குள் ரங்கம்மா வந்துவிடு வாள் என்று தோன்றிற்று. அவள் எவ்வளவு தப்புப் பண்ணி விட்டாள். கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்து

விட்டாள். தெரிந்தவன் தானே என்றெண்ணிக் கொண்டு விட்டாள். கடையில் இருக்கும் பொழுது இவன் எவ்வளவு வினயமாய் நடந்து கொள்வான்? பெண்களைக் கண் ணெடுத்தும் பார்க்காத அளவிற்கு அடக்கமாய் பெரிய மனித தோரணையுடன்!

அத்தனையும் வேஷம் போலும்! சாந்திலால் ஜெயந்தியைக் கெஞ்சுவதுபோல சொன்னான், ''ஜெயந்திஜீ உன் கணவன் செத்துப் போய்விட்டான் என்று எனக்குத் தெரியும். என்னை நம்பு. உன் புடவை வியாபாரத்தைப் பெரிதாய் பண்ணித் தரேன். நகரத்தில் ஒரு கடையையே உனக்காகத் திறந்து தரான். உனக்கு எந்த குறையும் இருக்காது.''

''மூடு வாயை''— என்ற ஜெயந்தி ஒரே பாய்ச்சலாய் அங்கிருந்து அப்பால் போக முயன்றாள். அவன் சட்டென்று ஜெயந்தியைப் பிடித்துக் கொள்ளப் போனான். பிடி தவறிப் போய்விட்டது. சுவற்றில் மோதிக் கொண் டான். ஆனால் உடனேயே ஜெயந்தி கதவைத் திறந்து விடாமல் குறுக்கே வந்துவிட்டான். ஜெயந்தி சரேலென்று கீழே குனிந்து, அங்கே சாயம் போடும் இரும்பு சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டாள். அதன் பற்கள் மேலுக்குப் பார்க்க பிரஷ்ஷைப்போல இருக்கும். இதைக் காட்டிலும் கூர்மையானது வேறு ஏதாவது கிடைக்குமா என்று பார்த் தாள்.

சாந்திலால் கிட்டே வந்தான். சட்டத்தினால் ஓங்கி அடிக்க வந்த ஜெயந்தியின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான். இருவரும் நிமிறத் தொடங்கினார்கள்.

''போலீஸ்க்கு ரிப்போர்ட் தரேன்''— ஜெயந்தி பற் களை நறநறத்துக் கொண்டே கத்தினாள்.

''வாயாடினால் என் வேலை முடிந்ததுமே கொன்று போட்டு விடுவேன். ஜாக்கிரதை''— அவன் குரூர மிருகத் தைப் போல பார்த்தான்.

ஜெயந்தியின் கையிலிருந்த இரும்புச் சட்டம் கீழே விழுந்தது. குனிந்து சரேலென்று அதைக் கையிலெடுத்துக் கொள்ளப் போனாள். அவன் காலால் அதைத் தள்ளி விட்டான். ஜெயந்தியின் கைவிரல்களில் பிரஷ்ஷைப் போல இருந்த அதன் இரும்பு பற்கள் பட்டன. அவள் வீலென்று கத்திய கத்தல் அவ்விடமெல்லாம், எதிரொலித்தது. ஜெயந்தி கொஞ்சம் அசிரத்தையாயிருந்த அந்த சமயம் பார்த்து சாந்திலால் அவள் உடம்பை வளைத்துப் பிடித்துக் கொண்டுவிட்டான்.

அதற்குள் ''அம்மா'' என்று ரங்கம்மாவின் அழைப்பு கேட்டது.

''ரங்கம்மா! ரங்கம்மா! நான் ஷெட்டில் இருக்கிறேன். கதவைத் திற. சீக்கிரமாய்''— என்று பைத்தியம் பிடித்த வளைப் போல கத்தினாள். சாந்திலால் சட்டென்று அவள் வாயைப் பொத்துவதற்குள்ளாகவே ஜெயந்தியின் கத்தல் சப்தம் ரங்கம்மாவின் காதில் விழுந்துவிட்டது.

ரங்கம்மா கையிலிருந்து மாவுப்பையை அவ்விடத் திலேயே போட்டுவிட்டு ஓடி வந்தாள். கதவைத் தட்டத் தொடங்கினாள். சாந்திலால் அதற்குள் ஜெயந்தியை ஆக்ரமித்துக் கொள்ளப் போனான்.

ஆனால் ரங்கம்மா கதவைத் தட்டியதைப் பார்த்த துமே அவனுக்கு பயமாகி விட்டது. ஜெயந்தி போலீஸில் ரிப்போர்ட் தருவதாய் சொல்கிறாள். தன் மரியாதை யைக் கப்பலேற்றிவிடப் போவதாய் சொல்கிறாள். ஜெயந்தி படித்த பெண்! சொன்னபடி செய்து காட்டி விடுவாள். தான் விரும்பியதும் நிறைவேறவில்லை. அதோடு நான்கு பேர்களுக்கு முன்னால் சந்தி சிரிக்கும் படியாய் ஆகிவிடும். ஜெயந்தி உயிரோடிருந்தால் தன் கௌரவத்திற்கே ஆபத்து! அவன் சட்டென்று ஜெயந்தியின் கழுத்தை நெறித்துத் தலையைச் சுவற்றோடு மோதப் போனான்.

ஜெயந்திக்கு மூச்சு திணறிற்று. அத்துடன் தலை சுவற்றில் மோதிய பொழுதெல்லாம் அதிர்ந்து கொண் டிருந்தது. விழி பிதுங்கத் தொடங்கிற்று. உயிரே போய் விடும்போல தோன்றிற்று.

அதற்குள் தடாலென்று கதவுகள் திறந்து கொண்டன. பொன்னையன் காளையாய் சீறிக் கொண்டே வந்து சாந்திலாவின் மீது பாய்ந்தான். தீரஜ்ஜும், ரங்கம்மாவும் கூட உள்ளே வந்தார்கள். ஜெயந்தியின் தோற்றத்தையும் அவள் கையிலிருந்து வழிந்த ரத்தத்தை யும் பார்த்து ரங்கம்மா— ''ஐயோ பாவி! நீ நாசமாய்ப் போக. உன் கை அழுகிப் போக'' என்று திட்டித் தீர்த்து விட்டு ஜெயந்தியை அணைத்துக் கொண்டாள்.

சாந்திலால் வெறிப் பிடித்தாற் போல தன்னைக் குத்திக் கொண்டிருந்த பொன்னையனிடமிருந்து ஒருவாறு தப்பித்துக் கொண்டு அறைக்கு வெளியே போய், சரேலென்று இழுத்து கதவைச் சாத்தி வெளியே தாழிட்டு விட்டுப் போய் விட்டான்.

பொன்னையன் அரும்பாடுபட்டுக் கதவை உடைத்துத் திறந்தாள்.

தீரஜ் சிலையாய் நின்றபடி தாயையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அகல விரிந்தன.

தாயின் அலங்கோலமான தோற்றத்தையும், அழுது கொண்டிருந்த முகத்தையும் ரத்தம் வழிந்து கொண்டி ருந்த கையையும் வெகு நேரமாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். வெகு நேரங்கழித்து ஜெயந்தி கிழிந்த உடையை மாற்றிக் கொண்டு, கைக்குத் தானே பேண்ட்டேஜ் போட்டுக் கொண்டாள்.

ரங்கம்மா ஜெயந்தியின் கன்னத்திற்கருகில் பட்டிருந்த கீறல்களுக்கு வெந்நீரால் ஒத்தடம் கொடுத்துக் கொண் டிருந்தாள்.

தீரஜ் ரங்கம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டே— "ரங்கம்மா! அம்மாவுக்கு என்னவாயிடுத்து?" என்று கேட்டான்.

"அம்மாவுக்கு ஒன்றும் ஆகலை குழந்தை! நாம்ப யாரும் வீட்டில் இல்லையோனோ? அந்த பைத்தியக் காரன் வீட்டிற்குள் புகுந்து அம்மாவைக் கொல்லப் போனான். நாம்ப சரியான சமயத்தில் வந்து விட்டதால் அம்மா பிழைத்துக் கொண்டாங்கன்னு வை."

"இல்லாவிட்டால்?"

"அம்மா செத்துப் போயிருப்பாங்க."

தீரஜ் அப்படியா என்பது போல பார்த்தான்.

ரங்கம்மா ஒத்தடம் கொடுத்து முடித்துவிட்டு எழுந் திருந்து— "அம்மா, தீரஜ்ஜைப் பாருங்கள். எப்படி திருதிரு வென்று விழிக்கிறான்னு! ஒரு முறை கிட்டே வான்னு கூப்பிடுங்கள்" என்றாள்.

ஜெயந்தி கன்றிப் போன முகத்துடன் தீரஜ்ஜைப் பார்த்து "இப்படி வா" என்பது போல கையை நீட்டி னாள்.

தீரஜ் மெதுவாய் அடி மேலடி எடுத்து வைத்துக் கொண்டே தாயிடம் வந்தான். ஜெயந்தி தீரஜ்ஜின் வயிற்றில் முகத்தைப் பொத்திக் கொண்டு சட்டென்று அழுது தீர்த்து விட்டாள்.

தீரஜ் எல்லாம் கரை கண்டவனைப் போல "பயப் படாதே மம்மீ, அடுத்த தடவை அந்த பைத்தியக்காரன் வந்தால் நூன் கொன்று போட்டுவிடுகிறேன். வந்தால் நான் ஸ்கூலுக்கே போகமாட்டேன். வீட்டிலேயே இருக் கேன். பயப்படாதே"— தாய் தான் அழும் பொழுது தன்னை எப்படித் தேற்றுவாளோ அதே போல தேற்றி னான். பொன்னையன் கதவிற்கருகில் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தான். அவன் கண்களில்கூட கண்ணீர்.

ரங்கம்மா அவனை தடுத்து 'பெரிய ரகளையாகிப் போய் விடும் பொன்னையா' என்று இழுக்காமலிருந்திருந்தால் துரத்திக் கொண்டு போய் அந்த வழுக்கைத் தலை ஆசாமியை செம்மையாய் புடைத்துவிட்டு வந்திருப்பான்.

* * *

ஜெயந்தி மகன் கையைப் பிடித்துக்கொண்டே சரோஜினி ஹாலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந் தாள்.

தீரஜ் திடீரென்று கையைக் காட்டி சந்தோஷத்தோடு, "அதோ, அங்கிள்" என்றான். ஜெயந்தி அந்த பக்கமாய் பார்த்தாள். சித்தார்த்தன் வேறு யாரோ இரண்டு பேர் களுடன் சேர்ந்து உள்ளே போய்க் கொண்டிருந்தான். அவனும் தீரஜ்ஜைப் பார்த்துவிட்டு, தன்னோடு வந்தவர் களிடம் "நீங்கள் போங்கள், நான் இதோ வந்துவிட்டேன்" என்று அவர்களை அனுப்பிவிட்டு தீரஜ்ஜிடம் வந்தான். "என்ன, இந்த பக்கமாய் வந்திருக்கீங்களே?" என்று ஜெயந்தியைப் பார்த்துக் கேட்டான்.

"அடுத்த வாரம் இங்கே நடக்கப் போகிற 'கைத் தொழில் கண்காட்சி'யில் புடவைகளைக் கூட வைப்பாங் களான்னு விசாரிக்கத்தான் வந்தேன்."

"ஆமாம், வைப்பாங்க."

"அந்த ஸ்டால் புக் ஆகிவிட்டதென்றும், வேறு யாருக்கோ கொடுத்துவிட்டதாகவும் காலி இல்லை என்றும் சொல்லிட்டாங்க."

"யாரைக் கேட்டீங்க நீங்க?"

"செக்ரட்டரியை."

சித்தார்த்தன் ஒரு வினாடி யோசித்தான். பிறகு "என்னோடு வாங்க" என்று நடந்தான். ஜெயந்தியும் தீரஜ்ஜும் அவனைத் தொடர்ந்து போனார்கள்,

'செக்கரட்டரி' என்றிருந்த அறைக்குள் வந்தார்கள். மேஜைக்கு முன்னால் இருந்த நாற்காலியில் அவர் இல்லை. சித்தார்த்தன் ஜெயந்தியை உட்காரும்படிச் சொல்லிவிட்டு அங்கிருந்த டிராயரைத் திறந்து அப்ளிகேஷன் பாரங்களை எடுத்துத் தந்து, "இவைகளை பூர்த்தி பண்ணுங்கள்" என்றான்.

அதுவரை வலது கை முழங்கை வரை புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்த ஜெயந்தி தலைப்பைத் தள்ளிவிட்டு, கட்டுக் கட்டியிருந்த கையால் அங்கிருந்த பேனாவை எடுத்துக் கொண்டாள்.

"இதென்ன? இதென்ன கட்டு?" சித்தார்த்தன் கேட்டான்.

"சமைக்கும் பொழுது கையில் சுட்டுவிட்டு" என்றாள் ஜெயந்தி.

சட்டென்று தீரஜ் "இல்லை அங்கிள்! வந்து, எங்க வீட்டுக்குப் பைத்தியக்காரன் வந்தான். அவன்தான்..."

ஜெயந்தி இடைமறித்து எரிந்து விழுந்தாள். "தீரஜ்! பெரியவங்க பேசிக் கொண்டிருக்கும்போது நடுவில் குறுக்கிடக் கூடாதுன்னுச் சொல்லியிருக்கேனா இல்லையா?" தாயின் முகத்தைப் பார்த்துவிட்டு தீரஜ் வார்த்தைகளை மென்று விழுங்கிவிட்டான்.

சித்தார்த்தன் ஏதோ சொல்ல வந்தவன் தீரஜ்ஜின் முகத்தையும் ஜெயந்தியின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தான். ஏதோ நடந்திருக்கிறது. அது தனக்குத் தெரிவதை ஜெயந்தி விரும்பவில்லை என்று மட்டும் புரிந்தது அவனுக்கு. கட்டுப் போட்டிருந்த கையோடு ஜெயந்தி அப்ளிகேஷன் பாரத்தைப் பூர்த்தி பண்ணுவதற்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு— "இப்படிக் கொடுங்கள்" என்று தான் அந்த பாரத்தை வாங்கி பூர்த்திபண்ணத் தொடங்கினான் சித்தார்த்தன்.

ஜெயந்தியின் பெயரும் வயதும் அதற்குள் எழுதி முடிக்கப்பட்டிருந்தது. கணவன் பெயர் என்றிருந்த இடத்தைப் பார்த்துவிட்டு— "பெயர்?" கேட்டான் சித்தார்த்தன்.

"சிவரஞ்சன்" சொன்னாள்.

தொடர்ந்து விவரங்களை ஜெயந்தி சொல்லச் சொல்ல மளமளவென்று எழுதி முடித்துவிட்டு கடைசியில் கையெழுத்துப் போடுவதற்காகத் தந்தான். ஜெயந்தி கையெழுத்தைப் போட்டாள்.

அதற்குள் செக்ரட்டரி வந்தான். அவன் சித்தார்த்தனைப் பார்த்துவிட்டு— "ஹலோ சித்தார்த்! எப்ப வந்தீங்க? நான் இப்பத்தான் சிட்டைவிட்டுப் போனேன்" என்றான்.

"பாருங்கள். இவங்க நம்ப எக்ஸிபிஷனில் புடவைகள் ஸ்டாலை வைக்கப் போறாங்க"—என்றான் அப்ளிகேஷனை அவன் பக்கமாய் தள்ளிவிட்டு.

"ஆனால் பாக்கியத்தம்மாள்..."

"அவங்களிடம் நான் சொல்லிக் கொள்கிறேன். அந்த 'பல்லவி' புடவைகளைவிட இந்த புடவைகள் நன்றாயிருக்கின்றன. எனக்குத் தெரியும்" என்றான்.

"ஓகே! ஓகே!" என்றான் அவன்.

"போகலாமா?" தீரஜ்ஜைப் பார்த்தான் சித்தார்த்தன். ஜெயந்தி எழுந்திருந்தாள். மூவரும் வெளியே வந்தார்கள்.

"நாங்கள் போயிட்டு வரோம்" என்றாள் ஜெயந்தி.

"நான் கொண்டு போய் விடுகிறேன்"— காரை நோக்கிப் போனான் அவன்.

"வேண்டாம் பஸ் ஸ்டாண்ட் கிட்டத்தில்தானே? நாங்களே போய் விடுகிறோம்" என்றாள். சித்தார்த்தன் அவர்களோடு சேர்ந்து நடந்தான்.

பஸ் வந்தது. ஜெயந்தி பஸ்ஸில் ஏறுவதற்கு முன்னால் சித்தார்த்தனை நோக்கித் திரும்பி— ''வரேன், தாங்க்யூ'' என்றாள்.

''எதுக்கு தாங்க்யூ?''

''நீங்கள் தென்பட்டிருக்காவிட்டால், எக்ஸிபிஷனில் புடவைகளை வைக்கிற சான்ஸே கிடைத்திருக்காது'' என்றாள் நன்றியோடு.

பஸ் புறப்பட்டது. தீரஜ் கையை ஆட்டினான். சித்தார்த்தன் ஹாலுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவன் மனதில் ஒரு நல்ல காரியத்தைப் பண்ணி விட்டோம் என்ற திருப்தி ஏற்பட்டது. புடவைகளை வைப்பதற்கு ஸ்டால் கிடைத்து விட்டது என்றதுமே ஜெயந்தியின் கண்களில் தென்பட்ட சந்தோஷத்தைப் பார்த்ததும் அவனுக்குத் திருப்தியாய் இருந்தது. இந்த கைத்தொழில் கண்காட்சிக்கு ஏற்பாடு பண்ணியிருந்த சங்கத்தின் பிரெசிடென்ட் அவன்தான்! ஜெயந்தியின் புடவைகளை ஸ்டாலில் வைக்கலாம் என்ற யோசனை முதலிலேயே அவனுக்குத் தோன்றாமல் போய்விட்டது. தோன்றியிருந்தால் அவனாகவே முன்கூட்டியே அவளுக்கு அறிவிப்பு தந்திருப்பான். அவன் படியேறி வந்து கொண்டிருக்கையில் பாக்கியத்தம்மாள் எதிர்ப்பட்டாள்.

''சித்தார்த்தா! இதென்னது? நான் சிபாரிசு பண்ணிய பல்லவி புடவைகளைத் தள்ளிவிட்டு, வேறு யாருக்கோ ஸ்டாலைக் கொடுத்து விட்டாயாமே?''

''ஆமாம்''

''ஏன்?''

''அந்தப் புடவைகளைவிட இவைகள் நன்றாயிருக்கின்றன.'' அவன் உறுதியாய் சொன்னான்,

பாக்கியத்தம்மாளுக்குப் பக்கத்தில் இருந்த சரளா பக்கென்றுச் சிரித்தாள். ''சித்தார்த்தன் சாருக்கு பெண்களின் புடவைகள் பற்றிய விஷயமெல்லாம் ரொம்ப நன்றாய் தெரியும் போலிருக்கே'' அதைக் கேட்டு அவன் முகம் யோசனையுடன் மாறிற்று. அல்வுதட்டில் இருந்த புன்னாக பறந்து போய்விட்டது. உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது.

அதற்குள் அங்கே செக்ரட்டரி வந்து விட்டதால் அச்சம்பாஷணை மாறிவிட்டது.

* * *

எக்ஸிபிஷன் நெருங்கிவிட்டது. ஜெயந்தி ஸ்டாலில் வைப்பதற்காக தயாரித்திருந்த புடவைகளைப் பார்த்து விட்டு பாக்கியத்தம்மாள் உதட்டைப் பிதுக்கினாள். அவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு— ''இவைகள் ரொம்பவும் மட்டரகமாய் இருக்கின்றன. ஒரு வாரம் டயம் தரேன். நீங்கள் வேறு ரகங்களை பிரிண்ட் பண்ணிக் கொண்டு வந்து காட்டுங்கள்'' என்றாள்.

அதைக் கேட்டதும் ஜெயந்திக்கு பகீர் என்றது. திரும்பவும் புதுப் புடவைகளா? இப்பொழுதே இவைகளைத் தயாரித்த செலவு கைக்கு வராமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது! ஜெயந்திக்கு இது நடக்கிற காரியமாய் தோன்றவில்லை.

அன்று மாலையில் சமையல் பண்ணிக் கொண்டிருக்கையில் ரங்கம்மா காய்களை நறுக்கிக் கொண்டே சொன்னாள்— ''அம்மா! நான் என்ன வேண்டிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? எக்ஸிபிஷனில் உங்கள் புடவைகள் அத்தனையும் விற்றுப் போனால் ஒரு வருஷம் வரை சனிக்கிழமை வந்துவிட்டால் பச்சைத் தண்ணீரைக் கூட பல்லில் விட்டுக் கொள்ளாமல் உபவாசம் இருக்கேன்னு வேண்டிக் கொண்டிருக்கிறேன்.''

''ரங்கம்மா! எக்ஸிபிஷனில் புடவைகளை வைக்கப் போறதில்லை'' என்றாள் ஜெயந்தி. ரங்கம்மா வியப்போடு பார்த்தாள்.

"வைக்கப் போறதில்லையா? எதுக்காக? நேற்று வரைக்கும் அப்படி சொன்னீங்களே!"

"நம்மகிட்டே இருக்கிறது அவங்களுக்குப் பிரயோ ஜனப்படாதாம்-புதிய பிரிண்ட் வேணுமாம். என்னால் எப்படி முடியும்?"

"புதிய பிரிண்ட் எதுக்கும்மா? இதே தங்கமாய் இருக்கும்போது..."

"அவங்களுக்குப் பிடிக்கவில்லை, அவ்வளவுதான்."

"ஐயோ கடவுளே"— ரங்கம்மா கூட உற்சாகமிழந்து விட்டாள்.

மறுநாள் ஜெயந்தி கடை வீதியிலிருந்து திரும்பி வந்த பொழுது மேஜை மீது ஒரு கடிதம் இருந்தது. அதில் இவ் வாறு இருந்தது.

"ஜெயந்தி!"—அந்த விளிப்பைக் கண்டதுமே ஜெயந்தி திடுக்கிட்டாள். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். "நீங்கள் புடவைகளை எக்ஸிபிஷனில் வைக்காமல் கேன்ஸல் பண்ணிக் கொண்டு விட்டதாகவும், அந்த ஸ்டாலை வேறு யாருக்காவது கொடுத்துவிடச் சொல்லும் கடிதம் எழுதித் தந்தீர்களாம். நான் உங்களை சிபாரிசு பண்ணினேன். நீங்கள் என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இப்படி பண்ணுவது நன்றாயில்லை. என்னால் இங்கே அதிக நேரம் காத்திருக்க முடியாது. வேறு அவசர வேலை யாய் போகிறேன். இந்த நம்பருக்கு போன் பண்ணினால் கிடைப்பேன்.

இப்படிக்கு
சித்தார்த்தன்"

அக் கடிதத்தைப் பார்த்ததும் ஜெயந்திக்கு கோபம் வந்தது. இதென்ன ஒருமை விளிப்பு! அவளுக்கும் அவனுக் கும் பரிச்சயம் எவ்வளவு தூரம் ஆகிவிட்டது? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? ஜெயந்தியின் உதடுகளில்

விரக்தியோடு கூடிய சிரிப்பு தவழ்ந்தது. என்ன நினைத்து கொண்டிருக்கிறான் என்று அவளுக்கு நன்றாகவே தெரிந்து விட்டது. அவனுக்கு இப்படிப்பட்ட அனுபவங்களும், இப்படிப்பட்ட உரிமைகளைக் காட்டுவதும் புதியதில்லை. பெண்களுக்கு உதவி பண்ணுவது போல நெருங்குவதும், இந்த அன்பிற்கும் உதவி பண்ணுவதற்கும் பின்னால் ஆசை என்ற விஷப்பாம்பு புஸ்ஸென்று படமெடுத்து ஆடிக் கொண் டிருக்கும். சீ, சீ! படித்தவர்களைப் போலவும், நாகரீகம் தெரிந்தவர்களைப் போலவும் தென்படுபவர்களிடம் இது இன்னும் அதிகமாகிவிட்டது! இந்தப் பண்பும் மரியாதை யும் வெறும் நடிப்பு! ஜெயந்தி பெருமூச்செறிந்தாள். இந்த சித்தார்த்தன் கூட அப்படிப்பட்டவர்களுள் ஒருத்தன். இல்லாவிட்டால் இதென்ன உரிமை! அவளை எவ்வளவோ நாட்களாய் தெரிந்தவனைப் போல இதென்ன உரிமை! "ஜெயந்தி-". ஜெயந்திக்கு அருவருப்பாய் இருந்தது. கையிலிருந்த கடிதத்தை கிழித்துத் துண்டாக்கி விட்டெறிந் தாள். நீரஜ்ஜை ஆக்ஸிடென்டிலிருந்து காப்பாற்றியதற் காக அவள் நன்றியை காட்டிக் கொண்டாள். மரியாதை யாய் பேசினாள். அதற்காக இவ்வளவு உரிமையா! இவ் வளவு அதிகாரத்தை எடுத்து கொள்வதா? போதும் போதும். இந்த பரிச்சயத்தை இத்துடன் கிள்ளியெறியாமல் போனால் இன்னொரு ஆபத்தான சம்பவத்தை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

இரண்டு நாட்கள் கழிந்தன.

ஜெயந்திக்கு நன்றாய் ஜ்வரம் வந்துவிட்டது. ரங்கம்மா வின் பலவந்தத்தின் பேரில் டாக்டரிடம் போனாள். க்ளினிக்கிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் வெளியே கார் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தாள். சித்தார்த்தன் அதற்குள் உட்கார்ந்திருந்தான். அவன் யாருக்காகவோ காத்திருந்தாற்போல தோன்றிற்று.

ஜெயந்தி அவனை கவனிக்காததுபோல போகத் தொடங்கியபோழுது அவன் அதற்குள் அவளைப் பார்த்து

விட்டான். கதவைத் திறந்து கொண்டு மளமள வென்று ஜெயந்தியிடம் வந்தான்.

''பலே ஆள்தான் நீங்கள். நான் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கும்பொழுது, நீங்கள் என்னைப் பார்த்தும் பாராதது போலவே போறீங்களே ஏன்?''

ஜெயந்தி பதில் பேசவில்லை.

''நீங்கள் எனக்கு ஏன் போன் பண்ணவேயில்லை?''

''சொல்வதற்கு எதுவும் இல்லை. அதனால்தான்.''

''உங்களால் மனதை மாற்றிக் கொள்ள முடியாதா?''

''ஊஹூம். நீங்கள் திரும்பத் திரும்ப கேட்கத் தேவையில்லை. இன்னொரு தடவை கேட்டால் எனக்கு ரொம்பக் கோபம் வந்துவிடும்''— அவ்வார்த்தைகள் சம்பாஷணையைக் கிள்ளியெறிந்துவிட்டாற் போல இருந்தன.

''நான் வீட்டில் கொண்டுபோய் இறக்கிவிட்டு விடுகிறேன், வாங்க.''

''தேவையில்லை. அதோ ரிக்ஷா''— என்று சொல்லி கொண்டிருந்த பொழுதே ரிக்ஷா கிட்டே வந்துவிட்டது. அவள் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள். குறைந்தபட்சம் சித்தார்த்தனிடம் 'போய் வருகிறேன்' என்றுகூட சொல்லிக் கொள்ளவில்லை. ''விடு'' என்றதுமே ரிக்ஷா புறப்பட்டது.

சித்தார்த்தன் வாயடைத்து போனவனாய் அப்படியே நின்றுவிட்டதை அவள் கவனிக்கவில்லை.

ஜெயந்தி வீட்டிற்கு வருவதற்குள் சித்தார்த்தன் அங்கே வந்திருந்தான். தீரஜ்ஜிடம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

ஜெயந்தியை பார்த்ததுமே அவன் எழுந்து நின்று— ''உங்களோடு வீதியில் தர்க்கம் எதற்கு என்று இங்கே வந்தேன்''- என்றான்.

ஜெயந்தி அவன் சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவனை விசாரிக்கவும் இல்லை. கடுகடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு மகனைப் பார்த்து, ''தீரஜ் உள்ளே போய் படிக்கக்கூடாது? எப்பப் பார்த்தாலும் யார் கிடைப்பாங்க வம்பு பேசலாம்னு பார்க்கிறாய்''-என்றாள்.

தீரஜ் விழித்தான். சித்தார்த்தன் தீரஜ்ஜின் தோளில் தட்டிவிட்டு— ''மம்மிக்கு ஜுரமாய் இருக்கு இல்லையா? அதனால்தான் ரொம்பக் கோபமாய் இருக்காங்க தீரஜ்! கொஞ்சம் முன்னாடி வீதியில்கூட என்னைப் பார்த்துவிட்டு எரிந்து விழுந்தாங்க, போய் படி'' என்றான். தீரஜ் தலையாட்டி விட்டுப் போய்விட்டான்.

''இப்பச் சொல்லுங்க'' என்றாள் தீரஜ்.

''என்ன சொல்றது? எனக்குப் பிடிக்கவில்லைன்னுதான் சொல்லிவிட்டேனே'' எங்கோ பார்த்துக் கொண்டே எரிச்சலுடன் சொன்னாள்.

''காரணம் என்ன?''

''உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''காரணத்தை என்னிடம் சொல்லி தீரவேண்டியது உங்கள் தர்மம்.''

காரணத்தைச் சொன்னாலேயொழிய இவன் போக மாட்டான் போலிருக்கிறது. அதனால்தான் ஜெயந்தி சொன்னாள்— ''அவங்க புதிய பிரிண்ட் வேண்டும் என்று சொன்னாங்க. அதற்கு எனக்குச் சக்தி இல்லை.''

அதைக் கேட்டதும் சித்தார்த்தனின் முகம் மலர்ச்சியடைந்தது.

''அதா விஷயம்? நானும் சரியாய் அப்படித்தான் நினைத்தேன். என்னிடம்கூட அவங்க இதை சொன்னாங்க. புதிதாய் சிலது இருந்தால் விளம்பரம் நன்றாய் இருக்கும்.

அவைகளோடு இந்தப் பழையதையும் சேர்த்து விற்கலாம். அவங்க உங்கள் நல்லதிற்காகவே சொன்னாங்க.''

சித்தார்த்தன் எழுந்து நடைபயின்று கொண்டே சொன்னான். ''உங்கள் நிலைமை எனக்குத் தெரியாதா என்ன? அதற்கு வேண்டிய பண ஏற்பாட்டை நான் பண்றேன்.''

ஜெயந்தி கோபத்தை அடக்கிக் கொண்டே முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கைகளைக் கூப்பி— ''உங்களுக்கு ஒரு நமஸ்காரம். நீங்கள் ஆண்கள் பண்ணும் உதவிகளைப் பற்றி தெரியும். அதற்குப் பின்னால் எடுத்துக் காட்டுகிற கைகளையும் தெரியும். போயிட்டு வாங்க''—என்று ஆவேசத்துடன் சொல்ல வேண்டும் போலிருந்தது. பற்களை கடித்துக் கொண்டு அடங்கிக் கொண்டாள். இந்த ஆண்களுடன் ஒத்துவராவிட்டால் மரியாதையாய் தொலைவில் இருப்பதே நல்லது. நேருக்கு நேராய் ஏதாவது சொன்னால் அவர்கள் அகங்காரத்துடன் அடியுண்ட பாம்பைப் போல இன்னும் துளிர்த்துப் போவார்கள். பெண் ஒரு அபலை என்று தெரியும் அவர்களுக்கு! பலசாலி பலவீனமானவன் தன்னை அவமரியாதைச் செய்தால் சகித்துக் கொள்ளமாட்டான். மூட்டைப் பூச்சியை நசுக்குவதைப் போல அவர்களை அடக்கவேண்டும் என்று பார்ப்பான்.

சித்தார்த்தன் நயமாய் எடுத்துச் சொல்வது போல— ''நீங்கள் சங்கோஜப் படத் தேவையில்லை. நான் ஒன்றும் உங்களுக்கு சுயமாய் தருவதில்லை. நீங்கள் வாங்கிக் கொள்வதைத் தன்மானக் குறைவாய் எண்ணிக் கொள்ள வேண்டியதில்லை. எங்கள் சங்கம் சில கைத்தொழில் கலைஞர்களுக்குத் தொழில் நிமித்தம் கடன் வழங்குகிறது. அவங்க அந்தப் பணத்தை கொண்டு சாமான்களைத் தயாரித்து, எங்கள் சங்கத்தின் மூலமாய் விற்பனையைத் தொடர்ந்து கொண்டிருப்பாங்க. அவ்வாறு விற்பனை

யாகும் பணத்தில் நாங்கள் தரும் பணத்தைக் கழித்துக் கொண்டு எஞ்சியதைத் தருவோம்.''

''இதுவரை ஆகியிருக்கிற கடனே போதும். ஏதோ வரும் என்று ஆசைப்படுவது, எதையோ பண்ணுவது, எதுவுமே வராமல் போவது, கடன் பெருகிக் கொண்டே போவது, இது என் வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகி விட்டது. கடன் வாங்கினால் அதைத் தீர்க்க முடியும் என்ற தைரியம் இருக்கணும். அது எனக்கு இல்லை.''

''அந்த பயம் உங்களுக்கு வேண்டாம். உங்கள் புடவைகள் விற்றுப் போகும்படியாய் நாங்கள் பார்த்துப்போம். அந்த பொறுப்பு எங்களைச் சேர்ந்தது பாருங்கள்! உங்களைப் போன்ற கலைஞர்களுக்கு கலைகளைப் படைக்க மட்டுந்தான் தெரியும். அதைக் காசாய் மாற்றுவதற்கு எங்களைப் போன்ற வியாபாரிகளுக்குதான் தெரியும். இது கலைக்கும்—வியாபாரத்திற்கும் இடையே உள்ள பேதம். கலைக்கு வியாபாரத்தின் உறுதுணை இருந்தால்தான் சிறப்பு. நாங்கள் உங்களுக்கு மட்டுமேயில்லை. எங்கள் சங்கத்தின் சார்பில் கைத்தொழிலையே ஆதாரமாய் கொண்டிருக்கும் எத்தனையோ பேர்களுக்கு இப்படிக் கைக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்! அவர்களை உற்சாகப் படுத்துவோம்.''

ஜெயந்தி சரேலென்று அவனை நோக்கித் திரும்பினாள்.

''அதனால் உங்களுக்கு என்ன லாபம்?''

''லாபமா?'' சித்தார்த்தன் லேசாய் தோளைக் குலுக்கினான். ''லாபம் நிறைய இருக்கிறது. முக்கியமாய் எங்கள் சங்கத்திற்குப் பெயர் வருகிறது. இது ஒரு சுறுசுறுப்பான சங்கம். பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் சிலருக்குக் கை நிறைய பணம், வேலைக்காரர்கள், கார், நல்ல உத்யோகத்தில் அல்லது வியாபாரத்தில் இருக்கும் கணவன் எல்லாம் இருந்தும் வேலை வெட்டி இல்லாமல்

பொழுது போகாமல் தவிப்பார்கள். அவர்களுக்கு இக் கைத்தொழில் ஒரு வரப்பிரசாதம். அவர்களுக்குப் பெயரும் புகழும், கிடைக்கச் செய்கிறது. பொழுதும் போகிறது. அந்த விதமாய் பணக்காரர்களுக்குக் கை கொடுத்தால் ஏழைகளுக்கு இன்னொரு விதத்தில். தேவைப்பட்டவர் களுக்குக் கடன் உதவி தந்து அவர்கள் நிலையை வளர்க் கிறோம். அவர்கள் சாமான்கள் விற்றுப் போய் கையில் பணம் வரும்பொழுது அவர்கள் முகத்தில் சந்தோஷமும் நன்றியும் தென்படும். உற்சாகம் ஏற்படும். இதைப் பார்த் தால் நிஜமாய் மனிதனை எத்தனையோ கஷ்டங்களுக்கு ஆளாக்குகின்ற இந்த பணத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக் கிறதா என்று தோன்றும். உங்களுக்கு இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் நீங்கள் ஒரு நல்ல அவகாசத்தை மறுக்கிறீர்களே என்று வருத்தமாய் இருக்கிறது. நான் இந்த இரண்டு நாட்களும் ஒரே பிஸியாய் இருந்தேன். இல்லா விட்டால் அப்பொழுதே வந்திருப்பேன்.''

எவ்வளவு நன்றாய் சொல்லுகிறான்— வாழைப் பழத்தை உரித்துக் கையில் தந்தாற்போல!

ஜெயந்தி கட்டிலில் சரிந்தாள். ஜுரத்தின் மூலமாய் அவளுக்குக் கண்கள் எரிந்து கொண்டிருந்தன. உடம் பெல்லாம் அடித்துப் போட்டாற் போல வலியெடுத்தது. மூச்சுக் காற்று உஷ்ணமாய் வந்து கொண்டிருந்தது. அவளுக்கு இப்பொழுதெல்லாம் மனதில் ஆசை என்பது மடிந்து போய்விட்டது. தன்னால் எதுவுமே பண்ண முடியாது என்ற நிராசை அவளைத் திணறடித்துக் கொண் டிருந்தது. வறுமை என்ற புதைச் சேற்றில் தான் அமுங்கி விட்டாள். இனி இதிலிருந்து வெளியேற முடியாது என்று தோன்றிற்று.

சித்தார்த்தன் ஜெயந்தி உட்கார்ந்து கொண்டிருந்த கட்டிலுக்கெதிராய் வந்து நின்றான். நயந்து சொல்வது போல— ''உங்களுக்கு உடம்புச் சரியாய் இல்லை. உங்களால் சரியான முடிவிற்கு வரமுடியவில்லை. நான்

கடன் வாங்கும் காகிதங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். இதில் கையெழுத்துப் போடுங்கள். நாளைக்கு உங்கள் வீட்டிற்குப் பணம் வந்துவிடும்''— என்று ஜேபியிலிருந்து காகிதங்களை எடுத்துத் தந்தான். பேனாவையும் எடுத்துத் தந்தான்.

''அம்மா! ஏம்மா யோசிக்கிறீங்க? போடுங்க'' என்றாள் ரங்கம்மா.

ஜெயந்தி கையெழுத்தைப் போட்டாள்.

''வெரிகுட்'' சித்தார்த்தன் காகிதங்களை வாங்கிக் கொண்டு போய்விட்டான். போகும் முன்னால் ரங்கம்மா விடம்— ''ரங்கம்மா! அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை. அந்த மருந்துகளை சரியாய் சாப்பிடும்படிப் பார்த்துக் கொள்''— என்று எச்சரிக்கைத் தந்துவிட்டுப் போனான்.

ஜெயந்திக்குத் திரும்பவும் கோபம் வந்தது. தன் வீட்டில் தன் வேலைக்காரிக்கு இவன் என்ன உத்தரவிடுவது! இந்த அதிகப் பிரசங்கம்தான் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவளுக்கு தன் மீதே தனக்கு வெறுப்பாய் இருந்தது. அவளுக்கு சக்தி இல்லை. அவள் அவ்வளவு சொல்லு கிறானே என்று கையெழுத்துப் போட்டாள்—கடைசி முயற்சி இதுதான் என்பதுபோல! அவள் பட்டினி கிடந் தாலும் பரவாயில்லை! நிரஞ்ஜனைப் படிக்க வைக்க முடியாமல் போனாலும் பரவாயில்லை. ஆனால் இந்தக் கடன் இருக்கிறதே, அதுதான் அவளுக்கு உறக்கமும் வராமல் செய்து கொண்டிருந்தது. அதை மட்டும் எப்படி யாவது தீர்த்துவிட்டால் போதும்! அப்பொழுதுதான் அஷ்ட ஐஸ்வரியங்களும் தனக்கே என்றாற்போல சந்தோஷப்படுவாள்.

அன்றைக்கு வீட்டுக்காரர் ரகளை பண்ணி விட்ட தற்கு பயந்து ரவி முதலியவர்களைக் கேட்டு, அவன் மூல மாய் பணம் கடன் வாங்கி, வீட்டுக்காரனிடம் தந்தாள்.

அவர் பணத்தை வாங்கிக் கொண்டு— அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே "எனக்குத் தெரியும்மா! நீ பணம் கொடுத்து விடுவாய் என்று தெரியும். ஆனாலும் நான் ஒரு பைத்தியம், உன்னிடம் பணம் இல்லாமலா இருக்கும்?"

"இல்லை மாமா, நிஜமாய் என்னிடம் இல்லை" என்று சொன்னாள்.

"ஆமாமாம். இல்லாத பணம் காலையில் விடிந்த துமே எப்படி ஓடி வந்தது என்கிறேன்? இப்ப தெரிந்து விட்டதில்லையா? கறக்கிற வழியில் கறந்து கொண்டால் தான் உன்னிடமிருந்து பணம் வெளியே வரும். இவ்வளவு நெஞ்சழுத்தக்காரின்னு நினைக்கவேயில்லை."

அவளுக்கு இந்த வார்த்தைகளால் தாங்க முடியாத அவமானம் ஏற்பட்டது. அவளுக்கு வீட்டுக்காரனின் கடன் தீர்ந்துவிட்டது என்ற திருப்தி இல்லை. ரவி முதலியவர் களுக்குக் கடனைத் திருப்பித் தரவேண்டும். கடன் என்றால் அளவுக்கு மீறிய பயம்! யாராவது வந்து தன்னை உலுக்கி எடுத்தாலும் கேட்பார் இல்லை!

ஆனாலும் அவர்கள் எல்லோருமே அவளை உதறி யெறிந்து விட்டார்கள்! அவள் செய்யாத குற்றத்திற்கு தண்டனை விதித்து விட்டார்கள்.

* * *

'சுரோஜினீ பவனில்' கைத் தொழில் கண்காட்சி தொடங்கப்பட்டது. அதில் புடவைகள், பொம்மைகள், லேசுகள், பித்தளை சாமான்கள், ரெடிமேட் ஆடைகள், மாலைகள், முதலியவை விதம் விதமாய் இருந்தன. எல்லா வற்றையும் அழகாய் அமர்த்தியிருந்தார்கள். பேப்பரில் இந்தக் கண்காட்சியைப் பற்றிச் சிறப்பாய் விளம்பரம் பண்ணியிருந்தார்கள். கவர்னர் வந்து திறப்பு விழாவை நடத்தினார்.

ஜெயந்தி இந்த ஆர்பாட்டத்தையெல்லாம் பார்த்து ஆச்சரியமடைந்தாள்.

சாதாரணமாய் அவள் அவர்கள் வீட்டிற்கெல்லாம் அனுப்பிவிட்டு பத்து ரூபாய் குறைத்து தருகிறேன் என்றும், பணம் அப்புறமாய்கூட தந்து கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பி வைக்கும் புடவைகளுக்கு ஆயிரம் சாக்குகளைச் சொல்லி நன்றாயில்லை என்று மறுத்த பெண்களே— இப்பொழுதே அதே புடவைகளை இந்தச் சங்கம் தன் லாபத்தையும், கண்காட்சிக்கு ஆன செலவுகளையும் சேர்த்து அவர்கள் தலையில் கட்டிய பொழுது வாயைத் திறக்காமல் சொன்ன விலைக்கு வாங்கிக் கொண்டு போனார்கள். அவள் தானாய் புடவைகளை விற்றதற்கும் இங்கே விற்றதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. அவள் பொன்னையனின் தலையில் மூட்டையாய் கட்டி அனுப்பி வைத்த பொழுது யார் கண்களுக்கும் அழகாய் தெரிய வில்லை. அதே புடவைகளை இங்கே சுவற்றில் அழகாய் தொங்கவிட்டும், பொம்மைகளுக்கு கட்டியும் நிற்க வைத்த பொழுது பார்த்தவர்கள் மெச்சிக் கொண்டார்கள்.

ஸ்டாலில் வைத்திருந்த ஜெயந்தி போன்றவர்கள் ஒதுங்கி தனிமையாய் நின்று கொண்டிருந்தார்கள். வந்தவர்களுடன் சங்கத்தின் வாழியர்கள் நல்ல உச்சரிப்புடன் ஆங்கிலம், தமிழ், இந்தி மொழிகளில் சரளமாய் பேசினார்கள். அந்தப் பேச்சில் மயங்கி கொண்டிருந்தார்கள் அவர்கள்.

ஜெயந்திக்கு இதெல்லாம் ஏதோ புது உலகமாய் தோன்றிற்று.

இரண்டாவது நாள் எக்ஸிபிஷனில் சாப்பாட்டு வேளை யில் ஜெயந்தி டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சித்தார்த்தன் அங்கே வந்தான். சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜெயந்தி எழுந்து நின்றாள்.

"எவ்வளவு புடவைகள் விற்றுப் போயிற்று?" என்று கேட்டான்.

"பாதி விற்றுப் போய்விட்டது" அவள் சந்தோஷத்துடன் சொன்னாள்.

"குட்! நல்ல ஆரம்பம். டிபன் சாப்பிடுகிறீர்களா? என்ன டிபன்?"

"தோசை."

"எனக்கு பசிக்கிறது" என்று அவன் ஜெயந்தியின் டிபனிலிருந்து ஒரு தோசையை எடுத்துக் கொண்டு டிபன் பாக்ஸ் மூடியில் வைத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினான்.

ஜெயந்தி அவன் உரிமையுடன் நடந்து கொண்ட இக் காரியத்தைப் பார்த்து வாயடைத்துப் போனவளாய் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

"என்ன இவ்வளவு ஆச்சரியப்படுறீங்க?" என்றான்.

"ஒன்றுமில்லை."

"உங்கள் தோசையை உங்களைக் கேட்காமலேயே எடுத்துக் கொண்டுவிட்டேன் என்றுதானே? ஆங் அவ்வளவு உரிமை எனக்கு இல்லையா? தீரஜ்ஜை காப்பாற்றியவனாச்சே!" அதற்குள் தொலைவிலிருந்து யாரோ சித்தார்த்தனை கூப்பிட்டார்கள். அவன் மளமளவென்று சாப்பிட்டு விட்டு போக முயன்றவன் நின்று, "அதாவது தீரஜ்ஜிற்கு காட் ஃபாதரைப் போன்றவன், இல்லையா? எனக்குத் தெரியும். உங்களைக் கேட்டால் இல்லை என்பீங்க. இப்படி பட்டவைகளைப் பெண்கள் சீக்கிரமாய் ஒப்புக் கொண்டு விட மாட்டாங்க. அவங்களுக்கு பயம்"— என்று சொல்லி விட்டு போய்விட்டான்.

மாலையில் ஜெயந்தி வீட்டிற்குப் போவதற்கு ரிக்ஷாவிற்காகக் காத்துக் கொண்டிருந்தாள். சித்தார்த்தன் வந்து "நான் கொண்டு விடுகிறேன், வாங்க" என்றான்.

"வேண்டாம், நான் போய்க் கொள்கிறேன்" என்று மறுத்து விட்டாள். உண்மையில் அவன் காரில் நிறைய

பக்கத்து ஸ்டாலைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அதனால் அவன் கூப்பிட்டும் அவள் போகவில்லை.

எக்ஸிபிஷன் முடிந்துவிட்டது. விற்பனை எல்லோருக்கும் நன்றாக இருந்தது. எல்லா ஸ்டாலை சேர்ந்தவர்களும் சந்தோஷமாய் இருந்தார்கள்.

"அடுத்த மாதம் பெங்களூரில் வைக்கப் போகிறேன். நீங்கள் எல்லோரும் வரவேண்டும்"—என்று பாக்கியத் தம்மாள் சொல்லிவிட்டாள்.

பிற்பகல் சாப்பாட்டு வேளையில் ஜெயந்தி புடவைகளையெல்லாம் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். சித்தார்த்தன் பக்கத்து ஸ்டாலில் லேசு விற்பனைப் பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் சித்தார்த்தனின் நண்பன் முரளி வந்தான்.

"சித்து! சேலை சாப்பிடுகிறாயா?" கேட்டான்.

"சேலையா? ஏன் மாட்டேன்? தஞ்சாவூர் ஜில்லாக் காரனாச்சே நான்" என்றான் கையை நீட்டி முரளி பிளேட்டில் இருந்ததை எடுத்துத் தந்தான். சித்தார்த்தன் எழுதிக் கொண்டே நடுநடுவே சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஜெயந்திக்கருகில் வந்து முரளி "மேடம்! நீங்கள்" என்றான்.

ஜெயந்தி முறுவலுடன் "சேலைகளைச் சாப்பிடுவது மட்டுமையில்லை, பண்ணைக்கூடத் தெரியும் எனக்கு" என்றாள்.

"அப்படின்னால் நீங்கள்..." என்றான்.

"நானும்கூட தஞ்சாவூர் ஜில்லாதான்."

"அட! சொல்லவேயில்லையே! ஆமாம், தஞ்சாவூர் ஜில்லாவில் எந்த ஊர் நீங்கள்?"

"கும்பகோணம்."

"வாட்! எங்க சித்தார்த்தனீன் தாத்தா ஊர்கூட அதே தான். ஏன்டா, உங்கள் ஊர்தானமே! அடையாளம் கண்டுக்க முடியலையா?" முரளி சித்தார்த்தனைக் கேட்டான்.

சித்தார்த்தன் அதற்குள் அந்த ஸ்டாக்கை எழுதி முடித்துவிட்டு ஜெயந்தியின் மேஜைக்கருகில் வந்தான்.

"உங்கள் விற்பனை புத்தகம் எங்கே?" கையை நீட்டினான்.

"உங்களுடையது கும்பகோணமா?"

அவன் தலையாட்டினான்.

"எந்த வீடு?" அந்த ஊரில் அவளுக்குத் தெரியாத வீடு இல்லையே.

"பாண்டுரங்கனீன் பேரன் நான். சுகுணம்மாவின் மகன்."

ஜெயந்தியின் கண்களில் தாங்க முடியாத ஆச்சரியம்! ஞாபகம் வந்தவளைப் போல ஆள்காட்டி விரலை ஆட்டிக் கொண்டே "சுகுணம்மாவின் மகன் கிருஷ்ணன் என்று எனக்கு ஒருத்தரைத் தெரியும்" என்றாள்.

முரளி சித்தார்த்தனீன் முதுகில் தட்டிவிட்டு "இவன் தாங்க! இவன் முழுப்பெயர் சித்தார்த்த கிருஷ்னன்."

"என்னது? கிருஷ்ணனா? நீயா?" ஜெயந்தியின் முகத்தில் சந்தோஷமும் ஆச்சரியமும் திணறச் செய்தன.

சித்தார்த்தன் தலையாட்டினான்.

ஜெயந்தி சித்தார்த்தனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் ஜெயந்தியையே பார்த்துக் கொண்டிருந்தான். இருவீர் கண்களிலும் சந்தோஷம் பொங்கிக் கொண்டிருந்தது.

இருவர் மனமும் கடந்த காலத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கிவிட்டன. பச்சை கொய்யாக்கள்! வாழைத்

தோட்டத்தில் ஓட்டம், கால்வாய்க் கரைகளைத் தாண்டிக் குதிப்பது, கலகலவென்றுச் சிரிப்பது, கால் தடுக்கி விழுந்து முகமெல்லாம் சேறாகி விட்டால், தூக்கி நிறுத்த வேண்டும் என்ற நினைப்பேயில்லாமல் கை கொட்டிக் கொண்டு கல கலவென்று சிரிப்பது, விழுந்தவர்கள் ஆத்திரமடைந்து சேற்றை அள்ளி முகத்தில் பூசுவது! வீட்டிற்கு வந்ததுமே உடைகள் பாழாகிவிட்டன என்று பெரியவர்கள் முதுகைப் பதம் பார்ப்பது, ஜெயந்தியின் அம்மா சேவை பிழிந்து கொண்டிருந்தால் எப்படிப் பிழிகிறாள் என்று கிருஷ்ணன் பார்ப்பது! எவ்வளவு இனீமையான பாலிய பருவம்! எவ்வளவு இனீமையான நினைவுகள்!

* * *

ஜெயந்தியும் சித்தார்த்தனும் ரெஸ்டாரென்டில் எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கே வந்து வெகு நேரமாகி விட்டது என்று இருவருக்குமிடையே இருந்த காலியான பிளேட்டுகளே எடுத்து சொல்லிக் கொண்டிருந்தன.

இருவரும் கன்னத்தில் கை ஊன்றிக் கொண்டு, இடையிடையே சந்தோஷித்தால் வார்த்தைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்ட ஜனமைகளைப் போல ஒருவரையொருவர் ஆசைநீரப் பார்த்துக் கொண்டார்கள். ஒருத்தரைப் பார்த்தால் இன்னொருத்தருக்குத் தர்ங்க முடியாத சந்தோஷம்!

"எனக்கு கிருஷ்ணன் என்றால் நிக்கரும் பனியனும் போட்டுக் கொண்டு பரட்டைத் தலையுடன் இருக்கும் எட்டு வயது சிறுவன்தான் ஞாபகத்திற்கு வருகிறான். எங்கம்மா எப்பொழுதும்— "அந்தப் பையனுக்கு எவ்வளவு தலைமயிர்! கண்களின் மீதெல்லாம் வந்து வழிகிறது கிராப்"— என்று சொல்வாங்க"— என்றாள் ஜெயந்தி சிரித்துக் கொண்டே.

சித்தார்த்தன் முறுவலுடன் கொஞ்ச நாட்களாய்தான் தூக்கி வாரிக் கொள்ள முடிந்திருந்த கிராப்பை நுனி விரல்களால் மேலே தள்ளிக் கொண்டே— "எனக்குக்கூட உன்னைப் பார்த்தால் எலிவால் ஜடை, முகத்திற்கு அளவுக்கு மீறி கலர்கள், சின்ன ஜாக்கெட் எல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது. ஓஹ்" அவன் நிமிர்ந்து சிரித்தான். ஜெயந்தி கலகலவென்று சிரித்தாள்.

"ஆமாம், அந்தக் கலர்கள் எங்கள் சித்தி மகளுடையது. எப்பொழுதும் நான் தடவிக் கொள்கிறேன் என்று ரகளை பண்ணுவேன். எங்கம்மா உனக்கு நன்றாயில்லை என்று சொன்னாலும் கேட்டுக் கொள்ள மாட்டேன்."

அவன் ஜெயந்தியின் சிரிப்பை ஆசைதீர பார்த்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி சிரித்துப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. அதற்குள் சர்வர் காபியைக் கொண்டுவந்து அவர்களுக்கு முன்னால் வைத்தான்.

ஜெயந்தி காபி கோப்பையைக் கையிலெடுத்துக் கொள்ளப் போனபொழுது அவன் தடுத்தான். அந்த கப்பில் ஸ்பூனால் சர்க்கரைப்பையைப் போட்டுக் கலக்கினான். அந்த வேலையை மிக விருப்பதோடு செய்தாற் போல இருந்தது. பிறகு அக்கோப்பையை ஜெயந்தியிடம் தந்தான். அவன் தன் கோப்பையைக் கையிலெடுத்துக் கொள்ளப் போன பொழுது ஜெயந்தி தடுத்தாள். தான் சர்க்கரையைக் கலந்து அவனுக்குத் தந்தாள். இருவரும் குடித்துக் கொண்டிருக்கையில் ஜெயந்தி கேட்டாள்.

"சிறுவயதில் நாம்ப எங்கள் வீட்டு வராந்தாப் படியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது என்ன சொல்லுவீங்கள் தெரியுமா?" என்றாள் அவனுக்கு அது ஞாபகமே இருக்காது என்ற பெருமையுடன்.

அவன் தலையாட்டினான்.

"என்ன? சொல்லுங்கள் பார்ப்போம்." என்றாள்.

"நாம்ப உட்கார்ந்து கொண்டிருக்கும் டயத்தில் வானத்தில் விமானம் பறந்து கொண்டிருக்கும். அதைக் காட்டி, —நான் பெரியவனான பிறகு உன்னை அதில் அழைத்துக் கொண்டு போவேன் என்று சொல்லுவேன்."

அவள் ஒரு எழுத்தைக்கூட மறந்து விடாமல் அந்த வார்த்தைகளைச் சொன்னதைக் கேட்டு ஜெயந்தியின் கண்கள் கசிந்துவிட்டன.

"நீங்கள் மறந்து போய் விடாதது எவ்வளவு ஆச்சரியம்" என்றாள்.

"நீயும் மறந்து போகாமலிருப்பது எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது" என்றான் அவன்.

"அந்த நாட்கள் எவ்வளவு நன்றாய் இருந்தன!' என்றாள்.

"ஆமாம். நான் எங்க தாத்தா இறந்துவிட்ட பிறகு அந்த ஊருக்குப் போவதை விட்டுவிட்டாலும் அந்த ஞாபகங்கள் இன்னும் என் ஞாபகத்தில் அப்படியே நிலைத்துப் போய்விட்டன. அந்த ஊரைச் சுற்றிலும் இருக்கும் வாழைத் தோட்டங்களின் பச்சைப் பசேல் என்ற பசுமை, தேங்காய் சூவியல்கள், வீதிக்கு இரு பக்கங்களிலும் இருக்கும் கால்வாய்கள்! ஆஹா! அந்தக் காற்றும், அந்தச் சூழ்நிலையுமே வேறு!" என்றான் அவன் கண்களை மூடிக் கொண்டே.

ஜெயந்தி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க சந்தோஷம் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

"என்னை உங்களுக்கு எப்பொழுது அடையாளம் தெரிந்தது?"

அவன் கண்களைத் திறந்தான்.

"நீ மாதவிக்காகப் புடவைகளைக் கொண்டு வந்து எங்கள் வீட்டில் தந்துவிட்டுப் போனபொழுது, என்

நண்பன் வந்தான். அவன் உன்னைப்பற்றி ஏதோ உளறினான். அவனுக்கு உன்னைத் தெரியுமாம். பேச்சு வாக்கில் உங்கள் அண்ணிக்கு அவன் தூரத்துச் சொந்தம் என்று தெரிந்தது. எதேச்சையாய் உங்கள் அண்ணனின் பெயரையும் ஊரையும் சொன்னான்.''

ஜெயந்தியின் கண்கள் தாழ்ந்தன.

''அப்பொழுதே நீ இன்னார் என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''சொல்ல முயன்றேன். ஆனால் சமயம் கிடைக்கவில்லை. ஒரு முறை வந்தபொழுது உங்கள் வீட்டுக்காரர் புராணம் பாடிக் கொண்டிருந்தார். அது சந்தர்ப்பம் இல்லை என்றெண்ணிக் கொண்டேன். இன்னொரு தடவை நீ ஏதோ தொல்லையில் ஆழ்ந்து போயிருந்தாய். நீ என் பரிச்சியத்தை வளர்த்துக் கொள்ள விரும்பவேயில்லையோ என்று நினைத்தேன். நீ இன்னார் என்று தெரிந்துதான் அவ்வளவு உரிமையை எடுத்துக் கொண்டு எக்ஸிபிஷனில் புடவைகளை வைக்கச் சொல்லி உன்னை பலவந்தம் பண்ணினேன். ஆனால் நீ என் உரிமையை சந்தேகம் படுகிறாய் என்று புரிந்தது... இன்னும் கொஞ்ச நாட்கள் அழவைக்கலாம் என்றெண்ணினேன்.''

''ஓ காட்'' ஜெயந்தி கண்களை மூடிக் கொண்டாள். அவன் 'ஜெயந்தி' என்று விளித்ததற்குத் தான் கோபங் கொண்டது நினைவிற்கு வந்தது. அதற்குள் சர்வர் பில்லைக் கொண்டு வந்தான். சித்தார்த்தன் பில்லைக் கட்டினான்.

''போகலாமா?'' என்றான்.

ஜெயந்தி எழுந்திருந்தாள்.

இருவரும் வெளியே வந்து கொண்டிருந்த பொழுது பாக்கியத்தம்மாள் இரண்டு மூன்று பேர்களுடன் உள்ளே வந்து கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

''சித்தார்த்தா'' என்றாள்.

''காபி குடித்துவிட்டுப் போகிறோம்'' என்றான் சித்தார்த்தன்.

அவள் ஜெயந்தியை ஏறயிறங்கப் பார்த்தாள். அப் பார்வையின் அர்த்தம் ஜெயந்திக்கு நன்றாகவே புரிந்தது.

இருவரும் காருக்கருகில் வந்தார்கள்.

சித்தார்த்தன் காரின் முன் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான் ஜெயந்திக்காக.

ஜெயந்தி தயங்கினாள்.

''இன்னும் ஏன் சந்தேகம்?'' என்றான்.

ஜெயந்தி மறு பேச்சுப் பேசாமல் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கார் புறப்பட்டுக் கொண்டிருக்கையில், பாக்கியத் தம்மாள் இந்த பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தது கண்ணாடி வழியாய் தெரிந்தது.

சித்தார்த்தன் ஓட்டிக் கொண்டிருந்தான்.

''இப்பொழுதே உன்னை வீட்டில் இறக்கி விடப் போவதில்லை. கொஞ்ச நேரம் காரில் சுற்றி வருவோம்.''

ஜெயந்தி தலையாட்டினாள்.

இருவரும் அதிகமாய் பேசிக் கொள்ளவில்லை. மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் ஒருவர்க்குப் பக்கத்தில் இன்னொருவர்! அந்த நெருக்கம் மிகச் சந்தோஷமாய் இருந்தது.

''ஜெயந்தி'' என்றான் அவன்.

''உம்'' என்றாள்.

''உங்கம்மா போய் விட்டாங்க என்று கேள்விப் பட்டேன். அண்ணன் உன்னோடு பேசுவதில்லைன்னு கேள்விப்பட்டேன். நிஜந்தானா?''

"நிஜந்தான்."

"ஏன்?"

"அது என் துரதிர்ஷ்டம்."

அதற்கு பிறகு அவன் பேசவில்லை.

"ஜெயந்தி" திரும்பவும் கூப்பிட்டான்.

"உம்"

"வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் பெரிய துரதிர்ஷ்டங்கள் வரும். அவைகளைத் தாங்கிக் கொள்வதற்கு நிறைய சக்தி வேண்டும். இல்லையா?"

ஜெயந்தி திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் சாலையைப் பார்த்தபடி ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் தாடை எலும்புகள் முறுக்கேறிக் கொண்டன. தாழ்ந்த குரலில்—

"அந்த வருத்தங்களை என்னால் புரிந்து கொள்ள முடியும் ஜெயந்தி. உண்மையைச் சொல்லப் போனால் எனக்கு தெரிந்த அளவிற்கு வேறு யாருக்குமே தெரியாதுன்னுதான் சொல்லணும்" ஜெயந்தி என்ன என்று கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. இருவரும் மௌனமாய் இருந்தார்கள் திரும்பவும். அவன் நேரத்தைப் பார்த்துவிட்டு— "தீரஜ் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்துவிடுவான், நாம் வீட்டிற்கு போகலாமா?" என்றான். ஜெயந்தி தலையாட்டினாள். அந்தச் சமயத்தில் அவன் தீரஜ்ஜைப் பற்றி யோசித்துப் பார்த்தது ஜெயந்திக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. இருவரும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததுமே தீரஜ் வந்தான். தீரஜ் சித்தார்த்தனிடம் ஓடி வந்து— "அங்கிள்! வாசலில் காரைப் பார்த்தேன். எனக்குத் தெரிந்துவிட்டது நீங்கள் வந்திருக்கீங்கன்னு" என்றான் கைகளை நீட்டிக் கொண்டே.

சித்தார்த்தன் கைகளை நீட்டி அவனைத் தூக்கிக் கொண்டான்.

சித்தார்த்தன் கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொண்டு, தீரஜ்ஜிடம் அவன் படிப்பைப் பற்றியும் விளையாட்டைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தான்.

"சமையல் பண்ணி விடுகிறேன். சாப்பிட்டுவிட்டுப் போங்கள்"— என்றாள் ஜெயந்தி.

"ஊஹூம்! வேண்டாம், போகிறேன்" என்றான் அவன் எழுந்திருந்து.

காருக்குள் உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணப் போனவன் ஜெயந்தியைப் பார்த்து— "ஜெயந்தி! சாப்பிடத் தங்கவில்லைன்னு கோபம் வந்து விட்டதா?" என்றான்.

ஜெயந்தி பதில் பேசவில்லை.

"இருட்டிய பிறகு என்னால் அதிக நேரம் எங்கேயுமே இருக்க முடியாது. இன்னொரு நாள் பகலில் வந்து சாப்பிடுகிறேன்." ஸ்டார்ட் பண்ணப் போனவன் நின்று ஜெயந்தியைப் பார்த்துக் கொண்டே "ஜெயந்தி! ஏன் என்று என்னை ஒரு நாளும் கேட்காதே! நாம்ப சிறு வயது சிநேகிதர்கள்! மறுபடியும் சந்தித்துக் கொண்டு விட்டோம். அந்தச் சந்தோஷம் அப்படியே இருக்கட்டும். என் கடந்த காலத்தைப் பற்றி நீ கேட்க வேண்டாம். நானும் உன் கடந்த காலத்தைப் பற்றி ஒன்றும் கேட்கமாட்டேன். சரிதானே?"

சரி என்பது போல தலையாட்டினாள்.

"தீரஜ்! பை" அவள் தீரஜ்ஜைப் பார்த்து கையை ஆட்டிவிட்டுப் போய் விட்டான்.

மகன் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்த பொழுது ஜெயந்திக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. 'என் கடந்த காலத்தைப் பற்றி நீ கேட்க

வேண்டாம். நானும் உன் கடந்த காலத்தைப் பற்றி கேட்க மாட்டேன்'—ஜெயந்திக்கு இந்த வார்த்தைகள் பெரிய பாரத்தை இறக்கிவிட்டாற்போல இருந்தன.

"மம்மி! டாடி எப்ப வருவார்?" தீரஜ் கேட்டான்.

"வந்து விடுவார் தீரஜ்."

"எப்பொழுதும் வந்துவிடுவார் வந்துவிடுவார் என் பாய். டாடி வரவே மாட்டார். இன்றைக்கு ராஜுவின் டாடி அமெரிக்காவிலிருந்து வந்தார். எவ்வளவு சாக்லெட்டுகளும் பொம்மைகளும் வாங்கி வந்தார் தெரியுமா? ராஜு எனக்கு இந்த சாக்லெட் தந்தான். அவனைக்கூட அமெரிக்காவுக்குக் கூட்டிட்டுப் போகப் போகிறார் அவங்க டாடி!"

"அப்படியா?" என்றாள். தீரஜ்ஜிடம் இந்த தொல்லை வேறு! பள்ளியில் யாராவது தந்தையைப் பற்றி ஏதாவது சொன்னால் அந்தச் செய்தியை ஜாக்கிரதையாய் வீட்டிற்குச் சுமந்து கொண்டு வருவான். அதைப் பற்றி மணிக்கணக்கில் பேசுவான். அவன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தவிப்பாள். அவள் சிவரஞ்சனின் போட்டோவைப் பார்த்தாள். அக்கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது.

* * *

மாதவி ஊரிலிருந்து வந்தாள். ஒரு வாரம் தங்கியிருந்தாள். ஜெயந்தியும் சித்தார்த்தனும் சிறு வயது சிநேகிதர்கள் என்று தெரிந்ததுமே கைக் கொட்டிக் கொண்டே— "வாட் எ குட் நியூஸ்" என்றாள். "அப்படியென்றால் இப்பொழுதே உங்களிருவருக்குமிடையே நான்தான் வேற்று மனுஷி போலிருக்கிறது" என்றாள். புடவைகள் விற்பனையானதால் ஜெயந்திக்குப் புதிய பாக்கிகள் தீர்ந்தன. சித்தார்த்தனைக் கூட கூப்பிட்டாள் ஜெயந்தி. எல்லோரு மாய் உட்கார்ந்து கொண்டு சிரித்துப் பேசிக் கொண்டு

சந்தோஷமாய் சாப்பிடும் பொழுது பல நாட்களுக்கு பிறகு மிக திருப்தியாய் சாப்பிட்டாற் போல இருந்தது ஜெயந்திக்கு.

ரங்கம்மாகூட மகிழ்ந்து போய்— "நீங்கள் எப் பொழுதுமே இப்படி இருக்கணும்மா. அந்த சித்தார்த்தன் ஐயா தெய்வம். அவர் காலில் விழுந்துக் கும்பிடணும் நாம்ப" என்றாள்.

மாதவி இருந்தவரை சுற்று வட்டாரத்தில் இருந்த இடங்களுக்கெல்லாம் சேர்ந்து போய்விட்டு வந்தார்கள். ஒருநாள் திருத்தணி, இன்னொரு நாள் மகாபலிபுரம் போய் விட்டு வந்தார்கள்.

சித்தார்த்தன் பெங்களூரில் நடக்கவிருக்கும் எக்ஸிபிஷனில் வைக்கப் போகும் புடவைகள் நவீன பிரிண்டிங்காய் இருக்க வேண்டும் என்றான். அவன் காஷ்மீர், ராஜஸ்தான் புடவைகளின் பிரிண்ட் போடுவதைப் பற்றி சொன்னான். அதைப்பற்றி சில புத்தகங்கள் இருப்பதாய் சொன்னான்.

அன்றைக்கு சித்தார்த்தன் புத்தகக் கடையில் காஷ்மீர்-ராஜஸ்தான் புடவைகளை பிரிண்ட் பண்ணும் விதத்தைப் பற்றி இருந்த புத்தகங்களை வாங்கி கொண்டு பில்லை கொடுத்துவிட்டு வெளியே வந்த பொழுது, ஜெயந்தி அங்கே வந்தாள். அவள் கையில் புத்தகக் கட்டு இருந்தது. சித்தார்த்தனைப் பார்த்ததுமே ஜெயந்தியின் முகம் ஒரு வினாடி வெலவெலத்து விட்டது.

"அழகாயிருக்கு! ஒருத்தருக்குத் தெரியாமல் இன்னொருத்தர் கடைக்கு வந்திருக்கிறோம். புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து உன்னை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்ற என் முயற்சி தோல்வியடைந்துவிட்டது, ஜெயந்தி அந்த புத்தகங்களை திருப்பிக் கொடுத்து விடு. நான் உனக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கி விட்டேன்" என்றான்.

ஜெயந்தியின் கையிலிருந்த பருமனான புத்தகங்களைப் பார்த்துவிட்டு— "எனக்கு இரண்டே புத்தகங்கள்தானே கிடைத்தன! இதென்ன உன்னிடம் இவ்வளவு பருமனான புத்தகம் இருக்கிறது. எங்கே காட்டு பார்க்கலாம்." என்றான் கையை நீட்டி.

ஜெயந்தி சரேலென்று பின்னுக்கு நகர்ந்து கொண்டு தொலைவில் போய் நின்றாள்.

"இது... இது" என்றாள் தடுமாறியபடி.

"என்ன இது?" ஜெயந்தியின் முகத்தோற்றத்தில் தென் பட்ட மாறுபாட்டை கவனித்தான் அவன்.

"இது..."

அதற்குள் சித்தார்த்தன் கையிலிருந்த புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். அவன் தலை சுற்றியது. "மை காட்! 'ஸ்டார் ஃபேமிலி!' 'கெலாக்ஸி இன் தி ஸ்கை', 'ரேர் கோ மெட்ஸ்', சித்தார்த்தன் குழப்பத்துடன் நிமிர்ந்து, "மை காட்! இதெல்லாம் பூகோள புத்தகங்கள். இதெல்லாம் உனக்கு எதற்கு?" என்றான்.

ஜெயந்தி தடுமாறியபடி— "இது எனக்கு இல்லை. என் ஃபிரெண்டிற்கு" என்று சொன்னாள்.

"யார் அந்த ஃபிரெண்ட்!"

ஜெயந்தி பதில் பேசவில்லை. அப்புத்தகத்தை அழுத்த மாய் பிடித்துக் கொண்டாள். அவன் ஜெயந்தியை பார்த்துக் கொண்டிருந்தான்.

"சொல்லக் கூடாதா? ரகசியமா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

ஜெயந்தி கௌண்டரிடம் போய் பில்லைக் கட்டினாள். கைப்பையிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்து பில்லைக் கட்டி யதை சித்தார்த்தன் பார்த்தான். ஜெயந்தி அந்த புத்தகப்

பாக்கெட்டை வாங்கிக் கொண்டு மார்போடழுத்திக் கொண்டாள்—மிகப் பிரியமான பொருளைப் போல.

"நான் தூக்கிக் கொண்டு வரேன், அதை இப்படிக் கொடு!" என்றான் சித்தார்த்தன்.

"வேண்டாம்" என்றாள் அவள். அதை இன்னும் மார்போடழுத்திக் கொண்டே.

இருவரும் காரில் வீட்டிற்கு வந்தார்கள்.

"மம்மீ! டார்ஜான் சினிமா வந்திருக்கு மம்மீ, நாம்ப போகலாம்" என்றான் தீரஜ்.

"வேண்டாம் தீரஜ். இன்னொரு தடவை வந்தால் போகலாம். இப்பொழுது என்னிடம் பணம் இல்லை."

சித்தார்த்தன் இந்த வார்த்தைகளைக் கேட்டான். நிமிஷத்திற்கு முன்னால் ஐநூறு ரூபாய்களை செலவழித்து அந்த புத்தகங்களை வாங்கினாள். யார் அந்த ஃபிரெண்ட்! ஜெயந்திக்கு சொல்ல விருப்பமில்லை. இந்த யோசனை எவ்வளவு கசப்பானது! ஜெயந்திக்கு ஃபிரெண்டுகள் இருக்க லாம். அதில் தப்பு ஒன்றுமில்லையே! ஆச்சரியப்படக்கூடிய விஷயம் கூட இல்லைதான்.

தீரஜ் வந்து சித்தார்த்தனுக்கருகில் உட்கார்ந்து கொண்டான். "பாருங்க அங்கிள்! அம்மா சினிமாவுக்குப் போகலாம் என்றால் பணம் இல்லை என்கிறாங்க. எப் பொழுதும் இப்படியேதான்! எதைக் கேட்டாலும் பணம் இல்லை, பணம் இல்லை என்கிறாங்க. ஐஸ்கிரீம் சாப்பிடு கிறேன் என்று சொன்னால் கூட இப்படியேதான்"- என்றான்.

"தீரஜ்! உனக்கு என்ன வேண்டுமென்றாலும் என்னைக் கேளு! என்னிடம் நிறைய பணம் இருக்கிறது. மம்மியைக் கேட்காதே, உண்மையிலேயே மம்மியிடம் இல்லையோ என்னவோ?" என்று சொல்லிக் கொண்டே மேஜை

மேலிருந்த பேனாவை எடுத்து அங்கிருந்த காகிதத்தில் கிறுக்கப் போனான்.

அதற்குள் ஜெயந்தி ஓட்டமாய் ஓடிவந்து "சித்தார்த்தா! அந்த பேனாவைத் தொட வேண்டாம்." என்று கத்திக் கொண்டே வந்து, சரேலென்று அவன் கையிலிருந்த பேனாவைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள்.

"என்னவாச்சு அந்த பேனாவுக்கு?" அவன் வியப்படைந்தவனாய் பார்த்தான்.

"இந்தப் பேனாவா! இந்தப் பேனா..."- ஜெயந்தி இரு கைகளாலும் அப் பேனாவைப் பிடித்துக் கொண்டு மார்போடழுத்திக் கொண்டாள். "இந்த பேனாவை என்னைத் தவிர யாருமே பயன்படுத்தக் கூடாது."

"அதென்ன ஸ்பெஷல்?" அவன் ஆர்வம் தாங்காமல் கேட்டான்.

ஜெயந்தி ஒரு விநாடி பதில் சொல்ல முடியாதவளாய் பார்த்தாள்.

"ஒன்றும் எண்ணிக் கொள்ள வேண்டாம். இந்த பேனாவின் மீது எனக்கு ரொம்பவும் சென்டிமென்ட், நான் வேறு பேனாவைத் தரேன்"- என்று மளமள வென்று போய் வேறிடத்தில் டிராயரில் இருந்த பால்பென்னைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவன் அந்தப் பேனாவையும் ஜெயந்தியையும் மாறி மாறிப் பார்த்தான். ஜெயந்தி அங்கிருந்து போய்விட்டாள். "அங்கிள்! மம்மி அந்த பேனாவில்தான் தன் ஃரெண்டுக்கு கடிதம் எழுதுவாங்க, நான்கூட அதைத் தொடக்கூடாது" என்றான்.

மறுநாள் சித்தார்த்தன் காரில் வந்து கொண்டிருந்த பொழுது, தெருக்கோடியில் இருந்த போஸ்ட் பாக்ஸில் கடிதத்தைப் போட்டுக் கொண்டிருந்த ஜெயந்தியைக் கண்டான்.

தொலைவிலிருந்து ஜெயந்தியைக் கண்ட சித்தார்த்தன் காரை நிறுத்தினான். ஜெயந்தி போஸ்ட் பாக்ஸிற்குள் கடிதத்தைப் போடுவதற்கு முன்னால் விலாசத்தை சரி பார்த்துக் கொண்டதும், பிறகு அதை உதட்டில் வைத்து விட்டு மெதுவாய் பாக்ஸிற்குள் போட்டதும் கண்ணில் பட்டது. சித்தார்த்தன் அவளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி திரும்பும்பொழுது சித்தார்த்தன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

"ஓ, நீங்களா?" என்றாள்.

அவன் கண்கள் ஜெயந்தியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தன.

"யாருக்கு அவ்வளவு பிரியமான கடிதம்?"

"பிரியமான கடிதமா?"

"அதை நீ போஸ்ட் பண்ணுகிற விதத்தைப் பார்த்தால் அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது."

ஜெயந்தி சிரித்தாள். "நீங்கள் பலே ஆள்தான்! நிறைய அர்த்தங்களை உருவாக்கிக் கொள்வீங்க" என்றாள். அச் சிரிப்பில் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிரித்துக்கொண்டே மழுப்பினாற்போல இருந்தது.

இருவரும் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் சித்தார்த்தன் கேட்டான்.

"ஜெயந்தி! ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லுவாயா?"

"என்ன?"

"நீ இவ்வளவு தூரம் மறைத்து மறைத்து வைத்துக் கொண்டிருக்கிற உன் பிரெண்டின் விவரம் எனக்குத் தேவையில்லை. நான் கேட்கவில்லை. ஆனால். ஒன்று மட்டும் சொல்லு. அவனுக்குப் பிறகு நானா? அல்லது

எனக்குப் பிறகு அவனா? எங்களிருவரில் உன் வாழ்க்கையில் யாருக்கு முதலிடம்?''

''தெரிந்து கொண்டு என்ன செய்வீர்கள்?''

''என்னுடையது இரண்டாவது ஸ்தானம் என்று தெரிந்தால் நான் போய் விடுகிறேன்.

''ஏனென்றால் எல்லா விஷயத்திலும் முதலாவதாய் இருப்பது எனக்குப் பழக்கம். இரண்டாவது இடத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.''

ஜெயந்தி ஒரு வினாடி யோசித்தாள்.

''இதில் ஒருத்தர் முதலாவது, இன்னொருத்தர் இரண்டாவது என்ற பேச்சிற்கே இடமில்லை. அவங்கவங்க ஸ்தானம் அவங்கவங்களுக்கு!''

''அதெப்படி முடியும்?''

''ஏன் முடியாது? தீரஜ் இருக்கிறான். தீரஜ் என்றால் எனக்கு உயிர். அதற்காக உங்கள் மீது குறைந்த உணர்ச்சி இருப்பதாய் சொல்ல முடியுமா? இந்த விஷயம் கூட அப்படியேதான். உங்களிருவருக்கும் சமானமோ, போட்டியோ கிடையாது. அவங்கவங்க முக்கியத்துவம் அவங்கவங்களுக்கு.''

சித்தார்த்தன் மௌனமாய் இருந்தான் கொஞ்ச நேரம். பிறகு பெருமூச்செறிந்துவிட்டு— ''பெண் ஒருத்தியால்தான் இப்படிப் பேசமுடியும் ஜெயந்தி! ஆணால் இப்படிப் பேசமுடியாது. அவன் விருப்பம் ஏதோ ஒரு இடத்தில்தான் இருக்கும். ஆனால் பெண் அவ்வாறு இல்லை.''

''நான் ஒப்புக் கொள்கிறேன். ஏன் என்றால் ஆணை விட பெண்ணுக்கு அன்பு செலுத்தும் உள்ளம் அதிகமாதலால் பொறுப்பின் பாரத்தை ஆணைவிட அதிகமாய் சுமப்பதால்...''

''நேரே வார்த்தையில் சொல்லு. உன் விருப்பத்திற்கு அல்லலை தரும் ஆளாயிருக்கும் அந்த நபர் யார்? ஆணா, பெண்ணா?''

''தொல்லை மாட்டேன். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்தால் உங்களைவிட்டு தொலைவிற்குப் போய் விடுவேன்'' என்றாள் ஜெயந்தி.

அக்குரல் மிக உறுதியாய், சொன்னதைச் செய்து காட்டி விடுவேன் என்பது போல இருந்தது. அதற்குள் வீடு வந்து சேர்ந்துவிட்டதால் ஜெயந்தி இறங்கி உள்ளே போய் விட்டாள். சித்தார்த்தன் உள்ளே வரவில்லை, போய் விட்டான்.

* * *

கோகுல் சம்பவம் நடந்து பத்து நாட்கள் ஆகியிருக்கும். சித்தார்த்தன் அதற்குப் பிறகு ஜெயந்தியின் கண்களில் படவேயில்லை. பெங்களூருக்குப் போகவேண்டும் என்றும், அங்கே நடக்கவிருக்கும் எக்ஸிபிஷனில் அவள் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தானே, என்னவாகியிருக்கும் அவனுக்கு? அவனுக்கு அவளால் ஏதாவது வருத்தம் ஏற்பட்டிருக்குமா? அவன் அவளுக்கு உதவி பண்ணினான். அவளால் அவனுக்கு வருத்தம் ஏற்படக் கூடாது.

ஜெயந்தி அன்று மாலையில் சித்தார்த்தனின் வீட்டிற்குப் புறப்பட்டாள். ஒருமுறை அவனைச் சந்தித்து, நேருக்கு நேராய் விஷயத்தைக் கேட்டால் மனம் நிம்மதியாய் இருக்கும். பிரிந்து போனால் மனதை நிர்மலமாய் வைத்துக் கொண்டு பிரிந்து போகவேண்டுமே தவிர, ஒருவர்பால் இன்னொருவருக்கு தப்பெண்ணம் மட்டும் இருக்கக்கூடாது...

அவள் புறப்பட்ட பஸ் ஏதோ கோளாறினால் பாதியில் நின்றுவிட்டது. பயணிகள் எல்லோரும் இறங்கிவிட்டார்கள்

வேறு பஸ்ஸிற்காக காத்திருக்கத் தொடங்கினார்கள். பஸ் வந்தது. ஆனால் இடம் கிடைக்கவில்லை. அவள் பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு ஒரு வழியாய் சித்தார்த் தனின் வீட்டிற்கு வந்து சேர்ந்த பொழுது இருட்டி வெகு நேரமாகிவிட்டது. ஜெயந்தி காலிங்பெல்லை அழுத்திய துமே வேலைக்காரப் பையன் வந்து கதவைத் திறந்தான். ஜெயந்தியைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். ''ஐயா இல்லீங்க'' என்றான்.

ஜெயந்தி பெருமூச்செறிந்தாள்.

''எப்பொழுது வருவார் என்று தெரியுமா?'' கேட்டாள்.

''இன்றிரவு வரமாட்டாருங்க.''

இருட்டி வெகுநேரமாகிவிட்டது. அத்துடன் அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

''அப்படியா? எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணுவாயா?'' கேட்டாள் அப்பையனை.

''என்ன, சொல்லுங்கள்.''

''கொஞ்சம் போய் ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு வா.''

''நானா?''

''ஆமாம். ஏனென்றால் இங்கே சீக்கிரத்தில் ஆட்டோ கிடைக்காது. கொஞ்சம் பிடித்துக் கொண்டு வருகிறாயா?''

ஜெயந்தி கேட்ட விதத்தைப் பார்த்து அவனால் மறுக்க முடியவில்லை.

''நீங்கள் இங்கேயே நின்னுட்டிருங்கள்''— என்றான் கதவைச் சாத்திவிட்டு.

அவன் போனான்

ஜெயந்திக்கு அவன் ஜாக்கிரதையைப் பார்த்துச் சிரிப்பு வந்தது. நல்ல வேலைக்காரன்! வீட்டு விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதைகளை எடுத்துக் கொள்வான் போலிருக் கிறது. அவள் அந்த வீட்டிலிருந்து எந்த சாமானையாவது திருடிக் கொண்டு போய்விடுவாளோ என்று சந்தேகப் படுகிறான் போலும்!

ஜெயந்தி கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

டிராயிங் ரூமில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள் அறையில் மங்கலான விளக்கு எரிந்து கொண் டிருந்தது. அறைக் கதவு சாத்தியிருந்தது.

ஜெயந்தி அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து பக்கத் தில் இருந்த புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந் தாள்.

அதற்குள் எங்கிருந்தோ ஏதோ சப்தம் கேட்டது!

ஜெயந்தி முதலில் அதைத் தன் பிரம்மை என் றெண்ணிக் கொண்டாள். திரும்பவும் கேட்டது. அவள் காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டாள். சந்தேகமில்லை! யாருடைய முனகல் சப்தமோ அது! மிகத் துன்பத்தை அடக்கிக் கொண்டிருந்தாற்போல, பற்களைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருந்தாற்போல கேட்டது! தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

ஜெயந்தி கையிலிருந்த புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு எழுந்திருந்தாள்.

மேலும் கவனமாய் கேட்டபொழுது அந்த முனகல் சப்தம் மூடியிருந்த அறைக்குள்ளிருந்து வந்தாற்போல இருந்தது. ஜெயந்தி அவ்வறையை நோக்கிப் போனாள். கண்ணாடி கதவுகளுக்குப் பின்னால் திரைச்சீலைகள் இருந்தன! நடுவில் இரண்டாகப் பிரிந்திருந்த அத்திரைச்

சீலைகளின் சந்து வழியாய் உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்து திக்பிரம்மை அடைந்து விட்டாள்.

உள்ளே சித்தார்த்தன் நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். கைகளைப் பின்னுக்குச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது. அந்த முனகல் சப்தம் அவனிடமிருந்துதான் வந்திருக்கிறது. அவன் அந்த கட்டுக்களை விடுவித்துக் கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருந்தான்.

சிலையாய் நின்றுவிட்ட ஜெயந்தியின் கண் முன்னாடி பல காட்சிகள் மின்னலாய் நகர்ந்தன. அந்த வேலக்காரப் பையனா சித்தார்த்தனை இவ்வாறு கட்டிப் போட்டிருப்பான்.

இந்தச் சமயத்தில் இங்கே வரவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது தெய்வத்தின் சங்கல்பந்தான். அச்சிறுவன் சித்தார்த்தன் வீட்டில் இல்லை என்று சொன்னான். அவளை வெளியிலேயே இருக்கும்படியும் உள்ளே வரவேண்டாம் என்றும் மறைமுகமாய் சொன்னான். அர்த்தம் இதுதானா? அவள் வராமலிருந்தால் எவ்வளவு ஆபத்தாகி விட்டிருக்கும்!

ஜெயந்தி மளமளவென்று அறைக் கதவைத் திறந்தாள்.

''சித்தார்த்தா! சித்தார்த்தா'' அவள் ஓடி வந்து அவன் கைகளுக்குக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்தாள். வாயில் திணித்திருந்த துணியை எடுத்தாள்.

''நான் வராமலிருந்திருந்தால் எவ்வளவு ஆபத்து நிகழ்ந்திருக்கும்! இந்த வேலைக்காரப்பையன்... அந்த ராஸ்கல்—'' என்று சொல்லிக் கொண்டே போனாள் ஜெயந்தி.

கட்டுக்கள் அவிழ்ந்ததுமே சித்தார்த்தன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். அவன் உடல் விறைப்பாயிற்று.

ஜெயந்தியைப் பார்த்ததுமே அவன் பற்களை நறநறத்தான்.

அவன் கைகள் வந்து ஜெயந்தியின் தோள்களை அழுத்தமாய் பிடித்துக் கொண்டன.

''யூ டெவில்! யூ ப்ளடி உமன்! யூ ஸ்னேக்! யூ பிச்—ஐவில் கில் யூ. உன் தலையைப் பிளந்து விடுகிறேன் பார். உன்னைக் கொல்வதற்கு முன்னால் நீ ராதாவுக்கு விதித்த தண்டனையை உனக்கு நான் விதித்துவிடுகிறேன்.''

அவன் முகம் ஜெயந்தியின் முகத்தின் மீது படிந்தது.

அவன் ஜெயந்தியின் கன்னத்தைக் கடித்தான்.

ஜெயந்தி வீலென்று அலறிக் கொண்டே முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவன் பற்களின் பிடி தவறி ஜெயந்தியின் தோளில் கடிபட்டது.

எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த விபரீதத்தால் வாயடைத்துப் போய்விட்ட ஜெயந்தி அவன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளப் போனாள். ஆனால் அது உடும்புப் பிடியாய் முறுக்கேறிக் கொண்டிருந்தது. அவன் கண்கள் உன்மத்தமாய் இருந்தன.

ஜெயந்தியை அவன் கட்டிலை நோக்கி இழுத்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி தப்பித்துக் கொண்ட பொழுது பிடித்து சுவற்றோடு அழுத்தினான். அவள் கீழே விழுந்தாள். அவன் அவள் மேல் விழுந்தான் ஜெயந்தியின் தலையைத் தரையில் ஓங்கி படீர் படீரென்று அடிக்கத் தொடங்கினான். அவன் கைகள் ஜெயந்தியின் தொண்டையை அழுத்திக் கொண்டிருந்தன. அவளுக்கு மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. அவள் அவன் கையில் தோற்றுப் போய்க் கொண்டிருந்தாள். அது ஒரு வெறி பிடித்த மிருக பலம்!

அதற்குள் அறைக்குள் வேலைக்காரப் பையன் வந்தான். வந்ததுமே சித்தார்த்தனைப் பிடித்து ஜெயந்தியிடமிருந்து இழுத்தான். ஒரு வினாடி அவ்விருவரும் திமிறிக் கொண்டிருந்தார்கள். வேலைக்காரப் பையன் அரும்பாடுபட்டு சித்தார்த்தனின் இரு கைகளையும் பின்னுக்கு இழுத்துப் பிடித்துக் கொண்டான். ஜெயந்தி சரேலென்று தரையிலிருந்து எழுந்திருந்தாள்.

"அம்மா! சீக்கிரமாய் அந்தக் கயிற்றை இப்படிக் கொண்டாங்க" என்று அவசரப்படுத்தினான்.

ஜெயந்தி கொண்டு வந்து கொடுத்தாள். வேலைக்காரன் முனகிக் கொண்டும், கத்திக் கொண்டுமிருந்த சித்தார்த்தனை கட்டிலோடு சேர்த்துக் கட்டிவிட்டான்.

"யூ பிச்! ஐ வில் கில் யூ! உன்னை விடப் போவதில்லை" கத்திக் கொண்டேயிருக்கையில் வேலைக்காரப் பையன் அரும்பாடுபட்டு ஒரு வழியாய் அவன் வாயைச் சுற்றிலும் துணியால் இழுத்துக் கட்டிவிட்டான்.

அவன் கட்டிலோடு சேர்த்துக் கட்டப்பட்ட மிருகத்தைப் போல திமிறிக்கொண்டேயிருந்தான். ஜெயந்தியைப் பார்த்துக் கொண்டிருந்த அக்கண்களில் அனல் பறந்தது.

ஜெயந்தி சித்தார்த்தனின் பற்கள் அழுந்தியதால் வீங்கிப் போய்விட்டிருந்த கன்னத்தைத் தடவிக் கொண்டாள்.

பையன் அறைக்கதவைச் சாத்திவிட்டு தலையிலடித்துக் கொண்டே சொன்னான்— "அம்மா! உங்களைத் தான் வீட்டிற்குள்ளே போகாதீங்கன்னு சொன்னேனே, ஏம்மா போனீங்க?"

"எனக்கு... எனக்கு...தெரியாது" என்றாள்.

"எங்க ஐயா ராத்திரி ஆகிவிட்டால் மனுஷராய் இருக்க மாட்டாருங்க. நான்தான் அவரைக் அப்படிக் கட்டிப் போட்டேன். அவர் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் இவ்வாறு கட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் வீட்டையெல்லாம் துவம்சம் பண்ணிவிடுவார். வெளியே ஓடிப்போய் கண்ணில் தென்பட்ட பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்து கழுத்தைத் திருகத் தொடங்கி விடுவார்"

ஜெயந்தி நலிந்து போய் விட்டிருந்த தலையைப் பிடித்துக் கொண்டாள்.

ஜெயந்தியின் மனதில் எப்பொழுதோ மாதவி எழுதியிருந்த கடிதம் மிதந்தது. அவள் இவ்வாறு வந்தது தவறுதான். மாதவி அவளை ஒருமுறை எச்சரித்திருந்தாள். அவள்தான் அதைப் பற்றியே மறந்து போய்விட்டாள்.

பகலில் அவனை பார்த்த யாருமே இரவில் அவன் இந்த மாதிரி இருப்பான் என்று நம்பமாட்டார்கள்.

"அம்மா, ஆட்டோ கொண்டு வந்திருக்கிறேன்—" என்றான் வேலைக்காரப் பையன்.

ஜெயந்தி மெதுவாய் அங்கிருந்து நகர்ந்தாள். பையன் ஆட்டோ வரைக்கும் வந்து வழியனுப்பிவிட்டு உள்ளே போனான்.

* * *

மறு நாள் மாலை.

நீரஜ் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தான்.

ஜெயந்தி அவனுக்கு டிபன் தந்துவிட்டு உடை மாற்றி, முகம் கழுவி, தலை வாரிக் கொண்டிருந்தாள். பொன்னையன் நீரஜ்ஜை விளையாட்டு மைதானத்திற்குக் கூட்டிச் செல்வதற்குத் தயாராயிருந்தான்.

"இருட்டுவதற்குள் வந்துவிடுங்கள்" மகனை எச்சரித்தாள், தலைவாரிக் கொண்டே.

அவள் தலைவாரிக் கொண்டே நிமிர்ந்து பார்த்த பொழுது அங்கே சித்தார்த்தன் நின்று கொண்டிருந்தான்.

அவன் எப்பொழுதும் போல கம்பீரமாய் நிமிர்ந்து நின்று கொண்டிருக்கவில்லை. கதவில் தோளைச் சாய்த்துக் கொண்டு நின்ற அவனிடம் ஏதோ தளர்ந்து போய் விட்டாற் போன்ற பலவீனம் தென்பட்டது.

தீரஜ்ஜிற்குத் தலைவாரிக் கொண்டிருந்த ஜெயந்தி ஒரு வினாடி அப்படியே நின்றுவிட்டாள்.

சித்தார்த்தன் ஜெயந்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கண்களில் வேதனை! அம்முகத்தில் தப்புப் பண்ணிவிட்ட சிறுவன் தாய்க்கு முன்னால் நின்றிருந்த ஆதரவில்லாத தன்மை தென்பட்டது.

தீரஜ் தாயின் கைகளை விடுவிடுத்துக் கொண்டே சித்தார்த்தனை நோக்கிக் ஓடினான்.

சித்தார்த்தன் தீரஜ்ஜைத் தூக்கிக் கொண்டான். தீரஜ் சித்தார்த்தனின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு— "நல்ல அங்கிளோனோ! கொஞ்ச நேரம் என்னை விடுங்க. நான் விளையாடிவிட்டு வரேன்." என்றான்.

சித்தார்த்தன் தீரஜ்ஜை இறக்கிவிட்டான்.

தீரஜ்ஜும் பொன்னையனும் போய்விட்டார்கள்.

ஜெயந்தி அவனை கவனிக்காதவளைப் போலவே தீரஜ்ஜின் சாமான்களை அடுக்கி வைக்கத் தொடங்கினாள்.

"ஜெயந்தி! ராத்திரி, ஏன் வந்தாய்?" அக்குரல் கேட்க முடியாமல் கேட்க நேர்ந்தாற்போல இருந்தது.

"நீங்களேதான் என்னை வரவழைத்து விட்டீங்க"— அவள் குரலைப் பார்த்தால் சாதாரணமாய் இருப்பதற்கு முயன்று கொண்டிருந்தாற்போல தோன்றிற்று.

"நானா?"

ஜெயந்தி சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆமாம். நீங்களேதான். தினமும் வருகிறவர் திடீரென்று வருவதை நிறுத்திக் கொண்டு விட்டீர்கள். போன் பண்ணியபோது இருந்து கொண்டே இல்லை என்று சொல்லி வீட்டீர்கள். என்னவாச்சு? நமக்கிடையே அவ்வளவு தூரம் நடக்கக்கூடாதது ஏதாவது நடந்து விட்டதா? நான் என்ன தப்புப் பண்ணி விட்டேன்? என்னால் உங்களுக்கென்ன வருத்தம் ஏற்பட்டுவிட்டது? அதை நேருக்கு நேராய் கேட்டுத் தெரிந்துக் கொண்டு விடலாம் என்றுதான் வந்தேன். வழியில் பஸ் கெட்டுப் போய் விட்டதால் நேரமாகிவிட்டது. நான் வேண்டு மென்றே நேரங்கழித்து வரவில்லை."

அவன் கையை நீட்டினான். "போதும்! போதும்! நிறுத்து. என்னை வேறெதுவும் சொல்லாதே! அவன் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டான். "ஜெயந்தி! என்னை மன்னித்து விடு. நேற்றிரவு நடந்தது நான் வேண்டுமென்றே செய்தது இல்லை. நான் முழு நினைவோடு உன்னிடம் அப்படி நடந்து கொள்ளவில்லை. என்னை மன்னித்துவிடு" அவன் குரல் நடுங்கிற்று. அது அதலபாதாளத்திற்குள் நழுவிப் போய்க் கொண்டிருந்தாற் போல இருந்தது. ஜெயந்தி சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டே எங்கே பார்த்தபடி— "நான் ஒன்றும் உங்களை தப்புச் சொல்லவில்லையே! நான் வந்ததுதான் தப்பு என்று நினைத்துக் கொண்டேன்."

அவன் நிமிர்ந்தான். அக்கண்களில் பச்சாதாபம், வெட்கம், எதுவும் பண்ணமுடியாத ஆதரவின்மை, எல்லாம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

"தயவு செய்து அப்படிச் சொல்லாதே! ப்ளீஸ்— தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் என்னால் உனக்கு அவமானம் ஏற்பட்டுவிட்டது. அதற்காக உன்னைக் காட்டிலும் நான்தான் அதிகமாய் வருத்தப்

படுகிறேன். நான் மிகவும் பலவீனமானவன். வியாதியால் பீடிக்கப்பட்டவன்.''

''உங்களைப் பார்த்த யாருமே அப்படி எண்ணிக் கொள்ள மாட்டாங்களே!''

''உடலளவில் என்னைப் பார்த்தால் யாருக்கும் சந்தேகம் வராது. என் மனதைப் பற்றி யாருக்குமே தெரியாது. நான் மனநோயால் பீடிக்கப்பட்டவன்.''

''என்னவாச்சு சித்தார்த்தா? அது வியாதி என்றால்— நீங்கள் பணம் படைத்தவர், உலகத்தில் நிறைய டாக்டர்கள் இருக்கிறார்கள். அவங்களில் யாராலுமே உங்களுக்கு உதவி பண்ண முடியவில்லையா?''

''இது டாக்டர்களால் குண்மடையக் கூடிய வியாதி இல்லை.''

''பின்னே?''

''இது ஒரு மனநோய். அதிலிருந்து எனக்கு விமோசனம் இல்லை.''

''என்னவாயிடுத்து? நான்...நான் தெரிந்து கொள்ளலாமா?''

''சொல்லாமல் இருக்க முடியவில்லை என்னால் ஜெயந்தி, என்னால் வாயால் சொல்ல முடியாது! இதோ காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். நீ படி. இதைப் படித்த பிறகு என்னை மன்னீப்பாயோ மறுப்பாயோ அதை நீயே முடிவெடுத்துக் கொள்.'' அவன் எழுந்து நின்று ஜேபியிலிருந்த காகிதத்தை எடுத்து அவ்விடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டான்.

ஜெயந்தி அதைப் பிரித்து பார்த்தாள். அதில் இவ்வாறு இருந்தது—

''ஜெயந்தி!

என் தாய் தந்தையைப் பற்றி உனக்குத் தெரியும். என் தங்கை ராதாவைப் பற்றியும் நீ அறிவாய். என்னைவிட பத்து வயது சிறியவள் அவள். எங்களுக்கு ராதாவின் மேல் அளவுக்கு மீறிய பாசம் இருந்து வந்தது. வளர்ந்து கல்லூரி படிப்பை முடித்துக் கொண்டேன். எங்கள் உறவினரின் திருமணத்திற்குப் போயிருந்தபொழுது எனக்கு ஒரு பெண்ணின் பரிச்சியம் ஏற்பட்டது. அவள் பெயர் சோபனா. அத்திருமணத்திற்கு பிறகு அந்தப் பெண் எங்கள் ஊருக்கு வந்தாள். உத்யோக முயற்சி என்றாள். அவளுக்குத் தாயும் தந்தையும் இருந்தார்கள். ஆனால் தந்தை குடும்பத்தை கவனித்துக் கொள்ள மாட்டாராம். வீட்டுப் பொறுப்பு முழுவதும் சோபானாவின் தலைமீது தான் இருந்ததாம். தம்பி, தங்கைகளின் நல்லது கெட்டதைப் பார்க்க வேண்டிய பொறுப்புகூட இந்தப் பெண்ணுடையதுதானாம். எனக்கு சோபனாவின் கஷ்டங்களைக் கேட்டபொழுது உண்மையிலேயே இரக்கம் ஏற்பட்டது. ஒரு பெண் இவ்வளவு குடும்ப பாரத்தைச் சுமந்து கொண்டிருப்பது விசேஷந்தான்.

சோபனாவுக்கு என் நண்பன் ஆனந்தனின் தந்தைக்குச் சொந்தமாய் இருந்த கம்பெனியில் வேலை வாங்கித் தந்தேன். சோபனா ஸ்டெனோவாதலால் சம்பளம் நிறையவே வந்து கொண்டிருந்தது. பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் பெண் ஒருத்தி தனியாய் வசிப்பது கஷ்டம். அதனால் சோபனா உறவினர்கள் யார் வீட்டிலோ தங்கியிருந்தாள். அவர்களின் மகன் ரமேஷ். சோபனா ஒருமுறை அவனை எனக்குப் பரிச்சியம் பண்ணி வைத்தாள். சோபனா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவாள். வேண்டாம் என்றாலும் கேட்டுக் கொள்ளாமல் ஆப்பிள்கள், பழங்கள், பிஸ்கெட்டுகள் எல்லாம் வாங்கிக் கொண்டு வருவாள். என் தாயிடம் மிகவும் வினயமாய் இருப்பாள். அம்மா இல்லாத சமயத்தில் என்னிடம்

உரிமையோடு நடந்து கொள்வாள். அப்புறமாய் மிகவும் பச்சாதாபப் பட்டுக்கொண்டு கடிதங்களை எழுதுவாள். நாளடைவில் சோபனா எனக்கு நெருக்கமாகத் தொடங்கி விட்டாள். எனக்கு எல்லா விதத்திலும் சோபனாவைப் பிடித்துவிட்டது. சோபனா படித்தவள். புத்திசாலி. நாலு பேர்களுடன் பழகத் தெரிந்தவள். அம்மாவுக்கும் பிடித்து விட்டது. என் தாய் தந்தையர் நான் சோபனாவை மணப் பதற்கு எந்த தடையும் சொல்லவில்லை. என் தாய் சோபனாவிடம் போய் என் குணநலன்கள், விருப்பு வெறுப்புகள் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னாள். எனக்காக அம்மா வீடு ஒன்றை வாங்கி அதில் தேவை யான சாமான்களை யெல்லாம் நிரப்பினாள்!

திருமணமானதுமே நாங்கள் அதில் குடியேறினோம். எங்களுக்கு வாழ்க்கை அமிர்த மயமாய் இருந்தது. எந்தக் குறையும் இல்லை. எனக்கு உத்யோகம் கிடைத்தது. சோபனாவின் நடவடிக்கை திருமணமான பிறகு நான் எதிர் பார்த்தாற்போல இல்லை. நான் முதலிரவு அன்றைக்கு சோபனாவின் கைவிரல்களில் சிவப்புக்கல் வைத்த மோதிரம் ஒன்றைப் போட்டேன். அந்த மோதிரத்தை கடைக்குப் போய் நானே சுயமாய் பார்த்து வாங்கிக் கொண்டு வந்தேன்.

ஒரு மாதம் கூட ஆகவில்லை. சோபனாவின் கையில் இருந்த மோதிரத்தைக் காணவில்லை. என்னவாயிற்று என்று கேட்டதற்கு 'தொலைந்து விட்டது' என்றாள். 'எப்படி?' என்று கேட்டதற்குச் சரியாய் பதில் சொல்ல வில்லை. என் மனம் ஏதோ போல் ஆகிவிட்டது. சோபனா அந்த மோதிரம் போய் விட்டதற்கு வருத்தப்படவில்லை. அதோடு கூட ''உங்களுக்கு மோதிரம் பெரிதா, நானா?'' என்று வேறு சண்டை போட்டாள். அதுவும் நிஜந்தானே! நான் ராஜியாகி விட்டேன்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் ஓட்டலுக்குப் போயிருந்தேன். அங்கே நண்பர்களுடன் சேர்ந்து ரமேஷ்

வந்திருந்தான். அவன் கையில் மோதிரம் இருந்தது. நான் அவனைப் பார்த்து, ''இது ஏது?'' என்று கேட்டேன். ''சோபனா பிறந்த நாள் பரிசாய் தந்தாள்'' என்றான்.

எனக்குத் தலை சுற்றிற்று.

வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகு சோபனாவை உலுக்கி எடுத்து விசாரித்தேன். அவள் சரியாய் பதில் சொல்ல வில்லை. வார்த்தைகளை வளர்த்துச் சண்டை போட்டு விட்டுப் பிறந்த வீட்டிற்கு போய்விட்டாள்.

அம்மா கோபித்துக் கொண்டதால் நானே போய் கெஞ்சி அழைத்துக் கொண்டு வந்தேன். அவள் தாயும் தந்தையும் என்னிடம் அவர்கள் பெண்ணைத் துன்புறுத்த வேண்டாம் என்று பிரசங்கம் செய்தார்கள்.

அவ்வாறு கெஞ்சி அழைத்து வந்ததுதான் எனக்கு ஒரு பெரிய தண்டனையாகிவிட்டது. மெல்ல மெல்ல சோப னாவின் நிஜகுணம் எனக்கு புரியத் தொடங்கிற்று. அவள் காட்டும் மரியாதை, அன்பு எல்லாம் வெறும் நடிப்பு! அவள் ஒரு ஊர்ச்சுற்றி. தனக்கு யாராவது வேண்டியிருந்தால் அவர்களை வார்த்தைகளால் மயக்கத்தில் ஆழ்த்தி விடுவதில் வல்லவள்.

எனக்கு பிற்பாடு இன்னொரு மிகக் கொடுமையான விஷயம் தெரிந்தது. திருமணமாவதற்கு முன்னால் சோபனா வேலைபண்ணிக் கொண்டிருந்த பொழுது ஆனந்தனின் தந்தை சோபனாவுக்கு ஒரு ஃபிளாட்டை வாங்கித் தந்திருந்தார். ஏன் தந்திருந்தார்? எதற்காக என்று துப்புத் துலக்கிய பொழுது, சோபனாவும் அவரும் சேர்ந்து விடுமுறைக்கு ஊர்களுக்குப் போவார்கள் என்று தெரிந்தது. ஆனந்தனின் தாய் நோயாளி. ஆனந்தன் ஒரு அப்பாவி. அவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. ஆனந்த னின் சித்தி யாரிடமோ புலம்பி, அது என் காது வரைக்கும் எட்டி விட்டது. என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் பெங்களூருக்குப் போய் அந்த ஓட்டலில் விசாரித்தபொழுது

தெரிந்துவிட்டது. அந்த ஓட்டல் ரெஜிஸ்தரில் அவர் மகளாய் ரெஜிஸ்தர் பண்ணியிருந்தார். எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. இதோடு ரமேஷின் சிநேகம் வேறு!

சோபனா பணத்திற்காக வறுமையில் இதை பண்ணியிருந்தால் கூட நான் மன்னித்திருப்பேனோ என்னவோ! ஆனால் அப்படியில்லை. சோபனா ஒரு ஊர்ச்சுற்றி. அவளுக்குப் புடவைகள் எப்படிப் புதியவைகளாய் வேண்டுமோ அப்படியேதான் ஆண்களும். எனக்கு இது புரியத் தொடங்கியதுமே தளர்ந்து விட்டேன். நான் ஒரு விபச்சாரியைத் திருமணம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று புரிந்தது. ஆண்களின் வாழ்க்கையில் அலட்சியமாய் ஆட்டம் ஆடிவிட்டு தனக்குத் தேவையானதை பெற்றுக்கொள்ளும் ஒரு மோகினி பிசாசை மணந்து கொண்டிருக்கிறேன் என்று புரிந்தது.

சோபனாவின் ஊர்ச் சுற்றும் விஷயம் மெல்ல மெல்ல வெளியே பரவத் தொடங்கியது. எங்கள் குடும்பத்தைப் பற்றிக் குசுகுசுக்கள் தொடங்கிவிட்டன. ராதாவுக்குச் சம்பந்தங்கள் வருவது கஷ்டமாகிவிட்டன.

ஒரு முறை சண்டை போட்ட பொழுது ராதாவின் பெயரை இழுத்துத் திட்டினாள். என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. நான் சோபனாவை அடித்து விட்டேன். ''உன்னைப் போன்றவர்களுக்கு ராதாவின் பெயரை எடுக்கக் கூட அருகதையில்லை'' என்றேன்.

இது சோபாவின் அகத்தைத் தூண்டிவிட்டது. ராதாவை சாமர்த்தியமாய் தம் வீட்டிற்கு வரவழைத்து ரமேஷ், அவனுடைய இரண்டு சிநேகிதர்களைக் கொண்டு ரேப் பண்ண செய்துவிட்டாள்.

ராதா செத்துப் போயிருப்பாள், ஆனால் ஒருவாறு பிழைத்துவிட்டாள். என்றுமே என்னை கடிந்து கொண்டிராத தாயும் தந்தையும் என்னை நன்றாய் திட்டித் தீர்த்து விட்டார்கள். தந்தை என்னை வீட்டைவிட்டு போ

என்று சொல்லி கத்தினார். நான் என் வீட்டிற்கு வந்தேன். சோபனா ஊருக்குப் போனாள். யாருடன் போயிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். அவளைப் பிடித்து உலுக்கி எடுக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் என்னை கட்டுப் படுத்திக் கொண்டேன். அவளை நான் பொறுத்துக் கொண்டிருந்தேன்.

அம்மா என் ஆபீசிற்கு போன் பண்ணினாள். என் மீது எந்த தப்பும் இல்லை என்று தந்தைக்குத் தான் நயமாய் எடுத்து சொல்லிவிட்டதாகவும் வரச் சொல்லியும் அழைத்தாள். நானும் தந்தையைப் பார்த்து ஒரு முறை பேசிவிட்டால் போதும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் அன்று மாலையே நான் அவர்கள் வீட்டிற்குப் போனேன். வீட்டில் தந்தை மட்டுமே தனியாய் இருந்தார். அவர் என்னை மன்னித்து விட்டார். நான் சந்தோஷத்தால் பொங்கிப் போய்விட்டேன்.

''இதில் உன் தப்பு எதுவும் இல்லை. இது நம்ப துரதிர்ஷ்டம். ஆவேசத்தால் உன்னைத் திட்டக் கூடாத வார்த்தைகளால் திட்டி விட்டேன்.''- என்று அவர் சொன்னதுமே சிறு பையனைப் போல அவரைக் கட்டிக்கொண்டு அழுது தீர்த்துவிட்டேன்.

''அம்மா எங்கே'' என்றேன்.

''உனக்காகவே போயிருக்கிறாள், சித்துவைக் கூட்டிட்டு வரேன்னுச் சொன்னாள். ராதா கூட போயிருக்கிறாள்'' என்றார் அவர். அவன் இங்கே வருவான் என்று தெரியாமல் அம்மா அங்கே போயிருக்கிறாள்!

அதற்குள் போன் மணி அடித்தது.

அப்பா எடுத்துவிட்டு, ''உனக்குதான்'' என்று தந்தார்.

நான் பேசினேன். வேலைக்காரப் பையன் பேசினான். ''வீட்டில் கெரஸினாயில் கொட்டி தீப்பற்றிக் கொண்டு

விட்டதாம். அறையெல்லாம் நெருப்பாம்'' அவன் அழுது கொண்டே சொன்னான்.

நானும் தந்தையும் ஓடிவந்தோம்.

அதற்குள் அக்கம்பக்கத்தார் கூடிவிட்டார்கள்.

அறைக் கதவை உடைத்தெறிந்தோம். உள்ளே தீக்கு நடுவே அம்மாவும் ராதாவும் உயிரோடு தகனமாகிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் நெருப்பணைக்கும் இஞ்சின் வந்துவிட்டது.

அம்மாவையும் ராதாவையும் ஆஸ்பத்திரில் சேர்த் தோம். அம்மாவின் உயிர் வழியிலேயே போய்விட்டது. ராதா உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாள்!

''ராதா இந்த விபத்து எப்படி நடந்ததும்மா?'' என் றேன்.

''அண்ணா! அண்ணிக்கும் அம்மாவுக்கும் சண்டை வந்தது. அண்ணி கெரஸினாயிலைக் கொண்டுவந்து எங்கள் மீது ஊற்றிவிட்டு தீக்குச்சியைக் கிழித்து எறிந்துவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போய்விட்டாள்'' என்றாள்.

போலீசார் வந்தார்கள். ராதாவால் பாதியைக்கூட திரும்பவும் சொல்ல முடியவில்லை. உயிர் போய்விட்டது.

தந்தை சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஷாக் அடித்துவிட்டது. படுத்துக் கொள்ள மாட்டார். பேசமாட்டார். அப்படியே உட்கார்ந் திருப்பார்.

நான் சோபனாவின் மீது கேசு போட்டேன். அதற்கு பலமான சார்ட்சி வேலைக்காரப் பையன்! அவன் கோர்ட்டில் எங்களுக்கு எதிர்ப்பதமாய் சாட்சி சொன் னான். எங்கம்மாவும் ராதாவும் சேர்ந்து சோபனாவைக் கொல்லப் பார்த்தார்களாம். அந்த விபத்தில் சோபனா தப்பித்துக் கொண்டுவிட்டாள். அவர்களே பலியாகி

விட்டார்களாம். நான் அவளை அடிக்கப் போனபொழுது ஜட்ஜ் கண்கள் சிவக்க உறுத்துப் பார்த்தார். சோபனா அழுது கொண்டே தன் குடித்தனம் ''திருமணம் ஆன திலிருந்தே இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது'' என்று சொன்னாள்.

பேப்பரில் 'சோபனாவுக்குத் தப்பிய வரதட்சணை மரணம்' என்று செய்திகள் வெளிவந்தன. சோபனா பேப்பர்காரர்களை நன்றாய் பிடித்துக் கொண்டிருந்தாள். என் போட்டோவைப் போட்டார்கள். என்னைத் திட்டிக் கடிதங்கள் வந்தன. அநியாயம் நிகழ்ந்தது எனக்கு. ஆனால் சோபனாவுக்கு எல்லோருடைய இரக்கமும்! ஒரு வாரத்திற்குள்ளாகவே தந்தையும் மாரடைப்பில் இறந்து விட்டார். ஒரே வாரத்தில் மூன்று பேரை இழந்து விட்ட துரதிர்ஷ்டக்காரன் நான். சோபனா விவாக ரத்திற்காக கேசு போட்டாள். தந்து விட்டேன். என் பணத்தில் பெரும் பங்கு அவளுக்குப் போய்விட்டது.

சோபனா ரமேஷை திருமணம் பண்ணிக் கொண் டாள். என் கையாலாகாதத் தனமும், சாமர்த்தியமில்லாத தன்மையும் சோபனாவை ஒன்றும் பண்ண முடியாமல் என் மனதை சித்திரவதைப் பண்ணத் தொடங்கிற்று. நான் ஒரு கோழை, கையாலாகாதவன் என்று என்னையே குத்திக் காட்டத் தொடங்கிற்று. இருட்டிவிட்டால் என்னால் இந்த அவஸ்தையைத் தாங்க முடியாமல் போய்விடும். என்னால் தனியாய் இருக்க முடியாது. ஒருவிதமான வெறி என்னைச் சூழ்ந்து கொண்டுவிடும். அந்தச் சமயத்தில் பெண் யாரா வது தென்பட்டுவிட்டால் நான் அவளைப் பிடித்துக் கொன்று போட்டுவிட வேண்டும் போல இருக்கும். அதனால்தான் என்னையே நான் கட்டிப் போட்டுக் கொள்ளத் தொடங்கினேன். அந்த சமயத்தில் என்னிஷ்டப் படி வெளியே சுற்றமுடியாது என்னால். என்னால் யாருக்கும் கெடுதல் ஏற்படாது. இந்த ரகசியம் என் சிநேகிதர்களுக்குகூட தெரியும். அதனால்தான் அவர்கள்

இருட்டி வெகு நேரமான பிறகு என்னிடம் இருக்க மாட்டார்கள். இரவு வந்துவிட்டால் எனக்கு நானே விதித்துக் கொள்ளும் இந்த பயங்கரமான தண்டனை என் வேலைக்காரனுக்குத் தெரியும். ஜெயந்தி! இதுதான் என் குறைபாடு! நான் ஒரு பைத்தியக்காரன்! பலவீன மானவன். நீ என்னை மன்னிப்பாயோ அல்லது என்னை வெறுத்து ஒதுக்குவாயோ தெரியாது. எல்லாம் உன் இஷ்டம்.

இப்படிக்கு
சித்தார்த்தன்''

ஜெயந்தி படித்து முடித்ததும் அவளையறியாமலேயே கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

சித்தார்த்தனுக்கு போன் பண்ணுவதற்காக மளமள வென்று செருப்பை மாட்டிக் கொண்டாள்! வராந்தாவில் இறங்கி வந்து கொண்டிருக்கும் பொழுது ஷெட கதவுகள் திறந்திருந்தன. ஜெயந்தி அவ்விடத்திற்கு வந்து கதவை இழுத்துச் சாத்தப் போனபொழுது, அங்கிருந்த பெஞ்சில் சித்தார்த்தன் உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பார்த் தாள்.

அவன் அடியுண்ட பூனைக் குட்டியைப் போல முழங் கால்களில் தலையைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந் தான். புலியைப் போல கம்பீரமாய் இருக்கும் சித்தார்த்த னிடம் தென்பட்ட இந்த தீனத் தோற்றமும், செய்வதறி யாத தன்மையும் ஜெயந்தியின் இதயத்தைக் கலக்கி விட்டன. ஒரு நிமிஷம் தடுமாறிவிட்டு உள்ளே வந்தாள்.

''சித்தார்த்தன்'' அழைத்தாள்.

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

ஜெயந்தி இனிமையாய், அழகாய் புன்முறுவல் பூத்தாள். அக்கண்களில் பொறுமை தெரிந்தது. சித்தார்த்தன் நம்ப மாட்டாதவனாய் பார்த்தான்.

''ஜெயந்தி! என் மீது உனக்குக் கோபம் இல்லையே?'' இல்லை என்று தலையாட்டினாள். பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டாள்.

அவன் ஒரு வினாடி ஜெயந்தியின் முகத்தை ஏற யிறங்கப் பார்த்தான்.

ஜெயந்தி முறுவலுடன்— ''சித்தார்த்தன்! நான் உங்கள் சிநேகிதி. சிநேகம் என்றால் புரிந்து கொண்டு நெருங்கி வருவது. தப்பாய் புரிந்து கொண்டு தூரமாகிப் போவது இல்லை.''

சித்தார்த்தன் குனிந்தான். அடுத்த நிமிஷம் அவன் தரையில் முழங்காலிட்டு சரிந்தான். அவன் தலை ஜெயந்தி யின் மடியில் இருந்தது. அவன் கைவிரல்கள் ஜெயந் தியின் புடவைக் கொசுவங்களை அழுத்தமாய் பற்றிக் கொண் டிருந்தன.

''ஜெயந்தி! நீதான் எவ்வளவு நல்லவள்!' என்றான்— தொண்டை அடைக்க ஜெயந்தி அவன் தலையைப் பரி வோடு தடவினாள். அந்த நிமிஷத்தில் அவன் அனு பவித்துக் கொண்டிருந்த தனிமைத் துன்பத்தைப் பற்றி ஜெயந்தியால் தவிர வேறு யாரால் அவ்வளவு நன்றாய் புரிந்து கொள்ள முடியும்?

* * *

அன்றையிலிருந்து சித்தார்த்தன்—ஜெயந்தி இரு வருக்குமிடையே இருந்து வந்த சிநேகம் மேலும் அதிகரித்தது. இருவரும் எப்பொழுது எந்த வேலை செய் தாலும் அது இன்னொருத்தருக்கு எந்த விதத்தில் உபயோகப்படும் என்றே சிந்திப்பார்கள்.

அவர்களிருவருக்குமிடையே இருந்துவந்த சிறுவயது தோழமை கடற்கரையோரத்தில் வளர்ந்த தென்னையின் இளீப்பான இளநீரைப் போலவும், காவேரியின் மீது சூரிய

கிரணங்கள் பட்டு தென்படும் ஒளியைப் போலவும், மனோகரமாய் நதிக்கரையில் மலர்ந்து அழகை எடுத்து காட்டிக் கொண்டிருக்கும் நீர்ப்பூவைப் போலவும், நாளுக்கு நாள் புதிய மலர்ச்சியை அள்ளி வீசிக் கொண்டே, ஒருவர் வாழ்க்கையின் தனிமையை இன்னொருவர் மூலமாய் போக்கடிக்கும்படியாய் செய்யத் தொடங்கிற்று!

சித்தார்த்தனின் மனது சதா ஜெயந்தியின் வீட்டுப் பொருளாதார நிலைமையை எந்த விதமாய் முன்னுக்குக் கொண்டு வரலாம் என்றே தவித்துக் கொண்டிருந்தது. ஜெயந்தியின் மனது சதா சித்தார்த்தனின் மனதில் உள்ள தனிமையை எந்த விதமாய் போக்கடிக்கலாம் என்ற யோசனையிலேயே ஈடுபட்டு கொண்டிருந்தது.

சித்தார்த்தன் மெதுவாய், திறமையாய் ஒழுங்கான முறைப்படி ஜெயந்தியின் புடவைகளைப் பிரிண்ட் பண்ணும் வியாபாரத்தை விரிவுபடுத்தும் விதத்தை அமுலாக்கிக் கொண்டிருந்தான். பெங்களூர் எக்ஸிபிஷனுக்குப் புடவைகளை அனுப்பினார்கள். தீரஜ்ஜின் பரீட்சை இருந்ததால் ஜெயந்தியால் அங்கே போக முடிய வில்லை. அதனால் அவள் சிநேகிதி உமாவை அனுப்பினார்கள்.

உமாவுக்கு மிகச் சந்தோஷம். அவள் வாயைத் திறந்தால் ஜெயந்தியைப் பற்றிய புகழ்ச்சியாகவே இருக்கும்.

சித்தார்த்தன் தன் வேலைகள் முடிவடைந்த பிறகு கொஞ்சம் நேரம் கிடைத்தாலும் போதும், வந்து ஜெயந்தியின் வீட்டில் கழிப்பான்.

மொட்டைமாடியில் கயிற்றுக் கட்டிலில் சித்தார்த்தன் தீரஜ்ஜைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, பேசிக் கொண்டிருக்கும் பொழுது, ஜெயந்தி அவ்விருவருக்கும் தட்டுக்களில் சாப்பாட்டை வைத்து அவ்விடத்திற்கே கொண்டு வருவாள்.

''நீயும் சாப்பிடு ஜெயந்தி! அதான் ரங்கம்மா இருக்கிறாளே, பரிமாறுவாள்'' என்று சொன்னால் மறுத்துத் தலையசைத்து விட்டு— ''ஊஹூம்! நமக்குப் பிடித்தவங்களுக்கருகில் உட்கார்ந்து கொண்டு விழுந்து விழுந்துப் பரிமாறி சாப்பிடச் செய்வதில் இருக்கிற திருப்தி பெண்களுக்கு வேறு எதுவும் தந்துவிடாதுன்னு உங்களால் புரிந்துகொள்ள முடியாது''—என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுதே ஜெயந்தியின் யோசனை எங்கோ தாவி விட்டது.

சித்தார்த்தனுக்கு மோர் ஊற்றிக் கொண்டிருந்தவள் நடுவில் அப்படியே மறந்து போய் சிலையாய் சூனியத்தைப் பார்த்தபடி நின்றுவிட்டாள்.

''மம்மி! மோர் ஊற்று'' தீரஜ் கத்தியதால் திடுக்கிட்டு இவ்வுலகிற்கு திரும்பி வந்தாள்.

ஜெயந்தி பேச்சிற்கு நடுவில் அவ்வப்பொழுது இவ்வாறு சூழ்நிலையை மறந்து போய் வேறு உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவதையும், அல்லது மௌனமாய் இருந்து கொண்டு விடுவதையும் சித்தார்த்தன் கவனிக்கத் தவறவில்லை.

ஒருநாள் பிற்பகல் வேளையில் இதேபோல உட்கார்ந்து கொண்டிருந்தபொழுது போஸ்டில் ஒரு பார்சல் வந்தது. ஜெயந்தி கையொப்பமிட்டு வாங்கிக் கொண்டாள். தீரஜ்ஜின் பெயரில் அவன் தந்தை அனுப்பியிருந்த படங்களுடன் இருந்த புத்தகங்கள் அவை. சித்தார்த்தன் ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தான். 'சிவரஞ்சன், கேராஃப் அந்த புத்தகக்கடையின் பெயர் இருந்தது.

''அப்பா எனக்குப் புத்தகங்களை அனுப்பியிருக்கிறார்'' தீரஜ் அவைகளைப் பார்த்துவிட்டுச் சந்தோஷத்தால் தலை கால் புரியாமல் குதித்துக் கொண்டே வீட்டையெல்லாம் வளைய வந்தான். ''அங்கிள், ரொம்ப நன்றாயிருக்கு இல்லே?'' என்று காட்டி மகிழ்ந்து போனான்.

''மம்மி! நான் இதோ என் ஃபிரெண்ட் ராஜீவிடம் காட்டிவிட்டு வரேன்''— என்று ஜெயந்தி கூப்பிட கூப்பிடக் காதில் போட்டுக் கொள்ளாமல் எதிர்த்த வீட்டிற்கு ஓடிவிட்டான். ஜெயந்தி அவ்விடத்தில் உட்கார்ந்து புது ரகத்தில் வந்திருந்த மர டிஸைன்களை சாயத்தில் தோய்த்து துணியில் போட்டுப் பார்த்து அவற்றின் நாணயத்தை சோதித்துக் கொண்டிருந்தாள்.

''ஜெயந்தி'' சித்தார்த்தன் கூப்பிட்டான்.

''உம்''

''ஒன்று கேட்கிறேன். ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டாயே?''

''கேளுங்கள். நீங்கள் என்ன கேட்டாலும் நான் ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டேன்''

''தீரஜ்ஜின் தந்தை எல்லைப் பிரதேசத்தில் இருக்கிற தாய் சொன்னாய் அல்லவா? அப்படியென்றால் இந்த புத்தகங்கள் ஐதராபாத்திலிருந்து எப்படி வந்தன?''

ஜெயந்தி நிமிர்ந்தாள்.

மேஜைக்கு எதிரே சித்தார்த்தன் பான்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டு ஜெயந்தியையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

அவன் கண்களில் சிநேக மனப்பான்மையைப் பார்த்த ஜெயந்தியால் பொய் சொல்ல முடியவில்லை.

''அந்த புத்தகங்களை தீரஜ்ஜின் டாடி அனுப்ப வில்லை.''

அவன் ஆச்சரியமடைந்தான்.

''பின்னே?'' அவன் புருவங்கள் கேள்விக் குறியோடு பார்த்தன.

''தீரஜ் தன் சகப் பிள்ளைகளின் தந்தைகள் ஏதேதோ அனுப்புகிறார்கள் என்று ஏங்கியதைப் பார்த்துவிட்டு,

அவன் வருத்தத்தைக் காண சகிக்காதவளாய் நானேதான் ஐதராபாத்திலுள்ள அந்த புத்தகக் கடைக்குக் கடிதம் எழுதி பணம் அனுப்பினேன். அந்த கார்டை அத்துடன் இணைத்து அனுப்ப சொல்லி கேட்டுக் கொண்டேன். ''தீரஜ்ஜிற்கு அன்போடு தந்தை''— என்ற வாக்கியங்களை நான்தான் எழுதினேன்.''—

''அப்படீன்னால் தீரஜ்ஜின் தந்தை—''

''அந்தப் பேச்சு வேண்டாம் ப்ளீஸ். உங்களுக்கு இன்னும் புரியவில்லையா? அது சொல்லக்கூடிய விஷயமாய் இருந்தால் நான் எப்பொழுதோ சொல்லியிருப்பேன்!''

''எனக்குத் தெரியும். ஆனால் அந்த விஷயத்தில் என்னால் ஏதாவது உதவி பண்ண முடியுமான்னுதான்—''

''அந்த கடவுளால்கூட எனக்கு உதவி பண்ண முடியாது. அப்படிப்பட்ட துரதிர்ஷ்டம் என்னுடையது. எப்படியோ இருக்கவேண்டிய வாழ்க்கை என்னுடையது! செய்யாத தப்பிற்கு தண்டனையை அனுபவித்துக் கொண் டிருக்கிறேன். சில சமயம் தீரஜ்ஜைப் பார்க்கும் பொழுது...'' ஜெயந்தி மேஜை மேல் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு அழத் தொடங்கினாள். ''ஜெயந்தி! ப்ளீஸ்'' அவன் ஜெயந்தியைத் தீண்டவில்லை. ஆனால் அந்த வார்த்தைகளில் அதையும்விட இன்னும் அதிகமாய் இழுத்துகிட்டே அணைத்துக் கொண்டு தேற்றினாற் போன்ற நெருக்கம் இருந்தது.

''இதப்பார்! தீரஜ் வருகிறான்'' சித்தார்த்தன் எச்சரித் தான்.

ஜெயந்தி சட்டென்று எழுந்திருந்து, புடவைத் தலைப் பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தீரஜ் தந்தையின் போட்டோவிற்கருகில் ஓடினான். ''தாங்க் யூ டாடி! புத்தகங்கள் ரொம்ப ஜோராய் இருக்

கின்றன''— போட்டோவில் தென்பட்ட இளைஞனின் கன்னத்தில் முத்தமிட்டான்.

தீரஜ்ஜின் சந்தோஷத்தை ஜெயந்தியும், சித்தார்த்தனும் ஊமைகளாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தி தன் வேலையைப் பார்க்க உள்ளே போய் விட்ட பிறகு, தீரஜ்ஜை மடியில் உட்கார வைத்துக் கொண்டு அந்த காமிக் புத்தகங்களைப் பார்த்து விவரித்துச் சொல்லிக் கொண்டிருந்த சித்தார்த்தனின் மனது பற்பல விதமாய் யோசிக்கத் தொடங்கிற்று. தீரஜ்ஜின் தந்தை விஷயத்தில் உண்மையில் ஜெயந்திக்கு உள்ள பிரச்னை என்ன?... நிறைய பேர் ஜெயந்தியைப் பற்றி என்னென்வோ சொல்லுவதை அவன் அறிவான். பாக்கியத்தம்மாள் ஜெயந்திக்குத் திருமணமே ஆகவில்லை என்று சொல்கிறாள். தீரஜ் யாரோ அனாமத்தான ஆளுக்குப் பிறந்தவன் என்று சொன்னாள். சிலபேர் கணவன் அவளை விட்டுவிட்டுப் போய்விட்டான் என்று சொன்னார்கள். சிலர் காதலித்து கர்ப்பமானதுமே அவன் ஏமாற்றிவிட்டு ஓடிப்போய் விட்டான் என்றார்கள்.

இதில் எது உண்மை?

மாதவியைக் கேட்டபொழுது ''ஏதோ ஒன்று ஆயிடுத்து, உனக்கென்ன வந்தது? நீ ஒன்றும் ஜெயந்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போவதில்லையே? பண்ணிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயா, சொல்லு—'' என்று உலுக்கி எடுத்து, அவனால் பதில் சொல்ல முடியாமல் திணறும்படிச் செய்து விட்டாள். எது என்னவாய் இருந்தாலும் ஒன்று மட்டும் உண்மை ஜெயந்தியின் வாழ்க்கையில் தீரஜ்ஜின் தந்தை விஷயத்தில் ஏதோ நடக்கக்கூடாத விஷயந்தான் நடந்திருக்கிறது. அது ஜெயந்தி வாயைத் திறந்து சொல்ல முடியாத விஷயமாய் தான் இருக்கவேண்டும். சித்தார்த்தனின் மனதில் திடீரென்று தோன்றிற்று.

இந்த புத்தகங்களை தந்தை அனுப்பியவை என்று ஜெயந்தி தீரஜ்ஜின் மனதைத் திருப்தியடையச் செய்வதற்காக எப்படி சொன்னாளோ அதே போலதான் இருக்கும் இந்த போட்டோவும்! ஒருக்கால் இந்த போட்டோவில் இருக்கிற நபர் தீரஜ்ஜின் தந்தையே இல்லையா? சித்தார்த்தனுக்குப் பிரச்னை விடுபட்டுவிட்டாற் போல ஆயிற்று.

சித்தார்த்தனின் கைக்கு தீரஜ்ஜின் உடம்பு சூடாய் பட்டது. 'இதென்ன இப்படிக் கொதிக்கிறதே' என் றெண்ணி கொண்டான். அதற்குள் ஜெயந்தி அங்கே வந்தாள்.

''ஜெயந்தி! தீரஜ்ஜின் உடம்பு கொதிக்கிறதா, பார்'' என்றான்.

ஜெயந்தி பார்த்தாள். ''கொஞ்சம் சூடாகவே இருந்தது. வேண்டாம் என்றால் கேட்டால் தானே? நேற்றெல்லாம் குழாயடியில் தலைக்குக் குளிக்கிறேன்னு அடம் பிடித்து குளித்தான்'' என்றாள் போய் தெர்மா மீட்டரை கொண்டு வந்தாள். சித்தார்த்தன் தெர்மா மீட்டரை வைத்துப் பார்த்தான். ஜ்வரம் 100° இருந்தது.

''இன்றைக்கு சாப்பாடு வேண்டாம்'' என்றாள் ஜெயந்தி.

''பயம் ஒன்றுமில்லை. கவலைப்படாதே'' என்றான் சித்தார்த்தன். இருட்டி விட்டது. அவன் போய்விட்டான்.

ஜெயந்தி மகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சித்தார்த்தனைப் பற்றி யோசிக்கத் தொடங்கினாள். சித்தார்த்தன் மன நோயாளி என்று தெரிந்ததுமே அவள் சித்தார்த்தனின் டாக்டரிடம் போய் விசாரித்தாள்.

''அவரை நன்றாய் இதமாய் பார்த்துக் கொள்கிற நபர் வேண்டும் அம்மா. அந்த நேரத்தில் அவரிடம் இருந்து கொண்டு, அவர் மனதை அந்த யோசனைகளிலிருந்து

திருப்பக்கூடிய நபர் வேண்டும். அதற்கு நிறைய பொறுமை யும் முக்கியமாய் அவர் மீது அளவுக்கு மீறி விருப்பம் இருக்கக்கூடிய நபராய் இருந்தால்தான் இந்தக் காரியம் நடக்கும்! அவர் அது ஒரு வியாதி என்று எண்ணிக் கொண் டிருக்கிறார். இல்லவே இல்லை. அது ஒரு மானசீகமான பலவீனம். அவரை அவருக்குத் தெரியாமலேயே அதிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டும்'' என்றார்.

ஜெயந்தி யோசித்தாள். சித்தார்த்தனை அவளால் எந்த விதத்தில் அதிலிருந்து வெளியே கொண்டு வர முடியும்? பயங்கரமான, வேதனை நிரம்பிய கடந்த கால நினைவிலிருந்து அவனை வெளிக் கொணர்ந்து, சாதாரண மனிதனாக்க வேண்டும். அவளுக்காக இவ்வளவு உதவி பண்ணுகின்ற அவனுக்கு அவள் இல்லாமல் வேறு யார் உதவி பண்ணுவார்கள்? அவனை அக்கடந்த கால நினைவிலிருந்து வெளியேற்ற வேண்டிய கடமை அவளைச் சேர்ந்தது. அவன் சாதாரண மனிதனாய் பழையபடி மாறவேண்டும். ஜெயந்தியின் மனதில் ஒரு உறுதி ஏற் பட்டது. தீரஜ் தூக்கத்தில் திடுக்கிட்டான். ஜெயந்தி அவன் உடம்பில் கை வைத்துப் பார்த்தாள். அனல் பறந்து கொண்டிருந்தது.

* * *

மறு நாள் மாலைக்குள் தீரஜ்ஜிற்கு நல்ல ஜ்வரம் வந்து விட்டது. குளிரும் சளியும் இருந்தன. மூச்சுவிட முடியாமல் தவித்தான். சளி ஜ்வரம் என்றெண்ணிக் கொண்ட ஜெயந்தி மிளகு போட்ட பாலைக் குடிக்கச் செய்தாள். டாக்டர் ஊரில் இல்லை.

மாலைக்குள் தீரஜ் மூச்சுவிட முடியாமல் தத்தளித் தான். ஜ்வரம் அதிகமாய் இருந்தது. சித்தார்த்தன் வந்தான். ''தீரஜ்ஜுக்கு ஜ்வரம். இன்றைக்குப் பள்ளிக்கூடத் திற்கு கூட போகவில்லை'' என்று ஜெயந்தி சொன்னதுமே

தீரஜ்ஜின் கட்டிலுக்கருகில் போய் ''தீரஜ்! தீரஜ்—'' என்று தட்டிக் கூப்பிட்டான்.

தீரஜ் பதில் குரல் கொடுக்கவில்லை. அரும்பாடுபட்டு மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான்.

''டாக்டர் என்ன சொன்னார்?'' நிமிர்ந்து ஜெயந்தி யைப் பார்த்து கேட்டான்.

''டாக்டர் ஊரில் இல்லை. மிளகு போட்ட பாலைக் கொடுத்தேன்.'' என்றாள்.

சித்தார்த்தன் ஒரு வினாடி உதட்டைக் கடித்துக் கொண்டே தீரஜ்ஜைக் கூர்ந்து பார்த்தான். அவன் புருவங் கள் முடிச்சேறின. பிறகு தீரஜ்ஜைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டே—''ஜெயந்தி! தீரஜ்ஜை எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவரிடம் கூட்டிட்டுப் போகிறேன், வா! மேலே போர்த்துவதற்கு ஏதாவது கொண்டா'' என்றான். ஜெயந்தி ஓடிப் போய் டர்க்கி டவலைக் கொண்டு வந்து சித்தார்த்தனின் தோளில் இருந்த தீரஜ் ஜிற்குப் போர்த்தினாள்.

சித்தார்த்தனும் ஜெயந்தியும் டாக்டரிடம் போனார் கள். அவர் சித்தார்த்தனைப் பார்த்ததுமே எஞ்சிய நோயாளிகளை விட்டுவிட்டு ''என்ன?'' என்று வந்தார்.

சித்தார்த்தன் தீரஜ்ஜைப் பற்றி சொன்னான்.

அவர் தீரஜ்ஜைப் பரிசோதித்து விட்டு— ''நுரையீரல் நிமோனியா. உடனே ஆசுபத்திரியில் சேர்க்க வேண்டும். ஆக்ஸிஜன் கொடுக்கவேண்டும்''—என்றார்.

அங்கிருந்து அந்த தெருக் கோடியிலேயே இருந்த அவருடைய நர்சிங் ஹோமில் சேர்த்தார்கள்.

டாக்டர் உத்தரவிட்டபடி நர்சுகள் மளமளவென்று பெட்டை சுத்தம் பண்ணி ஆக்ஸிஜன் சிலிண்டரைக் கொண்டு தீரஜ்ஜின் மூக்கில் செலுத்த ஏற்பாடு செய் தார்கள்.

டாக்டர் இஞ்ஜெக்ஷன் மருந்தை எழுதித் தந்து சித்தார்த்தனை வாங்கிக் கொண்டுவரும்படிச் சொன்னார். ஜெயந்தி சிலையாய் நின்று கொண்டிருந்தாள். தீரஜ்ஜிற்கு என்னவாகிவிட்டதோ என்று குழப்பமாகவும் கலக்க மாகவும் இருந்தது அவளுக்கு.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து சித்தார்த்தன் பரபரப் புடன் ஓட்டமும் நடையுமாய் வந்தான். ''சாரீ, இந்த இஞ்ஜெக்ஷனை எவ்வளவு ஷாப்புகளில் கேட்டாலும் இல்லை என்று சொல்லி விட்டாங்க. அலைந்து அலைந்து திரிந்து வாங்கி வருவதற்குள் நேரமாகிவிட்டது.'' என்றான்.

டாக்டர் தீரஜ்ஜிற்கு இஞ்ஜெக்ஷனைக் குத்தினார். அவர்கூட இந்த ஒரு மணி நேரமாய் அங்கேயே காத்துக் கொண்டிருந்தார்.

ஜெயந்தி அங்கிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொண் டாள். நர்சுகள் ஜெயந்தியைக் கிட்டே வரவிடவில்லை. இஞ்ஜெக்ஷனைத் தந்து கொண்டும், ஆக்ஸிஜன் சரியாய் ஏறிக் கொண்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டும் அவர்களே சிரத்தையாய் கவனித்துக் கொண் டார்கள். ஜெயந்தி கிட்டே போனால் நர்சு— ''ஒரு நிமிஷம் கொஞ்சம் அப்பால் போய் இருங்கம்மா, இப் பொழுது உன்னைவிட உங்க மகனுக்கு எங்கள் தேவைதான் அதிகமாய் வேண்டும்''— என்றாள்.

ஜெயந்தி வந்து பெஞ்சியில் பொம்மையாய் உட்கார்ந்து கொண்டாள். சித்தார்த்தன் அவளிடம் வந்தான். அவனுக்கு ஜெயந்தியைப் பார்த்தபொழுது இரக்கமாய் இருந்தது. அவள் பட்டுகொண்டிருந்த கவலை, பயம், திகில் எல்லாம் அவனுக்கு நன்றாகவே புரிந்தன.

''ஜெயந்தி'' என்றான் பரிவோடு.

அவள் நிமிர்ந்து கண்ணீர் மல்கிய கண்களோடு அவனைப் பார்த்தாள். பார்த்துக் கொண்டிருந்த

பொழுதே அம்முகத்தில் அழுகைப் பொத்துக் கொண்டு வந்தது.

''தீரஜ்ஜிற்கு சரியாகி விடுமா?''

''சரியாகிவிடும். பயப்படாதே.''

''சித்தார்த்தன்! தீரஜ்ஜிற்கு ஏதாவது ஆகிவிட்டால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது'' புடவைத் தலைப் பால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கி னாள். சித்தார்த்தனின் கை ஜெயந்தியின் தலை மீது படிந்தது. அவன் ஜெயந்தியை 'தைரியத்தை வரவழைத்துக் கொள்'— என்பதுபோல தலைமீது லேசாய் தட்டிவிட்டு- ''ஜெயந்தி! ஒன்றும் ஆகாது பயப்படாதே'' என்றான்.

''தீரஜ் அம்மா என்று கூப்பிடுகிறவரைக்கும் எனக்கு இந்த பயம் போகாது சித்தார்த்தன்! உங்களுக்குத் தெரி யாது. நான் ரொம்ப துரதிர்ஷ்டசாலி. எவ்வளவு கஷ்டங் கள் வந்த போதும் இப்படி உறுதியாய் எப்படி இருந்து கொண்டிருக்கிறேன் தெரியுமா, தீரஜ்ஜைப் பார்த்து தான்—'' ஜெயந்தி சட்டென்று அவன் கைகளில் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுது தீர்த்துவிட்டாள்.

சித்தார்த்தன் அவள் தலையைத் தடவித் தந்தான். ஆறுதலளிப்பது போல— ''நாம்ப பண்ணக் கூடியதை யெல்லாம் பண்ணுகிறோம். ஒன்றும் பயமில்லை. சமயத் திற்கு டாக்டரிடம் கூட்டி வந்துவிட்டோமே, அதுதான் தெய்வத்தின் கருணை'' என்றான்.

டாக்டர் கூட வெளியே வந்து ''இன்னுமொரு நான்கு மணி நேரம் போனால்தான் சொல்லமுடியும்'' என்று சொன்னார்.

சித்தார்த்தனின் முகத் தோற்றத்தையும், அவன் தீரஜ்ஜை கலக்கத்தோடு பார்ப்பதையும் கண்ட ஜெயந்தி யின் இதயம் பீதியால் தளர்ந்து போயிற்று.

டாக்டர் இன்னொரு இஞ்ஜெக்ஷனைத் தந்துவிட்டு நர்சிடம் எடுத்துக் கொள்ள வேண்டிய ஜாக்கிரதைகளை சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

''அவரை இருக்கச் சொல்லுங்கள் சித்தார்த்தன்''— என்றாள் ஜெயந்தி தீனமாய்.

''யார் இருந்து இனி என்ன பண்ணிவிடுவாங்கம்மா? மருந்துகளைத் தந்திருக்கிறோம். வேலை பண்ணும்'' என்றாள் நர்சு.

சித்தார்த்தன் வந்து ஜெயந்திக்கருகில் நின்றான். ''காபி குடிக்கிறாயா?'' பரிவோடு தாழ்ந்த குரலில் கேட்டான்.

''ஊஹூம்'' என்றாள் மறுப்புத் தெரிவித்தபடி, சித்தார்த்தன் ஜெயந்திக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ஜெந்தியின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். ஜெயந்தியின் உள்ளங்கை வியர்த்திருந்தது. அவள் மனநிலையை எடுத்துக் காட்டிற்று அது.

ஜெயந்திக்கு என்ன சொல்லி தேறுதல் கூறமுடியும் அவனால்? தீரஜ் கண்களைத் திறந்து 'அம்மா' என்றாலே யொழிய ஜெயந்தியின் கண்களில் உயிர் திரும்பி வராது.

ஜெயந்தியின் கையை அவன் மெதுவாய் தட்டிக் கொண்டிருந்தான். அந்த ஸ்பரிசத்தில் சிநேக பூர்வமான ஆறுதல் இருந்தது.

எங்கிருந்தோ கடியாரம் மணியடித்தது. சித்தார்த்தன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். மணி மூன்றடித் திருந்தது.

தீரஜ் லேசாய் புரண்டான்.

நர்சு திரும்பவும் இரண்டு இஞ்ஜெக்ஷன்களைத் தந்தாள். ஆக்ஸிஜனை சரிப் பண்ணினாள், தீரஜ் இம்முறை நன்றாய் புரண்டான். சித்தார்த்தன் கட்டிலுக்கருகில் வந்தான்.

''தீரஜ்! தீரஜ்'' கூப்பிட்டான்.

தீரஜ் கொஞ்சம் கண்களைத் திறந்தான்.

''தீரஜ்'' ஜெயந்தி கூப்பிட்டாள்.

''மம்மி'' அவன் உதடுகள் மெதுவாய் அசைந்தன. நர்சு கொடுத்திருந்த இஞ்ஜெக்ஷன் மூலமாய் அக்கண்கள் திரும்பவும் மயக்கத்துடன் மூடிக் கொண்டன.

''கண்களைத் திறந்துவிட்டான் இல்லையா, இனி பயம் இல்லை நீங்கள் கொஞ்ச நேரம் படுத்துக்குங்க'' என்றாள் நர்சு.

''பரவாயில்லை. நீங்கள் கொஞ்ச நேரமாய் ரொம்ப கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கீங்க. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் வேணுமானால் படுத்துக்குங்க'' என்றான் சித்தார்த்தன்.

''தாங்க்யூ! ஒரு பத்து நிமிஷத்தில் எழுந்து விடுகிறேன். ராத்திரி ஆபரேஷன் கேசு ஒன்று கண்ணைக் கொட்ட விட வில்லை.'' நர்சு நன்றியோடு பார்த்துவிட்டுப் போய் பெஞ்சியில் படுத்துக் கொண்டாள்.

சித்தார்த்தன் தீரஜ்ஜின் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். ஜெயந்தி அவனுக்குப் பக்கத்திலேயே ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு உட்கார்ந்தாள்.

''நீ படுத்துக் கொள் ஜெயந்தி.''

'ஊஹூம்! நீங்கள் கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளுங்கள்.''

அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டே— ''இன்னும் ரெண்டுமணி நேரத்தில் விடிந்து விடப் போகிறது'' என்றான்.

ஜெயந்தி எழுந்து அவனுக்கெதிராய் வந்து நின்று அவனை வியப்போடும் ஆச்சரியத்தோடும் சந்தோஷமாய் பார்க்கத் தொடங்கினாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' என்றான் அவன்.

''நீங்கள்...நீங்கள்—''

''நான்... எனக்கென்ன ஆயிடுத்து...?'' அவன் புரியாமல் விழித்தான்.

''சித்தார்த்தன்! இன்றிரவெல்லாம் நீங்கள் விழித்துக் கொண்டே இருந்தீர்கள். எதிரே நான் இருந்தேன். நர்சு இருந்தாள். நீங்கள் எவ்வளவு சாதாரணமாய் இருந்தீங்க. உங்களை நீங்கள் கட்டிப் போட்டுக் கொள்ளவில்லை. எந்த வெறியும் ஆவேசமும் வரவேயில்லை.''

அவன் குழப்பத்துடன் பார்த்தான்.

''ஆமாம் போலிருக்கே!'' அவன் கண்களில் தாங்க முடியாத சந்தோஷம் தென்பட்டது. ஜெயந்தி சந்தோஷத்துடன் அவன் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு தன் மார்போடு வைத்துக் கொண்டே சிறு பெண்ணைப் போல பார்த்து— ''பார்த்தீங்களா? நான் சொன்னதுதான் நிஜம்! அந்த உங்கள் நிலைமை உங்கள் உடம்பிலுள்ள நோய் அல்ல! அது நீங்கள் சொல்வது போல உங்கள் பைத்திய நிலையும் இல்லை. உங்களுக்குள் இருக்கும் தனிமை! சித்தார்த்தன்! இன்றைக்கு தீரஜ்ஜின் பிராண கண்டம் தப்பிற்று. எனக்கு மிகச் சந்தோஷமாய் இருக்கிறது. நீங்கள் சாதாரண மனிதனாய் இருக்கீங்க. இது எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது தெரியுமா?'' என்றாள்.

சித்தார்த்தன் வாயடைத்துப் போனவனாய் ஜெயந்தியின் சந்தோஷத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். இது கனவா, நினைவா? தான் சாதாரணமாய் இருப்பது! எவ்வளவு வருஷங்களுக்கு பிறகு அவன் ராத்திரி வேளையில் திரும்பவும் சாதாரண மனிதனாய் நடந்து கொண்டிருக்கிறான்!

சித்தார்த்தனால் இதை நம்பவே முடியவில்லை. இது ஜெயந்தியால்தான் சாத்தியமாயிற்று. அவனுக்கு அந்தச் சமயத்தில் சட்டென்று ஜெயந்தியை அலாக்காய் தூக்கி கிர்ரென்று தலைக்கு மேலாய் சுற்ற வேண்டும் போல சந்தோஷம் ஏற்பட்டது.

ஜெயந்தியின் பரிச்சியமான பிறகு அவன் மன நிலை மெல்ல மெல்ல நார்மலுக்கு வந்து கொண்டிருக்கிறது. அவன் நாளெல்லாம் முடிந்தவரை அதிக நேரத்தை ஜெயந்தி தீரஜ்ஜுடனேயே கழித்து வருகிறான். இரவு வேளைகளில் தனியாய் இருக்கும் பொழுது ஜெயந்தியின் பேச்சுக்களும், தீரஜ்ஜின் குறும்புகளுந்தான் நினைவிற்கு வந்து கொண்டிருந்தன. அவன் அவர்களோடோ அல்லது அவர்கள் அவனிடமோ இருப்பது போலவே உணர்வு ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அன்றைக்கு ஜெயந்தி வந்துவிட்டுப் போன பிறகு அவன் மனதில் இன்னொரு கோழைத்தனம் ஏற்பட்டது. மறுபடியும் என்றைக்காவது ஜெயந்திக்கு முன்னீலையில் அப்படி நடந்து கொண்டால் என்ன செய்கிறது என்ற உணர்வு! இன்றைக்கு இந்த இரவு முழுவதும் ஜெயந்தியோடு தனியாய் ஒரே பெஞ்சியின் மீது அருகருகில் உட்கார்ந்து கொண்டே கழித்திருக்கிறார்கள். எதிரே நர்சு வேறு இருந்தாள். ஆனாலும் அவனிடம் அந்த மிருக வெறி தலை காட்டவில்லை. அவனை அடக்கி ஆண்டு கொண்டிருந்த அந்த நிலைமை இன்றைக்குத் தோற்றோடி விட்டாற் போலிருந்தது. இதற்கு காரணம் யார்? ஜெயந்தி! ஜெயந்தியின் பண்பும், நெருக்கமும் அவன் வாழ்க்கையிலும் மனதிலும் படிந்து விட்டிருந்த அழுக்கை நீக்கிவிட்டன.

* * *

ஒரு வாரம் கழிந்தது. தீரஜ்ஜிற்கு நோய் தணிந்தது. ஆசுபத்திரியிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். தீரஜ் இன்னும் பலவீனமாகவே இருந்தான். பள்ளிக்கூடத்

திற்கு இன்னும் ஒரு வாரம் வரை அனுப்ப வேண்டாம் என்று டாக்டர் சொன்னார்.

சித்தார்த்தன் தினமும் வந்து கொண்டிருந்தான். அவன் வரிசையாய் நான்கு நாட்கள் ஆசுபத்திரியில் தீரஜ்ஜிற்காக ராத்திரி வேளைகளில் விழித்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி விழித்துக் கொண்டிருப்பதாய் சொன்ன போதிலும்—"நீ பகலெல்லாம் பார்த்துக் கொண்டாய், அது போதும். நீ படுத்துக் கொள்" என்று சொல்வான். ஜெயந்தி பதில் பேசாமல் அவன் சொன்னபடி செய்வாள். சித்தார்த்தன் நிலைமையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு தானே எல்லா ஜாக்கிரதைகளையும் மேற்கொண்டான். ஜெயந்தியின் சாப்பாடு காபி விஷயத்தைக்கூட அவனே பொறுப்பு எடுத்துக் கொண்டு ரங்கம்மாவை வீட்டிலிருந்து கொண்டு வரும்படி உத்தரவிட்டான்.

இந்த விதமாய் சித்தார்த்தன் தன் தேவைகள் எல்லாவற்றையும் தான் தலையிடாமலே தீர்த்துக் கொண்டிருந்தது ஜெயந்திக்கு பல ஆண்டுகளுக்கு பிறகு திரும்பவும் நிம்மதியாய் வாழத் தொடங்கினாற் போல இருந்தது. ஜெயந்தியின் வாழ்க்கையில் படிந்து விட்டிருந்த இருட்டு இந்த விதமாய் சித்தார்த்தனின் வரவால் மாயமாகி விட்டது.

அவன் பாங்கிலிருந்து ஜெயந்தியின் பேரில் கடன் வாங்கித் தந்து பெரிய கடைவீதியில் ரெடிமேட் துணிக் கடை ஒன்றை திறக்கச் செய்தான். ஜெயந்திக்கு பாங்குக் காரர்கள் கடன் தருவதற்கு அவன் உத்திரவாதப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டான்.

"ஐயோ! இவ்வளவு கடனை என்னால் தீர்க்க முடியுமா?" மார்பில் கை வைத்துக் கொண்டே கேட்டாள் ஜெயந்தி.

"நீ இல்லை, உன் கடையே தீர்த்து விடும்" என்றான் அவன்.

கடையைத் திறந்தார்கள். அதற்கு "கிரக லட்சுமி சாரீ எம்போரியம்" என்று பெயர் வைத்தார்கள். நடுத்தரக் குடும்பத்துப் பெண்களுக்கு கிடைக்கக் கூடிய விலையில் புடவைகளை விற்பதே அவர்களின் நோக்கம்.

கடையில் முதல் முதலாக பில்லை சித்தார்த்தன் வாங்கிக் கொண்டு பணம் தந்தான். அனாதை ஆசிரமத்திற்கு அவன் தாயின் ஞாபகார்த்தமாய் வழங்கும் புடவைகளை வாங்கினான். தெரிந்தவர்கள் மிகச் சிலரை மட்டுமே அழைத்திருந்தார்கள்.

அழைத்தவர்கள் எல்லோரும் வந்து போய் விட்டார்கள். ஜெயந்தி கடைக்கு வெளியே வந்து நின்று "கிரக லட்சுமி சாரீ எம்போரியம்" என்று எழுதியிருந்த போர்டை ஆசை தீரப் பார்த்துக் கொண்டிருந்தாள் சந்தோஷமாய்.

"என்ன பார்க்கிறாய்?" சித்தார்த்தன் அங்கே வந்து கேட்டான்.

வெளியே போர்டிற்கருகில் கலர் கலரான விளக்குகளின் தோரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

"உங்கள் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணவேண்டும் போலிருக்கிறது சித்தார்த்தன்."

"இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான வார்த்தைகளை சொன்னால் உன் கண்ணில் தென்படாமல் ஓடிப் போய் விடுவேன் தெரியுமா? சில விஷயங்களில் எனக்கு எத்தனைக்கெத்தனை பொறுமை உண்டோ அத்தனை கோபமும் வந்துவிடும்" என்றான் அவன்.

"அம்மா, நீங்க ஸ்வீட் சாப்பிடவேயில்லையே" என்றாள் ரங்கம்மா ஸ்வீட்டைக் கொண்டு வந்து நீட்டியபடி.

ஜெயந்தி எடுத்துக் கொண்டு சித்தார்த்தனுக்குத் தந்தாள். சித்தார்த்தன் அதை வாங்கிக் கொண்டு ஜெயந்தியின் வாயில் வைத்தான். "சாப்பிடு, பரவாயில்லை.

யாரும் ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டாங்க. எண்ணிக் கொண்டாலும் பரவாயில்லை. நம்ப பந்தம் எப்படிப்பட்டதுன்னு நமக்குத் தெரியும்.''

கடை மூடிய பிறகு சித்தார்த்தன் ஜெயந்தியையும், ரங்கம்மா, பொன்னையன், தீரஜ்ஜையும் வீட்டில் இறக்கி விட்டுவிட்டுப் போனான்.

வீட்டிற்கு வந்து உடை மாற்றிக் கொண்டான். ராத்திரி வேளைகளில் அவனை கட்டிப் போடும் நாற்காலியும், கயிறும், துணியும் அவ்விடத்திலேயே கிடந்தன. அவன் வேலைக்காரனிடம் ''நான் ஏதாவது கொஞ்சம் வெறிப்பிடித்தாற்போல நடந்து கொண்டாலும் என்னை அத்துடன் கட்டிப் போட்டிவிடு'' என்று உத்தரவிட்டிருந்தான். ஆனால் தீரஜ்ஜை ஆசுபத்திரியில் சேர்த்த தினத்திலிருந்து அதற்குத் தேவையே ஏற்பட வில்லை.

தீரஜ் வீட்டிற்கு வந்த பிறகு ஜெயந்தி திறக்கப் போகும் இந்தக் கடை விஷயம்! அல்லும் பகலும் அதே நினைவாக இருந்து கொண்டிருந்தது!

அவன் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த மேஜை மீது ஒரு போட்டோ இருந்தது. சமீபத்தில் தீரஜ்ஜின் பிறந்த நாளன்றைக்கு எடுத்த போட்டோ அது. சித்தார்த்தன் தீரஜ்ஜைத் தூக்கி வைத்துக் கொண்டு வாயில் கேக்கை கொடுத்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி பக்கத்தில் நின்று கொண்டு சிரித்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவன் விருப்பத்துடன் அந்த போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் முகத்தில் தோன்றிய சந்தோஷத்தைப் பார்த்து அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது. இன்னும் என்னுள் சந்தோஷத்தை அனுபவிக்கக் கூடிய நுட்பமான உள்ளம் இருக்கிறதா என்று தோன்றத் தொடங்கிற்று.

* * *

மறுநாள் ஜெயந்தி சித்தார்த்தனை சீக்கிரமாய் வர சொல்லி போன் பண்ணினாள்.

''ஏன்?'' கேட்டான்.

''வேலை இருக்கிறது. தீரஜ்ஜையும் என்னையும் நீங்கள் ஒரு இடத்திற்குக் கூட்டிட்டுப் போகணும்.''

''எத்தனை மணிக்கு வர சொல்கிறாய்?''

''ஆறு மணிக்கு.''

சித்தார்த்தன் மாலை ஆறுமணிக்கு வந்தான். தீரஜ்ஜும் ஜெயந்தியும் ரெடியாய் இருந்தார்கள். கூடவே சின்னக் கூடையில் பழங்கள், பூமாலை, தேங்காய்கள் ரெடியாய் இருந்தன.

''கோவிலுக்கா?'' கேட்டான்.

''ஆமாம்''

மூவரும் கோவிலுக்கு வந்தார்கள். ஜெயந்தி தேங்காய் களையும் பூமாலையையும் தந்து பூஜை பண்ணச் செய் தாள். மணியடித்துவிட்டு நமஸ்காரம் பண்ணினாள். தீரஜ் மணியடிக்க வேண்டும் என்று ரகளை பண்ணியபொழுது சித்தார்த்தன் தீரஜ்ஜைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மணி யடிக்கச் செய்தான்.

பூஜை ஆனதும் ஜெயந்தி ''ஒரு நிமிஷம் உட்காரலாம்'' என்றாள். மூவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

''சுவாமியிடம் என்ன வேண்டும் என்று வேண்டிக் கொண்டாய்?'' கேட்டான் அவன்.

''ஒன்றையும் வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வில்லை. உங்கள் குளிர்ந்த சிநேகத்தின் நிழலை எனக்கு அருளியதற்காக நன்றி தெரிவித்து கொண்டேன்.'' என்றாள்.

தேங்காயை உடைத்து மூவரும் சாப்பிட்டார்கள். ''நான் கோவிலுக்கு வந்து எவ்வளவு வருஷமாகிவிட்டது!'' என்றாள் ஜெயந்தி.

"ஏன் வராமல் நிறுத்திக் கொண்டாய்?" கேட்டான் அவன்.

"என் வாழ்க்கையில் ஒரு அவலமான சம்பவம் நிகழ்ந்தது. அதைத் தாங்கிக் கொள்வதற்குச் சில வருஷங்கள் பிடித்தது. அந்த வருத்தத்தின் மூலமாய் தினசரி வாழ்க்கையில் எனக்கு உற்சாகம் நசிந்துவிட்டது. சித்தார்த்தன்! நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். வெகு நாட்களுக்கு பிறகு நான் இப்பொழுது திரும்பவும் பழைய மனுஷியாய் நடந்து கொள்கிறேன்."

சித்தார்த்தனுக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. மூவரும் வெளியே வந்தார்கள். தீரஜ் நடுவில் இருந்து கொண்டு சித்தார்த்தனை ஒரு கையாலும் ஜெயந்தியை இன்னொரு கையாலும் பிடித்துக் கொண்டிருக்க, பேசிக் கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள்.

அதற்குள் இரண்டு இளைஞர்கள் கோவிலுக்குள் நுழைந்தார்கள். ஜெயந்தியை அவர்களுக்கு தெரியும். ஜெயந்தி இருந்து வந்த வீட்டுக்காரரின் தங்கை மகனும் அவன் சிநேகிதனும்! ஜெயந்தியைப் பற்றிய பல புகார்களை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

ஜெயந்தி சித்தார்த்தனோடு சேர்ந்து போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து பின்னாலிருந்து கேலியாய் "ஆஹா! இது புது ஜோடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறது போலிருக்கு"— என்றான்.

"ஆமாம். கடையைக் கூட திறந்திருக்கிறானாம்" என்றான் இன்னொருத்தன்.

"எதுக்காக அவ்வளவு இன்ட்ரெஸ்ட்டோ?"

"வேறென்னடா? ஆணும் பெண்ணும்"— அவன் 'க்ளுக்'கென்றுச் சிரித்தான். அதைக் கேட்டதுமே ஜெயந்தியின் முகம் வருத்தத்தால் வெல வெலத்துப் போய்விட்டது.

சித்தார்த்தன் தீரஜ்ஜின் கையை உதறிக் கொண்டு விருட்டென்று திரும்பினான். ஒரே பாய்ச்சலாய் போய் அவர்களுள் ஒருத்தனின் காலரைப் பிடித்து "என்னடா உளறினாய்?" என்று கன்னத்தில் மாறி மாறி விளாசினான்.

எதிர்பாராத இந்த நடவடிக்கைக்கு அவர்கள் அதிர்ந்து போய்விட்டார்கள். "ராஸ்கல்" சித்தார்த்தன் இன்னொருத்தனின் கேசத்தைப் பிடித்துக் கொண்டு முதுகில் ஓங்கி குத்தினான்.

"என்னவாச்சு? என்னவாச்சு?" கோவிலுக்கு வந்த எஞ்சியவர்கள் கூடிவிட்டார்கள்.

ஒருத்தி நெட்டி முறித்துவிட்டு— "என் பேரைச் சொல்லி இன்னும் ரெண்டு குத்து விடு தம்பீ! அயோக்கியப் பசங்கள்! நானும் என் பொண்ணும் சேர்ந்து முந்தாநாள் கோவிலுக்கு வந்து கொண்டிருந்த போது என்னமாய் உளறினாங்க தெரியுமா?" என்றாள்.

சித்தார்த்தன் அவன் காலரைப் பிடித்துக் கொள்ளப் போனபொழுது ஒரு பெரியவர் வந்து பிரித்துவிட்டார். "போகட்டும் விடுங்க சார்! இப்போதைக்குப் போய்த் தொலையட்டும். இதற்குள் புத்தி வந்திருக்கும். ஏண்டா பசங்களே, உங்களுக்கு வேறு வேலைவெட்டி கிடையாதா?" என்று அவர்களைத் திட்டினார்.

ஜெயந்தி வீட்டிற்கு வந்தாள். இன்றைக்கு ஏனோ அவளுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. தன்னை வாய்க்கு வந்தபடி அவதூறாய் பேசி, அவமானப்படுத்தி கேலி பண்ணும் உலகத்திற்கு சுடச்சுட இரண்டு கொடுத்து புத்தி புகட்டக் கூடிய நபர் கிடைத்து விட்டார். அவள் சார்பில் நின்று அவர்கள் வாயை அடக்கிவிட்டார். ஜெயந்திக்கு இது மிக நிம்மதியைத் தந்தது.

இவ்வுலகத்தில் ஒவ்வொரு பெண்ணிற்கும் தந்தையோ, அண்ணனோ, கணவனோ இல்லாமல் போனால் குறைந்த பட்சம் ஒரு நண்பனாவது இருக்கவேண்டும் அரவணைப்

பதற்கு! இல்லாவிட்டால் இந்த உலகம் காக்கையாய் குத்திக் குதறியெடுத்து விடும்! பல விதமாய் மானசீக சித்திரவதைகளைப்படுத்தும். அந்த வருத்தம் எப்படிப் பட்டது என்று அதைப் பட்டவர்களுக்கு மட்டுந்தான் புரியும்.

* * *

தூர்காபாய் தேஷ்முக் ட்ரஸ்ட்டைச் சேர்ந்தவர்கள் ஏழைப் பெண்களுக்கு உதவி பண்ணும் நிமித்தமாய் அவர் களுக்கு வழங்கவிருந்த இலவசப் புடவைகளை கிரக லட்சுமி சாரீ எம்போரியத்திலிருந்து வாங்கிக் கொள் வதற்கு தன் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆர்டர் கிடைக்கும்படி செய்தான் சித்தார்த்தன். ஜெயந்தி பொருளாதார விஷயத்தில் எவ்வளவு வறுமையில் இருந்த போதிலும் அவனாக பொருள் உதவி பண்ண முன்வந்த போதிலும் அவள் அதைப் பெற்றுக் கொள்ள விரும்ப வில்லை. அதனால்தான் அவன் இந்த விதமான உதவி களைப் பண்ணி வந்தான் அவளுக்கு.

சித்தார்த்தனுக்கு அந்த ஆர்டரைப் பார்த்ததும் மிகச் சந்தோஷமாயிருந்தது. ஜெயந்தி இதைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள் என்பதை அவனால் நன்றாகவே ஊகிக்க முடிந்தது. இந்த விதமாய் மெல்ல மெல்ல வரக்கூடிய ஆர்டர்களை அதிகரித்து, ஒரு வருடத் திற்குள் ஜெயந்தியுடைய குடும்பத்தின் பொருளாதார நிலையை முன்னுக்கு கொண்டுவந்து விடவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தான் அவன். சித்தார்த்தன் ஆபீசில் இருந்தபொழுது அந்த ஆர்டர் காகிதம் வந்தது. அவன் உடனே பண்ணிக் கொண்டிருந்த வேலையைப் போட்டுவிட்டு எழுந்து கோட்டை மாட்டிக் கொண்டு மேனேஜரைக் கூப்பிட்டு "நான் வேலையாய் போகிறேன். ஒருக்கால் இன்றைக்கு இனி ஆபீசுக்கு வரமாட்டேன். ஏதா வது தேவைப்பட்டால் ஜெயந்தியிடம் இருப்பேன். சொல்லி

யனுப்பு" என்று சொல்லிக் கொண்டே ஸ்பிரிங் கதவைத் திறந்துக் கொண்டு வெளியே போய்விட்டான்.

வழியில் பெட்ரோல் பங்கில் நிறுத்தி காருக்கு பெட்ரோல் போட்டுக் கொண்டான். பாங்கிற்குப் போய் ஒரு பத்தாயிரம் ரூபாய்களை எடுத்துக் கொண்டான். இன்றையிலிருந்தே வேலையைத் தொடங்கி விடவேண்டும். நேரம் அதிகம் இல்லை. நாலாந்தேதி மாலைக்கெல்லாம் அவர்களுக்குப் புடவை மூட்டைகளை அனுப்பி விடுவதாய் உத்திரவாதம் அளித்திருந்தான். இப்பொழுதே உடனே ஜெயந்தியை அழைத்துக் கொண்டு போய் வேண்டிய உடைகள், சாயங்களை வாங்கிக் கொள்ளும்படி செய்ய செய்ய வேண்டும். கண் முன்னாடி சுந்தரக் காட்சிகள் பல நகர்ந்து கொண்டிருந்தன!

சித்தார்த்தன் ஓட்டிக் கொண்டிருந்த கார் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. சித்தார்த்தன் இறங்கி "ஜெயந்தி! தீரஜ்!" என்று உற்சாகத்துடன் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே போனான்.

"அங்கிள்" உள்ளே எங்கேயோ விளையாடிக் கொண் டிருந்த தீரஜ் ஓடி வந்தான்.

"மம்மி எங்கே? சீக்கிரமாய் கூப்பிடு. நல்ல சேதி ஒன்றை சொல்லணும்."

"மம்மி இல்லை. ஊருக்குப் போயிட்டாங்க."

"ஊரா? எந்த ஊருக்கு? எப்பொழுது போனாள்?"

"ஐதராபாத்துக்கு. நேற்று சாயந்திரம்."

"நேற்று சாயந்திரமா?"

"ஆமாம்"

"ஐதராபாத்துக்கு எதுக்கு? என்னவாயிடுத்து?"

"அங்கே மம்மியின் ஃபிரெண்ட் இருக்காங்க இல்லையா? அவங்களைப் பார்க்க போயிருக்காங்க.

பாவம் மம்மி! ஃபிரெண்டுக்கு உடம்புச் சரியாய் இல்லையாம்.''

''மம்மியின் ஃபிரெண்டா? யார் தீரஜ்? பெயர் என்ன?''

''பேரா? எனக்குத் தெரியாது'' தீரஜ் கைகளை விரித்தான். அதற்குள் ரங்கம்மா அங்கே வந்தாள்.

''ரங்கம்மா! அம்மா ஐதராபாத்துக்குப் போயிருக்காங்களாமே! ஃபிரெண்டிற்கு உடம்புச் சரியாயில்லையாம்! யார் அந்த ஃபிரெண்ட்? பெயர் தெரியுமா?''

''எனக்குத் தெரியாது தம்பீ! இப்படிப்பட்ட விஷயமெல்லாம் எங்களுக்கு எதுக்கு?'' என்றாள் ரங்கம்மா.

''அப்ப கடையில் யார் இருக்காங்க?''

''அம்மாவின் உமா சிநேகிதி இருக்கிறாள். பொன்னையன் வேறு துணைக்கு இருக்கிறான்.''

''அம்மா என்றைக்குத் திரும்பி வருவதாய் சொல்லிவிட்டுப் போனாங்க?''

''எனக்குத் தெரியாது தம்பி.''

ஒரு வினாடி நின்று கேட்டான். ''என்னிடம் சொல்லச் சொல்லி ஏதாவது விஷயம் சொன்னாங்களா?''

''ஒன்றும் சொல்லவில்லை''

''ஸ்டேஷனுக்கு யாராவதுகூட துணைக்குப் போனீங்களா?''

''யாருமே போகலை. எப்பப் போனாலும் அவங்க தனியாய்தான் போவாங்க.''

''ஏப்பப் போனாலும் என்றால்... இந்த ஃபிரெண்டைப் பார்ப்பதற்கு அடிக்கடி போயிட்டிருப்பாங்களா?''

ரங்கம்மா அரிசியைப் பொறுக்கிக் கொண்டே ''ஆங்! ரெண்டு மாசத்துக்கொரு தடவை போயிட்டிருப்பாங்க'' என்றாள்.

சித்தார்த்தனுக்கு இது மிகப் புது விஷயமாய் இருந்தது.

அவனும் ஜெயந்தியும் பல மணி நேரங்கள் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு எவ்வளவோ விஷயங்களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். இருவருக்குமிடையே ஒளிவு மறைவே இல்லை என்பது போல இருந்து வந்தார்கள். ஆனாலும் ஜெயந்தி ஒரு நாள் கூட வாய்த் தவறியும் அவனிடம் இந்த 'ஃபிரெண்ட்'டைப் பற்றி சொன்னதே இல்லையே!

அவன் அங்கிருந்து கடைக்குப் போனான். உமா கடையில் புடவைகளை விற்றுக் கொண்டிருந்தாள். சித்தார்த்தனைப் பார்த்ததுமே முறுவலுடன் வரவேற்றாள்.

''ஜெயந்தி ஐதராபாத்துக்குப் போயிருக்கிறாளாம். என்னிடம் சொல்லச் சொல்லி ஏதாவது விஷயம் சொன்னாளா?''

''என்னிடம் எதுவும் சொல்லவில்லையே!''

''எப்பொழுது வருவாள் தெரியுமா?''

''திங்கள் கிழமை வந்து விடுவாள்.''

''திங்கள் கிழமையா?'' அவன் கணக்குப் பார்த்துக் கொண்டான். நேற்றைக்கு கிளம்பியிருக்கிறாள். திங்கள் கிழமை வருகிறாள். அப்படியென்றால், போகவர சேர்ந்து நான்கு நாட்கள் என்று அர்த்தம்.

சித்தார்த்தன் ஜேபியிலிருந்த ஆர்டர் காகிதத்தை எடுத்து உமாவிடம் தந்தான். உமா அக்காகிதத்தை பார்த்ததுமே தாங்கமுடியாத சந்தோஷமடைந்தாள். ''ஜெயந்தி வந்ததும் இதைக் கேட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்! அட! ரொம்ப டயம்கூட இல்லையே! உடனே வேலையைத் தொடங்கணும்.''

சித்தார்த்தன் ஜேபியிலிருந்து பணத்தை எடுத்து உமாவுக்கெதிரே இருந்த மேஜை மேல் வைத்தான்.

''இதோ பணம்! வேண்டிய சாமான்களை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்''

உமா ஒரு வினாடி தடுமாற்றமடைந்தாள். பிறகு எடுத்துக் கொண்டாள்.

"ஜெயந்தி வருவதற்குள் நான் துணிகளை வாங்கி, அதை நனைத்து கஞ்சிப் போட்டு காய வைத்து இஸ்திரி போட்டு வைக்கிறேன். சாயங்களைக் கலந்து வைக் கிறேன். டிஸனை ஜெயந்தி வந்து செலக்ட் பண்ணுவாள்" என்றாள்.

"நான் வரேன்" அவன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் ஆபீசுக்குத் திரும்பி வந்துவிட்டான். இன்றைக்கு முதலாளி இனி வரமாட்டார் என்று நினைத்து சிநேகிதனோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்த மேனேஜர் சித்தார்த்தன் வந்துவிட்டதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனார்.

சித்தார்த்தன் யாரையும் பார்க்கவில்லை. நேராய் தன் அறைக்குள் போய்விட்டான். காலையில்கூட அவன் ஜெயந்தியிடம் போயிருந்தான். ஆனால் ஜெயந்தி மாலை யில் போகப் போவதாய் சொல்லவே இல்லை. அதுதான் அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ஒருக்கால் எதிர்பாராமல் அவசரமாய் டெலிகிராம் வந்து போயிருப்பாளோ என்னவோ? அதில் தப்பில்லை. அந்த ஃபிரெண்டைப் பற்றிச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமலிருந்திருக்கலாம். அதைப் பெரியதாய் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் தீரஜ்ஜை விட்டுவிட்டுப் போய்விட்டாள். தீரஜ் இன்னும் நோயிலி ருந்து நன்றாய் தேறிக் கொள்ளவில்லை! தன்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லி விட்டுப் போகவில்லை. அர்ஜென்ட்டாய் போயிருந்தாலும் ஒரு சின்ன வரியாவது அவனுக்கு எழுதி வைக்காமல் போய்விட்டதுதான் அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

அவன் தன்னைத்தான் தேற்றிக் கொண்டான். ஒருக் கால் ஜெயந்தி அவசரமாய் போயிருப்பாள். அந்த பர

பரப்பில் அவனுக்கு எழுதி வைத்து விட்டுப் போவதற்கு மறந்து போயிருப்பாள்! ஊஹூம்! அவன் மனம் ராஜி யாக மறுத்தது. அவன் எங்கே இருந்தாலும் தொடர்பு கொள்வதற்காக ஜெயந்தியிடம் போன் நம்பரைக் கூட தந்திருந்தான். அவன் தோளை குலுக்கிக் கொண்டான். அவன் வீணாய் சின்ன விஷயத்தைப் பெரிதாக்கி பூதக் கண்ணாடியில் வைத்துப் பார்க்கிறானோ? ஜெயந்தி வந்ததும் அவன் இவ்வாறு யோசிப்பதைப் பார்த்துவிட்டு விழுந்து விழுந்துச் சிரிப்பாள். அது மட்டும் உறுதி! அவனை யார் வேண்டுமானாலும் மோசம் பண்ணிவிடலாம் ஆனால் ஜெயந்தி மட்டும் மோசம் பண்ணமாட்டாள். இது அவன் நம்பிக்கை! அந்த நம்பிக்கையோடுதான் அவன் ஜெயந்தி யின் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் பிரிக்க முடியாத பந்த மாய் பிணைந்து போய்க் கொண்டிருக்கிறான்.

சித்தார்த்தன் தலையைப் பிடித்துக் கொண்டு மேஜை மீது குனிந்து உட்கார்ந்திருந்தான். அவனுக்குத் தலைவலி வந்துவிட்டது. அவனிடம் மடிந்துப் போய் விட்டிருந்த தனிமையுணர்ச்சி திரும்பவும் உயிர் பெற்றுவிட்டாற் போல இருந்தது. ஜெயந்தி ஒரு வார்த்தை சொல்லியிருந் தால் அவனே ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய் ரயிலில் ஏற்றி அனுப்பியிருப்பானே!

அதோ, திரும்பவும் அதே யோசனை!

* * *

நாட்களுக்கு பிறகு—

சித்தார்த்தன் காலை வேளையில் வீட்டில் உட்கார்ந்து கொண்டு சவரம் பண்ணிக் கொண்டிருக்கையில் போன் மணியடித்தது. அவன் போய் எடுத்தான். மறுமுனை யிலிருந்த ஜெயந்தியின் குரல் கேட்டது.

"ஹலோ சித்தார்த்தன்!"

"ஜெயந்தி" அவன் பெரிதாய் கத்தினாற் போல கூப் பிட்டான்.

"நான் இப்பத்தான் ஊரிலிருந்து வந்தேன்."

"டெலிகிராம் கொடுத்திருந்தால் நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே."

"சொல்லாமல் ஊருக்குப் போய்விட்டேனேன்னு கோபம் வந்து விட்டதா?"

"இடியட்! ஏன் இப்படி பண்ணினாய்? கோபத்தை விட கலக்கம்தான் அதிகமாய் இருந்தது. உன் ஃபிரெண்டின் உடம்பு எப்படி இருக்கு."

"க்ஷேமந்தான்."

"சரி, ஜெயந்தி."

"ஆங்..."

"நான் காபி குடித்து நாலு நாள் ஆயிடுத்து."

ஜெயந்தி சிரித்தாள். அச்சிரிப்பு மனதாரச் சிரித்தாற் போல் இல்லை.

"சரி, டிகாக்ஷன் போட்டு ரெடியாய் வைக்கிறேன்" என்றாள்.

அவன் கால் மணி நேரத்தில் ஜெயந்திக்கு முன்னால் வந்து நின்றான். அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. ஜெயந் திக்கு கடையும் அவனுக்கு ஆபீசும் லீவு.

அவள் காபி கலந்து கொண்டிருந்தாள். அவன் கை களை கட்டிக் கொண்டு சமையலறைக் கதவில் சாய்ந்தாற் போல நின்று கொண்டு ஜெயந்தியையே பார்த்துக் கொண் டிருந்தான், ஜெயந்தியை திரும்பவும் கண்ணாரப் பார்த்த பொழுது அவனுக்கு உயிரே வந்தாற்போல இருந்தது. இந்த நான்கு நாட்களாய் அவன் பட்டுக் கொண்டிருந்த வேதனையும் தனிமைத் துன்பமும் பறந்தோடி விட்டன.

ஜெயந்தி காபியை கொண்டு வந்து தந்தாள். அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

"ஏன் இப்படி பண்ணினாய்?" என்றான்.

"என்ன பண்ணினேன்?" அப்பாவித்தனத்தை வர வழைத்துக் கொண்டே கேட்டாள்.

"என்ன பண்ணினாயா? சொல்லாமல் மாயமாய் போய் என்னை அழவைத்தாய்."

ஜெயந்தி சிரித்தாள். "உங்களை சோதித்தேன். சொல்லிவிட்டு போனால் அப்புறமாய் என்னைப் பற்றி யோசிக்க மாட்டீங்க. உங்க ஆபீசு, அந்த ரகளை அந்த பரபரப்பில் ஆழ்ந்து விடுவீங்க. சொல்லாமல் போனால் என்று வையுங்கள்! என்னைப் பற்றியே யோசிச்சிட்டிருப் பீங்க."

"நிஜமாகவா?"

"நிஜம் இல்லை கதை அளந்தேன். காபியைக் குடியுங் கள். ஆறிப்போய்விடும்."

சித்தார்த்தன் காபியைக் குடிக்கத் தொடங்கினான். ஜெயந்தியும் குடிக்கத் தொடங்கினாள்.

"உன் ஃபிரெண்டுக்கு எப்படி இருக்கு?"

"நன்றாய்தான் இருக்கு."

அதற்குள் ரங்கம்மா "அம்மா" என்று வந்ததால் சித்தார்த்தன் அப்பால் வந்துவிட்டான். அன்று ஜெயந்தி நீரஜ்ஜுடன் சேர்ந்து சாப்பிட்டான்.

"ஆர்டர் வந்துவிட்டதாமே? தாங்ஸ்! உமா சொன் னாள்" என்றாள் ஜெயந்தி.

"அதென்னவோ, அதைப்பற்றி நான் எவ்வளவோ நினைத்து கொண்டிருந்தேன். ப்சு! நினைத்தது ஒன்று. நடந்தது இன்னொன்று"- என்றான் உற்சாகமிழந்தபடி.

''இப்ப என்னவாயிடுத்து உங்களுக்கு?''

''நான் அந்தச் செய்தியை சொல்லி உன்னோடு பங்கிட்டுக் கொள்ள எண்ணியிருந்த சந்தோஷத்தை உமா சொல்லிப் பங்கிட்டுக் கொண்டு விட்டாள்.''

''நான் வரும் வரை காத்திருக்கலாமே?''

''அப்படித்தான் நினைத்தேன். ஆனால் டயம் இல்லை. ஒரு நிமிஷம் இந்த செய்தியை நானே சொல்லி சந்தோஷத்தைப் பங்கிட்டுக் கொள்வதா, அல்லது நீ வருவதற்குள் அந்த ஏற்பாடுகளைப் பண்ணிவிடுவதா என்று இரு உணர்ச்சிகளோடு போராடினேன். முதலாவது என் சந்தோஷத்திற்காகச் செய்வது. அதாவது என் சுயநலம் என்று அர்த்தம்! இரண்டாவது உனக்கு உபபோகப்படும். என் சுயநலதைவிட உன் உபயோகந்தான் முக்கியம் என்று தோன்றிற்று.'' அவன் சொன்ன விதத்தைப் பார்த்து கலகலவென்று சிரித்தாள். அச் சிரிப்பு இப்பொழுது மிக சகஜமாய் பழைய ஜெயந்தியின் சிரிப்பாய் இருந்தது.

''எவ்வளவு நல்லவர் நீங்கள். உங்களை நான் வருத்தப் படுத்திவிட்டேன்!'' என்றாள்.

''உன் இரக்கம் எனக்கொன்றும் தேவையில்லை'' என்றான் அவன்.

அன்றைக்கு லீவு என்பதால் சித்தார்த்தன் அங்கேயே சாப்பிட்டான், ஜெயந்தி தீரஜ்ஜோடு சேர்ந்து. ஜெயந்தி விழுந்து விழுந்துப் பரிமாற, சாப்பிட்ட அவனுக்கு அமிர்தமாய் இருந்தது. அன்போடு பரிமாறி பசியாற்றுவதில் பெண்களுக்கு நிகர் பெண்கள்தான்! இது ஆண்களால் முடியவே முடியாது என்று தோன்றிற்று. ஒரு சாப்பாட்டு விஷயத்தில் மட்டுமே இல்லை, அன்பு, பாசம் போன்ற விஷயங்களில் கூட அப்படித்தான் போலும் என்று தோன்றிற்று.

பிற்பகலில் உமாவும் வந்தாள். சித்தார்த்தன், ஜெயந்தி, உமா, தீரஜ், பொன்னையன், ரங்கம்மா எல்லோ

ருமாய் சேர்ந்து சினிமாவுக்குப் போனார்கள். அவர்கள் எல்லோருடனும் இருக்கும் பொழுது சித்தார்த்தனுக்கு அவர்கள் எல்லோரும் தம் மனிதர்கள் என்ற உணர்ச்சிதான் தோன்றிற்று. அது ஒரு குடும்பமாய் இருந்தது! மாலையில் சித்தார்த்தன் ஜெயந்தியிடம் விடைபெற்றுக் கொண்டு, நீரஜ்ஜிற்கு குட் நைட் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் படுத்துக் கொண்ட பிறகுதான் நினைவிற்கு வந்தது. அந்த ஐதராபாத் ஃபிரெண்டைப் பற்றி ஜெயந்தி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை! அது சொல்லக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது இல்லையோ என்னவோ? அல்லது அது முற்றிலும் தன் சொந்த விஷயம் என்று சொல்லவில்லையா? சித்தார்த்தனின் தலை தலையணையின் மீது அமைதியின்றி புரண்டது. ஜெயந்தியின் வாழ்க்கையில் அவனிடமிருந்து மறைக்கக் கூடிய ரகசியம் எதுவும் இருக்கக் கூடாது. அது எவ்வளவு சின்ன விஷயமாயிருந்தாலும் சரி! ஒவ்வொரு விஷயத்தையும் அவனோடு சேர்ந்துதான் பகிர்ந்து கொள்ள வேண்டும். அது சிநேகிதியின் ஆபத்தான விஷயமாயிருக்கட்டும், அல்லது உடல் கோளாறாயிருக்கட்டும், எதுவாயிருந்தாலும் சரி—அவன் எப்படி ஒளிவு மறைவு இல்லாமல் இருக்கிறானோ அதே போலவேதான் ஜெயந்தியும் இருக்க வேண்டும் ஏனென்றால் ஜெயந்தி அவனுடைய உயிர் சிநேகிதி. சினேகிதர்களுக்கிடையே உண்மை இருக்க வேண்டும். உண்மை இல்லாமல் போனால் அதை சிநேகம் என்றே சொல்லக் கூடாது.

* * *

இரண்டு மாதங்கள் கழிந்தன.

சித்தார்த்தன் ஏறக்குறைய ஜெயந்தியின் ஐதராபாத் ஃபிரெண்டைப் பற்றியே மறந்துவிட்டான்.

இரண்டு மாதங்களுக்கு பிறகு ஜெயந்தி சரியாய் அதே தேதியில் ஐதராபாத்திற்குப் போனாள். ஆனால் இம்

முறை போவதற்கு முன்னால் சித்தார்த்தனிடம் சொல்லி விட்டுப் போனாள். தான் எட்டாம் தேதி வந்து விடுவ தாய்.

சித்தார்த்தன் கணக்குப் பார்த்துக் கொண்டான். திரும்பவும் சரியாய் நான்கு நாட்கள்! ஆனால் இம்முறை ஜெயந்தி சொன்னதற்கு சந்தோஷமாயிருந்தது!

''ஜெயந்தி! ஒரு நாள் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? நானும் வரேன். ஐதராபாத்தில் ஒரு நண்பனின் திருமணம் இருக்கிறது'' என்றான்.

''நீங்களா? ஊஹூம்! வேண்டாம். நான் போகிறேன். நீங்கள் வந்தாலும் என்னால் உங்களை ஐதராபாத்தில் சந்திக்க முடியாது'' என்றாள் ஜெயந்தி. அவ்வாறு சொன்ன வார்த்தைகளில் சங்கோஜமில்லை. உறுதி இருந்தது.

''ஏன் ஜெயந்தி?'' அவன் ஆச்சரியமடைந்தவனாய் பார்த்தான்.

ஜெயந்தியின் பார்வை அவன் கண்களை நேருக்கு நேராய் பார்க்க முடியாதபடி தாழ்ந்தது.

''நான் ஃபிரெண்டிடம் போய்விட்டு திரும்பி நேராய் ஸ்டேஷனுக்கு வந்து ரயிலேறி விடுவேன். ஒரு நிமிஷம் கூட வேறு எங்கேயுமே இருக்கமாட்டேன்.''

''அது நீ தனியாய் போனால்! தீரஜ்ஜும் நானும் வந்தால் அப்படி எப்படி இருக்கும்?''

''தீரஜ்ஜைக் கூட்டிட்டுப் போகமாட்டேன்.''

''ஏன்?''

''அப்பப்பா! நீங்கள் என்னைக் கேள்விகளால் வதைக்காதீங்க.''

''ஓ.கே. ஓ.கே. உனனிஷ்டம்! போதுமா? சரி, இதைச் சொல்லு, உன் பிரயாணத்தை நாளைவரை தள்ளிப் போட

முடியுமா? நானும் ஊருக்குப் போகிறேன் அல்லவா?'' என்றான்.

''ஊஹூம், நான் இன்றைக்கே போகணும்.''

''அர்ஜென்ட்டா?''

''இல்லை''

''பின்னே?''

''உங்களுக்குத் தெரியாது. நான் போகணும். அவ்வளவு தான்.''

அவன் சலிப்படைந்தவனாய் பார்த்தான். ஜெயந்தி உள்ளே போய்விட்டாள். அவன் அங்கு மேஜை மேலிருந்த புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த பொழுது அதற்குள் ஒரு பில் தென்பட்டது. எண்ணூறு ரூபாய்க்கு ஆன பில் அது!

இதென்ன ஜெயந்தி கடையின் பில்லை இப்படி கண்ட இடத்தில் வைத்திருக்கிறாளே, என்றெண்ணிக் கொண்டே எடுத்துப் பார்த்தான். அது புடவையின் பில் அல்ல, புத்தகங்களின் பில்! தேதியைப் பார்த்தான். நேற்றைய தேதி இருந்தது. ஜெயந்தி திரும்பவும் இவ்வளவு விலை யுயர்ந்த புத்தகத்தை வாங்கியிருக்கிறாளா? யாருக்காக? இன்றைக்கு ஊருக்குப் போகிறாள். நேற்றைக்கு புத்தகத்தை வாங்கியிருக்கிறாள்! வேறு யாருக்காக இருக்கும்! அந்த ஃபிரெண்டிற்காகத்தான் இருக்கும்! ஜெயந்தி பணத்தை எண்ணி எண்ணிப் பார்த்துதான் செலவு செய்வாள் என்றறிவான் அவன். அப்படியிருக்கும்பொழுது இவ்வளவு பணத்தை செலவழித்து அவைகளை வாங்கியிருந்தாள் என்றால், அந்த நபருக்கு இதைக் கண்டிப்பாய் கொடுத்துதீரவேண்டியிருந்திருக்கும். இவ்வளவு பணத்தை செலவு பண்ணித் தரவேண்டிய பொறுப்பு அவளுக்கு எதற்காக ஏற்பட்டிருக்கும்? அதென்ன பந்தமாயிருக்கும்!.

சித்தார்த்தனின் புருவங்கள் நெளிந்தன. ஒன்று மட்டும் உண்மை. ஜெயந்தி காரணமில்லாமல் தன் உழைப்பை இப்படி வீண் பண்ணமாட்டாள்.

"நான் வந்து ஸ்டேஷனில் இறக்கி விடுகிறேன்—" என்றான்.

"தேவையில்லை. வீண் முயற்சி வேண்டாம்."

"இது முயற்சியா?"

"எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டேன்" ஜெயந்தியின் குரலில் எரிச்சல் தென்பட்டது.

"ஓ. கே, ஓ. கே"— என்றான் அவன்.

அப்படி சொன்னானே தவிர, அவனால் சும்மாயிருக்க முடியவில்லை. பழங்களையும் பிஸ்கெட்டுகளையும் வாங்கி பொட்டலம் கட்டிக் கொண்டு ஐதராபாத் எக்ஸ்பிரெஸ் புறப்படும் நேரத்திற்கு ஸ்டேஷனுக்கு வந்தான்.

வழியில் கார் தொந்தரவு கொடுத்ததால் தாமதமாகி விட்டது. அவன் வருவதற்குள் ரயில் போய்விட்டது.

அவன் பெருமூச்செறிந்தான்.

ஜெயந்தி சொன்னது போலவே அந்த தேதிக்குத் திரும்பி வந்தாள். வந்ததுமே போன் பண்ணினாள். சித்தார்த்தன் வந்தான்.

"உங்க ஃபிரெண்டுக்கு எப்படி இருக்கு?"

"நன்றாய்தான் இருக்கு." என்றாள். அன்றைக்கு அவன் வருவதற்குள் ரயில் போய்விட்ட விஷயத்தை சொன்னான். ஜெயந்தி கோபத்துடன் பார்த்தாள். "சித்தார்த்தன்! நாமிருவரும் ஒரு முடிவுக்கு வருவோம். உங்களுக்குப் பிடிக்காத காரியத்தை நான் பண்ண மாட்டேன். எனக்குப் பிடிக்காத காரியத்தை நீங்கள் பண்ணக்கூடாது. சரிதானே?"

"சரி" என்றான். ஜெயந்திக்குப் பிடித்ததைப் பண்ணுவதுதான் அவனுக்குப் பிடித்தது.

அன்று மாலையில் ஜெயந்தியும் சித்தார்த்தனும் ஷாப்பிங்கிற்கு போனார்கள். ஒரு கடையில் ஜெயந்தி தனக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு பில்லுக்கு பணம் தந்து கொண்டிருந்தபொழுது—

"ஆன்ட்டீ! நீங்களா? சௌக்கியமா?" ஜெயந்தி திரும்பி பார்த்தாள். சித்தார்த்தன் இந்த பக்கமாய் முதுகை காட்டிக் கொண்டு நின்றபடி யாரோ ஒரு பெண்மணியை விசாரித்துக் கொண்டிருந்தான்—

"சௌக்கியந்தான். நீ எப்படி இருக்கிறாய்?"

"ஆமாம். நான் முன்பு பார்த்ததைவிட கொஞ்சம் பூசினாற்போல இருக்கிறாய். முகம் களையாய் இருக்கிறது."

"கிட்டு எப்படி இருக்கிறான்?"

"ஐயோ, அதை ஏன் கேட்டாய் சித்தார்த்தா! அவனுக்கு ஆக்ஸிடென்ட் ஆயிடுத்து."

அதற்குள் அவள் ஜெயந்தியைப் பார்த்து சிரித்துக் கொண்டே "சௌக்கியமா?" என்று விசாரித்தாள்.

ஜெயந்தி தடுமாற்றத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

"ஆன்ட்டி! ஜெயந்தியை உனக்குத் தெரியுமா? எப்படி?" சித்தார்த்தன் வியப்போடு கேட்டான்.

"நானும் இந்தப் பெண்ணும் நேற்றிரவு பூனாவிலிருந்து பஸ்ஸில் சேர்ந்துதான் வந்தோம். பாவம், எனக்கு தலை சுற்றியபோது குடிக்கத் தண்ணீர் கொடுத்து, ஜன்னலோரத்தில் இருந்த தன் சீட்டில் என்னை உட்கார வைத்து எவ்வளவு உதவி பண்ணினாள் தெரியுமா? ரொம்ப நல்ல பெண்."

''பூனாவிலிருந்தா?!'' அவன் ஆச்சரியமடைந்தவனாய் திரும்பினான். ஜெயந்தி அங்கே இல்லை... அதற்குள் கடைக்கு வெளியே ஓடிப் போய், அங்கிருந்த ஆட்டோவில் ஏறிக் கொண்டு விட்டாள்! சித்தார்த்தன் பார்த்துக் கொண்டிருந்தபொழுதே ஆட்டோ போய்விட்டது.

''என்ன, அப்படிப் போய் விட்டாளே?'' என்றாள் அவள்.

* * *

கால் மணி நேரங்கழித்து சித்தார்த்தன் ஜெயந்தியின் வீட்டிற்கு வந்தான். அவன் வந்தபொழுது ஜெயந்தி சாயத்தில் தோய்த்து துணியில் டிஸைன்களைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

''ஜெயந்தி'' அவன் கூப்பிட்டான்.

ஜெயந்தி நிமிர்ந்தாள். உடனே கைகளைக் கூப்பி ''சித்தார்த்தன், உங்களுக்குக் கோடி கும்பிடு. என்னை எந்தக் கேள்வியும் கேட்க வேண்டாம்.'' என்றாள்.

சித்தார்த்தன் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றை விட்டவனாய்— ''அப்படீன்னால் நீ போனது ஐதராபாத்திற்கு இல்லை, பூனாவுக்கு! இல்லையா?'' கேட்டான்.

''ஆமாம்.''

''என்னிடம் ஏன் பொய் சொன்னாய்?''

ஜெயந்தி சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள்.

''பொய் ஏன் சொன்னாய் என்று போலீஸ் அதிகாரியைப் போல என்னை உலுக்கி எடுப்பதற்கு பதில் அப்படி ஏன் சொன்னாளோ என்று சிநேகிதனாய் என்னைப் புரிந்து கொண்டு விட்டுவிடக் கூடாதா?''

''சொன்னால் என்னவாகிவிடும்:''

''சொல்வதற்கு இது என் ஒருத்தியின் விஷயமில்லை. இன்னொரு நபரோடு சம்பந்தப்பட்டது! அந்த நபருக்குப் பிடிக்காத காரியத்தை நான் பண்ணமாட்டேன்.''

''ஓ. கே''—அவன் விருட்டென்று திரும்பிப் போய் விட்டான்.

அன்றிரவெல்லாம் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

ஜெயந்தி ஏன் பொய் சொன்னாள்?

பூனாவில் யார் இருக்கிறார்கள்? அந்த நபருக்கும் ஜெயந்திக்கும் என்ன சம்பந்தம்?

அவனுக்கு யோசிக்க யோசிக்க மண்டை வெடித்து விடும்போல இருந்தது. அரூபமான பயம் ஏதோ அவன் மகிழ்ச்சியையும், அமைதியையும் கெடுப்பதற்காக கைகளை விரித்துக் கொண்டு விகாரமாய் கிட்டே வந்து கொண்டிருந்தாற்போல இருந்தது. மறுபடியும் அவன் பெண் ஒருத்தியின் கையில் சாவி கொடுத்த பொம்மையாகிக் கொண்டிருக்கிறானா? ஜெயந்தி தனக்குப் பின்னால் நாடகம் ஆடுகிறாளா?

ஜெயந்தி அவன் பால் காட்டுகிற அன்பும், சிநேகமும் நிஜம் இல்லையா? அதில் சுயநலம் இருக்கிறதா? அவனுக்கு தலைவலி வந்துவிட்டது. நெற்றிப் பொட்டுகள் அதிர்ந்து கொண்டிருந்தன. எதிரே ஜெயந்தியின் போட்டோ தென்பட்டது. அவனுக்கு அதை எடுத்துக் கீழே போட்டுச் சுக்கு நூறாக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவன் மிகவும் ஆவேசத்துடன் நடந்து கொள்கிறான். அவசரப்பட்டு முடிவிற்கு வந்து விட்டான். ஜெயந்தி தன்னை ஏமாற்றுகிறாள் என்று எண்ணிக் கொள்வது நியாயம் இல்லை. அதை ருசுவாக்கி கொண்ட பிறகு இந்த முடிவிற்கு வரவேண்டும். அவன் மனம் வைத்தால் இதைக் கூடவா தெரிந்து கொள்ளமுடியாது?

பார்த்துக்கொண்டிருந்த பொழுதே மிக குறுகிய காலத்திற்குள் ஜெயந்தியின் புடவைக்கடை விற்பனையில் கொடிக் கட்டி கொண்டு பறக்கத் தொடங்கிவிட்டது. ஜெயந்திக்கு அதன் முதலாளியாய் ஒரு ஹோதா வந்துவிட்டது. பணம் தாராளமாய் கையில் புரளத் தொடங்கிவிட்டதால் ஜெயந்தியோடு, ரங்கம்மா பொன்னனின் முகங்களில்கூட சந்தோஷம் நாட்டியமாடத் தொடங்கிவிட்டது.

சித்தார்த்தன் ஜெயந்தியின் ஃபிரெண்டை பற்றி யோசிப்பதை விட்டுவிட்டான். ஜெயந்தி யாரையும் மோசம் பண்ணமாட்டாள். அவனிடம் சொல்ல வேண்டிய முக்கியமான விஷயமாய் இருந்தால் மறைத்து வைக்க மாட்டாள் என்று அவனுக்கு நன்றாய் தெரியும். அதனால் அந்த விஷயத்தை அத்துடன் விட்டுவிட்டான். அப்படி விட்டுவிட்டதால்தான் அவனால் மிக நிம்மதியாய் இருக்க முடிந்தது. முன் போலவே ஜெயந்தியுடன் சிநேகமாய் இருக்கத் தொடங்கினான்.

ஜெயந்தியின் பிறந்தநாள் வந்தது. சித்தார்த்தன் விலையுயர்ந்த பெனாரஸ் புடவையொன்றை வாங்கித் தந்தான். ''இது எதுக்கு?'' என்றாள்.

''கட்டிக் கொள்வதற்கு'' என்றான் அவன் சிரித்துக் கொண்டே. அவன் இதுவரை ஜெயந்திக்கு எந்த விதமான பரிசும் தரவில்லை. ஜெயந்தி அதை ஏற்றுக் கொள்வாளோ அல்லது மறுத்து விடுவாளோ என்று உள்ளூர பயமாய் இருந்தது. ஜெயந்தி ''புடவை நன்றாயிருக்கிறது'' என்றாள். அம்முகத்தில் சந்தோஷந்தான் தென்பட்டது.

பிறந்த நாள் அன்றைக்கு அப்புடவையை கட்டிக் கொண்டாள். ''உங்கள் கால்களில் விழுந்து நமஸ்காரம் பண்ணட்டுமா?'' என்று குனியப் போனாள்.

''ஓ, சீ, இதென்ன காரியம்?'' என்றான் அவன் தூக்கி நிறுத்திவிட்டு.

ஜெயந்தியின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

''சித்தார்த்தா! நீங்கள் வந்த பிறகு என் வாழ்க்கையே மாறிப் போய்விட்டது. பிரச்னைகள் எல்லாம் பறந்து போய்விட்டன. உங்களுக்குத் தெரியாது—'' என்றாள் ஜெயந்தி தொண்டை அடைக்க.

சித்தார்த்தனுக்குக் கூட வாயிலிருந்து வார்த்தைகள் பெயரவில்லை. அந்த சமயத்தில் ஜெயந்தியைக் கிட்டே இழுத்து மார்போடணைத்துக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தை அடக்கிக் கொண்டான். அவன் தாடை எலும்புகள் முறுக்கேறிக் கொண்டன. ஜெயந்தியைக் கிட்டே அணைத்துக் கொண்டு ''பைத்தியக்காரப் பெண்ணே! என் வாழ்க்கையில் உன் வரவால் ஏற்பட்ட மாறுதலும், நான் அடைந்த அமைதியும் சமான மில்லாதவை. நான் உனக்குத் தந்ததை விட உன்னிட மிருந்து நான் பெற்றுக் கொண்டதுதான் அதிகம்''— என்று சொல்ல வேண்டும் போல இருந்தது.

அதற்குள் உமா பூக்களைத் தொடுத்துக் கொண்டு வந்து ''வைத்துக் கொள் அக்கா'' என்று தானே ஜெயந்தியின் தலையில் வைத்தாள்.

ரங்கம்மா தன் சம்பளத்தைக் கொண்டு ஸ்பெஷலாய் செய்திருந்த ஸ்வீட்டைக் கொண்டு வந்து ஜெயந்தியின் வாயில் வைத்தாள். எஞ்சிய எல்லோருக்கும் தந்தாள். பொன்னையன் இதற்காகவே தானே முடைந்திருந்த ஓயர் பை ஒன்றைத் தந்தான்.

''மம்மி, நான் மட்டும் ஒன்றுமே கொடுக்கலை''— என்றான் தீரஜ் செய்வதறியாமல் பார்த்தபடி. ஜெயந்தி மகனை அலாக்காய் தூக்கிக் கொண்டு கன்னத்தைக் காட்டினாள். தீரஜ் முத்தம் கொடுத்துவிட்டு—''ஹாப்பி பெர்த்டே மம்மி'' என்றான்.

எல்லோருக்கும் ஒருத்தர் மேல் இன்னொருத்தருக்கு அளவில்லாத அன்பு! ஜெயந்தி பகிர்ந்தளித்த அன்பு பூக்

களை ஒன்று சேர்க்கும் நாறைப்போல அவர்களைப் பிணைத்திருந்தது. ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தது.

அன்று மாலையில் எல்லோருமாய் சேர்ந்து சினீமா வுக்குப் போனார்கள். இரவு வந்தது. சித்தார்த்தன் சாப்பிட்ட பிறகு தீரஜ்ஜிற்குப் பக்கத்தில் படுத்துத் தூங்கி விட்டான். ஜெயந்தி எழுப்பவில்லை.

மறுநாள் காலையில் கண்களைத் திறந்தபொழுது அவன் தீரஜ் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

ஜெயந்தி வந்து இருவருக்கும் டூத் பேஸ்ட் தந்தாள். பல் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொண்டதுமே காபியைக் தந்தாள்.

சித்தார்த்தன் குளித்துவிட்டு வருவதற்குள் டிபன் ரெடி யாகியிருந்தது. தீரஜ்ஜோடு சேர்ந்து சாப்பிட்டு விட்டு காலையில் வந்த பேப்பர்களைப் புரட்டிக் கொண்டே, ரேடியோவைக் கேட்டுக் கொண்டிருந்தபொழுதுதான் சித்தார்த்தனுக்கு திடீரென்று தன் வாழ்க்கையில் தான் எதை இழந்துவிட்டோம் என்பது புரியத் தொடங்கிற்று. இதைவிட ஆயிரம் மடங்கு விலையுயர்ந்த, நவீன வசதி களுடன் கூடிய தன் வீடு, இந்தச் சின்ன வீடு தந்த அமைதிக்கு முன்னால் வெறுமையாய் தோன்றிற்று.

அவன் வாழ்க்கைக்கு ஒரு பெண் வேண்டும்! அந்த தகுதி ஜெயந்திக்குதான் உண்டு! ஜெயந்தியின் கடந்த காலத்தைப் பற்றி அவனுக்குத் தேவையில்லை. ஜெயந்தி யின் மகன் தீரஜ்ஜைத் தன் சொந்த மகனைக் காட்டிலும் மேலாக பாசத்தைப் பொழிய முடியும் அவனால். தீரஜ் ஜிற்குக்கூட அவனை மிகவும் பிடிக்கும்.

சித்தார்த்தன் அன்று முழுவதும் யோசனையில் ஆழ்ந் திருந்தான். கடைசியில் மாலையில் ஜெயந்திக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் தன் மனதில் இருந்த விஷயங்களைத்

தெரியப்படுத்தினான். முடிவை உன்னிடமே விட்டு விட்டேன் என்று முடித்திருந்தான் இறுதியில்.

அதற்குள் போன் வந்தது. பம்பாயிலிருந்து அவன் சிநேகிதன் சஞ்சீவி பேசினான். "சித்தார்த்தா! நீ அர்ஜெண்ட்டாய் இன்றைக்கு பிளேனில் புறப்பட்டு வர வேண்டும். பாஸ்கரனை என்ன பண்ணிவிட்டார்கள் தெரியுமா?" என்று விவரமாய் சொன்னான்.

"மை காட்! நான் இன்றைக்கே புறப்பட்டு வரேன். நீ கவலைப்படாதே. ஆன்ட்டியிடம் கூட சொல்லு" என்றான். சஞ்சீவியின் தம்பி பாஸ்கரன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். எப்பொழுதும் தீவிரமான குணம். இப்படி ஒரு நாள் நடந்துவிடும் என்று சதா பயந்து கொண்டேதான் இருந்தான் சஞ்சீவி.

பிளேனில் டிக்கெட் கிடைத்தது.

அவன் ஜெயந்திக்கு போன் பண்ணி, தான் எதிர் பாராமல் ஊருக்குப் போக வேண்டியிருப்பதைப் பற்றி சொன்னான். ஜெயந்தி சரி என்றாள். வந்து சந்திப்பதாய் சொன்னான். ஆனால் முடியவில்லை. அதற்குள் ஓரிரண்டு அவசர வேலைகள் குறுக்கிட்டு விட்டன. அவை முடிவதற் குள் பிளேனுக்கு நேரமாகி விட்டது.

விமான நிலையத்திலிருந்து ஜெயந்திக்கு போன் பண்ணினான். எங்கேஜ்டாய் இருந்தது. ஏமாற்றத் துடன் போனை வைத்துவிட்டான்.

அவன் விமானத்தில் உட்கார்ந்து கொண்டு, விமானம் காற்றில் எம்பியபோது வினோதமான உணர்ச்சி ஏற் பட்டது அவனுக்கு.

ஜெயந்தியை விட்டு தொலைவிற்குப் போகிறோமே என்ற உணர்ச்சி ஏதோ அவன் மனதை அழுத்திற்று! சீ, சீ! இதென்ன உணர்ச்சி! அவன் இரண்டுநாள் வேலையாய் போகிறான். வந்ததுமே தான் எழுதி வைத்திருக்கும்

கடிதத்தைத் தந்து விடுவான். பிறகு... அவன் உதடுகள் சிரிப்பால் விரிந்தன. அவன் கண்களுக்கு முன்னால் அழகான காட்சிகள் வேகமாய் நகரத் தொடங்கின.

பம்பாயில் சஞ்சீவி விமான நிலையத்திற்கு வந்து சித்தார்த்தனை வீட்டிற்கு அழைத்துச் சென்றான். சஞ்சீவியின் தாய் ஜெயம் சித்தார்த்தனைப் பார்த்ததுமே ஓடி வந்து கட்டிக் கொண்டு கதறி தீர்த்துவிட்டாள். சித்தார்த்தன் தேற்றினான். ''கவலைப்படாதீங்க ஆன்ட்டி. அந்த போலீஸ் அதிகாரி என் சிநேகிதன்தான். நானும் சஞ்சீவியும் பூனாவுக்குப் போய் எப்படியாவது பாஸ்கரனை ஜாமீனில் விடுதலை பண்ணச் சொல்லி அழைத்துக் கொண்டு வந்து விடுகிறோம்'' என்றான்.

சஞ்சீவியும் சித்தார்த்தனும் காரில் பூனாவுக்குப் புறப் பட்டார்கள். வழியில் சஞ்சீவி தலையிலடித்துக் கொண்டே சொன்னான்— ''அவன் இப்படிக் கெட்டுப் போனதற்குக் காரணமே எங்கம்மாதான் சித்து! சிறு வயதிலிருந்தே அளவுக்கு மீறிச் செல்லம்! இப்பப் பார் எப்படி ஆயிடுத் துன்னு! அவன் எதிர்காலமே நாசமாயிடுத்து''—என்று சொன்னபொழுது சித்தார்த்தன் அவனைத் தேற்றி ஆறுத லளித்தான்.

அந்த வீட்டில் தாய்க்கும் மகனுக்கும் ஒத்து வராது. சித்தார்த்தன் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு நயமாய் எடுத்துச் சொல்லி சமரஸம் ஏற்படுத்தித் தருவதில் பழக்கப் பட்டவன்.

''அந்த போலீஸ் அதிகாரியை உனக்குத் தெரியு மாதலால் கொஞ்சம் ஆசை ஓட்டிக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் என்னவாகுமோ சொல்லு! தம்பி என்னோடு பேசுவதை விட்டு ஒரு வருடமாகி விட்டது. நான் முதலில் தலையிட வேண்டாம் என்றுதான் இருந்தான். ஆனால் எங்கம்மாவின் அழுகையை காணச் சகிக்

காமல் போய் தலையிட வேண்டியதாகிவிட்டது'' என்றான்.

சஞ்சீவியின் தம்பி பாஸ்கரன் நக்ஸலைட் கும்பலைச் சேர்ந்த மாணவன். அவர்கள் முந்தாநாள் பூனாவுக்குப் போனார்களாம். அங்கே ஒரு குஜராத்தி வியாபாரக் குடும்பத்தைக் கொலை பண்ணிவிட்டார்கள். அதில் அவனுக்குப் பங்கு உண்டு என்று பாஸ்கரனை அரெஸ்ட் பண்ணி ஜெயிலில் போட்டுவிட்டார்கள். அந்த போலீஸ் அதிகாரி சித்தார்த்தனின் சிநேகிதன்தான் என்று தெரிந்தது. அதனால்தான் உடனே போன் பண்ணி வர வழைத்தான்.

கார் பூனாவிற்குள் நுழைந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. குளிர்ந்த காற்று வீசிக் கொண் டிருந்தது. மழை வரும் போல இருந்தது. சஞ்சீவியும் சித்தார்த்தனும் அந்த போலீஸ் அதிகாரியை சந்தித் தார்கள். அவர் பாஸ்கரனைப் பார்க்க அனுமதி கொடுக்கும்படி ஜெயில் சூபரென்டென்டிற்குக் கடிதம் எழுதி தந்தார். சஞ்சீவி தான் வரவில்லை என்றும் தன்னைப் பார்த்தால் பாஸ்கரன் ஆவேசமாய் நடந்து கொள்வான் என்றும் சொல்லி சித்தார்த்தனை மட்டுமே போகச் சொன்னான்.

சித்தார்த்தன் தனியாய் பாஸ்கரனைச் சந்திக்கப் போனான். அவன் பாஸ்கரோடு பேசினான்—

''எனக்காக யாரும் எந்த உதவியும் பண்ணத் தேவை யில்லை. என் வாழ்க்கை என்னோடது! எனக்கு எப்படி பிடிக்குமோ அப்படி நடந்து கொள்வேன்'' என்றான். அவர்கள் தாயைப் பற்றிக் குறிப்பிட்ட பொழுதும்கூட அவன் மனம் மாறவில்லை. தனக்கு ஜாமீன் தேவையில்லை என்று மறுத்தான். தான் ஜாமீன் வாங்கிக் கொண்டு திரும்பி வருவதாகவும் வீட்டிற்குப் போன பிறகு விவரமாய் பேசிக் கொள்ளலாம் என்றும் சொன்னான் சித்தார்த்தன்.

பாஸ்கரன் முதலில் பிடிவாதமாய் மறுத்தாலும், அப்புறமாய் ஒப்புக் கொண்டான்.

சித்தார்த்தன் அங்கிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான்.

சுவற்றிற்கு இந்த பக்கமாய் யாரோ ஒரு பெண் இன்னொரு கைதியைச் சந்திப்பதற்காக வந்திருந்தாள். அந்தக் கைதி ஆவேசத்துடன் சொல்லிக் கொண்டிருந்தான் —"உனக்கு என்மேல் உண்மையான அன்பே இல்லை! நான் செத்தாலும் கூட உனக்கு ஒன்றும் தோன்றாது! எனக்கும் சாகணும் என்றுதான் இருக்கு. என் உயிர் போக மாட்டேங்கிறது. நான் என்ன பண்ணுவேன்?"

"அப்படி சொல்லாதீங்க, ப்ளீஸ் அப்படி சொல்லாதீங்க."

அந்தக் குரலைக் கேட்டதுமே சித்தார்த்தன் திடுக்கிட்டுப் போனான்.

அந்தக் குரல் அசல் ஜெயந்தியின் குரலைப் போலவே இருந்தது!

அவன் ஆர்வந்தாங்காதவனாய் திரும்பி பார்த்தான். அந்த பக்கமாய் திரும்பி நின்று கொண்டிருந்த அப் பெண்ணைப் பார்த்ததுமே அவன் கண்கள் சுருசுருப் பாயின. அந்தப் பெண் பின்னாலிருந்து பார்த்தபொழுது அசல் ஜெயந்தியைப் போலவே இருந்தாள். அவன் திரும்பி பார்த்தான். ஓரடி எடுத்து வைத்து அந்த பக்கமாய் வந்தான்.

"இந்த வருடம் அக்டோபரில் காந்தி ஜெயந்தி அன்றைக்கு விடுதலை ஆகிவிடுவேன்னு ஆசையாய் காத்துக் கொண்டிருந்தேன். முடிந்துவிட்டது. அந்த ஆசைகூட தீர்ந்துவிட்டது! அந்த லிஸ்ட்டில் என் பெயர் இல்லையா? திரும்பவும் நான்கு வருஷங்கள்!"

"ஓ காட்!"

சித்தார்த்தன் அவனையே பார்த்தான். அவன் வயதான ஆள். தலை நரைத்திருந்தது. தோள்கள் வளைந்துப் போய், குறுகிப் போய்விட்ட மனிதனைப் போல இருந்தான்.

"நீங்கள் தைரியத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள் ரஞ்சன்!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

சித்தார்த்தனின் கண்கள் அகல விரிந்தன. அவள் ஜெயந்தியேதான். அந்த வயோதிகனைத் தேற்றிக் கொண்டிருந்தாள். ஆனால் அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "ஜெயந்தி! உனக்கென்ன தெரியும் என் துன்பம்? நாட்களையும் நிமிஷங்களையும் கணக்கிட்டுக் கொண்டே, இந்தக் கூண்டிலிருந்து விடுதலை எப் பொழுதோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதிலேயே என் வாழ்க்கை கழிந்துவிடும். எனக்குத் தெரியும் இந்த துரதிஷ்டத்திலிருந்து எனக்கு விமோசனம் இல்லை. நான் இதிலேயே உழன்று சாகவேண்டும்." அவன் நிமிர்ந்து ஆவேசத்துடன் உள்ளங்கையை மடக்கிக் கொண்டு— "ஜெயந்தி! இனிமேல் நீ என்னைப் பார்க்க வரவேண்டாம். நீ வந்தால் எனக்கு வாழ்க்கை மீது ஆசை உண்டாகி விடுகிறது. இந்த ஆசை என்னை சாகவிடமாட்டேங் கிறது! ஜெயந்தி! நீதான்... நீயேதான்தான் என்னைச் சாக விடமாட்டேங்கிறாய்! போ! போய்விடு! என்னை இதிலேயே இப்படியே சாக விட்டுவிடு. யூ உமன்! கெட் அவுட்—" அவன் கத்தினான்.

ஜெயந்தி கம்பிகள் வழியாய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"ப்ளீஸ்! அப்படிச் சொல்லாதீங்க!" அக்குரலில் இருந்த வேண்டுதல் அவன் பால் அவளுக்கு எவ்வளவு அன்பு இருந்தது என்பதைக் காட்டிற்கு.

"ரஞ்சன்! கொஞ்சம் பொறுத்துக்குங்க. நாலு வருஷம் கண்மூடித் திறப்பதற்குள் ஓடி மறைந்துவிடும். நானும்

தீரஜ்ஜும் உங்களுக்காக எப்படி காத்துக் கொண்டிருக் கிறோம் தெரியுமா?''

அவன் நிமிர்ந்து பார்த்தான். அக்கண்களில் பயங்கர மான வேதனை தென்பட்டது. ''ஜெயந்தி! உனக்கு தீரஜ் இருக்கிறான். நீங்களிருவரும் சேர்ந்து சந்தோஷமாய் இருக் கீங்க. ஆமாம்! நீ ரொம்பச் சந்தோஷமாய் இருக்கிறாய்'' அவன் ஜெயந்தியை ஏறயிறங்கப் பார்த்தான். ''ஆமாம். உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. நீ அதிக சந்தோஷமா இருக்கிறாய். உடம்பு பூசினாற்போல மெருகோடு இருக் கிறாய். நீ சுகமாய் இருக்கிறாய். நானோ—'' அவன் உள்ளங்கையை மார்பின் மீது வைத்துக் கொண் டான். ''அல்லும் பகலும் உன்னைப் பற்றிய யோசனை யுடன் எப்பொழுது இந்த இருட் குகையிலிருந்து வெளியேற லாம், என் வாழ்க்கையில் ஒளி எப்பொழுது ஏற்படப் போகிறது என்று நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டே யிருக்கிறேன். ஜெயந்தி, உனக்கு தெரியுமா? சில நாட்கள் எவ்வளவு பாரமாய் கழியும் தெரியுமா? எவ்வளவு தடவை காவலாளியைப் பார்த்து 'மணி என்ன?' என்று கேட்டாலும் அரைமணி கூட கழிந்தே இருக்காது. அதான் சொன்னேனே, இது ஒரு இருட்டுக் குகை என்று! எனக்கு விமோசனமே இல்லை...இல்லை. ஜெயந்தி உன் கால் களைப் பிடித்கிறேன், அடுத்த தடவை வரும்போது எனக்கு இத்தனை விஷயத்தைக் கொண்டு வந்து கொடு. தூக்க மாத்திரையாய் இருந்தால் ரொம்ப நல்லது. தூக்கத்தில் உயிர் போய்விடும். இப்படி நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருக்க என்னால் முடியாது! என்னால் முடியாது. என் வருத்தம் உனக்குப் புரியவில்லை''— அவன் கீழே சரிந்து முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினான்.

ஜெயந்தி கம்பிகள் வழியாய் கையை நீட்டி அவன் தலையைத் தடவினாள். ''ரஞ்சன்! தைரியத்தை வர வழைத்துக் கொள்ளுங்கள். ப்ளீஸ்! எனக்காகவும் தீரஜ்ஜிற்

காகவும் நீங்கள் ஜெயிலில் இருக்கீங்க. நான் வெளியே இருக் கேன். அதுதான் வித்தியாசம். நானும் தீரஜ்ஜும் உங்கள் வரவிற்காக எப்படி எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக் கிறோம் தெரியுமா? நான் உங்களையும்விட அதிகமாய் எப்படி நாட்களைக் கணக்கிட்டு கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது.''

அந்தப் பரிவான வார்த்தைகளால் அவன் துக்கம் இரு மடங்காயிற்றே தவிர குறையவில்லை.

''ஜெயந்தி! போய்விடு'' என்றான்.

''நான் போகமாட்டேன். நீங்கள் இப்படி இருந்தால் போவதற்கு எனக்கெப்படி மனம் வரும்?'' என்றாள்.

''நேரமாயிடுத்தும்மா! இனி போங்க''— காவலாளி எச்சரித்தான்.

''ரஞ்சன்! நான் நாளைக்குத் திரும்பவும் வரேன்''

அவன் ஜெயந்தியின் கையைத் தலை மேலிருந்து தட்டி விட்டான். ''வேண்டாம். போய்விடு! இனி வர வேண்டாம். நமக்கு இதுதான் கடைசி சந்திப்பு!''

''அப்படி சொல்லாதீங்க. நான் வரேன்.''

''கிளம்புங்கம்மா'' காவலாளி மறுபடியும் எச்சரித் தான்.

ஜெயந்தி அங்கிருந்து நகரமுடியாமல் நகர்ந்தாள். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே திரும்பினாள். ஐந்தாறடிகள் எடுத்து வைத்து, திரும்பி தாழ்வாரத்தை நோக்கி நடந்தவள் பாம்பைக் கண்டு விட்டவளைப்போல நின்றுவிட்டாள். அங்கே சித்தார்த்தன் நின்று கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அவன் முகம் நீயில் கருகிப்போன காகிதத்தைப் போல இருந்தது. அவன் ஆசைகள், சந்தோஷங்கள் எல்லாம் எரிந்து சாம்பலாகிப் போய்விட்ட ஜீவனில்லாத உணர்ச்சி அது!

''நீங்களா?'' ஜெயந்தி கையை மார்பில் வைத்துக் கொண்டு வாய்க் குமுற கேட்டாள்.

அவன் ஜெயந்தியையே பார்த்தான். அந்தப் பார்வையின் அர்த்தம் அவளுக்குப் புரிந்தது. அதற்குள் உடம்பில் சொரணை வந்துவிடவே தன்னை சுதாரித்துக் கொண்டாள். அடுத்த நிமிஷமே அவனைத் தாண்டி விர்ரென்று அம்பாய் அங்கிருந்து போய்விட்டாள்.

சித்தார்த்தன் தொடர்ந்து ஓடி வந்தான்.

ஜெயந்தி ஜெயில் கேட்டைத் தாண்டி ஓடினாள்.

சித்தார்த்தன் தொடர்ந்து ஓடிவந்து— ''ஜெயந்தி! ஜெயந்தி'' என்று இரைந்து கூப்பிட்டான். ஜெயந்தி நிற்கவில்லை. வேடனைப் பார்த்த மானைப் போல ஓடிக் கொண்டேயிருந்தாள்.

காற்று விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. அந்த காற்றிற்கு சருகுகள் பறந்து கொண்டிருந்தன.

''ஜெயந்தி'' அவன் கூப்பிட்டது பெரிதாய் கேட்டது. வழியில் போய்க் கொண்டிருந்தவர்கள் நின்று திரும்பி வேடிக்கை பார்த்தார்கள், ஓடிக் கொண்டிருந்த அவ்விரு வரையும்.

கடைசியில் ஒரு வழியாய் சித்தார்த்தன் ஜெயந்தியைப் பிடித்துக் கொண்டான். ஜெயந்தியின் கை கைக்கு அகப்பட்டதுமே அவள் தோளைப் பிடித்து வேகமாய் தன் பக்கமாய் திருப்பினான்.

ஓடியதால் ஆயாசப்பட்டுக் கொண்டிருந்த ஜெயந்தியின் கண்களில் தாங்க முடியாத தோல்வியும் ரோஷமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

''நீங்கள்...நீங்கள் இப்படி சி. ஐ. டியைப் போல என்னையே பின்தொடர்ந்து வந்து கொண்டிருப்பீங்கன்னு எனக்குத் தெரியாமல் போய்விட்டது'' அவள் வார்த்தைகள் முடியக்கூடவில்லை.

ஜெயந்தியின் கன்னம் சுளீரென்றது!

சித்தார்த்தனின் தாடை எலும்புகள் இறுகிக் கொண்டன. அவன் ஓங்கி தன் கன்னத்தில் பளீரென்று அறைந்ததுமே ஒரு வினாடி விக்கித்துப் போய் வாய் வார்த்தைப் புரளாமல் நின்றுவிட்ட ஜெயந்தி, உடனேயே அவன் கையை விடுவித்துக் கொண்டு— ''விடுங்க, விடுங்க என்னை'' என்று கத்தினாள்.

சித்தார்த்தன் ஜெயந்தியை விடவில்லை. அத்துடன் எங்கே ஓடிப்போய் விடப்போகிறாளோ என்று அஞ்சி, அக்கையை இன்னும் இறுக்கமாய் அழுத்திப் பிடித்துக் கொண்டான். அந்த பக்கமாய் போய்க் கொண்டிருந்த டாக்ஸியைப் பார்த்து ''டாக்ஸி'' என்று இரைந்து கூப்பிட்டான்.

டாக்ஸி வந்து நின்றது.

''விடுங்கள்'' ஜெயந்தி திமிறிக் கொண்டிருந்தாள். அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ஜெயந்தியை பலமாய் டாக்ஸிக்குள் தள்ளிவிட்டான். தானும் உட்கார்ந்து கொண்டு கதவைச் சாத்திவிட்டு, ''டிரைவர்'' என்று தான் தங்கியிருந்த ஓட்டலின் பெயரை சொன்னான். டாக்ஸி நகர்ந்தது.

ஜெயந்தி டாக்ஸிக்குள் ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டு, அடியுண்ட பூனைக் குட்டியைப் போல பதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்த முகத்தில் அப்படிப் பட்ட ஒரு வருத்தத்தை சித்தார்த்தன் இதற்கு முன்னால் என்றுமே பார்த்ததில்லை. ஜெயந்தியின் முகத்தில் தென்பட்ட இந்த வருத்தத்திற்கு காரணம் ஜெயிலில் இருக்கிற அந்த வயதான ஆள்தான்! அவனுடைய பிரபாவம் ஜெயந்தியின் மீது அவ்வளவு தூரம் இருக்கிறதா? சித்தார்த்தனுக்கு தான் சமுத்திரத்திற்குள் மூழ்கிப் போய்க் கொண்டிருந்தாற் போல இருந்தது. ஜெயந்திக்கும் அவனுக்கும்

இடையே ஒரு பெரிய பள்ளம் வாயைத் திறந்து கொண்டு இருந்தாற் போல இருந்தது.

டாக்ஸி ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. அதற்குள் கொஞ்சம் தேறிக் கொண்டிருந்த ஜெயந்தி அவன் பலவந்தம் இல்லாமலேயே தானே கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.

அவன் டாக்ஸிக்குப் பணம் கொடுத்து விட்டு வரும் வரையிலும் எங்கோ பார்த்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றாள்.

இருவரும் அவன் அறைக்குள் வந்தார்கள்.

"இப்ப சொல்லு" என்றான்.

"எதுக்காக சொல்லணும்?"

அவனிடம் அதற்குள் ஆவேசம் தணிந்துவிட்டது.

"எதுக்காகச் சொல்லணுமா? நான் உன் சிநேகிதனாதலால்! இதுவரை நீ சொல்லாமல் போனதே மிகக் கொடுமை" என்றான்.

ஜெயந்தி ஒரு முறை அவனைப் பார்த்து விட்டுத் தலை குனிந்தாள்.

இனி சொல்லித் தீரவேண்டியதுதான். ஜெயந்தி சொல்லத் தொடங்கினாள்...

* * *

"எனக்கும் சிவரஞ்சனுக்கும் மணமானதுமே பெங்களூரில் புதுக் குடித்தனத்தைத் தொடங்கினோம். ஒரு வருட காலம் எங்கள் வாழ்க்கை அமைதியாய் சந்தோஷமாய் கழிந்தது.

சிவரஞ்சன் பெங்களூரில் 'யூனிவர்சிடி ரிசர்ச் சென்டரில் உத்யோகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்

பொழுதே பிரிட்டிஷ் ஸ்டார் சொஸைட்டியின் சார்பில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிக்கை ஒன்றில் 'பூமிக்கு மிக சமீபத்தில் உள்ள 'மெகலானிக் க்ளீட்' மூன்று நட்சத்திரங்களின் சேர்க்கை' என்ற அம்சத்தின் மீது வாதங்களோடு சிவரஞ்சன் எழுதியிருந்த கட்டுரைக்கு முதல் பரிசு கிடைத்திருந்தது.

அதைத் தொடர்ந்து இன்னொரு கட்டுரையைக் கூட தயாரித்துக் கொண்டிருந்தார். அவருக்குத் தேவையான புத்தகங்களைப் பற்றி லிஸ்ட் எழுதித் தந்தால் அவர் ஆபீசுக்குப் போனபிறகு நான் வீட்டைப் பூட்டிவிட்டு புத்தக வேட்டைக்கு கிளம்பி விடுவேன். பிற்பகல் வேளையில் அவற்றிற்காக லைப்ரெரிகளிலும் நடைபாதைகளிலும் தேடியலைந்து, கஷ்டப்பட்டு வாங்கிக் கொண்டு வருவேன். சில புத்தகங்கள் கிடைக்காது. அவருக்காக டில்லி, பம்பாய், ஐதராபாத், கல்கத்தா போன்ற ஊர்களிலுள்ள புக் சென்டர்களுக்கு அப்புத்தகங்கள் இருக்கிறதா என்று கேட்டு எழுதுவேன். இந்த விதமாய் நாங்களிருவரும் ஒருத்தரைப் பற்றி இன்னொருத்தர் யோசித்து அவர்களுக்குப் பிடித்த காரியங்களைப் பண்ண தவித்துக் கொண்டிருப்போம்.

சிவரஞ்சன் பிரிட்டிஷ் ஸ்டார் சொஸைட்டி மூலமாய் லண்டனில் இருந்த ஒரு இன்ஸ்டிடியூட்டில் வேலைக்கு முயற்சி பண்ணிக் கொண்டிருந்தார். அந்த உத்யோகம் கிடைத்து விட்டால் லண்டனுக்குப் போய் விடவேண்டும். உத்யோகம் ஏறக்குறைய கிடைத்து விட்டாற் போலதான்,

சிவரஞ்சன் எனக்கும் தனக்கும் சேர்ந்து லண்டனுக்குப் போவதற்கு பாஸ் போர்ட்டிற்காக முயற்சிப் பண்ணிக் கொண்டிருந்தார். முதலில் சிவரஞ்சன் மட்டுமே போய்! அப்புறமாய் என்னை அழைத்துக் கொள்வதாய் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அதற்குள் அந்த உத்தேசத்தை கைவிட்டுவிட்டார்.

"ஊஹூம்! இங்கே உன்னைத் தனியாய் விட்டுவிட்டு என்னால் போக முடியாது. அங்கே என்னை தனிமை வாட்டத் தொடங்கிவிடும். சேர்ந்தே போகலாம்" என்றார். எனக்கு மிக சந்தோஷமாய் இருந்தது. என் மனதை அவராகவே புரிந்து கொண்டிருந்தது மிக சந்தோஷத்தைத் தந்தது.

மாதவி என்னைப் பார்க்க வந்தாள். சந்தோஷத்தால் கனவில் மிதந்து கொண்டிருந்த என்னைப் பார்த்துவிட்டு —"உன் சந்தோஷத்தைப் பார்த்தால் எனக்கே பொறாமையாய் இருக்கிறது ஜெய்! என் விஷயத்தை எடுத்துக் கொள்! எங்கம்மா அப்பா என்னை நல்ல பணக் காரனுக்குதான் பார்த்துக் கொடுத்தாங்க. அவருக்கு என்னோடு பேசுவதற்குகூட நேரம் கிடைக்காது. நான் எப்பொழுது பார்த்தாலும் ஃபிரெண்டுங்களை கும்பல் சேர்த்துக் கொண்டு சினிமா ஷாப்பிங் என்று சுற்றிக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

இருபது நாட்களில் எங்களுக்கு பாஸ்போர்ட் வந்து விடும் என்றெண்ணிக் கொண்டிருந்தோம். எல்லா ஏற்பாடு களும் தடையில்லாமல் நடந்து கொண்டிருந்தன. சிவரஞ்சன் சரியாய் சாப்பிடுவது இல்லை. பரபரப்புடன் சுற்றிக் கொண்டிருந்தார். நான் கோபித்துக் கொள்வேன் அன்றைக்கு.

சிவரஞ்சன் பாஸ்போர்ட் சீக்கிரமாய் கிடைப்பதற்கு யாரோ ஒருத்தர் உதவி பண்ணுவதாய் சொன்னார் என்று சொல்லிவிட்டு, மளமளவென்று உடை மாற்றிக் கொண்டு புறப்படவே, நான் அவரைத் தடுத்து கிண்ணத்தில் குழம்பு சாதத்தைப் பிசைந்து எடுத்து கொண்டு வந்து ஒவ்வொரு கவளமாய் அவர் வாயில் தந்தேன்.

"அப்பப்பா! சீக்கிரமாய் போகணும் என்று சொன் னால் கேட்டுக்கொள்ளமாட்டாய்." என்று அலுத்துக் கொண்டார்.

"நீங்கள் காலையில்கூட டிபன் சாப்பிடவில்லை, எப் பொழுது திரும்பி வருவீங்களோ?" என்றேன்.

"வேலை முடிந்ததுமே வந்துவிடுகிறேன்."

"சரி, நீங்கள் வருவதற்குள் போளி பண்ணி வைக் கிறேன்."

"நிஜமாகவா? அதைக்கூட நீதான் ஊட்டணும். அதென்னவோ, உன் கையால் தந்து சாப்பிட்டால் அதன் ருசியே அலாதியாய் இருக்கிறது"— என்றார் குறும்பாய்.

அவர் போய்விட்டார். நான் வாசல் வரையிலும் வந்து வழியனுப்பினேன். அவர் ஸ்கூட்டரில் ஏறிப் புறப்பட்டு கண்மறைவாகும் வரை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் அவ்வாறு தூரமாகிக் கொண்டிருந்தபொழுது என் மனதில் ஏதோ திகிலும், இனம் புரியாத வருத்தமும் ஏற் பட்டன. ஏனோ திரும்பவும் அவரை எப்பொழுது பார்ப் பேனோ என்று மனம் கலக்கமடைந்தது. என்றுமில்லாத வாறு இன்றைக்கு இந்த உணர்ச்சி ஏன்? எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன். நான் அவரை அனுப்பிவிட்டு உள்ளே வந்தேன். அங்கே மேஜை மீது அவருடைய மூக்குக் கண்ணாடியும் பேனாவும் இருந்தன. அந்த பரபரப்பில் அவைகளை மறந்து விட்டுவிட்டுப் போய்விட்டார். நானும் மறந்து விட்டேன். அவருக்கு கண்ணாடி இல்லாவிட்டால் அவஸ்தைதான்! அதோடு ஸ்கூட்டரில் போனால் காற்றிற்கு கண்களில் மண் பறந்து விழும்கூட. என் மீது எனக்கே கோபம் வந்தது. அவருக்கு ஞாபகமறதியாய் இருக்கலாம். அவரைப் பார்த்துக் கொள்ளவேண்டிய நான் இந்த சின்ன விஷயத்தில் கூட அசிரத்தையாய் இருந்து விட்டேன். என் மீது எனக்கே எரிச்சலாய் இருந்தது.

பன்னிரெண்டு மணியாகிவிட்டது. சிவரஞ்சன் சீக்கிர மாய் வந்துவிடுவார், நேரம் இல்லை. நான் சமையலறைக் குள் நுழைந்து போளி பண்ணத் தொடங்கினேன். டைனிங் டேபிள் மீது எங்கள் இருவருக்கும் பிளேட்டுகளை வைத்

தேன். முகம் கழுவிக் கொண்டு, தலைவாரி பின்னிக் கொண்டு, புடவை மாற்றிக் கொண்டு பூ வைத்துக் கொண்டு வந்தேன். அதற்குள் கதவைத் தட்டிய சப்தம் கேட்டது.

பக்கத்து வீட்டு மாமி வந்து— ''உனக்கு போன் வந்திருக்கும்மா'' என்றாள்.

நான் மளமளவென்று போனேன்.

போன் பண்ணியது சிவரஞ்சன்!

''ஜெயந்தி! நான் வீட்டிற்கு வர தாமதமாகும். நீ கவலைப்படாதே'' என்றார்.

''ஏன்?''

''வேலையிருக்கு.''

''என்ன வேலை?''

''வந்த பிறகு சொல்கிறேன்.''

''எங்கிருந்து பேசுகிறீர்கள்?''

அவர் உடனே பதில் சொல்லவில்லை. அந்த மௌனத்தில் ஏதோ தடுமாற்றம் தெரிந்தது.

''சொல்லுங்கள், எங்கேயிருந்து?'' என்றேன்.

''போலீஸ் ஸ்டேஷனிலிருந்து.''

''போலீஸ் ஸ்டேஷனா?'' நான் திடுக்கிட்டுப் போனேன்.

''ஆமாம். கவலைப்படாதே! ஒரு சின்ன மிஸ்டேக் நேர்ந்து விட்டது.''

''என்ன மிஸ்டேக்?''

''நான் வந்து சொல்கிறேன். பயப்படவேண்டாம்.''— அதற்குள் ஜெயந்தியின் குரலில் பதற்றத்தை கவனித்து விட்டுச் சொன்னான்.

''போலீஸ் ஸ்டேஷன் எங்கே?''

அவன் சொன்னான்.

''தூரம் ஒன்றுமில்லையே, நான் வரேன்.''

''சீ, சீ, நீ வேண்டாம். இப்படிப்பட்ட பைத்தியக்கார காரியங்களைப் பண்ணாதே! எனக்கு கோபம் வந்து விடும். நான் வந்துவிடுவேன். பயப்படத் தேவையில்லை. சின்ன மிஸ்டேக், அவ்வளவுதான்.''

''என்ன மிஸ்டேக்?''

''என்னால் போனில் சொல்லமுடியாது. வந்து சொல்கிறேன். பயப்படாதே, தைரியமாய் இரு.''

''சரி.''

அவர் போனை வைத்துவிட்டார்.

நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அவருக்காகக் காத்திருக்கத் தொடங்கினேன்.

என் வாழ்க்கையில் அந்த சமயத்தில் ஒரு எரிமலை வெடித்துவிட்டது என்றும் அதன் நெருப்புக்குழம்பு என் வாழ்க்கையின் மீது பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி விட்டது என்றும் எனக்கு தெரியாது. அந்த சம்பவம் என்னை என் கணவரிடமிருந்து பிரித்துவிடும் என்று எனக்கு தெரியாது.

நான் அவருக்காகக் காத்திருந்தேன்.

நேரம் கழிந்தது,

இரவு ஏழு மணியாகி விட்டது.

சிவரஞ்சன் வரவேயில்லை.

ஒன்பது மணியும் ஆகிவிட்டது. என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

வீட்டைப் பூட்டிவிட்டு பக்கத்து வீட்டு மாமியிடம் போனேன். மாமியின் கணவர் ரெவின்யூ டிபார்ட்மென்டில்

அஸிஸ்டென்ட் செக்ரட்டரியாய் வேலை பண்ணிக் கொண்டிருந்தார்.

நான் போனபொழுது அவர்கள் அப்பொழுதுதான் படுக்கப் போய்க் கொண்டிருந்தார்கள். நான் அவரிடம் நடந்ததையெல்லாம் சொன்னேன். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணினார். அங்கே போலீஸ் அதிகாரி டியூட்டி மாறிவிட்டாராம். இப்பொழுது டியூட்டிக்குப் வந்தவர் எங்கேயோ கொலை நிகழ்ந்ததால் அவசரமாய் போய் விட்டாராம். சரியாய் பதில் சொல்லவில்லை. போனை வைத்து விட்டார். நான் அவரை என்னோடு துணைக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொன்னேன். அவருக்கு சிவரஞ்சனை நன்றாய் தெரியும். மாமிகூட, ஷர்ட்டை எடுத்து தந்து விட்டு ''போயிட்டு வாங்க'' என்றாள்.

''நான் மட்டும் போயிட்டு வரேம்மா, நீ எதுக்கு?'' என்றார் அவர்.

''நானும் வரேன்'' என்றேன் எழுந்திருந்து. இங்கே இவ்வாறு உட்கார்ந்திருப்பது எனக்கு நிம்மதி இல்லாமல் இருந்தது.

நானும் மாமாவும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம். அங்கிருந்த போலீஸ் அதிகாரி சிவரஞ்சனின் பெயரையும் விவரங்களையும் கேட்டுவிட்டு ரெஜிஸ்தரில் அதற்கு முன்னால் பதிவாகியிருந்த கேசைப் பார்த்து விட்டு ''சிவரஞ்சன், பலகொலைகளையும், மானபங்கங்களையும் பண்ணி, வெளிநாடுகளுக்கு உளவாளியாய் வேலை பண்ணிக்கொண்டு, நம் நாட்டுப் பாதுகாப்பு ஆயுதங்களின் ரகசியங்களை பகிரங்கப்படுத்தி வந்த ஒரு முக்கிய நபரோடு சேர்ந்து பிடிபட்டிருக்கிறான். போலீசார் அரெஸ்ட் பண்ணி அந்த முக்கிய நபரோடு இவனையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்'' என்றார்.

நான் வாயடைத்துப் போய் விட்டேன்,

''என் கணவர் அப்படிப்பட்டவர் இல்லைங்க.'' என்றேன்.

''ஒவ்வொரு கொலைகாரனின் மனைவியும் இப்படியே தான் சொல்லுவாள்'' என்றார் அவர்.

''என் கணவர்...'' என்று நாங்கள் லண்டனுக்குப் போக விருந்த விஷயங்களைச் சொன்னேன்.

''எல்லோரும் பெரிய மனுஷங்கள்தான் அப்படி பிடிபட்டவங்களில் ரெண்டு பேர் டாக்டருங்க, நாலு பேர் லாயருங்க, ஒரு இஞ்ஜினீயர் இருக்காங்க, மானபங்கம், கொலை பண்ணிய நபர் கூட ரெண்டு கோவில்களைக் கட்டியிருக்கிறான்'' என்றார் ஏளனமாய்.

''என் கணவர் எங்கே இருக்காருன்னு சொல்லுங்க, ஒரு தடவை பேசுகிறேன்'' என்றேன்.

''எங்களுக்குத் தெரியாதும்மா. உன் கணவர் நிஜமாய் குற்றமற்றவராயிருந்தால் கண்டிப்பாய் விடுதலை பண்ணி விடுவாங்க. கவலைப்படாதீங்க.''

''ஆனால், ஒரு தடவை அவரோடு பேசவாவது விடுங்கள்'' போனைப் பார்த்துக் கொண்டே ஆசையாய் கேட்டேன்.

''முடியாதுன்னு சொல்லிவிட்டேனா இல்லையா? அவங்களை எங்கே வைத்திருக்காங்கன்னு எனக்கு தெரியாது. ஏதும் அறியாதவர் என்று சொன்னால் உன் கணவன் அந்த ஆளின் அறையில் ஏன் இருந்தானாம்?'' போலீஸ் அதிகாரி என்னையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை சந்தேகத்துடன் பார்த்தார்.

''எனக்கு தெரியாதுங்க'' என்றேன்.

போலீஸ் அதிகாரி கேலியாய் சிரித்தார்.

''வீட்டில் பெண்களுக்குத் தெரியாமல் ஆண்கள் வெளியே நிறைய வேலைகளைப் பண்ணிட்டிருப்பாங்க.

வேறென்ன? அவரு வீட்டுக்கு வர வரைக்கும் காத்திட்டிரு'' அவர் குரலில் கௌரவம் ரவையளவும் இல்லை,

அதற்குள் போன் வந்தது. அவர் அவசரமாய் ஜீப்பில் போய் விட்டார்.

''இனி போகலாம் வாம்மா! நாளை காலையில் அவனே வீட்டிற்கு வந்துவிடுவான்'' என்றார் மாமா.

நான் வீட்டிற்கு வந்து விட்டேன். மாமி நடந்ததை யெல்லாம் கேட்டுவிட்டு ''ஐயோ! ஐயோ!'' என்று கன்னத்தில் இடித்துக் கொண்டான்.

நான் கதவைச் சாத்திவிட்டு வீட்டிற்குள் வந்து உட்கார்ந்து கொண்டேன். இரவெல்லாம் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தேன். இரவு வெகு பாரமாய் மிக மெதுவாய் கழிந்தது.

சீக்கிரம் விடியாதா என்றிருந்தது.

மிக கஷ்டப்பட்ட பிறகு, வெகு நேரங்கழித்து பறவை களின் கலகல சப்தம் கேட்டது. கிழக்கே வானம் வெளுக்கத் தொடங்கிற்று. உதய பாஸ்கரன் மெதுவாய் வெளிவந்தான். மிக நிதானமாய் ஆறு மணி ஆயிற்று. பால் காரன் கதவை தட்டினான். ஆனால் என் வாழ்க்கையில் மிக அந்தகாரம் பரவியிருந்த நாள் அது!!

மறுநாளும் கழிந்து போய்க் கொண்டிருந்தது.

சிவரஞ்சன் வரவில்லை. குறைந்தது போன் கூட பண்ணவில்லை. அவர் ஜாடையே காணோம். அவர் எங்கேயிருக்கிறார் என்ற விஷயம்கூட தெரியவில்லை. மாலை ஆயிற்று.

என் மனமெல்லாம் கலங்கிப் போயிருந்தது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்க் கேட்டபொழுது ''அவர் அரெஸ்ட் ஆகிவிட்டார். எங்கே இருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியாது'' — என்றார்கள்.

அந்த பிரமுகரான 'சண்முகம்' என்பவரையும் அவருடைய கையாட்களையும் அரெஸ்ட் பண்ணிய விஷயத்தை மிகவும் ரகசியமாய் வைத்துக் கொண்டிருந் தார்களாம். பத்திரிக்கை நிருபர்களுக்கு கூட தெரியப் படுத்த விடவில்லை.

நான் பாரமாய் வீட்டிற்குத் திரும்பி வந்தேன். மாமா நிறைய முயற்சி செய்தார். சிவரஞ்சனைக் காணவில்லை. லாயரைக் கலந்தாலோசித்து, அவரோடு சேர்ந்து போய் பேசிப் பார்த்தார். அவர் மூலமாய் கொஞ்சம் செய்தி தெரிந்தது. சிவரஞ்சனை எங்கேயோ ஒரு ஜெயிலில் அந்த சண்முகத்தோடு சேர்த்து வைத்திருக்கிறார்களாம். சிவரஞ்சன் க்ஷேமமாகவே இருக்கிறாராம். அந்த கேசு முடி வடைந்த பிறகுதான் சிவரஞ்சன் விடுதலையாக முடியும். அந்த சண்முகத்தோடு அவனுக்கு உதவி பண்ணுகிற கை யாட்கள் இருபது பேர்களுக்கு மேல் அரெஸ்ட் ஆகியிருக் கிறார்களாம். அவர்கள் யாருக்குமே ஜாமீன் கொடுக்கும் பேச்சே இல்லையாம்!

நான் தைரியமாய் இந்த ஆபத்தை எதிர்த்து நிற்கத் துணிந்து விட்டேன். எப்படியாவது ஒரு தடவை சிவரஞ்ச னைச் சந்திக்க வேண்டும். அவரோடு பேசவேண்டும் என்று என் உயிர் தவித்துக் கொண்டிருந்தது.

நான் மாமாவின் மூலமாய் ஒரு போலீஸ் அதிகாரியைச் சந்தித்தேன். சிவரஞ்சன் அரெஸ்ட் ஆன விஷயத்தை சொல்லி— ''நான் க்ஷேமமாய் இருக்கிறேன். தைரியமாய் இருங்கள். உங்கள் க்ஷேமத்தைப் பற்றி எழுதுங்கள்— ஜெயந்தி'' என்று எழுதிய காகிதத்தை சிவரஞ்சனிடம் தரச் சொல்லி வேண்டிக் கொண்டேன். அவர் அதை வாங்கிக் கொண்டார்.

ஒரு வாரங் கழித்து தபாலில் ஒரு கடிதம் வந்தது. சிவரஞ்சன் எழுதியது. அதைப் பார்த்ததுமே சந்தோஷத்

தால் எனக்கு பைத்தியமே பிடித்து விட்டாற்போல ஆகி விட்டது.

அதில் இவ்வாறு இருந்தது—

''ஜெயந்தி!

நான் ஷேமமாய் இருக்கிறேன். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. நீ தைரியமாய் இருப்பது எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது. ஏனென்றால் என் திகிலெல்லாம் உன்னைப் பற்றியேதான்! நீ எப்படி தாங்கி கொள்வாயோ என்றுதான்! இப்படி ஆபத்தில் சிக்கிக் கொண்டது நம் துரதிர்ஷ்டம் என்றுதான் தோன்றுகிறது! நமக்கு விஸா சீக்கிரமாய் கிடைத்துவிடும் என்றும் உதவி பண்ணுவதாவும் சொல்லி அன்றைக்கு வரச் சொன்னதால் நான் சாரதி என்னும் அவரிடம் போனேன். அவர் போன் பண்ணி சொல்லுவதாய் சொன்னார்.

நான் திரும்பி வந்துக் கொண்டிருந்தபொழுது அவர் ஒரு கவரை என்னிடம் தந்து—''எவரெஸ்ட் ஓட்டலில் எட்டாம் நம்பர் அறையில் சண்முகம் என்று ஒருவர் இருப்பார், அவரிடம் இந்தக் கவரைக் கொஞ்சம் தந்துவிட்டுப் போ''— என்றார்.

நான் கவரை வாங்கிக் கொண்டேன்.

''நான் எல்லாவற்றையும் போனில் சொல்லிவிட்டேன். நீ கவரைத் தந்துவிட்டுப் போய்விடு, வேறொன்றும் சொல்லத் தேவையில்லை'' என்றார்.

''சரி சார்'' என்றேன்.

நான் ஓட்டலுக்கு வந்து எடடாம் நம்பர் அறையைத் தட்டினேன். கருப்பாய் குள்ளமாய் இருந்த ஒருவன் வந்து கதவைத் திறந்தான்.

''சண்முகம் வேண்டும்'' என்றேன்.

''உள்ளே வாங்க'' என்பதுபோல கையை ஆட்டினான். நான் உள்ளே போனேன். அந்த ஆள் வெளியே போனான்.

உள்ளே யாரும் இல்லை. நான் நின்று கொண்டிருந்தேன். அதற்குள் பாத்ரும் கதவைத் திறந்து கொண்டு சிவப்பாய், உயரமாய் ஒல்லியாய் இருந்த ஒருவன் வந்தான்.

அவன் என்னைப் பார்த்து விட்டுப் பொருள் பொதிய நின்றான்.

''சாரதியிடமிருந்து வந்தேன்'' என்று கவரை ஜேபியிலிருந்து எடுத்தேன். அவன் கையை நீட்டினான். நான் தந்து கொண்டிருந்தேன். அதற்குள் தடாலென்று கதவைத் திறந்துக் கொண்டு நான்கு பேர்கள் வந்தார்கள். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

''சண்முகம், ஹேண்ட்ஸ் அப்'' என்றார்கள்.

எதிர்பாராத இச்சம்பவத்தால் அவன் நான் தந்து கொண்டிருந்த கவரை வாங்கிக் கொள்ளவில்லை. ஓரடி பின் வாங்கினான். உடனே அவனும் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்தான். நான் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே அவனுக்குப் பின்னால் இருந்த பால்கனியிலிருந்து இருவர் பாய்ந்து வந்து பின்னாலிருந்து அவனைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். அவர்களுள் இன்னொருத்தன் என் கைகளைப் பின்னுக்கு சேர்த்து கட்டினான். என் கைகளில் கூட விலங்கிட்டார்கள்.

ஒரு ஆபீசர் என் கையிலிருந்த கவரைப் பிடுங்கிப் படித்துப் பார்த்தான். என் கன்னத்தில் ஓங்கி அடித்தார். எனக்கு தலை சுற்றிற்று. போலீசார் இன்னும் நிறைய பேர் புலுபுலுவென்று வந்தார்கள். இன்னும் நாலைந்து பேர்களை விலங்கிட்டு அழைத்து வந்தார்கள் அங்கே.

எங்கள் எல்லோருடைய கண்களிலும் துணியைக் கட்டிக் கீழே அழைத்துக் கொண்டு வந்து வேனிற்குள் ஏற்றினார்கள். அங்கிருந்து எங்கள் எல்லோரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார்கள். எங்கள் விவரங்களை குறித்துக் கொண்டார்கள். கையொப்பமிட்டோம். அங்கிருந்துதான் உனக்கு போன் பண்ணினேன்.

அவர்கள் ஒரு வேனுக்காகக் காத்துக் கொண்டு எங்களை அங்கே நிறுத்தி வைத்திருந்ததால், அந்த சமயத்தில் உன்னோடு போனில் பேசமுடிந்தது என்னால்.

சண்முகத்தை எனக்கு தெரியவே தெரியாது என்று நான் சொன்ன பொழுது யாரும் நம்பவில்லை என்னை. சாரதிக்கு போன் பண்ணச் சொன்னேன். அவர் சொன்னால் விட்டுவிடுவார்கள் என்றெண்ணினேன். ஆனால் அவர் சிவரஞ்சன் என்று யாரையுமே எனக்கு தெரியாது. நான் யாரிடமும் கவரைத் தரவில்லை. எல்லாம் பொய் என்றார்.

நான் மனமுடைந்து போய்விட்டேன். "பொய்" என்றேன். "அதுதான் எங்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொல்லை. இதில் யார் பொய் சொல்றாங்கன்னு தெரியலை எங்களுக்கு" என்றார் போலீஸ் அதிகாரி. இதெல்லாம் குழப்பமாய் இருந்தது. அதற்குள் வேன் வந்தது. அதற்குள் எங்களை ஏற்றுவதற்கு முன்னால் பலவந்தமாய் இஞ்ஜெக்ஷன் குத்தினார்கள். எனக்கு தூக்கம் வந்துவிட்டது.

விழித்துக் கொண்டு பார்த்தபொழுது இங்கே இருந்தேன். என் கைக்கடியாரத்தில் தேதியைப் பார்த்த பொழுது ஒருநாள் ஆகியிருந்தது. நான் எந்த தப்பும் பண்ணவில்லை. குற்றமற்றவன். நான் இதிலிருந்து மீண்டும் வெளியேறிவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஜெயந்தி, தைரியமாய் இரு. மனிதனுக்கு வாழ்க்கையில் அவ்வப்பொழுது இப்படிப்பட்ட பரிசோதனைகள் எதிர்ப்பட்டுக் கொண்டிருக்கும். இந்த சமயத்தில்தான் தைரியமாய் இருக்கவேண்டும். இதைத் தவிர என்னால் வேறென்ன பண்ணமுடியும்? இந்த விசாரணை சீக்கிரமாய் முடிந்துவிட்டால் நன்றாயிருக்கும். நீ இந்த கடிதத்தை எப்படிதான் அனுப்பினாயோ எனக்கு தெரியவில்லை. காவல்காரன் கொண்டு வந்து கொடுத்தான். இதைப் பார்த்ததும் எனக்குத் தாங்க முடியாத சந்தோஷம் ஏற்

பட்டது. ஜெயந்தி என்னவென்று சொல்லுவேன்? நான் உன்னை காதலிக்கிறேன் என்று சொல்வதா? ஊஹூம், அந்த வார்த்தைகள் மிக சாதாரணமாய் இருக்கின்றன. இவ்வளவு நாளாய் எண்ணிக் கொண்டிருந்தேன்—எனக்கு இந்த பூகோள சாத்திரமும் நீயும் இரு கண்கள் என்று. ஆனால் இப்பொழுது தெரிகிறது—நான் உயிரோடிருப்பது உனக்காகவேதான் என்று! பார்த்தாயா! இந்த ஆபத்து ஏற்பட்டிருக்காவிட்டால் எனக்கு இந்த சத்தியமே தெரிந்திருக்காது அல்லவா? ஜன்னல் வழியாய் தென்படுகிற இந்த வானத்தையெல்லாம் ஒரு பேப்பராக்கி அதன் மீது உனக்குக் கடிதம் எழுத வேண்டும்போல தோன்றுகிறது. பார்த்தாயா! என்னால் கூட ரொமான்ட்டிக்காய் யோசிக்க முடியும் போலும்! இந்த சிறைவாசம் எத்தனையோ புதிய விஷயங்களைத் தெரியப்படுத்துகிறது. நான் தனிமையால் வருந்தவில்லை. ஏனென்றால் எனக்கு துணையாய் நீ எனக்கு அருகிலேயே இருக்கிறாய் அல்லவா? பதில் எழுது ஜெயந்தி. தைரியமாய் இருப்பதாய் எனக்கு வாக்குக் கொடு.

உன்
சிவரஞ்சன்

நான் அக்கடிதத்தைப் படித்துவிட்டு அழுது தீர்த்து விட்டேன். அன்றிரவெல்லாம் உட்கார்ந்து விரிவான கடிதம் ஒன்றை எழுதினேன்.

மறு நாள், முதல் தடவை நான் கடிதம் எழுதி அனுப்பிய போலீஸ் அதிகாரியிடம் போய் அதைத் தந்தேன்.

அவர் அதைப் பார்த்துவிட்டு— "இதென்னம்மா?" என்றார்.

"என் கணவருக்குக் கடிதம் சார்" என்றேன்.

"இவ்வளவு பெரியதையெல்லாம் என்னால் அனுப்ப முடியாதும்மா! ஏதோ அப்பொழுது க்ஷேமத்தைத் தெரியப்

படுத்துவதற்கு ஒரு வரி என்று சொன்னதால் சரி என்றேன்''— என்றார்.

நான் அரும்பாடுபட்டு சுருக்கி ஒரு பக்கத்திற்குள் எழுதித் தந்தேன். என் துரதிர்ஷ்டம்! அடுத்த வாரத் திலேயே அவர் ட்ரான்ஸ்ஃபர் ஆகி, எனக்கு அந்த ஆதாரம் கூட போய்விட்டது. சிவரஞ்சனிடமிருந்து அதற்கு பிறகு கடிதம் இல்லை.

நான் ஒரு லாயரைத் தஞ்சமடைந்தேன். அவர் முயற்சி பண்ணிவிட்டு— ''உன் கணவர் ஒரு பயங்கரமான ஆளுடன் சிக்கிக் கொண்டிருக்கிறார். அந்த சண்முகத்தின் மீது தேசத் துரோகம் கேசு மட்டுமில்லை, கொலை, மான பங்க கேசுகள்கூட இருக்கின்றன. அந்த கவரைத் தந்து பிடிபட்டதால் சிவரஞ்சனை அவர்களால் நம்பமுடிய வில்லை. அந்த கவரில் நாம் யுத்தத்தில் பயன்படுத்தும் ஆயுதங்களைப பற்றிய விவரம் இருந்தது'' என்றார். நான் தளர்ந்து போய்விட்டேன்.

''நான் ஒரு தடவை அவரைப் பார்க்க வழி பண்ணி தாருங்கள்'' என்று லாயரிடம் வேண்டிக் கொண்டேன்.

''நான் முயற்சி பண்றேம்மா. அதற்கு கொஞ்சம் பணம் செலவாகும்'' என்றார் அவர். நான் அவர் கேட்ட பணத் தைத் தந்தேன்.

மூன்று மாதங்கள் கழிந்துவிட்டன. நான் சிவரஞ்ச னைப் பார்க்க இதோ, அதோ என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேனேயொழிய பார்க்கவே முடியவில்லை. லாயர்— ''அவரை ஒரு இடத்தில் வைத்திருக்கவில்லை. அந்த சண்முகம் கும்பலோடு மத்யபிரதேசம், ஹரியானா, குஜராத் முதலிய அவர்கள் குற்றம் பண்ணிய இடங்களுக் கெல்லாம் இழுத்துக் கொண்டு போகிறார்கள்! இப்படி பிடிப்பட்டவங்களைத் தவிர அவங்க கும்பலில் இன்னும் நிறைய பேர் கூட இருக்காங்களாம். அவங்களில் யாரைப் பற்றியாவது நாம்ப ஒன்றிற்கு இரண்டு தடவையாய் கேட்டுவிட்டால் போதும், நம்மை சந்தேகப்படுகிறார்கள்'' என்றார். லாயரின் புண்ணியத்தில் எங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்து மட்டும் நடந்து கொண்டிருந்தது. அது ஒன்றுதான் எங்களிருவருக்கும் ஆதாரம்.

ஒரு முறை சிவரஞ்சன் தன் விஷயம் இப்போதைக்கு முடியாது என்றும், தன்னைப் பற்றி பயப்பட வேண்டாம் என்றும், சென்னையிலிருக்கும் உன் தாய் வீட்டிற்குப் போய் இருந்து கொள் என்றும் கடிதம் எழுதினார்.

என்னிடம் கையில் பணம்கூட இல்லை! அந்த ஊரில் எனக்கு உதவி பண்ணுகிறவர்கள் கூட இல்லை. அதனால் வேறு வழியில்லாமல் நான் வீட்டை காலி பண்ணிவிட்டு அம்மாவின் வீட்டிற்கு சென்னைக்கு வந்துவிட்டேன்.

எனக்கு மாதம் தவறிற்று. நான் தாயாகப் போகிறேன் என்ற செய்தி எனக்கு சந்தோஷத்தைக் காட்டிலும் துக்கத்தைத்தான் தந்தது. மூன்று மாதங்களுக்கு பிறகு அரும்பாடுபட்டு என்னால் சிவரஞ்சனை சந்திக்க முடிந்தது. அவர் சென்னை சிறையில் இருந்தார். நான் அவரைச் சந்தித்தேன். அவர் உற்சாகத்துடன்தான் இருந் தார். இதெல்லாம் ஒரு தீய கனவு என்றார். சீக்கிரத் திலேயே விடுதலையாகி விடுவேன் என்றார்.

விசாரணை நடந்து கொண்டிருந்தது.

ஒரு மாதங் கழித்து விசாரணை முடிவடைந்தது.

சண்முகத்திற்கு மரண தண்டனை விதித்தார்கள். அவனுடைய கையாட்களுக்கு ஆயுள் தண்டனை விதித் தார்கள். அந்தப் பெயர்களில் சிவரஞ்சனின் பெயரும் இருந்தது. இந்த தீர்ப்பைக் கேட்டதுமே நான் தளர்ந்து போய்விட்டேன். சிவரஞ்சனை எஞ்சியவர்களுடன் சேர்த்து பூனா சிறைச் சாலையில் வைத்தார்கள்.

நான் பூனாவுக்கு போனேன்.

இம்முறை சிவரஞ்சன் ஒரேடியாய் நொடிந்துப் போய் விட்டிருந்தார். ''நாம்ப துரதிர்ஷ்டசாலிகள்'' என்றார்.

''நான் லாயரை வைக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்ளை பண்ணலாம்'' என்றேன்.

''அவ்வளவு பணம் ஏது நம்மிடம்? அது ஒரு புலி. இதில் ஆழமாய் புதைந்து போய் விட்டேன் நான். எனக்கு விமோசனம் இல்லைன்னு என்று தோன்றுகிறது.'' என்றார். நான் கேட்கக் கூடாதவர்களையெல்லாம் கூட கைநீட்டி யாசித்தேன். யாருமே எனக்கு உதவி பண்ண வில்லை. என்னால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இந்த வருத்தமே என்னைப் பிடுங்கி தின்று கொண் டிருந்தது. நான் எப்பொழுது பார்த்தாலும் ஓவியத்தைப் பார்த்துக் கொண்டு கடடிலில் படுத்துக் கிடந்தேன். அம்மா என்னைக் கண்டிப்பாள்.

''நிறைமாத பிள்ளைத்தாய்ச்சி, இப்படி இருந்தால் பிரசவம் எவ்வளவு கஷ்டமாகி விடும் தெரியுமா? இன்னும் ஆபரேஷன் அது இது என்று ஏதாவது ஆகிவிட்டால் எவ்வளவு பணச் செலவு ஆகும். என்று யோசித்துப்பார். எங்களிடமோ சல்லிக் காசு இல்லை. ஏற்கனவே உன் அண்ணி கண்டபடி திட்டிக் கொண்டிருக்கிறாள்'' என்றாள். நான் எழுந்து நடமாடத் தொடங்கினேன்.

எனக்கு பிரசவம் ஆயிற்று. தீரஜ் பிறந்தான். நான் இந்த விஷயத்தை சிவரஞ்சனுக்கு எழுதினேன், அவரிட மிருந்து உடனே பதில் வரவில்லை. வெகுநாட்களுக்கு பிறகு கடிதம் வந்தது. அதில் தன் நிலைமை நன்றாய் இல்லை என்றும் உடனே பதில் எழுத முடியாததற்கு ஒன்றும் நினைத்துக் கொள்ள வேண்டாம் என்றும், தன்னை தப்புச் சொல்ல வேண்டாம் என்றும் எழுதினார். அக்கடி தத்தைப் படித்ததும் என் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வழிந்தது! அக்கடிதத்தின் மூலம் அவர்

பட்டுக்கொண்டிருந்த தனிமைத் துன்பம் நன்றாய் புரிந்தது. அந்த நிலைமையில் இருக்கும் ஒரு மனிதனால் மகன் பிறந்த சந்தோஷத்தை எப்படி வெளிக்காட்ட முடியும்? அவருக்கு இப்பொழுது வேண்டியது அபரிமிதமான மனோ பலம்! அதை அவருக்கு நான்தான் வழங்க வேண்டும்! என் வருத்தம், என் கண்ணீர், என் கஷ்டம் எல்லாம் அதற்கப் பாற்பட்ட விஷயங்கள். எனக்கு வேண்டியது சிவரஞ்சன்! நான் அவரை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

நான் அவருக்கு மிக அன்பாய் கடிதங்கள் எழுதத் தொடங்கினேன். அவருக்குப் பிடித்தமான புத்தகங்களை அனுப்பினேன். அவை கிடைத்ததுமே அவர் பதில் எழு தினார். இம்முறை அக்கடிதத்தில் தனிமைத் துன்பம், நிராசை இல்லை. இன்னும் அவருக்கு வேண்டிய புத்தகங் களைப் பற்றி எழுதினார். நான் அவற்றிற்காக வேட்டை யாடத் தொடங்கினேன். அவருடைய சில கடிதங்களைப் படிக்கும் பொழுது என் இதயமே வெடித்து விடும். ''ஜெயந்தி! எவ்வளவு நாட்களுக்கு எனக்கு இந்த நரகம்? என் படிப்பு, என் வெளிநாட்டுப் பிரயாணம் இதெல்லாம் என்னவாகிவிட்டது? இந்த ஜெயிலிலிருந்து எனக்கு விடு தலையே இல்லையா? என்ன தப்புப் பண்ணினேன் என்று எனக்கு இந்த தண்டனை? இங்கே நாலுபேர் சேர்ந்து இருக்கிறோம். எஞ்சிய இருவரும் கொலைகாரர்கள். ஒருத்தன் புத்தி சுவாதீனம் இல்லாதவன். அவர்கள் பேசும் ஆபாச வார்த்தைகளையும், விகாரமாய் சிரிக்கும் சிரிப்புக் களையும் கேட்கும் பொழுது இந்த ஜெயில் கம்பிகளை உடைத்துக் கொண்டாவது வெளியே ஓடிப் போய் விட வேண்டும் போலிருக்கும். இந்த நரகத்திலிருந்து என்னை காப்பாற்றுபவர்கள் யாருமே இல்லையா ஜெயந்தி? நீயாவது அந்த காரியத்தைச் செய். என்னை இந்த சிறையிலிருந்து விடுதலை பண்ணு. சில நாட்கள் இப்படியே இருந்தால் எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது.''

அக்கடிதம் என் ஆதரவின்மையை இருமடங்காக்கிற்று. என்னால் என்ன பண்ணமுடியும்? வெட்கத்தை விட்டு யாசித்த போதிலும் யாருமே எனக்கு எதுவும் பண்ண வில்லை. அதோடு என்னோடு பேசினால் தம் குடும்ப மானம் போய் விடும் என்று என்னைவிட்டு விலகிப் போய்க் கொண்டிருந்தார்கள் வேறு.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நான் அவரை பார்க்கலாம் அந்த தேதியை நான் மிகவும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் வருத்தத்தைப் பார்த்து நான் அவரைத் தேற்றத் தொடங்கினேன். ''பாருங்கள்! எத்தனையோ பேரின் கணவர்மார்கள் ஏதாவது உத்யோகத்தின் காரணத்தினால் மனைவிகளை விட்டு தொலைவில் இருக்கிறார்கள். நீங்களும் கூட அப்படியே இருப்பதுபோல நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கட்டுரைகளுக்கு நிறைய தனிமை வேண்டும். அதனால்தான் கடவுள் இப்படி செய்திருக்கிறாரோ என்னவோ? உலகத்திற்கு உங்களிடமிருந்து நன்மை ஏற்படவேண்டும் என்று இருக்கிறது போலும்! ஆனாலும் இந்த உலகமே ஒரு பெரிய ஜெயில்தான்! எங்கேயிருந்தாலும் ஒன்றுதான். யாருடைய விருப்பப்படிதான் என்ன பண்ணிவிடமுடிகிறது?'' என்று வாயில் வந்தபடி ஏதேதோ சொல்லி தேற்றுவேன்.

நான் கவனித்துக் கொண்டே வந்தேன். அவரிடம் ஏதோ சக்தி தோன்ற தொடங்கிற்று. அவர் கவனமெல்லாம் எழுத்தின் மீது படிந்தது.

பார்த்துக் கொண்டிருந்தபொழுதே காலம் கழிந்து போய்க் கொண்டிருந்தது. அதற்கு நடுவில் அம்மா இறந்து விட்டார். அம்மா போனதுமே அண்ணி என்னை வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டாள். தீரஜ் அப்பொழுது நன்கு வயது குழந்தை. வேறுவழியில்லை, தனியாய் வந்து விட நேர்ந்தது.

தனியாய் இருந்த என்னைப் பார்த்து உலகம் பல விதமாய் பேசிற்று. என் மீது பலவித அபவாதங்களைச்

சுமத்திற்று. அத்துடன் பொருளாதார கஷ்டம் என்னை வாட்டிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் சிறு குழந்தை. இன்னொரு பக்கத்தில் நான் அனுப்பும் புத்தகங்களை ஆயிரம் கண்களுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கணவர்! அவரை நான் காப்பாற்ற வேண்டும். அல்லும் பகலும் இதே கவலை எனக்கு. சில சமயம் ஊருக்குப் போவதற்கும் புத்தகங்கள் வாங்குவதற்கும் கூட கையில் பணம் இருக்காது. அரும்பாடுபட்டு சமாளிக்க வேண்டியிருக்கும். நான் இயந்திர கதியில் வாழ தொடங்கினேன். சிவரஞ்சனுக்காக காத்திருக்கத் தொடங்கினேன். தீரஜ் தந்தைக்காக ஏங்கிய பொழுது சிவரஞ்சன் மேஜர் உடையிலிருந்த போட்டோவை காட்டி 'டாடி யுத்தரங்கத்தில் மிலிடரியில் வேலை பண்ணுகிறார். யுத்தம் முடிந்ததும் வந்து விடுவார்' என்று சொல்வேன். உலகம் பழிக்கிறது. ஆனால் நானும் சிவரஞ்சனும் எந்த தப்பும் பண்ணவில்லை. இந்த உணர்ச்சிதான் என்னை உலகத்தாருக்கு முன்னால் தலை நிமிர்ந்து நிற்கும்படி செய்து கொண்டிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்னால்— அதாவது காந்தி ஜெயந்தி அன்றைக்கு சில கைதிகளை விடுதலை பண்ணப் போகிறார்கள் என்றும், அதில் சிவரஞ்சனீடம் பெயர்கூட இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை கேட்டு நாங்கள் சந்தோஷமடைந்தோம். ஆனால் அப்புறமாய் தெரிந்தது, அந்த லிஸ்டில் சிவரஞ்சனின் பெயர் இல்லையாம்!

மற்றொரு முறை விடுதலை பண்ணப் போகும் லிஸ்டில் யாருடைய செல்வாக்கையோ பயன்படுத்திக் கொண்டு தன் பெயர் வரும்படி செய்து கொண்டிருக்கிறாராம். திரும்பவும் காத்திருப்பது! ஒருக்கால் காத்துக் கொண்டிருப்பதிலேயே எங்களிருவரின் வாழ்க்கையும் முடிந்து விடுமோ என்னவோ? சித்தார்த்தன்! இதுதான் என் வாழ்க்கை! நான் ஊருக்குப் போகும் ரகசியமும் இதுதான்'' ஜெயந்தி சொல்லி முடித்தாள்.

சித்தார்த்தன் கைகளை கட்டிக் கொண்டு, ஜன்னல் கம்பிகளில் சாய்ந்து கொண்டு நின்றிருந்தான். ஜெயந்தி கண்களை துடைத்துக் கொண்டாள். அவனுக்கு ஒரு வாழ் நாள் காலமே கண்களுக்கெதிரே தென்பட்டாற்போல இருந்தது.

ஜெயந்தி இப்பொழுது அவன் கண்களுக்குப் புதிய ஜெயந்தியாய் தென்பட்டாள். இந்த ஜெயந்தியிடம் இவ்வளவு வேதனை இருக்கிறதா?

இவ்வளவு பயங்கரமான நிலைமையை இதயத்திற்குள் புதைத்துக் கொண்டு முறுவலுடன் வளைய வருவதற்கு அவளுக்கு எவ்வளவு சக்தி இருக்கவேண்டும்! வாழ்க்கையில் செய்யாத தப்பிற்கு தண்டனையை அனுபவித்துக் கொண்டு, அதை தன்னந்தனீயாய் அனுபவித்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்க வேண்டுமென்றால் அது சாதாரண விஷயமல்ல. அந்த சமயத்தில் ஜெயந்தியைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது அவனுக்கு. இரு மடங்கு மதிப்பு ஏற்பட்டது. ஜெயந்தி எல்லாப் பெண்களையும் போல இல்லை. அவள் பண்பு இமாலயப் பர்வதத்திற்கு ஒப்பானது.

அவளுக்கு முன்னால் தான் எந்த மூலை!

அவன் ஜெயந்தியை வியப்போடு பார்த்தான்.

* * *

பதினைந்து நாட்களுக்குப் பிறகு—

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

ஜெயந்தி தீரஜ்ஜிற்கு உடை மாற்றிவிட்டுத் தலை வாரிக் கொண்டிருந்தாள். அதற்குள் வெளியே கார் ஹாரன் சப்தம் கேட்டது. ஜெயந்தி திரும்பி பார்த்தாள். சித்தார்த்தன் காரை விட்டிறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததுமே தீரஜ் "அங்கிள் வந்து விட்டார்" என்று தாயின் கைகளைத் தள்ளிவிட்டு வெளியே ஓடினான். சித்தார்த்தன் தன்னை நோக்கி ஓடி வந்த தீரஜ்ஜை தூக்கிக் கொண்டான்.

"அங்கிள்! நீ ஏன் வரவேயில்லை? ஸ்கூலில் நல்ல புரோகிராம் நடந்தது. நான் மீசை வைத்துக் கொண்டு காந்தி தாத்தா வேஷம் போட்டேன். எனக்கு முதல் பரிசு கிடைத்தது." என்று மளமளவென்று சொல்லிக் கொண்டே போனான்.

"நிஜமாகவா?" அவன் கன்னத்தைக் கிள்ளிவிட்டு முத்தமிட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

ஜெயந்தி தன்னையறியாமல் எழுந்து நின்றாள். அவனையே பார்த்தாள்.

அன்று பூனாவில் ஓட்டலில் தன் கடந்த காலத்தைப் பற்றி சொன்ன பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. மௌனமாய் இருந்துவிட்டான். அதற்கு பிறகு மறுநாள் அவள் மற்றொரு முறை சிவரஞ்சனைப் பார்த்துவிட்டு மாலையில் சென்னைக்கு திரும்பி விட்டாள். அன்றையிலிருந்து இது வரை சித்தார்த்தன் ஏனோ தெரியவில்லை, அவள் கண்களில் படவேயில்லை. ஆபீசுக்கு போன் செய்த பொழுது சிட்டில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இன்னொரு முறை போன் பண்ணியபொழுது ஊரில் இல்லை என்று சொன்னார்கள். எப்பொழுது வருவார் என்று கேட்டதற்கு தெரியாது என்று சொன்னார்கள்.

ஜெயந்திக்கு அவன் மௌனம் மிக வருத்தமாய் இருந்தது. அவள் சில சமயம் தீரஜ்ஜை மடியில் போட்டுக் கொண்டு கடைக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது நடுவில் நிறுத்திக் கொண்டு அப்படியே யோசனையில் ஆழ்ந்து விடுவாள். சித்தார்த்தனை அவள் எந்த விதத்தில் வருத்தப்படுத்திவிட்டாள்? ஏன் இவ்வாறு மௌனமாய்

விலகிப் போய் விட்டான்? அவளுக்குக் கணவன் இருந்தது அவனுக்கு வருத்தத்தை உண்டாக்கி விட்டதா?

சீ! சீ! அப்படிப்பட்ட சுயநலமான யோசனை கொண்டவன் அல்லவே அவன்! இதில் எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லை என்பது அவளுடைய ஆழ்ந்த நம்பிக்கை. அவன் செய்த ஒவ்வொரு காரியமும் சிறு வயது தோழி என்ற எண்ணத்தில்தான்! அவளிடமிருந்து எதையும் எதிர்பார்த்து செய்யவில்லை அவன். அவனுடைய கள்ள மில்லாத மனது அவன் காரியங்கள் ஒவ்வொன்றிலும் நன்றாய் தென்பட்டு கொண்டிருந்தன.

ஜெயந்தி ஆழ்ந்து பெருமூச்சு விட்டாள். அந்தகாரமான குழப்பம் மிகுந்த அவள் வாழ்க்கையில் சித்தார்த்தனின் வரவினால் ஒளி ஏற்பட்டது. இந்த வாழ்க்கை வண்டியை ஒன்றைச் சக்கரத்தினால் அவளால் இழுத்துக் கொண்டு போக முடியாமல் தளர்ச்சியடைந்தபொழுது தெய்வம் அனுப்பிய துணையாய் வந்து இன்னொரு சக்கரத்தை தூக்கி நிறுத்தி கை கொடுத்தான். அதிலிருந்து அவள் தொல்லைகள் நீங்கின. நிம்மதி என்றால் என்னவென்று இப்பொழுதுதான் தெரியத் தொடங்கிற்று அவளுக்கு. இதற்கெல்லாம் காரணம் சித்தார்த்தன்தான்.

அப்படிப்பட்ட அவனுக்கு அவளால் வருத்தம் ஏற்பட்டால் அது அவளுடைய மன்னிக்க முடியாத குற்றம்! அவளால் இதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இவ்வளவு வேதனையை மனதிற்குள் தாங்கிக் கொண்டிருந்த ஜெயந்திக்கு சித்தார்த்தன் இப்பொழுது திடீரென்று வந்ததைப் பார்த்து உயிரே திரும்பி வந்தாற்போல இருந்தது. தாங்க முடியாத சந்தோஷம் ஏற்பட்டது.

சித்தார்த்தன் உள்ளே வந்தான். ஜெயந்தி அவன் முகத்தையே பார்த்தாள். அதில் தென்படும் உணர்வைப் படித்தறிந்து கொள்ள முயன்றாள். சித்தார்த்தனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இருவர் கண்

களிலும் கேளாத கேள்விகள் எத்தனையோ! சொல்ல முடியாத பதில்களும்கூட அதற்கு இரு மடங்காய் இருந்தன.

"ஜெயந்தி! காபி கொடுப்பாயா?" கேட்டான் அவன்.

ஜெயந்தி தலையாட்டினாள். விருட்டென்று திரும்பி உள்ளே ஓடினாள்.

காபியைக் கலந்து கொண்டிருக்கையில் அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. அவை ஆனந்தக் கண்ணீர்! அவற்றில்தான் எவ்வளவு நிம்மதி! சித்தார்த்தன் சாதாரணமாய் இருந்தான்! அவனுக்கு அவள் மீது கோபமோ அலட்சியமோ இல்லை. எப்பொழுதும் போலவே சிநேக பூர்வமாகவே இருக்கிறான். ஜெயந்தி ஒரு வினாடி கண்களை மூடிக் கொண்டு தெய்வத்தை தனக்குள் வணங்கினாள். 'தெய்வமே! ஒரு பெரிய ஆபத்து நீங்கிவிட்டது!'

ஜெயந்தி காபியை கொண்டு வந்தாள். தீரஜ் சித்தார்த்தனின் மடியில் உட்கார்ந்து கொண்டு தான் காந்தி தாத்தா வேஷம் போட்டபொழுது எடுத்த போட்டோக்களை காட்டிக் கொண்டிருந்தான்.

சித்தார்த்தன் காபியை வாங்கிக் கொண்டான். தீரஜ் மடியிலிருந்து இறங்கி விளையாடுவதற்குப் போய் விட்டான். சித்தார்த்தன் காபியைக் குடித்துக் கொண்டிருந்தான்.

"இவ்வளவு நாளாய் எங்கே போனீங்க?" கேட்டாள் ஜெயந்தி.

"வேலையாய் போனேன்."

"ஒரு வார்த்தைகூட சொல்லாமல் போய்விடும்படி அதென்ன அவ்வளவு பெரிய வேலை?" அவன் சிரித்தான். அச்சிரிப்பு எப்பொழுதும் போலவே இருந்தது.

அவன் காபி தம்ளரைக் கீழே வைத்துவிட்டு, எழுந்திருந்து, ''ஜெயந்தி! நான் மறுபடியும் இன்று மாலை ஊருக்குப் போகிறேன். நான்கு நாட்களுக்குப் பிறகு திரும்பி வருவேன்.''

''எந்த ஊருக்கு?''

''சொல்லித்தான் ஆகணுமா?''

ஜெயந்தி தலை குனிந்தாள்.

அவன் முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் உன்னைப் போன்ற அதிர்ஷ்டக்காரன் இல்லை ஜெயந்தி! என் வரவிற்காக வழி மேல் விழி வைத்துக் கொண்டு காத்திருக்கக் கூடிய நபர் எங்கேயும் இல்லை எனக்கு.''

''சித்தார்த்தன்! என் மேல் கோபம் வந்துவிட்டதா?'' கேட்க முடியாமல் கேட்டாள்.

''கோபமா? உன் மேலா? எதுக்கு?'' அவன் ஆச்சரிய மடைந்தவனாய் கேட்டான்.

''நான் உங்களை எந்த விஷயத்திலோ வருத்தப்படுத்தி விட்டேன். அதென்னவென்று சரியாய் தெரியவில்லை! ஆனால் உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கி விட்டேன் என்று மட்டும் தெரிகிறது.''

அவன் ஜன்னலண்டை போய் வெளியே பார்த்தபடி நின்றான்.

இருவருக்குமிடையே மௌனம் ஏற்பட்டது.

''சித்தார்த்தன்! என்னை மன்னித்து விடுங்கள்.''

''எதற்கு ஜெயந்தி?''

''உங்களை வருத்தப்படுத்தியதற்கு.''

''நீ என்னை எந்த விதமாகவும் வருத்தப்படுத்தி விட வில்லை. வருத்தம் ஏதாவது ஏற்பட்டிருந்தால் அதற்குக் காரணம் நானேதான்''— அவன் கையை மார்பின் மீது வைத்துக் கொண்டான்.

''தான் என்னென்னவோ ஆசைகளை ஏற்படுத்திக் கொண்டு விட்டேன். என்னென்னவோ கனவுகளைக் கண்டேன். இப்பொழுது தோன்றுகிறது—அந்தக் குற்றம் எல்லாம் என்னுடையது! உன்னுடையது அல்ல! நீ என்றுமே எனக்கு எந்த ஆசைகளையும் உண்டாக்கி விடவில்லை. நீ நிர்மலமாய் நேர்மையாய் இருக்கிறாய்! நிர்மலமும் நேர்மையும் என்னிடந்தான் இல்லைன்னு நினைக்கிறேன்—''

''சித்தார்த்தன்! என்னவாகி விட்டது உங்களுக்கு? சொல்ல மாட்டீங்களா? நீங்கள் இப்படிப் பேசினால் எனக்கு பயமாய் இருக்கிறது''—என்றாள் ஜெயந்தி தொண்டை அடைக்க.

அவன் திரும்பிப் பார்க்கவில்லை. தனக்குள் சொல்லிக் கொள்வது போல சொன்னான், ''ஜெயந்தி! நீ என் வாழ்க்கையில் நுழைந்த பிறகு எனக்கு நூறாண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்க்கையின் மீது ஆசை ஏற்பட்டு விட்டது. நான் வாழ்க்கையில் இதுவரை எந்த விதமான சுகத்தையும் பெறவில்லை. அதை பூர்ணகும்பத்தோடு வைத்துக் கொண்டு நீ என் வாழ்க்கையின் வாசலில் வந்து நின்றாற்போல தோன்றிற்று. உன்னை என் வாழ்க்கைக் குள் வரவேற்க வேண்டுமென்றும், நம்மிருவர் வாழ்க்கையையும் ஒன்று சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் நினைத்தேன். அதான் சொன்னேனே, இது என் யோசனை மட்டுமே என்று! உனக்கு கல்யாணம் ஆகவில்லை என்றும், யாரோ மோசம் பண்ணி விட்டார்கள் என்றும், உன் கணவர் இறந்துவிட்டார் என்றும், தீரஜ் உன் மகனே இல்லை, சிநேகியின் மகன் என்றும் இவ்வாறு தலைக்கு தலை பேசிக் கொண்டார்கள் எல்லோரும். எது எப்படியிருந்தாலும் பரவாயில்லை, என் இதயத்திற்குள் பொத்திக் கொள்ளமுடியும் என்னால் என்று நினைத்தேன். என் கண் முன்னாடி அழகான கனவுகள் தோன்றின. என் ஆசையை

உன்னிடம் நேரிடையாய் சொல்லி விடலாமா அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்தலாமா என்றெண்ணிக் கொண்டிருந்தேன். அதற்குள் இந்த விபத்து ஏற்பட்டு விட்டது. பூனாவில் உன்னை எதிர்பாராமல் பார்த்ததும், உன் வாயிலிருந்து சிவரஞ்சனின் விஷயத்தைக் கேட்டதும் என் மூளையைக் குழம்பும்படியாய் செய்துவிட்டன.

உன் மனமெல்லாம் வேறொரு நபர் நிறைந்திருக்கிறார். நீ அவர் வரவிற்காக வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறாய். அவருக்கும் உன் மீது உயிர்! ஒரே வார்த்தையில் சொல்லவேண்டும் என்றால் நீங்களிருவரும் வேறு வேறு அல்ல. ஒரே நபர்! அவ்வளவு பலமான பந்தம் உங்களுடையது! நான் வெறும் சிநேகிதன் மட்டுமே! ஓ காட்! என்னையே நான் கொன்று கொண்டுவிட வேண்டும் போல ஏமாற்றம் ஏற்பட்டது. ஆனால், ஜெயந்தி! மிக விநோதமாய் என் மனது என்னோடு யுத்தம் புரிந்தது. என்னை கண்டபடி திட்டித் தீர்த்தது. உன் பக்கமாய் சார்ந்து கொண்டு என்னை நன்றாய் சாடிவிட்டது! இதெல்லாம் உன் தப்பு என்றது!

ஒரு தடவையாவது ஜெயந்தி தன் பேச்சாலோ, நடவடிக்கையாலோ உன் ஆசைகளை தூண்டிவிட்டிருக்கிறாளா என்றது. இல்லை என்றேன். மெல்ல மெல்ல என் கண்கள் திறந்து கொண்டன. என் கண் முன்னால் நான் ஏற்படுத்திக் கொண்டிருந்த பிரம்மைகள் நீங்கிப் போயின.

உன் கடந்த காலத்தை அலசிப் பார்த்துக் கொண்டேன். நீ மிக உன்னதமான மனுஷியாய் தோன்றினாய்! பெண்ணிடம் ஒரு ஆண் எதை எதிர் பார்க்கிறானோ அந்த குணங்கள் எல்லாம் உன்னிடம் இருந்தன. கணவன் மீது அன்பும், தாம்பத்தியத்தின் பால் கடமை என்ற விரதமும், உன் போராட்டமும் என்னை அசர வைத்துவிட்டன. உன்னைப் போன்றவர்கள்தான் பரிபூரணமான குண நலன்களைக் கொண்ட பெண்கள்! அப்படிப்பட்டவர்களோடு வாழ்க்கையை பிணைத்துக் கொண்டிருப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்! ஜெயந்தி! அப்படிப்பட்ட உனக்கு உண்மை சிநேகிதனாய் நான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் 'உண்மையான சிநேகிதன்' என்று சொல்லிக் கொள்ளக் கூடிய அருகதை எனக்குக் கிடைக்கும். ஜெயந்தி! நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்''—

ஜெயந்தி ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அதில் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுது தீர்த்து விட்டாள்.

''சித்தார்த்தன்! நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி'' என்றாள். அவன் ஜெயந்தியின் தலைமீது கை வைத்தான்.

''நீ இன்னும் அதிர்ஷ்டசாலி ஆகணும் ஜெயந்தி'' என்றான்.

* * *

ஜெயந்தியின் வாழ்க்கை சீரான முறையில் கழிந்து போய்க் கொண்டிருந்தது. கடையின் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஜெயந்தி தன் பெயரில் பாங்கில் போட்டு வந்த பணத்தை ''இது சிவரஞ்சனுக்காக! அவர் திரும்பி வந்தால் அவருடைய புத்தகங்களின் செலவிற்காக! அவர் ஆராய்ச்சி பண்ணும் சாமான்களுக்காக'' என்றெண்ணிக் கொள்வாள்.

அன்று—

ஜெயந்தி அப்பொழுதுதான் கடையிலிருந்து திரும்பி வந்திருந்தாள். குளித்து விட்டு வந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். தீரஜ்ஜை பொன்னையன் ரவி முதலியவர்கள் விளையாடிக் கொண்டிருந்த கிரிக்கெட் மேட்சைப் பார்ப்பதற்காக அழைத்து சென்று விட்டான். ரங்கம்மா சமையலறையில் காரியம் பண்ணிக் கொண்டிருந்தாள். அதற்குள் காலிங்பெல் அடித்த சப்தம் கேட்டது.

ரங்கம்மா போய் கதவைத் திறந்தாள்,

''யார் நீங்க?'' ரங்கம்மா கேட்டது காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது ஜெயந்திக்கு. வெளியே இருந்தவன் என்ன சொன்னானோ தெரியாது.

ரங்கம்மா கோபமாய் ''யாரய்யா நீ? ஜெயந்தி இல்லையாவா? என்னை சொன்னாய்? மட்டு மரியாதை இவ்லையா?''

அவ்வப்பொழுது யாராவது யாசகத்திற்காக வந்து இவ்வாறு தொல்லை கொடுப்பது சகஜந்தான். ரங்கம்மா அவர்களை திட்டி அனுப்புவாள்.

''போயிட்டு வாய்யா, போ! எங்கம்மா வீட்டில் இல்லை. போ!'' ரங்கம்மா தடாலென்று கதவைச் சாத்தி விட்டுத் திரும்பி வந்தவள், ''எவனோ ரோடோடு போகிறவன்! ஏதோ சாக்குச் சொல்லிக் கொண்டு பெரிய காரியம் இருப்பது போல வருவது. பகலில் இப்படி வந்து பார்த்து விட்டு ராத்திரி வேளையில் திருட வந்து விடுவாங்க.''

''யார் ரங்கம்மா?''

''எவனோ! திருடனைப் போல இருக்கிறான். கேட்டதற்கு பதில் சொல்லாமல் என்னவோ உளறுகிறான், அவன் மூஞ்சியைப் பார்த்தாலே சந்தேகமாய் இருக்கு.''

''ஊரில் நிறைய திருட்டுத்தனங்கள் நடக்கிறது ரங்கம்மா. நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன். ஜாக்கிரதையாய் இரு, கதவைச் சாத்திக் கொள்.'' என்று செருப்பை மாட்டிக் கொண்டாள் ஜெயந்தி. வெள்ளிக் கிழமையாதலால் கோவிலுக்குப் போய் அம்மனுக்கு பூஜை பண்ணுவது அவள் வழக்கம்.

ஜெயந்தி பூ, தேங்காய் இருந்த கூடையை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தாள். பின்னாடியே வந்தாள் ரங்கம்மா. ஜெயந்தி மளமளவென்று வராந்தாவைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தாள்.

ரங்கம்மாவின் குரல் திடீரென்று இரைந்தாற்போல கேட்டது!

''ஏய்! என்ன இங்கே டேரா போட்டுவிட்டாய்? போவென்று சொன்னேனா இல்லையா? அம்மோவ் நீ நாசமாய்ப் போக! உரிமையோடு வந்து நாற்காலியிலேயே உட்கார்ந்து விட்டாயே! எழுந்திரு, எழுந்திரு! காலை உடைத்தெறிவேன்!'' ரங்கம்மா கோபமாய் அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட ஆளைப் பார்த்து கையை ஓங்கிக் கொண்டே போனாள்.

ரங்கம்மாவின் முதுகு மறைத்துக் கொண்டிருந்ததால் ஜெயந்தி அந்த ஆளை சரியாய் பார்க்க முடியவில்லை.

''எழுந்திரு'' ரங்கம்மா கத்தினாள்.

அந்த ஆள் எழுந்திருக்கவில்லை. அவன் தோள்கள் வளைந்து போய், குறுகிப் போன ஆளைப் போல இருந்தான். தாடி மண்டியிருந்தது. தலை நரைத்துப் போயிருந்தது. உடைகள் மரபொம்மைக்கு உடுத்தியிருந்தாற்போல லூசாய் தொங்கிக் கொண்டிருந்தன.

ரங்கம்மா ''அம்மா'' என்றபடி திரும்பி பார்த்தாள்.

அதற்குள் ஜெயந்தி வேகமாய் அங்கே வந்தாள். ரங்கம்மாவின் தோளைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு அந்த ஆளிடம் போனாள். அவனைப் பிடித்துக் கொண்டு ''சிவரஞ்சன்! சிவரஞ்சன்! இதென்ன? எப்பொழுது வந்தீங்க? நீங்கள்தானா வந்திருப்பது? இது...இது.. கனவா நினைவா? நிஜமாகவே வந்து விட்டீங்களா?'' சிறு பெண்ணைப்போல சந்தோஷம், துக்கம், வியப்பு எல்லாம் போட்டியிட சரேலென்று ஓடி வந்து அவனை கட்டிக் கொண்டு விட்டாள்.

''ஜெயந்தி! என்னை விடுதலை பண்ணிவிட்டார்கள்.''

''நிஜமாகவா? என்னிடம் சொல்லவேயில்லை? டெலிகிராம் தந்திருந்தால் நானே வந்து உங்களை அழைத்துக் கொண்டு வந்திருப்பேனே!''

"சொல்லாமல் வந்து உன்னை ஆச்சரியப்படுத்தணும் என்று நினைத்தேன். நீ எவ்வளவு சந்தோஷப்படுகிறாய், பார்க்கலாம் என்றெண்ணினேன்." இளைத்துத் தும்பாகி யிருந்த அவன் முகத்தில் சிரிப்பு தென்பட்டது.

"கடவுளே! இது நிஜமா? நான் கனவு காண வில்லையே?"

"எனக்கும் அப்படித்தான் தோணுகிறது. என்னாலும் நம்ப முடியவில்லை."

அவ்விருவரும் சுற்றுச் சூழ்நிலையையே மறந்துபோன வர்களாய் பேசிக் கொண்டிருந்தார்கள். ரங்கம்மா வினோத மாய் வாயைத் திறந்து கொண்டு கண்கள் அகல விரிய அவ்விருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் பொன்னையனும் தீரஜ்ஜும் வந்தார்கள். தீரஜ் "மம்மி" என்று ஓட்டமாய் ஓடி வந்தான்.

ஜெயந்தி திரும்பினாள். தீரஜ்ஜைக் காட்டி "நம்ப தீரஜ்" என்றாள்.

"நிஜமாகவா?" அவன் சந்தோஷத்தால் திணறினாற் போல தோன்றினான்.

தீரஜ் தாயிடம் ஓடி வந்து அங்கே தாடியுடனும் நரைத்த தலையுடனும் பிச்சைக்காரனைப் போல தோற்ற மளித்த அந்த ஆளைப் பார்த்தான். ஓரடி பின் வாங் கினான்.

ஜெயந்தி மகன் கையைப் பிடித்து கிட்டே இழுத்துக் கொண்டு அந்த ஆளைச் சுட்டிக்காட்டி "தீரஜ்! டாடீ! டாடீ வந்திருக்கிறார் பார்" எனறாள் சந்தோஷத் தோடு.

சிவரஞ்சன் அபூர்வமான பொருளைப் பார்த்தாற் போல தீரஜ்ஜைப் பார்த்தான். தீரஜ்ஜை நோக்கிக் கைகளை நீட்டினான். ஆனால் தீரஜ் அவனிடம் போக வில்லை. பின்னுக்கு நகர்ந்து, தாயின் புடவைக் கொசுவங்

களை அழுத்தமாய் பிடித்துக்கொண்டே அந்த ஆளை அரு வருப்போடு பார்த்து "டாடியா? இந்தக் கிழவனா? சீ!" என்றான். அவன் 'சீ' என்றதில் மிக அருவருப்பு தென்பட்டது.

"அப்படி சொல்லக்கூடாது. டாடிதான் தீரஜ்" என்றாள் ஜெயந்தி.

"சீ, இவன் ஒன்றும் எங்க டாடி இல்லை. எல்லாம் பொய்" என்றான்.

சிவரஞ்சனின் முகம் வெலவெலத்துப் போயிற்று. அவன் கைகள் கீழே தாழ்ந்து போயின. ஜெயந்தி சிவரஞ்சனைப் பார்த்து— "புதுசு இல்லையா, அதான் இப்படி., உள்ளே வாங்க" என்றாள்.

ஜெயந்தியோடு உள்ளே வந்து கொண்டிருந்த தீரஜ், தன்னைத் தொடர்ந்து வராத சிவரஞ்சனைப் பார்த்து, "ஏய்! உள்ளே வா! வெளியேயே உட்கார்ந்திருக்கிறாயே ஏன்?" என்றான் எரிச்சலுடன்.

"அப்படி சொல்லக் கூடாதுன்னுச் சொன்னேனா இல்லையா?" என்றாள் இரைந்து.

தீரஜ் ரங்கம்மாவுடன் உள்ளே போய்விட்டான். சிவரஞ்சன் ஜெயந்தியைத் தொடர்ந்து உள்ளே வந்தான்.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. சித்தார்த்தன் உள்ளே வந்தான். ஜெயந்தி அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"சித்தார்த்தன்! யார் வந்திருக்காங்கன்னு பாருங்க!" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாள்.

"யார் வந்திருக்காங்க? மாதவி அண்ணியா?"—என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த சித்தார்த்தன் தாடிக் கார ஆசாமியைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டான்.

ஜெயந்தி சொன்னாள்— "சிவரஞ்சன்! இவர் சித்தார்த்தன். இவர் உதவி மட்டும் இல்லாமலிருந்திருந்

தால் நான் இன்றைக்கு இப்படி இருந்திருக்கவே மாட்டேன்'' என்றாள்.

''கிளாட்டு மீட் யூ'' சித்தார்த்தன் சிநேக பூர்வமாய் கையை நீட்டினான். சிவரஞ்சன் கை குலுக்கினான். அதற்குள் போன் மணியடித்தது.

''ஒன் மினீட்!'' என்று சித்தார்த்தன் சிவரஞ்சனின் கையை விட்டுவிட்டுப் போய் போனை எடுத்தான்.

''ஹலோ! எஸ்! எஸ்! வீ கேன் சப்ளை. ஜஸ்ட் எ மினீட் ப்ளீஸ்—'' என்று அவன் திரும்பி— ''ஜெயந்தி! ஜெயந்தி'' என்று கூப்பிட்டான்.

சமையலறையில் காபி கலந்து கொண்டிருந்த ஜெயந்தி ஓடி வந்தாள் ''என்ன?''

''நாம்ப மார்ச் முப்பதுக்குள் நானூறு 'காமாட்சி புடவை'களை சப்ளை பண்ண முடியுமா?''

''மார்ச் முப்பதுக்குள்ளா? ஓ!'' என்றாள். அவன் போனில் பேசினான். சித்தார்த்தன் ஜெயந்தியை நோக்கித் திரும்பி விலை விஷயமாய் முடிவு பண்ணினான்.

அவன் போனில் விலையைச் சொன்னான். ஜெயந்தி சிவரஞ்சனீடம்— ''உங்களுக்கு நல்ல காபி கொண்டு வரேன்'' என்று உள்ளே ஓடினாள்.

''எனக்குக் கொடுக்க மாட்டாயா?'' என்றான் சித்தார்த்தன். ''ஏன் கொடுக்க மாட்டேன்?'' என்றாள் சிரித்துக் கொண்டே. அதற்குள் தீரஜ் ஓடி வந்து ''அங்கிள்'' என்று சித்தார்த்தனைக் கட்டிக் கொண்டான். சித்தார்த்தனின் மடியில் உட்கார்ந்து கொண்டு— ''இன்றைக்கு நான் கிரிக்கெட்டில் ரெண்டு பாலை அடித்தேன்'' என்றான்.

சிவரஞ்சன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு ஏதோ போலிருந்தது. ஜெயந்தி சித்தார்த்தனுடன் அவ்வளவு சிரித்துச் சிரித்துப் பேசியதும், தீரஜ் சித்தார்த்தனுடன் ஒட்டிக் கொண்டு அவனை சுற்றிச் சுற்றி வந்ததும் மனதிற்குப் பிடிக்காத விஷயங்களாய் இருந்தன.

சித்தார்த்தன் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான். தீரஜ்ஜிற்கு சாப்பாட்டை வாயில் தந்து கொண்டிருந்தாள் ஜெயந்தி. தீரஜ்— ''அந்த பைத்தியக் காரன் நம்ப வீட்டைவிட்டு எப்பப் போவான்?'' என்று கேட்டான்.

''ச்சீ! அப்படிச் சொல்லக்கூடாதுன்னுச் சொல்ல வில்லை?'' என்றாள் ஜெயந்தி.

சிவரஞ்சன் ஹாலில் சோபாவின் மீது பூனைக் குட்டியைப் போல முடங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் வரும்பொழுது ஊகித்துக் கொண்டு வந்ததென்ன, இப்பொழுது நடந்து கொண்டிருப்பது என்ன? அவன் வந்ததுமே ஜெயந்தி எதிர்பட்டு ஓடிவந்து கட்டிக் கொள்வாள். அதற்கு பிறகு இவ்வளவு நாள் பிரிவில் தான் எவ்வளவு நரகத்தை அனுபவித்தோம் என்று ஜெயந்தியின் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டு ஆசை தீரச் சொல்லுவான்.

ஆனால் இங்கேயோ இன்னொரு விதமாய் நடந்தது. அவனுக்கு ஜெயந்தியிடம் வந்தாற் போலவே இல்லை. இன்னும் தொலைவில் ஜெயிலில் இருந்து கொண்டு காத்திருப்பது போலவே இருந்தது.

இந்த பைத்தியக்காரன் இன்றிரவு வீட்டிலேயேதான் இருப்பான் என்று தெரிந்ததும், தீரஜ்ஜிற்குத் தூக்கமே வரவில்லை. ஒன்பது மணிக்கே அடித்துப் போட்டாற் போல தூங்கத் தொடங்கிவிடும் தீரஜ் இன்றைக்குக் கட்டிலிலேயே உட்கார்ந்திருந்தான்.

''படுத்துக் கொள்'' என்றாள் ஜெயந்தி.

''தூக்கம் வரவில்லை'' என்றான்.

ஜெயந்தி சிவரஞ்சனுக்கு சாப்பாடு போட்டாள். இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். பேசிக் கொண்டிருக்கையில் எங்கே தீரஜ் வருவானோ என்று பார்த்துக் கொண்டேயிருந்தாள் ஜெயந்தி... ஜெயந்தியின் கவனம்

தன் மீது இல்லாததற்கு சிவரஞ்சனுக்கு வருத்தமாய் இருந்தது. ஜெயந்தி படுக்க வந்தபொழுது தீரஜ் தடி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து கட்டிலில் ஒளித்து வைத்துக் கொண்டிருந்தான்.

''அது எதுக்கு?'' என்றாள்.

''அந்த பைத்தியக்காரன் உன்னை ஏதாவது பண்ணி விட்டால் அவன் மண்டையைப் பிளப்பதற்கு'' என்றான்.

''சீ'' என்றாள் ஜெயந்தி.

தீரஜ் தூங்கத் தொடங்கியபொழுது மணி ஒன்றடித்து விட்டது. அவன் தூங்கி விட்ட பிறகு கதவைச் சாத்தி தாழிட்டுவிட்டு ஹாலில் சோபாவில் படுத்துக் கொண்டிருந்த சிவரஞ்சனிடம் வந்தாள்.

''சிவரஞ்சன்'' பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தலைமீது கையை வைத்தாள். சிவரஞ்சன் எழுந்திருந்தான். அவன் உடம்பு அனலாய் சுட்டுக் கொண்டிருந்தது. ஜ்வரம் கொதித்துக் கொண்டிருந்தது. ஜெயந்தி அவன் தலையை மடியில் வைத்துக் கொண்டாள்.

''ஜெயந்தி! நான் ரொம்ப மாறிப் போய் விட்டேனா? ரயிலில் வரும்போது எங்கள் ஊர்க்காரன் தென்பட்டான். அவனை விசாரித்தேன். அவன் என்னை அடையாளமே தெரிந்து கொள்ளவில்லை. நான் யார் என்று சொன்னதும் ''அட! நீயா! இதென்னது? இவ்வளவு கிழவனாகி விட்டாயே!'' என்றான். அப்பொழுது நான் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்பொழுது தீரஜ் சொன்னபொழுது...''

.''சிவரஞ்சன்! உங்களுக்கு உடம்பு சரியாயில்லை. இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு விட்டீங்க. இப்ப என்னிடம் வந்துவிட்டீங்க. இனிமேல் பாருங்கள், எப்படி மாறி விடுவீங்கன்னு!'' என்றாள் சமாதானப்படுத்துவது போல.

அதற்குள் தீரஜ் ''மம்மி'' என்று கதவைத் தட்டினான். ஜெயந்தி போய் திறந்தாள். ''எங்கே போய் விட்டாய்?'' என்றான் அழுது கொண்டே.

ஜெயந்தி தீரஜ்ஜிடம் வந்து படுத்துக் கொண்டாள். தீரஜ் தாயின் மீது கையை வைத்துப் படுத்துக் கொண்டான். ஜெயந்தி கொஞ்சம் புரண்டாலும் அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். விடிந்தது.

எவ்வளவோ எதிர்பார்த்துக் கொண்டு வீட்டிற்கு வந்த சிவரஞ்சனுக்கு அன்றிரவு அந்த விதமாய் முடிவடைந்தது.

* * *

கூடையின் ஆண்டுவிழா வந்தது. ஜெயந்திக்கு மூச்சு விடவும் நேரமில்லை. ஒரு பக்கத்தில் வீட்டில் சிவரஞ்சனின் விஷயத்தை கவனித்துக் கொள்ளவேண்டும். அவன் வந்த பிறகு பதினைந்து நாட்களாய் ஜெயந்தி கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு மருந்துகளையும் டானிக்குகளையும் தந்ததால் கொஞ்சம் தேறிக் கொண்டான். ஜ்வரம் இறங்கிவிட்டது. அவன் ஒருநாள் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு விட்டு— ''தீரஜ் என்னைப் பார்த்து பயந்து போனான் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நான் நிஜமாகவே பயங்கரமாய்தான் இருக்கிறேன்'' என்றெண்ணிக் கொண்டான்.

ஜெயந்தி, அவனுக்கு உடைகள் வாங்கி தைத்துக் கொடுத்தாள். கடை வேலையாய் மூச்சுவிடவும் நேரமில்லாத பொழுதுகூட ஜெயந்தி அவன் விஷயத்தில் கொஞ்சமும் குறை வைக்கவில்லை. கொஞ்சம் நேரம் கிடைத்தாலும் போதும், வந்து அவனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொள்வாள்.

சிவரஞ்சனுக்குத் தன் படுக்கையறையை காலி பண்ணித் தந்தாள். அங்கே அவனுக்கு கட்டில், சாய்வு நாற்காலி, டி. வி. முதலியவைகளைப் போட்டாள். பீரோ நிறைய அவனுக்குத் தேவையான புத்தகங்களை அடுக்கி வைத்தாள். எழுதும் மேஜை, நாற்காலி, பேனா முதலியவைகளையும் ஏற்பாடு செய்தாள். ஜெயந்தி அவன் உலகத்தை அவனுக்குப் படைத்துத் தரவேண்டும் என்று முயன்றாள்.

கடையின் ஆண்டுவிழா நடந்தது. அது மிக விமரிசையாய் நடக்க ஏற்பாடு செய்தார்கள். கடை முழுவதும் கலர் தோரணங்களைக் கட்டி, வெளியே விளக்கு வெளிச்சத்தால் ஒளிவிடச் செய்தார்கள். அழைத்தவர்கள் எல்லோரும் வந்தார்கள். எல்லோரும் ஜெயந்தியைப் பாராட்டினார்கள். அவளோடு மதிப்பாய் பேசினார்கள்.

சிவரஞ்சனும் வந்தான். ஜெயந்திக்குப் பக்கத்தில் அவனைப் பார்த்து கணவன் என்று யாருமே எண்ணிக் கொள்ளவில்லை. ஜெயந்தி— "என் கணவன்" என்று பரிச்சியம் செய்த பொழுது அவர்கள் கண்களில் ஆச்சரியம் பிரதிபலித்தது. எல்லோரும் பலகாரங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். தெரிந்தவர்கள் நிறைய பேர் வந்ததால் எல்லோரும் ஜெயந்தியோடும் சித்தார்த்தனோடும் அவரவர்களின் வியாபார விஷயங்களை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஜெயந்தியும் சித்தார்த்தனும் அவர்கள் சம்பாஷணைக்கிடையே வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சிவரஞ்சன் மட்டும் தனித்து நின்றான். அவன் மட்டும் மேஜைக்கு முன்னால் தனியாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். தன்னைப் பார்த்து எல்லோரும் தலைக்கு ஒரு விதமாய் குசுகுசுத்துக் கொண்டிருந்தது அவன் செவிகளிலும் விழுந்து கொண்டுதான் இருந்தது.

"இதென்னது! அந்தக் கிழவனைப் போய் கணவன் என்கிறாளே" என்றாள் ஒருத்தி.

"அதான் எனக்கும் புரியலை."

"இப்பொழுது எங்கேயிருந்து வந்து திடீரென்று முளைத்திருக்கிறான் இந்த கணவன்?"

"என்னவோ?"

இன்னொருத்தி தனக்குத் தெரிந்தாற் போலவே சொன்னாள்— "எல்லா இடங்களிலும் பிச்சைக்காரனைப் போலச் சுற்றிக் கொண்டே, இவளை பிளாக் மெயில் பண்ணியிருக்கிறான். அந்த தொல்லையைத் தாங்க முடியாமல் போய் இப்படி கணவனாய் எல்லோரிடமும் சொல்லியிருக்கிறாள் போலிருக்கிறது."

"அப்படிச் சொல்லு! நான் அப்பொழுதே நினைத்தேன்— இதில் ஏதோ தப்பிதம் இருக்கும் என்று!"

"அப்ப அந்த சித்தார்த்தனும் இவளும்?"

"அது அப்படித்தான்! அவளும் அவனுந்தான் கணவனும் மனைவியுமாய் இருந்துட்டிருக்காங்க."

"அந்த மகன்?"

"அந்த சித்தார்த்தனுக்குப் பிறந்தவன்தான்."

"அதனால்தான் போலிருக்கு அந்தப் பையன் மேல் அவ்வளவு பாசம்! வந்ததிலேருந்தே பார்க்கிறேன், அந்த தீரஜ் அவன் தோளில் ஏறிக் கொண்டு இறங்கவே காணோம்" ஜெயந்தி அந்த பக்கமாய் வந்ததால் அவர்கள் சம்பாஷணை நின்றது.

சிவரஞ்சன் வீட்டிற்கு வந்து விட்டான். ஜெயந்தி அவனைத் தேடினாள். அங்கே இல்லாததால் தானும் வீட்டிற்கு வந்து விட்டாள். சிவரஞ்சன் நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

"ஏன் அப்படிச் சொல்லாமல் வந்து விட்டீங்க?"

"எனக்கு உடம்பு சரியாயில்லை."

"திரும்பவும் ஜுரம் வந்துவிட்டதா?" கவலையோடு நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். ஜுரம் இல்லை. சித்தார்த்தன் தீரஜ்ஜை அழைத்துக் கொண்டு வந்தான். அவன் போகும் பொழுது ஜெயந்தி வாசல் வரை போய் வழியனுப்பிவிட்டு வந்தாள். சிவரஞ்சனுக்கு ஜெயந்தியின் மீது ஆத்திரமாய் வந்தது. ஜெயந்தி தான் இல்லாத இந்த ஏழெட்டு வருடங்களில் இந்த சித்தார்த்தனோடு எப்படியெல்லாம் வாழ்ந்து கொண்டிருந்தாளோ? அவன். எந்த பிரதிபலனையும் கருதாமல் வெறுமேதான் அவளுக்கு

இவ்வளவு உதவிகளையும் செய்திருப்பானா? கிநேகிதனாம், சிநேகிதன்!

அவர்களுக்குதான் ஒருத்தர் மீது ஒருத்தருக்கு எவ்வளவு அன்பு! அவனால் அவர்கள் எல்லோரோடும் சேர்ந்து இருக்க முடியவில்லை. கடைசியில் ரங்கம்மாள்கூட 'எங்கேயிருந்து முளைத்தான் இவன்?' என்பது போல இளப்பமாய் பார்க்கிறாளே?

ஜெயந்தி எதிரே இருக்கும்பொழுது அவர்கள் காட்டும் மரியாதை, ஜெயந்தி தலைமறைவானதுமே போய் விடுகிறது.

தண்ணீர் வேண்டும் என்று கூப்பிட்டால் ''வரேன் இரு'' என்கிறாள். தாமதமாய் கொண்டு வந்து மேஜை மீது 'டொக்'கென்று வைத்துவிட்டு ''நான் உன்னைப் போல வேலை வெட்டி இல்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கவில்லையே! அம்பாரம் வேலை இருக்கய்யா, என்றாள்.'' அவன் மனம் துணுக்குற்றது.

நேற்று அவன் குளித்துவிட்டு வந்து ரங்கம்மாவை சீப்பு கேட்டபொழுது தரவில்லை. ஜெயந்தி வந்ததும் இதை சொன்னான். அவள் ரங்கம்மாவைக் கண்டபடி திட்டித் தீர்த்தாள். ''ஐயா கேட்ட பொழுது எடுத்து தராமல் என்ன செய்து கொண்டிருந்தாய்? இன்னொரு தடவை இப்படிப் பண்ணினால் சும்மாயிருக்க மாட்டேன்'' என்று கண்டித்தாள். ரங்கம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஜெயந்தி போன பிறகு, சிவரஞ்சன் காதில் விழும்படியாய்— ''தின்னுட்டு உட்கார்ந்து கொண்டு கோள் சொல்லுவது தான் வேலையே தவிர வேறு வேலை வெட்டி கிடையாது இந்த ஆளுக்கு''— என்றாள் பொன்னையனிடம்.

இவைகளால் சிவரஞ்சனுக்கு அந்த வீட்டில் தான் ஒரு வேற்று மனுஷன் என்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது. அவன் இந்த ஜெயில் வாழ்க்கையால் உடலளவில் மிகவும் மாறிப் போய்விட்டான். ஜெயந்திக்குப் பக்கத்தில் அவன் நின்றால் 'திருஷ்டி பொம்மை'யைப் போலதான் இருந்தான். 'என்

கணவன்' என்று அவள் எல்லோருக்கும் பரிச்சியம் செய்தால் அவர்கள் அவனை ஏற இறங்க பார்த்தார்கள். இந்த தங்க விக்கிரகத்திற்கு இந்த 'திருஷ்டி பொம்மை' எப்படித் தான் கணவனானோ? என்ற சந்தேகம் அவர்கள் கண்களில் தெரிந்ததை அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது.

சித்தார்த்தன் மாலை வேலைகளில் வருவான். சிவரஞ்சனிடம் போய் உட்கார்ந்து கொண்டு, அவனோடு என்னென்னவோ பேச முயற்சி பண்ணினான். சிவரஞ்சன்— ''ஜெயந்தியிடம் பேசிக் கொள்ளுங்கள்'' என்று ஜெயந்தி இருந்த அறை பக்கமாய் விரலை சுட்டிக் காட்டுவான்.

ஒரு முறை ஜெயந்தி இதைக் கேட்டு விட்டு கணவனை உலுக்கி எடுத்தாள்.

''நீங்கள் சித்தார்த்தனோடு ஏன் சரியாய் பேச மாட்டேங்கிறீங்க?''

''எங்களுக்குள் பேசிக் கொள்ள என்ன விஷயம் இருக்கு?''

' ஏதாவது ஊர் விஷயம், உலக விஷயம்கூட இல்லையா பேசுவதற்கு?''

''எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை. அவன் உனக்காக, உன்னோடு பேசுவதற்காக வருகிறான். டயத்தை எதுக்கு வீணாக்கிக் கொள்ளணும்? என்னோட கழுத்தறுப்பு வேறு எதற்கு?''

ஜெயந்தி வாயடைத்துப் போனாள்.

ஒரு நாள் பிற்பகல் வேளையில் சிவரஞ்சன் தான் எழுதிக் கொண்டிருந்த காகிதங்களை அடுக்கி வைத்து விட்டு, கவர் ஒன்றை வாங்கி வருவதற்காக போஸ்ட் ஆபீசிற்குப் போனான். அவன் திரும்பி வந்த பொழுது இங்க் பாட்டில் உருண்டு விழுந்து அந்த காகிதங்கள் மீது இங்க் ஓடிக் கொண்டிருந்தது.

சிவரஞ்சன் திரும்பி பார்த்தபொழுது அங்கே தீரஜ் ஒரு மூலையில் கைகளைப் பிசைந்து கொண்டு பயந்தபடி நின்று கொண்டிருந்தான். ''தீரஜ் ஏன் இப்படிப் பண்ணினாய்?'' என்றான்.

''என் பட்டம் மேஜை மேல் விழுந்து விட்டது. எடுக்கப் போனபொழுது இங்க் பாட்டில் சாய்ந்து விட்டது...'' என்றான் மென்று விழுங்கிக் கொண்டே.

அவன் வந்து தீரஜ்ஜின் காதைப் பிடித்துக் கொண்டான். ''ஏன் இப்படிச் செய்தாய்?'' வண்ணான் துணியை விளாசுவது போல தீரஜ்ஜின் முதுகில் செம்மையாய் விளாசத் தொடங்கினான்.

''இன்னொரு தடவை இப்படிப் பண்ணுவாயா? இன்னொரு தடவை இந்த மாதிரி குரங்குத்தனங்களைப் பண்ணினால் பார், தோலை உரித்து விடுவேன்! போ! அப்பால்! இனி நீ இந்த அறைக்குள் அடியெடுத்து வைத்தாயானால் ஜாக்கிரதை!'' தீரஜ்ஜின் கழுத்தைப் பிடித்து அறைக்கு வெளியே தள்ளினான்.

தீரஜ் அழத் தொடங்கிவிட்டான்.

ஜெயந்தி இவ்வளவையும் விக்கித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சிவரஞ்சன்! தீரஜ் சின்னப் பையன்! அவனை நாம் தான் புரிந்து கொள்ளவேண்டும்'' என்றாள். அவன் முகத்தை வெட்டினாற் போல திருப்பிக் கொண்டான்.

தீரஜ் ஷெட்டிற்குள் போய் உட்கார்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருப்பதாய் ரங்கம்மா வந்து சொன்னாள்.

ஜெயந்தி அங்கே ஓடி வந்தாள். ''தீரஜ்'' என்று கிட்டே அணைத்துக் கொள்ளப் போனபொழுது அவன் வரவில்லை.

''உனக்கு என் மேல் இஷ்டமே இல்லை. போ! போ! நான் உன்னிடம் வரமாட்டேன். அந்த பைத்தியக்காரன் என்னை அடிக்கும் போது நீ பார்த்துக் கொண்டு பேசாமலே இருந்தாய். உனக்கு அந்த பைத்தியக்காரன்

தானே வேணும்? நான் வேண்டாம் போ, போ!'' என்று அழத் தொடங்கினான். அவனை ஒருவாறு சமாதானப் படுத்தி வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு வருவதற்குள் ஜெயந்தியின் உயிரே போய்விட்டது.

ஜெயந்திக்கு கடை வேலைகளும், அந்த காரியமாய் வந்து போகிறவர்களும் அதிகமாயிருந்ததால் வீட்டில் சிவரஞ்சனிடம் உட்கார்ந்திருப்பதற்கு டயம் கிடைக்க வில்லை. இரண்டிற்கும் சமமாய் நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று பார்த்தால் மூச்சுவிடவும் முடியாதபடி வேலை திணறத் தொடங்கிற்று. கடையை சிரத்தையாய் பார்த்துக் கொள்ள முயன்றால் சிவரஞ்சன் தனிமையால் வருந்துவான். அவனிடம் உட்கார்ந்து கொண்டிருந்தால் கடையில் ஏதாவது தொல்லை வந்து சேர்ந்தது. இந்த விதமாய் வர வர, ஜெயந்திக்கு ஓய்வு நேரமே கிடைக்காமல் போய்க் கொண்டிருந்தது. ஜெயிலுக்குப் போய் விட்டு வந்ததால் சிவரஞ்சனுக்குப் பழைய வேலை போய் விட்டது. சிவரஞ்சன் வேறு வேலைக்காக முயன்று கொண்டிருந்தான். கண்ணில் பட்ட எந்த வேலைக்கும் விண்ணப்பம் போட்டுக் கொண்டிருந்தான். அவன் தோரணையைப் பார்த்தால் இந்த சூழ்நிலையை விட்டு இந்த சாக்கில் எந்த மூலைக்காவது ஓடிப் போய்விட வேண்டும் போலிருந்தது.

ஒரு முறை அவன் விண்ணப்பத்தை எழுதிக் கொண்டிருக்கையில் ஜெயந்தி வந்து பார்த்துவிட்டாள். அதைப் பார்த்ததும் அவளுக்கு மிகவும் கோபம் வந்தது. வருத்தமும் ஏற்பட்டது. ''என்னோட பணம் உங்களோடது இல்லையா? கடையையே நீங்கள் பார்த்துக் கொண்டால் என்னால் வீட்டு வேலைகளை நன்றாய் கவனித்துக் கொள்ள முடியும் அல்லவா? கடையில்தான் நிறைய வருகிறதே!'' என்றாள்.

''என்னோட தர்க்கம் வெச்சுக்காதே. எனக்கு உன்னோட பணம் தேவையில்லை.''

"நான் அவ்வளவு வேற்று மனுஷியாகிவிட்டேனா?" அவன் பதில் பேசவில்லை. ஜெயந்தியால் அழுகையை அடக்க முடியவில்லை. அவள் அழுதுக் கொண்டே வெளியே வந்தாள். அவ்விடத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த தீரஜ் இதை பார்த்தான். தாய் அழுவதற்குக் காரணம் அந்த பைத்தியக்காரன்தான் என்று தெரிந்தது. தீரஜ்ஜிற்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. புத்தகங்களை விட்டுவிட்டு எழுந்திருந்தான். கிரிக்கெட் பேட்டை எடுத்துக் கொண்டு சிவரஞ்சனின் அறைக்குள் நுழைந்தான். சிவரஞ்சனின் "ஐயோ" என்ற கத்தலைக் கேட்டுவிட்டு ஜெயந்தி ஓடி வந்தாள். தீரஜ் பேட்டினால் சிவரஞ்சனின் தலையில் ஓங்கி அடித்துக் கொண்டிருந்தான். சிவரஞ்சன் பேட்டைப் பிடுங்கிக் கொண்டு தீரஜ்ஜின் தலை மீது ஓங்கி அடிக்கப் போனான். ஜெயந்தி ஓடி வந்தாள். தீரஜ்ஜைப் பிடித்து இழுத்துவிட்டு, சிவரஞ்சனின் கையிலிருந்த பேட்டைப் பிடுங்கி தொலைவில் வீசியெறிந்தாள். தீரஜ்ஜின் தோளைப் பிடித்து "என்ன காரியம்டா இது? கொழுப்புப் பிடித்து விட்டதா?" என்று மகனை கன்னத்தில் மாறி மாறி விளாசினாள். தீரஜ் வாயடைத்துப் போய் விட்டான். அவனை ஒரே தள்ளலாய் தள்ளிவிட்டு சிவரஞ்சனின் ரத்தம் வழியும் தலையை ஓடிப் போய் பிடித்துக் கொண்டாள். வழிந்து கொண்டேயிருந்த ரத்தத்தைப் புடவைத் தலைப்பால் அழுத்திப் பிடித்து— "ரங்கம்மா" என்று கத்தினாள். ரங்கம்மா வந்ததுமே, "டாக்டருக்கு போன் பண்ணு" என்றாள்.

டாக்டர் வந்தார். தலைக்குக் கட்டுக் கட்டினார். டாக்டர் போவதற்குள் இரவு மணி பத்தாகிவிட்டது.

"ரங்கம்மா, தீரஜ் எங்கே?" அப்பொழுதுதான் தீரஜ்ஜின் நினைவு வந்தது.

"என்னவோ தெரியாதும்மா. அறைக்குள் போய் படுத்துக் கொண்டுவிட்டானோ என்னவோ?" என்றாள் ரங்கம்மா. ஜெயந்தி அறைக்குள் வந்தாள்.

அங்கே கட்டிலில் தீரஜ் இல்லை.

"தீரஜ்" கூப்பிட்டாள். தீரஜ் பதில் குரல் கொடுக்க வில்லை. கட்டிலுக்குக் கீழே கோபித்துக் கொண்டு படுத் திருப்பானோ என்று பார்த்தாள். அங்கேயும் இல்லை. "தீரஜ்! தீரஜ்" என்று கூப்பிட்டுக் கொண்டே வீடெல்லாம் தேடினாள். ஷெட்டிற்குள் பார்த்தாள். தீரஜ்ஜை எங்கேயுமே காணவில்லை. ஜெயந்தி பயந்து விட்டாள். தீரஜ் என்னவானான்?

* * *

ஜெயந்தி சித்தார்த்தனுக்கு போன் பண்ணினாள்.

"உங்களிடம் வந்திருக்கானா?" என்றாள்.

"தீரஜ்ஜா? என்னிடமா? இல்லையே."

"தீரஜ்ஜைக் காணோம்" ஜெயந்தி சுருக்கமாய் நடந்ததைச் சொன்னாள்.

"நான் இதோ வரேன், இரு என்றான் அவன். கால் மணியில் சித்தார்த்தன் வந்தான். சித்தார்த்தனும் பொன்னையனும் தீரஜ்ஜை எல்லா இடங்களிலும் தேடினார்கள். எங்குமே தென்படவில்லை.

இரவு பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

சித்தார்த்தன் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி பையன் காணாமல் போய்விட்டதாய் ரிப்போர்ட் கொடுத்தான். ஜெயந்தி சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அழுகையை பலவந்தமாய் அடக்கிக் கொண்டிருந்தாள். ரங்கம்மாவும் பொன்னையனும் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

சித்தார்த்தன் ஹாலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். கட்டிலில் சிவரஞ்சன் தலையில் கட்டோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். இந்த வீட்டில் இப்பொழுது இவர்கள் அத்தனை பேருக்கும் ஏற்பட்டிருக்கும் கலக்கத்திற்குத் தான்தான் .காரணம் என்று புரிந்தது. சித்தார்த்தன் அந்த சூழ்நிலையை

யெல்லாம் தன் கையில் எடுத்துக் கொண்டு தீரஜ்ஜைத் தேடிப் பிடிக்க முயன்று கொண்டிருந்தான்.

அதற்குள் போன் மணி கணகணவென்று ஒலித்தது. சித்தார்த்தன் போய் எடுத்தான்.

''ஆமாம். எட்டு வயது பையன். ஆமாம், கருப்பு நிக்கர், கோடு போட்ட சட்டை போட்டுக் கொண்டிருந் தான். இதோ வரோம்''—என்று போனை வைத்துவிட்டு, ''ஜெயந்தி! தீரஜ் ரயில்வே ஸ்டேஷனில் பெஞ்சின் மீது படுத்துக் கொண்டிருக்கானாம். கிடைத்துவிட்டானாம்'' என்றான். ஜெயந்தி எழுந்திருந்தாள். சித்தார்த்தனும் அவளும் காரில் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். தீரஜ் அங்கே இருந்தான். உடைகளில் மண் அப்பிக் கொண்டிருந் தது. கேசங்கள் கலைந்திருந்தன. அவன் முகத்தைப் பார்த்த பொழுதே அவர்களுக்கு வயிற்றைப் பிசைந்தெடுத்தது.

''தீரஜ்!'' ஜெயந்தி ஓடி வந்தாள் கிட்டே.

தீரஜ் அக்கைகளைத் தள்ளிவிட்டான்.

''தீரஜ்'' ஜெயந்தி அவன் கையைப் பிடித்தபொழுது தீரஜ் அக்கையைப் பற்களால் கடித்தான்.

''நீ என் அம்மாவே இல்லை, போ'' என்றான்.

சித்தார்த்தன் ஜெயந்தியின் கையில் தட்டி அப்பால் இழுத்துவிட்டு ''தீரஜ்'' என்று கிட்டே போனான்.

தீரஜ் சித்தார்த்தனின் கழுத்தைக் கட்டிக் கொண் டான். அழுது கொண்டே— ''அங்கிள்! அம்மா என்னை அடிச்சாங்க. அம்மாவுக்கு அந்த பைத்தியக்காரன் மேல் தான் இஷ்டம். என் மேல் இஷ்டமே இல்லை''— தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

''இல்லை தீரஜ், அப்படியெல்லாம் இல்லை. அம்மா வுக்கு உன் மீது உயிர்'' என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுதே சித்தார்த்தனின் குரல் தழுதழுத்தது.

''ஊஹூம், உனக்குத் தெரியாது''என்றான் தலையைத் திருப்பிக் கொண்டு.

போலீஸ் அதிகாரி ஜெயந்தியையும் சித்தார்த்தனையும் தீரஜ்ஜையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார் ஆர்வத்துடன்.

''வீட்டிற்கு போகலாம் வா தீரஜ்'' என்றாள் ஜெயந்தி.

''நான் வரமாட்டேன். நான் வரமாட்டேன். அந்த திருடன் நம் வீட்டை விட்டுப் போனால்தான் நான் வருவேன்''— என்றான் தீரஜ்— சித்தார்த்தனின் கழுத்தை அழுத்தமாய் கட்டிக் கொண்டே.

''என்னோட வரயா?'' சித்தார்த்தன் கேட்டான்.

தீரஜ் தலையாட்டினான்.

சித்தார்த்தன் தீரஜ்ஜை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

ஜெயந்தி காரில் ஏறப்போனபொழுது தீரஜ் சட் டென்று— ''அவங்க வந்தால் நான் வரமாட்டேன்'' என்றான். செய்வதறியாமல் பார்த்த ஜெயந்தி காரை விட்டிறங்கி விட்டாள்.

போலீஸ் அதிகாரி சேவகனைக் கூப்பிட்டு ஜெயந்தியை ஜீப்பில் அழைத்துக் கொண்டு போய் வீட்டில் விட்டுவிட்டு வரசொன்னார்.

ஜெயந்தி ஜீப்பில் ஏறிக் கொண்டு ஜீப் புறப்பட்டதும் சித்தார்த்தன் காரை ஸ்டார்ட் பண்ணினான். வீட்டிற்கு வந்த ஜெயந்தி துக்கத்துடன் சோபாவில் சரிந்தாள். அதை பார்த்த சிவரஞ்சன்— ''என்னால் இவர்களுக்கு எவ்வளவு துன்பம் வந்துவிட்டது! இதற்காகவா நான் வந்தேன்?'' என்றெண்ணிக் கொண்டாள் தனக்குள்.

* * *

ஒரு வாரம் ஆயிற்று. இந்த ஒரு வாரமும் ஜெயந்தி எவ்வளவோ நல்ல வார்த்தைகள் சொல்லியும் தீரஜ் வீட்டிற்கு வரவேயில்லை. சித்தார்த்தனிடமே இருந்து கொண்டிருந்தான். ஜெயந்தி பொன்னையனிடம் தீரஜ்ஜின்

புத்தகங்கள், உடைகள், கிரிக்கெட் பேட் எல்லாவற்றையும் அனுப்பினாள். அவள் போய் இரண்டு வேளையும் பார்த்து விட்டு வந்தாள். தீரஜ் சித்தார்த்தனுடன் சேர்ந்து சாப் பிட்டு கொண்டும், கிரிக்கெட் ஆடக் கற்றுக் கொண்டும், அவனோடு சேர்ந்து டி. வி. பார்த்துக்கொண்டும் நன் றாகவே இருந்தான். இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாய் தாயோடு பேசத் தொடங்கியிருந்தான்.

ஜெயந்தி அன்றைக்கு வந்தபொழுது சித்தார்த்தன் தீரஜ்ஜை டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார வைத்துக் கொண்டு ஐஸ் கிரீமை ஸ்பூனால் வாயில் தந்துக் கொண்டிருந்தான். சித்தார்த்தன் பூனையும் நரியும் கதை யைச் சொல்லிக் கொண்டிருந்தான். ஜெயந்தி அங்கே வந்து நின்றாள். ஜெயந்தியின் சுண்களுக்கு அந்த நேரத்தில் சித்தார்த்தனின் ஸ்தானத்தில் சிவரஞ்சன் தென்பட்டான். சிவரஞ்சனும் தீரஜ்ஜும் இவ்வாறு இருக்கும் நாள் வருமா?

ஜெயந்தியை முதலில் தீரஜ்தான் பார்த்தான்.

''இதோ மம்மி வராங்க''— என்றான் சந்தோஷ மாகவே. அதற்குள்ளேயே முகத்தை முறுக்கிக் கொண்டு எழுந்து தன் அறைக்குள் போய் புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

''வா ஜெயந்தி! உட்காரு'' என்றான் சித்தார்த்தன். ஜெயந்தி உட்கார்ந்தாள்.

''ஏன் இப்படி இருக்கிறாய்? உடம்பு சரியா யில்லையா?'' கேட்டான் சித்தார்த்தன்.

''சரியாய்தான் இருக்கு'' என்றாள் ஜெயந்தி. ஜெயந்தி யின் முகத்தில் அசதி தெரிந்தது. தூக்கம் இல்லாமையால் கண்களுக்குக் கீழே கருப்பு வளையங்கள் தென்பட்டன.

''சித்தார்த்தன்! தீரஜ் எப்பொழுது வீட்டிற்கு வரு வானோ தெரியவில்லை. எனக்கு தினமும் வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை. சாப்பாடுகூட இறங்க மாட்டேங் கிறது. தூங்கவும் முடியவில்லை. எனக்கென்னவோ இதெல் லாம் ஒரே குழப்பமாய் இருக்கிறது'' என்றாள்.

ஜெயந்தியிடம் தென்பட்ட சோர்வுக்குக் காரணம் சித்தார்த்தனின் வீட்டிற்கு அவள் போக்குவரத்தை வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து சிவரஞ்சன் குத்திக் காட்டத் தொடங்கியிருந்தான். ''வேண்டுமென்றே அவனை அங்கே விட்டுவிட்டு அந்த சாக்கில் ரெண்டு தடவை போய்விட்டு வரலாம்னு''—என்றான்.

இது போதாதென்று கடையில் வேலை பண்ணும் வேலையாட்கள் ''மொதல்ல அந்தப் பிள்ளை சித்தார்த்த னுக்குப் பிறந்ததுதான். அதான் இப்படி நடக்குது'' என்று பேசிக் கொண்டார்கள். இந்த வார்த்தைகள் சிவரஞ்சனின் காதில் விழுந்துவிட்டால்!

''பால் அல்லது ஹார்லிக்ஸ் குடிக்கிறாயா?'' கேட்டான் சித்தார்த்தன்.

''வேண்டாம்'' ஜெயந்தி சுருக்கமாய் சிவரஞ்சனும், பிறரும் பேசும் குத்தல்மொழிகளைப் பற்றிச் சொல்லி விட்டு— ''தீரஜ் மூலமாய் இந்தப் பிரச்னை வந்து சேர்ந் திருக்கிறது. ரெண்டு உதைத்தாவது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் விடவேண்டும் போலிருக்கிறது'' என்றாள்.

''அப்படிப் பண்ணிவிட்டால் இந்த பிரச்னை தீர்ந்து விடும் என்று நான் நம்பவில்லை'' என்றான் அவன்.

''சிவரஞ்சன் வந்துவிட்டால் என் வாழ்க்கையில் எல்லா கஷ்டங்களும் தீர்ந்து போய் விடும்னு நினைச் சேன். இப்படிப் புதிய பிரச்னைகள் தலையெடுக்கும்னு தெரியாது'' என்றாள்.

''ஜெயந்தி! தீரஜ் சின்னப் பையன். எதையும் மறைத்து வைத்துக் கொள்ளத் தெரியாது. வெளியே கக்கி விடுவான்! நீ கொஞ்சம் பொறுமையாய் இருந்தால் நிலைமை மாறும். பொறுமையோடு காத்திருக்க வேண்டும். வேறு வழில்லை.''

''பொறுமை! பொறுமை!'' ஜெயந்தி ஆவேசமாய் கத்தினாள். ''எவ்வளவு நாளைக்கு? எவ்வளவு வருஷங்கள்? இந்தப் பொறுமையை அனுஷ்டித்துக் கொண்டிருப்ப திலேயே என் வாழ்க்கை முடிந்து போய்விடும் போல

இருக்கு! சித்தார்த்தா! என்னிடம் சக்தியெல்லாம் நசிந்து போய்விட்டது! இனி எதையும் தாங்கிக்க என்னால் முடியாது'' என்றாள்.

''ஜெயந்தி! இந்த சூழ்நிலையில் நீ ஆவேசப்பட்டால் நடக்கப் போவது அதிக நஷ்டந்தானே தவிர லாபமில்லை. தீரஜ் விஷயத்தில் நீ மிகவும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும். நான் அவனுக்கு நல்லபடியாய் எடுத்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவனுக்கு இப் பொழுது உன் மீது கோபம் போய்விட்டது.''

''பின்னே என்னை பார்த்ததுமே ஏன் அப்படி போய் விட்டான்?''

''மொதல்ல நீ வந்ததுமே 'மம்மி வராங்க'—என்று சந்தோஷமாய் சொன்னானா இல்லையா?''

ஜெயந்தி தலையாட்டினாள்.

''நேரமாயிடுத்து. இனி நீ கிளம்பு'' என்றான் சித்தார்த்தன்.

ஜெயந்தி பெருமூச்செறிந்து விட்டு எழுந்திருந்தாள்.

அவன் மேஜை மீது மறந்து போய்விட்ட பர்ஸை எடுத்து தந்தான்.

''தீரஜ்! தீரஜ்'' கூப்பிட்டான்.

தீரஜ் வந்து கதவிற்கருகில் நின்றான்.

''மம்மிக்கு குட் நைட் சொல்லு'' என்றான் சித்தார்த்தன். தீரஜ் சொல்லவில்லை. சித்தார்த்தன் தீரஜ்ஜிடம் வந்தான்.

''தீரஜ்! சமர்த்துப் பையனோனோ?'' என்றான்.

''குட் நைட் மம்மி'' ஜெயந்தியைப் பார்த்து சொல்லி விட்டு சித்தார்த்தனின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

சித்தார்த்தன் தீரஜ்ஜை அறைக்குள் அனுப்பிவிட்டு, ஜெயந்தியுடன் கீழே வந்து அவளை ஆட்டோவில் ஏற்றி விட்டான்.

ஜெயந்தி ஆட்டோவில் ஏறப் போனவள் அவனை நோக்கித் திரும்பினாள்.

''சித்தார்த்தன்! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி.''

''ஏன்?''

''உங்களைப் போன்ற புரிந்து கொள்ளக்கூடிய சிநேகிதர் கிடைத்ததற்கு. எனக்கு எவ்வளவு உதவி பண்ணு கிறீர்கள்! நீங்கள் மட்டும் இல்லாமலிருந்தால்.....''

''அப்படிச் சொல்லாதே. நான் என்ன பண்ணி விட்டேன்? நாளைக்கு எனக்கு ஏதாவது ஆனால் நீ என்னை விட்டு விடுவாயா?''

'வேண்டாம். யாருக்கும் அப்படிப்பட்ட பிரச்னை வரக்கூடாது. எல்லோரும் சுகமாய் இருக்கணும்'' என்றாள்.

''நீ போ! நான் ஒரு அரைமணியில் தீரஜ்ஜைக் கூட்டிட்டு வரேன்.''

''நிஜமாகவா?''

''நிஜந்தான்! முதலிலேயே சொல்லிவிடக் கூடாது என்றிருந்தேன். நான் சொல்லாமலிருப்பதைவிட, சொன் னால் நீங்கள் எல்லோரும் சந்தோஷமாய் எதிர் பார்த்துக் கொண்டிருப்பீங்க இல்லையா?''

''வராவிட்டால்?''

''கண்டிப்பாய் வருவோம். தீரஜ் ஒப்புக் கொண்டு விட்டான். இனிமேல் சமர்த்தாய் இருப்பதாய் வாக்குக் கொடுத்திருக்கிறான்.''

''சித்தார்த்தன்! உங்களுக்கு என் நன்றியை எப்படித் தான் எடுத்து சொல்லுவேனோ?''

''காலமெல்லாம் என்னுடைய சிநேகிதியாய் இருந்து!''

''எவ்வளவு நல்லவர் நீங்க.''

அவன் சிரித்தான்—''உன்னைவிட நல்லவள் இல்லை.''

ஜெயந்தி வீட்டிற்கு வந்துக் கொண்டிருக்கையில் அவள் மனது சந்தோஷத்தால் பொங்கிக் கொண்டிருந்தது.

சித்தார்த்தனின் வார்த்தைகளிலும், அவன் நெருக்கத்திலும் ஏதோ மந்திரம் இருந்தது. அவள் இங்கே வரும் பொழுது மனமெல்லாம் ஏதோ பாரமாய் தளர்ந்து போனாற்போல இருந்தாள். இப்பொழுது உற்சாகத்துடன் அந்த பாரத்தையெல்லாம் இறக்கி வைத்து விட்டாற் போல திரும்பிப் போகிறாள்.

ஆட்டோ வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

ஜெயந்தி பர்சைத் திறந்து பணத்தைத் தந்துவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தாள். ''ரங்கம்மா, ரங்கம்மா'' என்று கூப்பிட்டாள்.

ரங்கம்மா எதிரே வந்தாள்— ''ரங்கம்மா! தீரஜ் வீட்டிற்கு வரான். அவனுக்கு பாயசம் ரொம்ப பிடிக்கும். கொஞ்சம் பண்ணு'' என்றாள்.

''சரிங்கம்மா. இதோ நிமிஷத்தில் பண்ணிவிடுகிறேன்.'' என்றாள், ரங்கம்மா உள்ளே ஓடியபடி.

ஜெயந்தி சிவரஞ்சனின் அறைக்குள் ஓடினாள். அவ் வறைக் கதவு எப்பொழுதும் போலவே வெறுமே சாத்தி யிருந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போய்— ''சிவரஞ்சன்! தீரஜ் வரப் போகிறான்'' என்றாள்.

அங்கே சாய்வு நாற்காலியில் சிவரஞ்சனைக் காண வில்லை. மேஜை பக்கமாய் பார்த்தாள். அங்கேயுமில்லை.

''சிவரஞ்சன்'' கூப்பிட்டாள்.

ஜெயந்தி சட்டென்று நின்றுவிட்டாள்.

அங்கே மேஜைக்குப் பக்கத்தில் ஷெல்ஃபில் இருந்த புத்தகங்களைக் காணோம். அது காலியாய் ஜெயந்தியைப் பார்த்து பழித்தாற் போல இருந்தது. ஜெயந்தி திரும்பி பார்த்தாள். அங்கே செருப்புகள் இல்லை. மேஜை மேல் பேப்பர் வெயிட்டிற்குக் கீழே வைத்திருந்த காகிதங்கள் காற்றிற்குப் படபடத்தன. ஜெயந்தி அவைகளை எடுத்து பார்த்தாள். அது சிவரஞ்சன் எழுதியிருந்த கடிதம்.

அதில் இவ்வாறு இருந்தது—

''ஜெயந்தி!

நான் போகிறேன். நீ கவலைப்படாதே. நான் இரவும் பகலுமாய் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் என்ன என்று யோசித்தேன். நான் உங்களை விட்டு தொலைவிற்குப் போய் விடுவது ஒன்றுதான் பரிகாரம் என்று தோன்றிற்று. அதையே செய்கிறேன். நான் ஜெயிலில் இருந்த பொழுது எப்பொழுது விடுதலையாகி வெளியே வருவேனோ என்று தவித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் உன்னிடம் ஓடி வந்தேன். நான் இன்னும் அன்றைக்கு நான் விட்டுவிட்டுப் போன ஜெயந்திதான் எனக்காகக் காத்திருப்பாள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த ஜெயந்திக்கு என்னைத் தவிர வேறு உலகம் இல்லை. நான் ஜெயிலிலிருந்து வெளியே வந்ததுமே விட்டுப் போன அந்த வாழ்க்கை திரும்பவும் தொடங்கிவிடும் என்றும் நான் சந்தோஷமாய் இருக்க முடியும் என்றும் எண்ணியிருந்தேன்.

ஆனால் இங்கே வந்ததும் எனக்கு எதிர்ப்பட்ட நிலைமையோ வேறு. இந்த ஜெயந்தி நான் விட்டுவிட்டுப் போன அந்த ஜெயந்தி இல்லை. இவளுக்கு தன்னுடையது என்று ஒரு வியாபார உலகம் இருக்கிறது. அவளை நம்பி ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடையது நல்லது கெட்டது அவளுடைய பொறுப்பு! இந்த ஜெயந்திக்கு சமூகத்தில் செல்வாக்கு இருக்கிறது. இவளுக்கு இந்த வேலைகளாலும் பொறுப்புக் களாலும் ஒரு நிமிஷம் ஓய்வு இல்லாமல் போய்விட்டது. எனக்காக காலத்தையும் யோசனைகளையும் செலவழிக்க வேண்டுமென்றால் அவள் அந்த பந்தங்களை உதறிக் கொண்டு அவர்களை விட்டு தொலைவிற்குப் போய் விடவேண்டும்.

ஜெயந்தி, உன்னை அவ்வாறு உன் கடை, வியாபாரம், உன் பொறுப்பு, உன் அந்தஸ்து எல்லாவற்றையும் விட்டு விட்டு வர சொல்வதற்கு எனக்குத் துணிச்சல் இல்லை. ஏனென்றால் எனக்கு நிரந்தரமான வேலை இனி கிடைக் காது. அப்படி நீ பலவந்தமாய் அத்தனையையும் துறந்து

விட்டு வந்தாலும் என்னால் உன்னுடன் வாழ முடியாது. அதற்கு காரணம் இரண்டு—ஒன்று—நீ மாறிவிட்டாய். உன்னைப் பழையபடி மாற்றினாலும் அது செயற்கையாய் தான் இருக்கும். எனக்கும் அதனால் உனக்கும் கூட அதிருப்தியான வாழ்க்கைதான் மிஞ்சும். இரண்டாவது—காரணம்—நான் எந்த தப்பும் பண்ணாமல் ஜெயிலுக்குப் போனதாய் உன்னிடம் பொய் சொல்லி ஏமாற்றி விட்டேன். நான் உண்மையிலேயே சண்முகம் கும்பலைச் சேர்ந்தவன்தான்! பாஸ்போர்ட் ஆபீசில் என்னிடம் கடிதம் கொடுத்தனுப்பிய அவர் கூட எங்கள் கும்பலைச் சேர்ந்தவர்தான். இதை நான் உன்னிடமிருந்து மறைத்து விட்டேன். அவர்களிடமும் இதை உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். சொன்னால் நீ அந்த ஷாக்கைத் தாங்கிக் கொள்ள மாட்டாய் என்று தெரியும். உன் வயிற்றில் குழந்தை இருந்ததால் அந்த சமயத்தில் அந்த அதிர்ச்சியால் உனக்கும் குழந்தைக்கும் தீங்கு நேரும் என்றஞ்சிதான் அதை அப் பொழுது சொல்லாமல் மறைத்து வைத்தேன். பிறகு குழந்தை பிறந்து வளரத் தொடங்கியதும் நான் ஜெயிலில் இருந்தபொழுது இதை உன்னிடம் சொல்லி விடலாமா என்றெண்ணினேன். ஆனால் உடனேயே சொல்லக் கூடாது, சொன்னால் தீரஜ்ஜின் பிஞ்சு மனம் இதை அறிந் தால் தன் தந்தை கொலைகாரன், தேசத் துரோகி என்று தெரிந்து கொண்டு மனம் ஒடிந்து போய்விடும். தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுவிடும். வளரும் பருவத்தில் இந்த விஷயம் தெரியவே கூடாது என்றெண்ணி உன்னிடம் சொல்லாமல் மறைத்துவிட்டேன்.

ஆனால் இப்பொழுது இங்கே வந்த பிறகு சாதாரண மாகவே என்னை வெறுக்கும் தீரஜ், இந்த விஷயமும் தெரிந்து விட்டால் எப்படியாவானோ? அவனால் இதை தாங்கிக் கொள்ள முடியுமா? அவன் என்னை அவன் தந்தை என்றே நம்பவில்லை. இந்தச் சமயத்திலேயே நான் அவனை விட்டுப் போய் விடுவதே சிறந்தது. என்றென்றும்

தன் தந்தை ஒரு கொலைகார கும்பலைச் சேர்ந்தவன், தேசத்துரோகி, என்றறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகும். இன்னும் சித்தார்த்தனுடன் நீ உறவு கொண்டாடுவதை நான் வெறுக்கிறேன். என் மனம் என்னதான் அந்த எண்ணத்தை தவிர்த்துக் கொள்ள முயன்றாலும் அது சாத்தியப்படவில்லை. என் மனம் சந்தேகக் கண்களுடனேயேதான் பார்க்கிறது. உன்னுடன் இருந்தால் ஒரு நாள் உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவேனோ என்னவோ? நான் நன்றாய் யோசித்து விட்டேன். நான் உன்னை ஏமாற்றித் திருமணம் பண்ணிக் கொண்டேன். ஏமாற்று திருமணம் செல்லாது. அதனால் நான் உனக்கு விவாகரத்து தந்துவிட்டதாய் நினைத்துக் கொள். நான் இவ்வாறு உங்கள் எல்லோரையும் விட்டு விட்டு தொலைவிற்குப் போவதற்கு நீங்கள் யாருமே காரணம் இல்லை என் மனந்தான் என்னை தொலைவிற்கு இழுத்துக் கொண்டு போகிறது. ஏன் தெரியுமா? உங்கள் வாழ்க்கையோடு என்னால் ராஜியாக முடியவில்லை. எப் பொழுதோ உன் கழுத்தில் தாலி காட்டியதற்காக வாழ் நாள் முழுவதும் உன் சுகத்தையும் சந்தோஷத்தையும் பலி வாங்கும் அதிகாரம் எனக்கு இல்லை. ஜெயந்தி, நான் மிக தப்புப் பண்ணிவிட்டேன் என்று என் மனம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஏன் தெரியுமா? நான் உனக்கு தந்ததைவிட, உன்னிடமிருந்து பெற்றுக் கொண்டவை தான் அதிகமாய் இருக்கிறது. தீரஜ் விஷயத்தில் நீ பட்டுக் கொண்டிருக்கும் வேதனைகளைப் பார்த்து மனம் உடைந்து போய்விட்டேன். உன்னைப் போன்ற உத்தமப் பெண்ணை மனைவியாய் அடைந்தும் உன்னோடு வாழ முடியாத நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி! இம்முறை உன்னைவிட்டு நிரந்தரமாய் பிரிந்து போகிறேன், நீ உன் வாழ்க்கையை உனக்கு பிடித்தாற்போலவே நடத்திக் கொள். இப் பொழுது விடுதலையாகி வந்து விட்டாலும் அடிக்கடி ஜெயிலுக்குப் போய் வந்து கொண்டிருக்கும் 'ஜெயில் பறவை' நான். நான் ஒரு தேசத் துரோகி. தீரஜ்ஜிற்கு என்

காற்றுகூட படக்கூடாது. என் நினைவுகளைத் துடைந் தெறிந்து விடு உன் மனதிலிருந்து...

இப்படிக்கு
சிவரஞ்சன்''

ஜெயந்தி அக்கடிதத்தைப் படித்து முடித்ததும் அவள் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

அதற்குள் சித்தார்த்தன் தீரஜ்ஜை தூக்கிக் கொண்டு அங்கே வந்தான்.

அங்கே ஜெயந்தி நாற்காலியில் சரிந்திருந்தாள். அவள் கையில் காகிதங்கள் இருந்தன. அவள் சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தீரஜ் தாயின் கையைப் பிடித்து உலுக்கினான். ''மம்மீ! மம்மீ'' என்றான்.

ஜெயந்தி கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினாள்.

சித்தார்த்தன் அவள் கையிலிருந்த கடிதத்தை வாங்கி படித்தான். அவளைத் தேற்றிவிட்டு, தீரஜ்ஜை அவன் அறைக்குள் அனுப்பிவிட்டு ஜெயந்தியிடம் திரும்பி வந்தான்.

''சித்தார்த்தன்! அவர் வேண்டுமென்றே, இங்கே என்னோடு சுகமில்லை என்று என்னை விட்டு தொலைவிற்குப் போய்விட்டார். சீ, சீ, இத்தனை நாட்களாய் நான் விழலுக்கா நீர் வார்த்திருக்கிறேன்? ஒரு தேசத் துரோகிக்காக— ஒரு கொலைகாரனுக்காகவா இவ்வளவு நாட்களாய் என் வாழ்க்கையை அல்லும் பகலுமாய் நாசமாக்கிக் கொண்டேன்?'' ஜெயந்தி தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். அந்த அழுகையில் ஏமாற்றமும் நிராசையும் தெரிந்தன.

சித்தார்த்தன் கிட்டே வந்தான். ஜெயந்தி சட்டென்று அவன் தோளில் தலையை சாய்த்து கொண்டு அழத் தொடங்கினாள்.

''ஜெயந்தி! மனதை தேற்றிக் கொள். அழாதே! தீரஜ் சிறு பையன். நீ அழுதால் அவனுக்கு குழப்பம் ஏற்படும்.''

''சித்தார்த்தன்! இனி பேசாதீங்க. எனக்கு என்ன ஞாபகத்திற்கு வருகிறது தெரியுமா? என் சிறு வயதில் பகலெல்லாம் நன்றாய் வேலை வாங்கிக் கொண்டுவிட்டு ஒரு வேலைக்காரியை சாயந்திரம் ஆனதுமே ரெண்டு ரூபாயை முகத்தில் விட்டெறிந்துவிட்டு ''போ''— என்று சொல்வார் எங்க மாமா. எனக்கு அந்த வேலைக்காரிதான் ஞாபகத்திற்கு வருகிறது இப்பொழுது. நான் சிவரஞ்சனின் கண்களுக்கு அதே வேலைக்காரியாகத்தான் இருக்கிறேன்.''

''என்ன பேச்சு இது ஜெயந்தி?'' சித்தார்த்தன் கடிந்து கொண்டான்.

* * *

ஜெயந்தியின் வாழ்க்கை அமைதியோடு கலகலப்பாய் இருந்தது போய், இப்பொழுது அவள் ஜீவன் இல்லாதவளைப் போல இருந்ததையும், அடிக்கடி சோர்ந்து போவதையும் பார்த்துவிட்டு சித்தார்த்தன் குடும்ப டாக்டரிடம் அழைத்து சென்றான். ''இவங்க ரொம்ப எனீமிக்காய் இருக்காங்க. இதே நிலைமை தொடர்ந்து கொண்டிருந்தால் உயிருக்கே ஆபத்து! போ! போய் ஜெயந்தியை உன் அகத்தால் சொல்லுவாயோ அல்லது உன் அன்பால் பிழைக்க வைத்துக் கொள்வாயோ அது உன்னிஷ்டம்'' என்றார்.

சித்தார்த்தனுக்கு தன் மீதே கோபமாய் வந்தது. ஜெயிலிலிருந்து சிவரஞ்சன் விடுதலையானதற்கு சித்தார்த்தன் தான் காரணம் என்ற விஷயம் ஜெயந்திக்கு தெரியாது. அவன் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சிவரஞ்சனை விடுதலை பண்ண வைத்தான். இதையெல்லாம் ஏன் செய்தான்? ஜெயந்திக்காக! ஜெயந்தி சுகமாய் இருப்பதற்காக! ஜெயந்தியின் மன அமைதிக்காக! ஜெயந்தியின் சிநேகிதனாய் அவன் இவ்வளவு உன்னதமாய் நடந்துக் கொண்டிருந்த பொழுது ஜெயந்தியின் கணவனாய் சிவரஞ்சன்

இன்னும் எவ்வளவு மகோன்னதமாய் நடந்து கொண்டிருக்க வேண்டும்! ஆனால் இப்படி அவள் வாழ்க்கையை வஞ்சித்து விட்டானே! ஜெயிலிலேயே இருந்திருந்தால் கூட ஜெயந்தி இவ்வளவு துன்பத்தை அனுபவித்திருக்க மாட்டாளே! ஜெயந்தியை காப்பாற்ற வேண்டும் என்றெண்ணிக் கொண்டு இதைபண்ணப் போய் அவளை நரகத்தில் தள்ளிவிட்டான்!

டாக்டர் ஆலோசனையின்படி சித்தார்த்தன் ஜெயந்தியிடம் ஒரு வாரம் கடையை மூடிவிடச் சொல்லிவிட்டு ஜெயந்தியையும் தீரஜ்ஜையும் தென்னிந்திய சுற்றுப் பயணத்திற்கு அழைத்துச் சென்றான். ரங்கம்மா, பொன்னையனும் கூட வத்தார்கள்

உல்லாசப் பிரயாணத்தின் மூலமாய் ஜெயந்தியின் மனம் தேறிக் கொள்ளத் தொடங்கிற்று. தன் வாழ்க்கையின் கசப்பான அனுபவத்தை மறக்கத் தொடங்கினாள்.

அன்று—

கன்னியாகுமரியில் சூர்யாஸ்தமனத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள் ஜெயந்தியும் சித்தார்த்தனும். அன்று காலையில்தான் சித்தார்த்தன் கன்யாகுமரி கோவிலில் ஜெயந்தியை தன் மனைவியாய் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாய் அவள் கழுத்தில் தாலியை கட்டினான். மாலை மாற்றிக் கொண்டார்கள். தீரஜ் சந்தோஷத்தால் தலைகால் புரியாமல் தாயைக் கட்டிக் கொண்டான். ரங்கம்மாவுக்கும் பொன்னையனுக்கும்கூட சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஓட்டலில் விருந்து உண்டார்கள். எல்லோருமாய் சேர்ந்து சினிமா பார்த்துவிட்டு அங்கிருந்து கடற்கரைக்கு வந்தார்கள்.

தீரஜ் கடற்கரை மணலில் உட்கார்ந்து கோபுரம் கட்டிக் கொண்டிருந்தான். ரங்கம்மாவும் பொன்னையனும் அவனுக்கு உதவிக் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தி சித்தார்த்தனைப் பார்த்தாள். அவள் இப்பொழுது பழைய ஜெயந்தியாய் இருந்தாள். சிறு வயதில்

தாம் இருவரும் அந்த வீதிக்கோடியில் வீடு கட்டுவதற்காக செட்டியார் ஒருவர் குவித்து வைத்திருந்த மணல் மேட்டின் மேல் ஏறி உட்கார்ந்து இதே போல கோபுர வீடு கட்டி விளையாடியது ஞாபகத்திற்கு வந்தது. திடீரென்று செட்டியார் வீட்டு நாய் ஓடி வந்து அந்த மணல் வீட்டின் மீது தாவி அதை அழித்து விட்டதும் அவள் அழுது கொண்டே நின்றபொழுது சித்தார்த்தன் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு சிரிக்க வைத்து விட்டு, நாயைத் துரத்தி விட்டு, கலைந்துப் போன மணல் வீட்டைத் திரும்பவும் சரியாய் கட்டிவிட்டதும் அவள் இதே போல கை கொட்டி ஆரவாரித்துச் சுற்றிச் சுற்றி வந்து மகிழ்ந்ததும் நினைவிற்கு வந்தது.

"ஜெயந்தி" என்றான் அவன்.

"உம்"

"இந்த மணல் வீட்டைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?"

"நம் சிறு வயது விளையாட்டு ஞாபகத்திற்கு வருகிறது."

"இன்னும்?"

"தெரியவில்லை."

"நம் வாழ்க்கைகூட இந்த மணல் வீட்டைப் போல தான்னு தோணுகிறது. எதிர்பாராத ஆபத்து வந்து அது கலைந்து போவது போலவே நம் வாழ்க்கையும் சில சமயங்களில் சிதறிப் போய்விடுகிறது. அதற்காக மனம் ஒடிந்து போய் விடாமல் நாம் மணல் வீட்டை மறுபடியும் கட்டிக் கொள்வது போல நாம் வாழ்க்கையையும் சீர்திருத்திக் கொண்டு மறுபடியும் செப்பனிட்டுக் கொள்ளவேண்டும்" என்றான் ஜெயந்தியின் கையைப் பற்றிக் கொண்டு.

"ஆம்" என்றாள் அவள்.

ஜெயந்திக்குத் தாங்க முடியாத சந்தோஷமாய் இருந்தது— அது சித்தார்த்தனின் வாழ்க்கையை மணல்

வீட்டைப் போல தன்னால் செப்பனிட முடிந்ததற்கு. தன் வாழ்க்கையையும் தீரஜ் வாழ்க்கையையும் அதே போல செப்பனிட்டுக் கொள்ள முடிந்ததற்கு.

அதே சமயத்தில் விர்ரென்று வேகமாய் வந்து கரையில் மோதிய அலை ஒன்று தீரஜ் கட்டிய மணல் வீட்டை அழித்து விட்டுப் போய்விட்டது. தீரஜ் அழுதுக் கொண்டே தாயிடம் ஓடி வந்தான். சித்தார்த்தன் தீரஜ்ஜைத் தூக்கிக் கொண்டே கரையை விட்டுக் கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடத்திற்கு போனான். தீரஜ்ஜை இறக்கி விட்டுவிட்டு, மணல் வீட்டை அவ்விடத்தில் கட்டித் தந்தான். ''தீரஜ் இப்பொழுது உன் மணல் வீட்டை அலையால் அடித்துக் கொண்டு போக முடியாது பார்'' என்றான்.

''அங்கிள்! நான் கட்டியதை விட நீங்க ஜோராய் கட்டிவிட்டீங்க'' என்றான் சித்தார்த்தனின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டே.

ஜெயந்தி அவ்விடத்திற்கு வந்தாள். ''மம்மி! இந்த மணல் வீடு எவ்வளவு அழகாய் இருக்கு பார் மம்மீ! நம்ப வீட்டில்கூட இந்த மாதிரி ஒரு மணல் வீட்டைக் கட்டிக்க லாம்'' என்றான் தீரஜ் அப்பாவியாய்.

''மணல் வீடு எதுக்குப்பா! நீ பெரியவனானதும் பெரிய பெரிய படிப்பெல்லாம் படிச்சுட்டு வந்து இஞ்ஜீனியர் தொரையாகி, பெரிய மாளிகையே கட்டுவாய்ப்பா'' என் றாள் ரங்கம்மா சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டே.

ஜெயந்தி சித்தார்த்தனை முறுவலுடன் பார்த்தாள்.

சித்தார்த்தன் சிரித்தான். அதைப் பார்த்து தீரஜ் கை களைக் கொட்டிக் கொண்டே சிரித்தான். எல்லோரும் சிரிப்பதைப் பார்த்து விட்டு பொன்னையனும் தன் பாஷை யில் பொ...பொ... என்று சிரித்தான். அந்த சப்தத்தைக் கேட்டுவிட்டு வானத்தில் ஜோடியாய் பறந்து கொண் டிருந்த இரு கடற் பறவைகள்கூட கீச் கீச்சென்று கத்திக் கொண்டே பறந்து சென்றன.

□□□